கொங்குச் சோழர்



நூலாசிரியர்

முனைவர் க.அ. புவனேசுவரி

கொங்குச் சோழர்

(அரசியல், பொருளியல், சமுதாயம், சமயம், கலை - வளர்ச்சி)

முனைவர். க. அ. புவனேசுவரி
எம்.ஏ., எம்.எட்., எம். ஃபில்., பிஎச். டி.,

மேனிலைத் தமிழாசிரியர்,
கே.ஜி.பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
அன்னூர், கோவை மாவட்டம் - 641 653.

புவியரசி பதிப்பகம்
23, மணியம் அருளானந்தம் தெரு
இராமநாதபுரம்
கோவை-641 045.

முதல் பதிப்பு : ஜூன் 2000

உரிமை : **புவியரசி பதிப்பகம்**
23, மணியம் அருளானந்தம் தெரு
இராமநாதபுரம்
கோவை-641 045.

அட்டைப் படம்

அன்னூர் மன்னீஸ்வரர் கோயிலில் உள்ள கொங்குச்சோழ அரசன் சிற்பம்.
கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு

விலை ரூ . 100.00


ஒளி அச்சு நிலா கணினி மையம்
காந்திபுரம், கோவை - 12. ☎ 498688

நூல் கிடைக்குமிடம் விஜயா பதிப்பகம்
இராசவீதி, கோவை - 1.

அச்சிட்டோர்

கலை ஆர்ட் பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
191, போலீஸ் கந்தசாமி வீதி
இராமநாதபுரம்
கோவை-641 045. ☎ 313260

சமர்ப்பணம்



அன்னைக்கு அன்னையாய்த்

தந்தைக்குத் தந்தையாய்

அன்பு மழைபொழிந்து

அறிவு நலம் சேர்த்தஎன்

இன்முகத் தமக்கை

இலிங்கேசுவரி வேலுமயில்

பொன்மலர் அடிகளுக்குஇப்

புத்தகம் காணிக்கை !

சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

வாழ்த்துரை

கயிலை மாமுனிவர் தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்அவர்கள்,
பேரூராதீனம்,
பேரூர், கோவை-10

தமிழினத்தின் பழமையான வரலாறுகளை உணர்வதற்கு நாட்டு வரலாறு துணைபுரியும். கொங்குநாடு தொன்மை வாய்ந்தது. மேற்குமலைத் தொடரின் வளங்களை உடையது. உழைப்பும் உறுதியும் உடைய மக்களைக் கொண்டது. வந்தவர்களை மகிழ்வோடு வரவேற்கும் பண்பாடுமிக்கது. கலைத்திறன் மிக்க கோயில்கள் பல உண்டு. இலக்கிய இலக்கணங்களைத் தோற்றுவித்த புலவர்களும், அருளியலுக்கு வழிகாட்டிய சான்றோர்களும் வாழ்ந்து வழிகாட்டிய பெருமை உடையது. கல்வெட்டுகள் பல புதிதாகக் கண்டறியப்பட்டுள்ளன. தொல்பொருள் படிமங்கள், எழுத்தோவியங்கள், சுடுமண்பொம்மைகள் பேரூர்ப் பகுதியில் அண்மைக்காலத்தில் கிடைத்துள்ளன. இவை இந்நாட்டின் முதிர்ந்த வாழ்க்கைத் திறனை வெளிப்படுத்துவன.

இந்நாட்டின் வரலாற்றை முதுபேரறிஞர் கோவைகிழார் விரிவாக எழுதியுள்ளார். பல ஆசிரியர்கள் கொங்குநாடு பற்றிய செய்திகளை நூல்களாக வெளியிட்டுள்ளனர். பல புதிய வரலாற்றுச் செய்திகளுடன் நமதுஅன்புக்குரிய தமிழ் மகள் திருமதி.புவனாஜீவானந்தம் அவர்கள் கொங்குநாட்டு வரலாற்றை எழுதி வெளியிடுவது பாராட்டுக்குரியது. திருமதி.புவனா சிறந்த பண்பாடும், சமயவாழ்வும் உடையவர். தலைமைத் தமிழ் ஆசிரியப்பணியில் அயராது உழைத்து சிற்றூர்களிலிருந்து வரும் சிறுமியர்கட்கு அறிவொளி தந்து வளமுறச் செய்யும் சிந்தனையாளர், பேச்சுத் திறத்தால் அனைவரையும் ஈர்க்கும் செஞ்சொல்லாளர். அத்துடன் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலராயும் பணிபுரிந்து வரும் இவர் பல சிறப்பு முகாம்களின் வழி மாணவர்களுக்கு தன்னம்பிக்கையையும், ஆளுமைத் திறமையையும் வளர்த்து வருபவர். இவரது நற்பணி வளர வாழ்த்துக்கள்.

அன்புள்ள
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

வாழ்த்துரை

திரு.கே.ஜி.பாலகிருட்டிணன் அவர்கள்
நிர்வாக இயக்குநர்
கே.ஜி.நிறுமங்கள், கோவை

எங்கள் பள்ளியின் முதுநிலைத் தமிழாசிரியர் திருமதி.க.அ.புவனேசுவரி அவர்கள் தமிழ் அறிவுறுத்தும் பணியில் சிறப்புற்று விளங்குபவர். அவர்தம் ஓய்வு நேரங்களை வீணாக்காமல் கொங்கு நாட்டு ஆய்வுப்பணியில் தன்னை ஈடுபடுத்தி வருவது மகிழ்ச்சியை அளிக்கின்றது. அவர் ஏற்கெனவே வெளியிட்டுள்ள அன்னூர் வரலாறு என்ற நூல் எங்கள் ஊர் வரலாற்றிற்குப் பெருமை சேர்க்கின்றது. தற்போது வெளியிடப் பெறும் இந்நூல் கொங்குச் சோழர் என்ற மரபினரின் வரலாறாக மட்டுமின்றி இங்கு வாழ்ந்த சமுதாயத்தின் வரலாறாகவும் இது அமைந்துள்ளது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இவருடைய விடா முயற்சியைப் பாராட்டுகின்றேன். மேலும், மேலும் இதுபோன்ற நூல்கள் பலவற்றை எழுதி பெருமை பெற வாழ்த்துகிறேன்.

கே.ஜி.பாலகிருட்டிணன்
கோவை

வாழ்த்துரை

கவாலியர். டாக்டர்.ஜி.இராமசாமி அவர்கள்
தாளாளர்
கே.ஜி. கல்வி நிறுவனங்கள்

தமிழாசிரியர், நூலாசிரியர், ஆய்வாளர், கவிஞர், தமிழ்த் தொண்டினர், சொற்பொழிவாளர், நல்வாழ்வினர், சமுதாயப்பணியினர், இலக்கிய அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பினர் எனப் பன்முகத் துறையினில் பத்தரை மாற்றானவர் முனைவர் க.அ.புவனேசுவரி அவர்கள். அவரின் சொல் வண்ணத்திற்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் எடுத்துக்காட்டுத்தான் அன்னூர் வரலாறும், கொங்குச்சோழர் வரலாறுமாகும். இவரை தமிழன்னையின் செல்லப் பிள்ளையாகக் கருதுகின்றேன். தன்னலம் கருதாது தமிழ்ப்பணி செய்து எம் பள்ளியை (அன்னூர்) மாநில அளவில் தூக்கி நிறுத்தியுள்ளார். நடைமுறை வாழ்க்கையில் செப்பமாகச் சீர்மையுடன் வாழ்ந்து, மனிதர் வாழ்வை தூய்மையாக்கும் முதல் நிலைப் பண்பாளர். ஒழுக்கமுடையவர்தான் சமுதாயத்தின் வழிகாட்டி. அந்த வகையில் இவரது அறிவுரைகளும், படைப்புத்திறனும் இச்சமுதாய வாழ்க்கைக்கு ஊன்றுகோல் எனலாம். திருமதி.புவனேசுவரி பல்வகைப் பணிகளைச் செய்து புகழீட்டுக என அவரை வாழ்த்துகின்றேன்.

ஜி.இராமசாமி
கோவை

அணிந்துரை

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
தமிழ்துறைத் தலைவர் (ஓய்வு)
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

வரலாற்றாசிரியர்களுக்குக் கொங்குநாடு வற்றாத களஞ்சியம், வளரும் புதையல், சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் தொடங்கி இந்நூலாசிரியர் முனைவர். க.அ. புவனேசுவரி வரை விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச்சிலர் தான் கொங்குநாட்டு வரலாற்றைக் கணித்துப் பார்க்க முற்பட்டிருக்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் வீயாரெம், புலவர் செ.இராசு, இரா.பூங்குன்றன் முதலிய நுண்மாண் நுழை புலம் மிக்க ஆய்வாளர்கள் ஆழங்களுக்குள் சென்று பல உண்மைகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இன்னும் சொன்னால் நொய்யல் அகழ்வாய்வில் ஒய்.சுப்பராயலு, செ.இராசு, இரா.பூங்குன்றன் ஆகியோர் காட்டிய அக்கறை வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்கிற பெருமுயற்சி என்றே குறிப்பிடலாம். இவர்களைப் போன்றே போளுவாம்பட்டி ஐ,இராமசாமி, கோபி பேராசிரியர் கா.அரங்கசாமி ஆகியோரது கூரிய பார்வையும் கொங்குநாட்டு வரலாற்றின் மீது பதிந்திருக்கிறது.

பாரதியார் பல்கலைக்கழகத்திலும், முதுகலைத் தமிழ் பயிற்றும் கல்லூரிகளிலும் கொங்குநாட்டு வரலாறு ஒரு முதன்மைப் பாடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி, பல எம். ஃபில், முனைவர் பட்ட ஆய்வேடுகளும் கொங்கு வரலாற்றை மையமாகக் கொண்டு வெளிவந்துள்ளன.

அறிஞர்கள் மட்டத்திலேனும் தமிழக வரலாற்றில் கொங்குநாடு பெற வேண்டிய சிறப்பிடம் குறித்து அக்கறை ஏற்பட்டிருக்கிற சூழலில் பாராட்டுதலுக்குரிய க.அ.புவனேசுவரியின் கொங்குச்சோழர்கள் குறித்த இவ்வாய்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. கொங்குநாட்டு வரலாற்றுக்கு ஒரு வைரத் தூணாக இந்நூல் விளங்குகின்றது.

நூலாசிரியர் முனைவர் **க.அ.புவனேசுவரி** வரலாற்று ஆய்வுக்குப் புதியவர் அல்ல. தம்முடைய எம். ஃபில் பட்ட ஆய்வுக்கு மன்னியூர் என்கிற அன்னூர் வரலாற்றை ஆராய்ந்த அனுபவம் அவருக்கு உண்டு. முதன் முதலாக அவரை கோவை தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலகத்தில் நான் சந்தித்தேன். என் இனிய நண்பரும் வரலாற்றுப் பெட்டகமுமான இரா.பூங்குன்றன் அறிமுகம் செய்துவைத்தார். அவர் வாயிலாக இந்நூலாசிரியரின் கூரிய ஆய்வுத்திறன் பற்றி அறிந்து கொண்டேன். அவருடைய அன்னூர் வரலாறு வாயிலாகப் பூங்குன்றனின் சான்றிதழ் எத்துணைப் பொருத்தமானது என்பதை உணர்ந்தேன்.

பல இலக்கிய நிகழ்ச்சிகளிலும் முனைவர். க.அ.புவனேசுவரியின் தெளிந்த நீரோடை போன்ற பேச்சாற்றலைப் புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது எனக்குத் தெரியாது, முனைவர் பட்ட ஆய்வை முடிப்பதற்கு எதிர்பாராத விதமாக நானே நெறியாளனாக அமைவேன் என்று, சில பல காரணங்களால் முன்னைய நெறியாளரிடம் தொடர முடியாமற் போகவே பல்கலைக் கழகம் என்னை நெறியாளராக இருக்கும்படி ஆணையிட்டது. அந்த வாய்ப்பு நேர்ந்த போது தான் நூலாசிரியரின் நுட்பமான அறிவுக் கூர்மையையும், ஆய்வுத் திறனையும் நான் முழுமையாக அறியநேரிட்டது.

தகவல்களைத் திரட்டும் தளராத முயற்சி, கல்வெட்டுக்களைப் பயன்கொள்ளும் திறன், முன்னைய வரலாற்றாசிரியர்களின் ஆய்வுகளை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளும் நுட்பம், தரவுகளைத் தரம் பிரித்துக் காணும் தெளிவு, புதிய உண்மைகளைப் போராடிக் கண்டுபிடிக்கும் ஆற்றல் ஆகியவற்றின் மொத்த உருவமாக முனைவர் க.அ.புவனேசுவரியை நான் கண்டேன்.

"தம்மில் தம்மக்கள் அறிவுடைமை காணும்" பெற்றோர் போல ஆய்வு மாணவியின் அறிவுத்திறம் என்னைப் பெருமிதத்தில் ஆழ்த்தியது.

கொங்குநாட்டின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் கணிசமான பங்களிப்புக்குக் காரணமானவர்கள் கொங்குச்சோழர்கள். கி.பி.942 முதல் 1305 வரை கொங்கு நாட்டை ஆண்டவர்கள் கொங்குச்சோழர்கள், முதல் இருநூற்றைம்பதாண்டுக் காலம் இரு கொங்கினையும் (வட கொங்கு, தென் கொங்கு) ஆண்ட சிறப்பு இவர்களுக்கு உண்டு. இவர்கள் காலத்தில் நாட்டு நிர்வாகம் முதல் சமயமும் கலைகளும் வரை செழித்து வளர்ந்தன. அவற்றையெல்லாம் ஒருங்கு திரட்டி ஒரு வரலாற்றுக் கருவூலமாகத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

கொங்குச் சோழர்கள் யார் என்ற வினாவை எழுப்பி, செ.இராசு, பெ.இராமமூர்த்தி, நடன.காசிநாதன் ஆகியோர் கருத்துக்களையும், கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, கே.வி.சுப்பிரமணிய அய்யர் ஆய்வுகளையும் திறமையாக மறுத்து-கோநாட்டு இருக்குவேளிர் மரபினர் இவர்கள் என்று தெளிவுபடுத்துகின்றார்.

வரலாற்றில் இன்று முக்கியத்துவம் பெறும் அரசியல் புவியியலில் கவனம் செலுத்தி நிர்வாகப் பிரிவுகள் புவியியலால் நிர்ணயமாவதை எடுத்துக் காட்டுகின்றார். நாடு என்ற சொல் வேளாண் நிலம் என்ற பொருளில் வழங்கியதைச் சுட்டிக் காட்டுகின்றார். கால் நாடு புதிய விளக்கங்கள் வியப்பூட்டுகின்றன. கால் என்பது காடு என்றும் கரை என்பது பங்கு என்றும் எடுத்துக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது போன்றே பள்ளி, பாடி, எறிச்சல், தொழு பற்றிய விளக்கங்களும் வெளிச்சம் ஊட்டுகின்றன.

கொங்குச் சோழரின் முந்நூற்றைம்பது ஆண்டுக்கால ஆட்சியில் இலக்கிய வளர்ச்சி சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை என்று நூலாசிரியர் கூறும் போது அந்த உண்மை அதிர வைக்கின்றது. கருவூர்த் தேவர் ஒருவரே இந்த இருட்டில் ஒற்றைத் தீபமாக ஒளி வீசுகின்றார்.

நிர்வாகத் திறன் மிக்க கொங்குச்சோழரின் சிறப்புக்கள் விதந்து கூறப்பட்டுள்ளன. பெரிதும் மக்கள் ஆட்சியாகவே நிர்வாகம் நிகழ்ந்தமை ஆச்சரியப்படுத்துகிறது. அரையர் ஆட்சி,

அணிந்துரை

பொன்னீலன்
முதன்மைக் கல்வி அலுவலர் (ஓய்வு)

வரலாறு என்பது வாழும் மக்களுடைய பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வரலாறே. மன்னர்களின் வரலாறு இந்த மக்கள் வரலாற்றின் ஒரு பகுதி என்ற கருத்து இன்று உறுதிப்பட்டுவிட்டது. வரலாறு எழுதுவோர் கல்வெட்டுகள், பட்டயங்கள், அகழ்வு ஆய்வு சான்றுகள், இலக்கியச் சான்றுகள் மட்டுமல்ல மக்களின் வாய்மொழி மரபுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவைகளையும் நுட்பமாக ஆய்வு செய்து இவற்றிலிருந்தெல்லாம் சமூகம் கடந்து வந்த பழைய வரலாற்றை உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல நாடுகள், பேரரசுகள், தேசங்கள் போன்றவற்றின் பெருவரலாறுகளை எழுதும் முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு ஒருகுறிப்பிட்ட ஊரின் வரலாறு, வட்டாரத்தின் வரலாறு, சாதியின் வரலாறு, இனத்தின் வரலாறு என சமூக வரலாற்றைச் சிறிய சிறிய அலகுகளாகப் பிரித்து அவற்றைத் துல்லியமாக ஆய்வு செய்து வரலாற்றைக் கட்டமைக்கும் பணியும் வேகம் பெற்றுவிட்டது. இம்மாதிரியான சிறுசிறு மக்கள் திரள்களின் வரலாறுகளில் இருந்துதான் ஒரு நாட்டின் வரலாறோ, தேசத்தின் வரலாறோ உருவாக்கப்பட முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கோவை, ஈரோடு மாவட்டங்களைக் கொண்ட கொங்கு மண்டலம் பலவகையிலும் சிறப்பானது. மண்வளமும் மக்கள்வளமும் மிக்க இம்மண்ணின் வரலாறு நீண்டது. பல பூர்வீகக் குடிகளைக் கொண்ட மண் மட்டுமல்ல இது உலகம் முழுவதோடும் வாணிபம் செய்த வளமான தொழில் நகரங்களையும் கொண்டது. பாடல் பெற்ற தலங்கள் பல இங்குள்ளன. காவிரி, பவானி, நொய்யல், அமராவதி போன்ற நதிகள் இதை வளப்படுத்துகின்றன.

ஆயினும் இதன் வரலாற்றை அதாவது மக்கள் வரலாற்றை உருவாக்கும் முயற்சிகள் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தீவிரமடைந்துள்ளன. துண்டு துண்டாகப் பல இடங்களில் வரலாறுகளும், சாதிகளின் வரலாறுகளும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவற்றிலிருந்து கொங்கு மண்டலத்தின் மக்கள் வரலாற்றை உருவாக்கும் முயற்சியைச் செய்திருக்கிறார் அருமைச் சகோதரி க.அ.புவனேசுவரி. இவர் சிறந்த படிப்பாளி, கல்வெட்டு ஆய்வில் பயிற்சி பெற்றவர். தமிழ் இலக்கியத்திலும் புலமை மிக்கவர்." அன்னூர் வரலாறு" என்னும் சிறந்த வரலாற்று ஆய்வு நூலை எழுதி ஆய்வாளர்களின் அங்கீகாரத்தைப் பெற்றவர். இதுவரை திரட்டப்பட்ட செய்திகளோடு தானும் உழைத்துப் பல செய்திகளைத் திரட்டி "கொங்குச்சோழர்" என்னும் ஆய்வு ஏட்டை எழுதி முனைவர் பட்டம் பெற்றவர்.

இந்த முனைவர்பட்ட ஆய்வேட்டை மேலும் செழுமைப்படுத்தி இவர் உருவாக்கியிருக்கும் நூலே "கொங்கு மண்டல வரலாறு" விருப்பு, வெறுப்புக்களை ஒதுக்கித்தள்ளி விட்டு, அறிவியல் கண்ணோட்டத்தோடு ஒவ்வொரு செய்தியையும் சரிபார்த்துச் சேர்த்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு. பிரபல ஆய்வாளர்கள் பலரின் பல முடிவுகளைத் தக்க ஆதாரங்களைக் காட்டி மறுத்திருப்பது படிப்போருக்கு வியப்பைத்தரும். கல்வெட்டிலிருந்து, வாய்மொழி இலக்கியங்கள் வரை எல்லாத் தரவுகளையும், பொருத்தமாகப் பயன்படுத்தி வரலாற்றை உருவாக்கி இருப்பது இவருடைய திறமைக்குச் சான்று.

ஆய்வுத் துறையில் இதுதான் எல்லை என்று எவரும் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. இன்றைய செய்திகளை நாளைய அறிவியல் முடிவுகள் நிராகரிக்கக்கூடும். புதிய தகவல்கள்

புதிய வெளிச்சங்களை நமக்குத் தரவும்கூடும். ஆயினும் க.அ.புவனேசுவரியின் ஆய்வு அடித்தளம் மிகவும் உறுதியானது என்பதில் ஐயமில்லை. கொங்கு மண்டலம் சார்பாக இனி செய்யப்படும் ஆய்வுகளுக்கெல்லாம் இது சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதிலும் ஐயமில்லை. நூலைப் படிக்கும் போது ஆய்வாளரின் கடுமையான உழைப்பையும், அறிவு விசாலத்தையும் ஒவ்வொரு பக்கத்திலும் நம்மால் உணர முடிகிறது. ஆய்வாளரை மனமாறப் பாராட்டுகிறேன். இந்த ஆய்வு நூலைத் தமிழ் ஆய்வுலகம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். என் உளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

(ஓம்)

கோவை 641001

31.12.98

பாராட்டுரை

ஜெ.கமலநாதன், எம்.ஏ.
நிலைய இயக்குநர்,
கோவை வானொலி,
கோவை-45.

திருமதி. புவனாஜீவானந்தம் அவர்கள் சீரிய தமிழ்ப்பணியாளர். தமிழில் எழுதுவது, தமிழில் மேடையில் பேசுவது போன்றவற்றில் சீரிய பணியாற்றுவதையே இவ்வாறு குறிப்பிடுகின்றேன். மாணவப் பருவத்திலிருந்தே வானொலியுடன் தொடர்பு கொண்டவர் க.அ.புவனேசுவரி அவர்கள். ஆசிரியப்பணி ஏற்றபின் அவரது திறமைகளை, பல்வேறு கோணங்களில் கூர்தீட்டிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுத் துறையில் அவருக்குள்ள சிறப்பான ஆர்வம் ஆய்வுப் பாதையில் அவரை இட்டுச் சென்றுள்ளது. தனது M.Phil மற்றும் Ph.D பட்ட ஆய்வுகளில் மேற்கொண்ட கொங்குமண்டல கண்டுபிடிப்புகள் போற்றத்தக்கன.

படைப்பாற்றலுக்கு சற்றும் குறைவில்லாத அளவில் மகத்தான உழைப்பினை ஆய்வு நோக்கத்திற்கும், பணிக்கும் செலவிட வேண்டியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. வரலாற்றுச் செய்திகளைச் சற்றும் குறைவுபடுத்தாது அதேசமயம் அவற்றுக்கிடையே புதைந்து கிடக்கும் உண்மைகளையும் வெளிக்கொணர மேற்கொள்ளப்படும் முயற்சியே வரலாற்று ஆய்வுகள்.

கொங்குச்சோழர் காலத்திய வரலாற்றில் விடுபட்டுப் போனதாக தான் கருதுகின்ற செய்திகளையும் சிலபுதிய உண்மைகளையும் அடிப்படையாக வைத்து திருமதி.புவனாஜீவானந்தம் இந்த ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார். அதுமட்டுமல்ல அதனை ஒரு சிறந்த நூலாகவும் வெளிக்கொணர்ந்துள்ளார். சோழன் பூர்வ பட்டய

செய்திகளையும் ஒப்பாய்வு செய்துள்ளமை இதில் கிடைக்கின்ற வரலாற்றுக்கு மெருகு சேர்க்கின்றது. பொதுவாக தான் வாழும் நாடு குறித்தும் வாழும் பகுதி குறித்துமான வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளும் ஆர்வம் தமிழர்களுக்கு, குறைந்து கொண்டே வருவது வருந்துவதற்கு உரியது. இது பழம்பெருமை பேசும் வீண் செயல் என்றே இன்றைய இளைய தலைமுறை எண்ணுகிறது. மரபு வழிப் பெருமைகளை அறிந்து கொள்ளுவதும், தமிழ்நாடு குறித்த வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளுவதும் நமது கடமை ஆகும். இதன் மூலமாக நமது எதிர் காலத்தை வளமாக்கிக் கொள்வதற்கான குறிப்புகளை நாம் பெறுகிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

திருமதி. புவனாஜீவானந்தம் சிறந்த தமிழில் நடைச்சிறப்போடு எழுதும் ஆற்றல் மிக்கவர். நிறையப் படிக்கும் பழக்கமும், சான்றோர் பேச்சுகளைக் கேட்கும் பழக்கமும் கொண்டவர். இது இவரது எழுத்து நடையை செழுமைப்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இவரது இந்நூல் கொங்கு வரலாற்றுத் துறையில் ஒரு புகழ்க் காப்பியமாக நின்று ஒளி வீசும் என்பதில் ஐயமில்லை.

மகிழ்ந்துரை

கவிஞர். **பூ.அ. இரவீந்திரன்**
தலைமையாசிரியர், காந்திஜி அரசு மேல்நிலைப்பள்ளி
சொக்கம்பாளையம் (அஞ்)

திருமதி. புவனாஜீவானந்தம் என்னும் புலமையாளர் !
அன்னூர் வரலாறு என்னும் ஆய்வு நூலை எழுதி
வரலாற்றாய்வுத் துறையில் சுவடு பதித்தவர் !
பேரூர் தமிழ்க் கல்லூரிச் சிப்பிக்குள் விளைந்த நன்முத்து !
வரலாற்றுக் களங்களைக் கூர்ந்தாயும் திறன் கொண்டவர் !
புதியன தேரும் புலமையும் இனிய சொல்லாற்றலும்
வாய்க்கப்பெற்றவர்!
அன்னூர் வரலாற்றின் வழித்தடத்தில் கொங்குச் சோழர்களின்
வரலாற்றை ஆய்ந்து நூலாக்கியுள்ளார் !
நிகழ்வுகளைத் திரட்டி நேர்த்தியாகத் தொகுத்துள்ளார் !
கொங்கு மண்டலம் வரலாற்றுக் கருவூலம் !
இக்கருவூலத்தில் நுழைந்து மணிகளைக் கோர்த்து
மாலையாக்கியுள்ளார் !

கொங்குச்சோழர்களின் செப்பேடுகள், கல்வெட்டுகள், ஓலைச் சுவடிகள், சிற்றிலக்கியங்கள், ஆவணங்கள், அகழ்பொருள்கள், முன்னோர் மொழிநூல்கள் இவற்றைத் தளங்களாகக் கொண்டு தமக்கே உரிய அருவி நடையில் வரலாற்றுப் புத்தகம் வழங்கியுள்ளார்! நூலுக்குள் நுழைந்து நோக்கும்போது இவரது உழைப்பும் புலமையும் பளிச்சென ஒளிர்கின்றது!

ஒவ்வொரு பக்கத்திலும் தமது எழுத்துக்களைத் தூக்கி
நிறுத்தியுள்ளார் !
சமுதாயப் பணிகளில் மிகு ஆர்வம் !
மாணாக்கர்களின் கல்வி வேர்களை வளப்படுத்தும் நீரூற்று !
தமிழ்கூறும் நல்லுலகம் முழுமையும் சான்றோர்களின் அறிவார்ந்த
நட்பு ! மகிழ்கின்றேன் !
விட்டு விலகி நிற்கிறேன். இனி நூலுக்குள்......

முன்னுரை

இந்நூல் பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட முனைவர்பட்ட ஆய்வேட்டின் திருந்திய வடிவமாகும். முனைவர்பட்ட ஆய்வு செய்வதற்கு அனுமதியளித்த கே.ஜி.பெண்கள் மேல்நிலைப் பள்ளி நிறுவனர் தர்மவீரர் கே. கோவிந்தசாமிநாயுடு அவர்களுக்கும் அவர்தம் அருமைத்துணைவியார் திருமதி.சீத்தாலட்சுமி கோவிந்தசாமிநாயுடு அவர்களுக்கும் வாழ்நாள் முழுவதும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னை, பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளராக மனமுவந்து சேர்த்துக் கொண்ட பேரூராதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமிஅடிகளார் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. ஆய்வைத் தொடங்கிய பொழுது பல்லாற்றானும் வழிகாட்டியாக அமைந்த கல்லூரி முதல்வர் முனைவர் ர.வையாபுரி ஐயா அவர்கட்கு நன்றி. பிற்பகுதியில் வழிகாட்டியாக அமைந்த பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் சிற்பி.பாலசுப்பிரமணியம் அவர்கள் இன்றைய ஆய்வு நெறிமுறைகளின் புதுமைகளைக் கண்டுகாட்டி ஆய்வேடு செம்மையாக அமைய பேருதவியாக இருந்தார். அவருக்கு என் மனங்கனிந்த நன்றி. நடுவண் அரசு கல்வெட்டியல்துறை இயக்குநர் டாக்டர். கே.வி.இரமேஷ் அவர்கள் கொங்குச்சோழர்கள் காலத்துக் கல்வெட்டுக்களை படியெடுத்துக் கொள்ள அனுமதியளித்தார். அவருக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுதல் என் கடமையாகும்.

கோவை தொல்பொருள்ஆய்வுத்துறை காப்பாட்சியர் திரு.ஆர்.பூங்குன்றன் அவர்கள் கல்வெட்டு தொடர்பான ஐயப்பாடுகளையும், வரலாற்று நெறிமுறை பற்றிய ஐயப்பாடுகளையும், உடனுக்குடன் தீர்த்து ஆய்வேடு சிறப்புற உதவி செய்தார். அவர் பதிவு அலுவலராகப் பணியாற்றிய காலந்தொட்டு கண்டு பிடித்து வைத்திருந்த கல்வெட்டுக்களை ஆய்வுக்குப் பயன்படுத்த மனமுவந்து அளித்தார். ஆய்வேடு நூல்வடிவம் பெறுவதற்கு பல்லாற்றானும் உறுதுணை புரிந்தார். அவருக்கு வாழ்நாள் முழுவதும் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளேன். மேலும் தொல்லியல் அலுவலர் திரு.இரா.செல்வராசு மற்றுமுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றி.

கருத்து அறிந்த நாளிலிருந்து பல்வகைக்கல்வியை, பாங்குறப் பயில ஊக்கமளித்து வரும் என் அருமை அண்ணா திரு.அ.அழகேசன் (பாரதீய ஸ்டேட் வங்கி கிளை மேலாளர், கொடுமுடி) அவர்களுக்கும், அன்புத் தமக்கையர் ஆசிரியர்கள் சிவபாக்கியம்தங்கவேலு, மங்கையர்க்கரசிபேச்சிமுத்து ஆகியோருக்கும் எந்நாளும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என் ஆய்வின் பொருட்டு செல்லுமிடங்களுக் கெல்லாம் உடன் வந்து உற்றுளி உதவி ஊக்கப்படுத்திய என் துணைவர் திரு.நா.ஜீவானந்தம் அவர்களுக்கு நன்றி.

முனைவர் பட்டம் அளிக்கப்பட்டபோது எம்பள்ளியில் மிகப்பெரிய பாராட்டு விழா வைத்து பெருமைப்படுத்திய எம்பள்ளி இயக்குநர் திரு.கே.ஜி.பாலகிருட்டிணன்சத்யபாமா அவர்கட்கும் தாளாளர். திரு.கே.ஜி.இராமசாமி சாந்தாமணி அவர்கட்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இந்த ஆய்வேடு நூல்வடிவம் பெறவேண்டும் என்று மிகவும் ஆர்வம் காட்டி சிறந்த அணிந்துரை வழங்கிய கோவை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (ஓய்வு) திரு.பொ.ஸ்ரீ.க.பக்தவத்சலன் (பொன்னீலன்) அவருக்கு நன்றி கூறப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

வரலாற்று நூலொன்று வெளிவரவிருக்கின்றது என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் ஆய்வேட்டை முழுமையாகப் படித்து மனமுவந்து பாராட்டுரை வழங்கிய அகில இந்திய வானொலியின் கோவை நிலைய இயக்குநர் திரு.ஜெ.கமலநாதன் அவர்கட்கு என்மனமார்ந்த நன்றி.

மேலும்தடைகள் பல உருவானபோது தளர்ந்து விடாது செயலாற்ற அன்பு கனிந்த சொற்களால் ஆர்வமூட்டிய சொக்கம்பாளையம் காந்திஜி அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. பூ.அ. இரவீந்திரன் அவர்கட்கு நன்றி.

அன்பிற்குரிய எம்பள்ளித் தலைமையாசிரியை திருமதி.கமலமணிராஜீ அவர்கட்கு என்நன்றி. என் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வரும் உடன் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்கட்கும் நன்றி.

பல்லாற்றானும் ஆர்வமூட்டிய பேரூர் தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர்.ம.மனோன்மணி, முனைவர். விஜயலட்சுமிவெள்ளையா, டாக்டர்.கோபி, திரு.முருகானந்தம் கருணாம்பிகை, திரு.தி.இலட்சுமணன், திரு.பாஸ்கரன், திரு.பழ.தரும.ஆறுமுகம், திரு.கண்ணன் திரு.ஜே.இராம்தாசு, திரு.ப.கண்ணன்குமார், திரு.பு.ரா.இராமசாமி, திரு.சி.அன்னாசிகுட்டி, திரு.இல.சிவசாமி ((மாவட்ட வேலைவாய்ப்பு உதவி இயக்குனர்), (பொறுப்பு)) திரு.இரத்தினவேலு, திரு.செழியரசு, திரு.விஜயாமு.வேலாயுதம், சிதம்பரநாதன், திருமதியர்; இரேணுகாதேவி, சண்முகதேவி கல்யாண்குமார், பூங்குழலிஈசுவரன், தங்கமணிசதாசிவம், இலலிதாலீலாகிருட்டிணன், பாக்கியம்ராமநாதன், இராசாமணிதேவராசு, இராசேசுவரி, விஜயா, சி.எஸ். பார்வதி, கவிதா ஆகியோருக்கு நன்றி.

இந்நூல் மிகச்சிறந்த முறையில் வெளிவர ஒளியச்சு செய்து வடிவமைத்த கோவை, நிலா கணினியின் உரிமையாளர் திரு.ஆ.கு.அறுமுகச்செவ்வேள் அவர்கட்கும் மற்றும் கே.பிரிஜா அவர்கட்கும் என் நன்றியும், வாழ்த்தும் உரியன.

ஒவ்வொரு செயலிலும் ஈடுபடுத்தும் இறைவன் அருளே இந்நூலை வெளியிட என்னை பணித்தது, ஊக்குவித்தது. அந்த இறைவனின் திருவருளுக்கு என் வணக்கங்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

க. அ. புவனேசுவரி

சுருக்கக் குறியீடுகள்

தொ.பொ.ஆ.கோ.	...	கல்வெட்டுத் தொகுப்பு பதிவு அலுவலர் அலுவலகம் தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை.
ப.ஆ	...	பதிப்பாசிரியர்
ARE	...	Annual Report on Indian Epigraphy
E.C.	...	Epigraphia Carnatica
E.I.	...	Epigraphia Indica
I.A.	...	Indian Antiquiry
S.I.I.	...	South Indian Inscriptions
S.I.T.I.	...	South Indian Temple Inscriptions

பொருளடக்கம்

முன்னுரை

கொங்கு நாட்டு வரலாறு பற்றி இந்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து சிந்திக்கப்பெற்று வருகின்றது. கொங்கு நாட்டு வரலாற்றில் ஈடுபட்டு உழைத்தவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்கினர். இந்த வட்டாரத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைப்பதே கொங்கு வரலாற்றாய்வாளர்களின் நோக்கமாக இருந்தது. அந்நாளில் வரலாற்றாய்வு நெறிகள் தொடக்க நிலையிலேயே இருந்தன. மேலும் வரலாற்றாய்வுக்கான மூலங்கள் வரலாற்றாய்வாளருக்குக் கிடைக்காமலேயே இருந்தன. அதனால் கொங்கு வரலாற்றாய்வுகள் மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லி மகிழ்ச்சியடைவதாக அமைந்தன. ஆனால் இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் கொங்கு நாட்டு வரலாறு உறுதியான சான்று (கல்வெட்டு, செப்பேடு, காசுகள், வெளிநாட்டார் குறிப்புகள்) மூலம் எழுதப் பெற்றது. அதனால் கொங்கு நாட்டு வரலாறு அறிவியல் சார்ந்த ஆய்வாக மாறியது என்று கருதலாம். கொங்குச் சமுதாயம் பற்றி வெளிநாட்டறிஞர்கள் மானிடவியல் நோக்கில் ஆய்வு செய்து வருகின்றனர். இவ்வாய்வுகளும் கொங்கு வரலாற்றாய்விற்குப் பயன்படுவதாய் அமைந்துள்ளன.

இடைக்காலக் கொங்கு

கொங்குவரலாற்றில் இடைக்காலம் (சோழர் காலம்) சிறப்பான வரலாறு படைத்த காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையிலான காலம் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்புடையது. இக்காலத்தில் தான் கொங்குச் சோழர் ஆட்சி உருவாயிற்று. சமூக வாழ்வில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்தன. பொருளியல் வாழ்வு வளம்மிக்கதாயிற்று. நிலையான அரசியல் உருவாயிற்று. சமய வாழ்வில் மக்கள் ஈடுபாடு கொண்டு அன்பும், அருளும், அறமும் வேண்டி நின்றனர். பழங்குடி வாழ்க்கை சிறுகச் சிறுக மறைந்து சமூக வாழ்க்கையில் நிலையான தன்மை தலைதூக்கத் தொடங்கியது. பல துறைகளிலும் கொங்குநாடு உன்னதமான வளர்ச்சி நிலையைப் பெற்றது. கலைத்துறையிலும் பல புதுமைகள் சேர்ந்து புதுக்கலைக் கோட்பாடுகள் உருவாயின.

வட்டார வரலாறு

அண்மைக்காலத்தில் வட்டார வரலாறு பற்றி விதந்து பேசப்படுகின்றது. வட்டார வரலாற்றின் தேவையை இந்நூற்றாண்டின் முற்பகுதியில் உணர்ந்து எழுதியவர்கள் கொங்கு வரலாற்றாசிரியர்கள். அண்மைக் காலத்தில் இந்திய வரலாற்றில் வட்டார வரலாறு தேவையான ஒன்றாகி வருகின்றது. புவியியல் சமூக வளர்ச்சி, வரலாற்று வளர்ச்சி போன்றவற்றில் வேறுபட்ட நிலை இந்திய வரலாறு முழுவதும் காணப்பெறுகின்றது. பெந்தபூதி சுப்பாராவ் இதுபற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவர் கூறுகிறார்;

"வரலாற்று வளர்ச்சியின் குவிமையங்கள் என்பதை ஒப்புக் கொண்டு இந்திய வரலாற்றை நோக்கும் போது வரலாற்று வளர்ச்சியின் குவிமையங்கள், வளர்ச்சி குன்றிய பகுதிகள், மிகவும் வளர்ச்சி குன்றிய பகுதிகள் எனப்பல்வேறு சித்திரங்கள் நமக்குக் காட்சி அளிக்கின்றன. இந்திய சமூக வளர்ச்சி பரவலாக வளரும் நிலையும் ஒன்றோடொன்று கலந்து உருவாகும் நிலையும் தனிமைப்பட்டு நிற்கும் நிலையும் என மூவகை நிலையினைக் காட்டி நிற்கின்றது. இது கால இட மாற்றங்களால் வேறுபட்டு நிற்பதைக் காணலாம். பண்பாட்டு விகற்பங்களுக்குக் காரணம் பண்பாடு உருவாகும் புவியியல் அமைப்பில் வேறுபட்டு நிற்பதே ஆகும்."[1]

சுப்பாராவ் கருத்துக்களின் அடிப்படையில் கொங்கு வரலாற்றினை அணுக வேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு வட்டாரமும் தனக்கெனத் தனிச்சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் போக்கினைக் கொண்டு விளங்குகின்றது. இந்த வேறுபட்ட பண்பாட்டு நிலைக்கான காரணம் புவியியலில் வேறுபட்டு நிற்கும் தன்மை ஆகும். இந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தொல்காப்பியர் திணைக் கோட்பாட்டின் மூலம் விளக்கியுள்ளார். ஐந்திணைகள் சமூக வாழ்வில் உள்ள வேறுபட்ட தன்மையை விளக்குவன ஆகும்.

கொங்கு நாடு வட்டார வரலாற்றிற்கான கூறுகளைப் பெற்று நிற்கின்ற தன்மை கொண்டது. மேலும் தனிச்சிறப்பான வரலாற்றுக் கூறுகளையும் பெற்று நிற்கின்றது. மக்கள் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்றவை குறிப்பிடத்தக்க

சிறப்புடையவை. பிற பகுதிகளில் காணப்பெறாதவை. கொங்குப் பகுதியில் திருமணத்தின் போது நடைபெறும் நாட்டுக்கல் வழிபாடு, தொன்மை சான்ற சந்தி வழிபாட்டின் எச்சம் எனலாம்.[2] கொங்குக் கோயில்கள் சிலவற்றில் பெண்கள் சென்று வழிபடக் கூடாது என்ற மரபு உள்ளது. அதற்குச் சான்றாக வெள்ளக் கோயில் வீரகுமாரசாமி கோயில், வெள்ளிங்கிரி ஆண்டவர் கோயில் போன்றவற்றைக் கூறலாம். இது வேட்டுவச் சமூகத்திலும், கால்நடை வளர்ப்புச் சமூகத்திலும் ஆண்வழி உரிமையால் ஏற்பட்டது. அந்த மரபு இன்று வரை நிலைபெற்றுள்ளது. இவை போன்ற சடங்குகள் மிகுதியும் கொங்கில் நிலை பெற்றுள்ளன. இந்த நிலைக்குக் காரணம் தனிச் சிறப்பான புவியியல் அமைப்பும், வறண்ட தட்பவெப்ப நிலையும் ஆகும்.

கொங்கு என்னும் சொல் பற்றியும் கொங்கு நாடு பற்றியும், கொங்கு நாட்டு எல்லைகள் பற்றியும் விரிவாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. கொங்கு என்பது பல்வேறு பொருளைக் கொண்டுள்ளது. தேன், மது, வீணான நிலம், கிழக்கு, கொங்கு மரம் போன்ற பொருள்களை எடுத்துக் கூறி இவற்றில் தாம் விரும்பும் பொருளையே ஆய்வாளர்கள் எடுத்துக் கொள்கின்றனர்[3]. அண்மையில் எஸ்.பி. கந்தசாமி கொங்கு என்பதற்குக் காடு என்று பொருள் கூறியுள்ளார்[4]. கொங்கு நாட்டின் வடக்கெல்லை தலைமலை, பெரும்பாலை, தெற்கெல்லை பழனிக் குன்றுகள், கிழக் கெல்லை குளித்தலை, மேற்கெல்லை வெள்ளிங்கிரி.

கொங்கு நாடு சோழர்காலத்தில் பரந்து பட்ட மண்டலமாக விரிவாயிற்று. ஆனால் அரசியல் போக்கு ஒரு தன்மைத்தாய் இருக்கவில்லை. கொங்கு முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்று மூன்று வகையான ஆட்சியின் கீழ் நிலைபெற்றது. தற்காலப் பகுதிகளான சேலம் மாவட்டம் (ஆத்தூர் வட்டம் நீங்கலாக) குளித்தலை, கரூர் வட்டங்கள் (திருச்சி மாவட்டம்) பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், பழனி வட்டம் (அண்ணா மாவட்டம்) போன்ற பகுதிகள் இடைக்காலக் கொங்கில் அடங்கியிருந்தன.[5] கொங்கான வீர சோழ மண்டலம் (சேலம் , கரூர்ப் பகுதிகள்) தஞ்சைச் சோழர்களின் நேரடி ஆட்சியிலிருந்தது.[6] கோவை மாவட்டம் (அவினாசி, வடகோவை வட்டங்கள் நீங்கலாக) பழனி வட்டத்தின் மேற்குப் பகுதி போன்றவை

தென் கொங்கு என்று அழைக்கப் பெற்றது. இது(கி.பி. 1166 வரை) வீரகேரளர்களின் ஆட்சியிலும் அதன்பின் கொங்குச் சோழர் ஆட்சியிலும் இருந்தது[7]. தொடக்கத்தில் வடகொங்கிலும் பின்னாளில் வடகொங்கு, தென்கொங்கு ஆகிய இரண்டு பகுதிகளிலும் ஆட்சி செய்தனர் என்று கருதலாம். பல்வேறுபட்ட ஆட்சியிலிருந்தமையால் நிருவாகம் பல்வேறுபட்ட தன்மையைப் பெற்றிருந்தது.

சோழர்கால அரசியல் பற்றி அண்மையில் ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது பர்ட்டன் ஸ்டீன் என்பாரின் ஆய்வு ஆகும். அவர் ஆய்வு தென்னிந்திய வரலாற்று ஆய்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்து உள்ளது. அவர் தென்னிந்திய அரசு பற்றியும் குறிப்பாக சோழர் அரசு பற்றியும் கூறியுள்ள முடிவுகள் வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளன. அவர் முடிவுப்படி சோழர் அரசு ஒரு கூறாக்க நிலை (Segmentary State) அரசு ஆகும். அந்த அரசின் இயல்புகளையும் வரையறுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு;

அரசியல் அதிகாரமும், கட்டுப்பாடும் பல சீவாதாரமான வழிகளில் வட்டார நிலைப் பட்டதாகவே காணப்பட்ட இடைக்கால இந்திய அரசானது இங்கு ஒரு கூறாக்க நிலை அரசு ஆகக் கொள்ளப்படுகின்றது. இந்த அரசானது ஆக்க அலகுகளின் செயல் வீச்சு, நன்கு வரையறுக்கப்பட்ட நிலையான இனக் குழுமங்கள் வாழும் பிரதேசங்களுக்குள் வரையறை செய்யப்பட்டதாகவே இருந்தது. அப்பிரதேசங்களின் பிரதானிகளாக இருந்தோர் பெரும்பான்மையும் அந்த உள்ளூர் வட்டாரத்தில் மேலாதிக்கமுடைய இனக்குழுமங்களின் தலைவர்களாகவோ, தலைமைப் பேச்சாளர்களாகவோ தான் இருந்தனர். அத்துடன் தென்னிந்தியாவுக்கே தனிச் சிறப்புத் தருவனவாக அமைகின்ற பல்வேறு உள்ளூர்க் குழுக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வனவாகவிருந்த கூட்டு நிறுவனங்கள் அவ்வட்டாரத்தின் பொது அலுவல்களில் பங்கு கொண்டன.[8]

பர்ட்டன் ஸ்டீனின் முடிவுகள் கொங்குச் சோழர்களுக்கும் தஞ்சைச் சோழர்களுக்கும் இடையிலான அரசியல் நிலையினை வலியுறுத்தும் கோட்பாடாகவே அமைந்துள்ளன. கூறாக்க நிலை

அரசின் ஆக்க அலகுகள் (குறுநில மன்னர்) தம் கூட்டுறவினைக் காலந்தோறும் மாற்றிக் கொள்ளும் இயல்புடையவை. கொங்குச் சோழர்கள் முன்னாளில் (கி.பி. 10–11 ம் நூற்றாண்டுகளில்) தஞ்சைச் சோழர்களுடனும், பின்னாளில் (கி.பி. 12–13 நூற்றாண்டுகளில்)[9] பாண்டியர்களுடனும் கூட்டுறவு வைத்துக் கொண்டனர். பர்ட்டன் ஸ்டீனின் முடிவுகளின் அடிப்படையில் கொங்குச் சோழர் வரலாற்றினை அணுக வேண்டும்.

கொங்குச் சோழர்

கொங்கு நாட்டில் கி.பி. 942 முதல் 1304 வரை ஆட்சி செய்த மன்னர்கள் கொங்குச் சோழர்கள் என்று இந்தியக் கல்வெட்டுத் துறையினரால் அழைக்கப் பெற்றனர்.[10] கோவை கிழார், ஆரோக்கியசாமி போன்றவர்கள் கொங்குச் சோழர்கள் என்ற பெயரை ஏற்றுக் கொண்டு ஆய்வு செய்துள்ளனர். ஆனால் கே.வி. சுப்ரமணிய அய்யர், வீ. இராமமூர்த்தி போன்றவர்கள் கோநாட்டு அரசர்கள் என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.[11] கொங்குச் சோழர் என்று கல்வெட்டுக்களில் இல்லாமையால் அந்தப் பெயரில் அழைக்கக் கூடாது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

மேலும் தஞ்சைச்சோழர்களுக்கும் கோநாட்டரசர்களுக்கு மிடையில் குலமுறை உறவு ஏதுமில்லை என்பர். ஆனால் தென்னிந்திய வரலாற்றில் வட்டாரப் பெயர்களுடனும், மொழிப்பெயர்களுடனும், அரச பரம்பரைகள் கூறப்பெறுகின்றன. ரெனாடு சோழர்கள், உச்சங்கிப் பாண்டியர்கள் என்று கூறுவதை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம்.[12] அந்த வகையில் கொங்குச் சோழர் என்று அழைப்பதும் தவறில்லை என்று கொள்ளலாம். மேலும் அந்த அரச பரம்பரையை எளிதில் விளங்கிக் கொள்வதற்கும் இடைக்காலக் கொங்கு வரலாற்றினை எளிதாக விளக்குவதற்கும், சொல்வதற்கும் இப்பெயர் துணை நிற்கின்றது எனலாம்.

ஆய்வெல்லை

மேலே கூறப்பெற்ற எல்லைகளையும், பரப்பினையும் கொங்குநாடு பெற்றிருப்பினும் கொங்குச் சோழர் ஆட்சிக்குட்பட்ட

பகுதி மட்டும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றது. கி.பி. 942 முதல் 1196 வரை வடகொங்குப் பகுதியையும், 1196 முதல் 1304 வரை வடகொங்கு, தென்கொங்கு ஆகிய இருபகுதிகளையும் ஆட்சி செய்தமையால்[13] இப்பகுதிகளில் கிடைக்கின்ற கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

கொங்குச் சோழர் அரசியல் நிருவாகத்தைப் புரிந்து கொள்ள கொங்குச் சேரர், வீரகேரளர், கொங்குப் பாண்டியர் கல்வெட்டுக்களும் தேவையான அளவிற்குப் பயன்படுத்தப் பெறுகின்றன.[14] காரணம் இவ்வரச பரம்பரைகள் ஒன்றையொன்று அடுத்தடுத்து ஆண்டமையால் அரசியல் நிருவாகத்தில் காணப்பட்ட சிறப்புக் கூறுகள் கலந்து நிற்கின்ற போக்கினைப் பெற்றுள்ளன. கொங்குச் சோழர்களும், வீரகேரளர்களும் அடுத்தடுத்து ஆண்டமையால் இவ்விரு பரம்பரைகளுக்கிடையில் தொடக்கத்திலிருந்தே போர்களும் உடன்பாடுகளும் தொடர்ந்து நடைபெற்றன. அதனால் தென் கொங்கு அரசியல் நிலையற்றதாகவும் குழப்பம் மிக்கதாகவும் இருந்தது. கொங்குச் சோழர் ஆட்சிக்குக் கீழ் வந்த பின்பே தென்கொங்கு அரசியல் நிலையுடையதாயிற்று என்று கொள்ள வேண்டும். கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதியில் மீண்டும் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. எது எப்படி இருப்பினும் கி.பி. 1183 முதல் 1304 வரை இருகொங்கும் ஆண்டபெருமை கொங்குச் சோழர்களுக்கே உண்டு.

ஆய்வு நோக்கம்

கொங்குச் சோழர் காலக் கொங்கு வரலாற்றில் விடுபட்ட செய்திகளையும், புதிய செய்திகளையும் ஆய்வு செய்வதற்கும், சமுதாய வரலாற்றை வெளிக்கொணருவதற்கும் இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது. முந்தைய ஆய்வாளர்கள் அளித்த ஆய்வுகள் கொங்குச் சோழர் பற்றிய பகுதிகள் பரிசீலனைகளாக மட்டும் அமைந்து விட்டன. அவர்கள் கண்டு காட்டிய கருத்துக்களின் வன்மை, மென்மைகள் இங்கு ஆய்வு செய்யப் பெறும். அவர்கள் காலத்துப் பழங்குடி இணைப்பு சமூக வாழ்க்கையில் பற்பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. அந்த மாற்றங்களைக் கண்டு கூறுவதும் இவ்வாய்வின் நோக்கம். சோழன் பூர்வ பட்டயச் செய்திகளையும்,

கல்வெட்டுச் செய்திகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்வது சமூக வரலாற்றிற்கு முன்தேவையாகும். கொங்குச் சோழர்காலத்தில் சுற்றுச் சூழலில் (Ecology) ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி ஆய்வது இன்றைய சுற்றுச் சூழல் ஆய்வுக்குப் பயன்படும். பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவற்றின் கூறுகளையும் எடுத்துக் காட்டவேண்டும். இடைக்கால நகர வாழ்க்கை சமூகத்தில் பல மாற்றங்கள் உருவாவதற்குக் காரணமாயிற்று. இம்மாற்றங்கள் இப்பகுதியில் இடங்கை சாதியார் பெருமை பெறக் காரணமாயிற்று. அக்காரணங்கள் பற்றி ஆய்வு செய்யப் பெறும். அத்தகைய ஆய்வு செய்தால் தற்காலக் கொங்குச் சமூகச் சிக்கல்களைப் புரிந்து கொள்ள அது உதவும்.

முன் ஆய்வுகள்

கொங்கு நாட்டு வரலாற்றாய்வில் ஈடுபட்டு உழைத்தவர்கள் கொங்குச் சோழர்கள் பற்றியும் ஆய்வு செய்துள்ளனர். கொங்குச் சோழரின் தோற்றம், சோழர்கால அரசியலில் அவர்களுடைய பங்கு, கொங்கு வரலாற்றில் அவர்கள் பங்கு போன்றவற்றைப் பற்றி ஆய்ந்துள்ளனர். கொங்குச் சோழர்கள் பற்றிய ஆய்வு முடிவுகள் கோவை கிழார், கே.வி.சுப்ரமணிய அய்யர் என இருபெரும் அறிஞர்களின் இருவேறுபட்ட முடிவுகளைக் கொண்டுள்ளன.[15] இவர்களுக்குப் பின்வந்த ஆய்வாளர்கள் கோவைகிழார், கொள்கையைப் பின்பற்றுபவர்கள் அல்லது கே.வி.சுப்ரமணிய அய்யர் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் என இரு பிரிவினராகப் பிரிந்து நிற்கின்றனர்.[16] இவர்களுடைய ஆய்வுகளைப் பற்றியும், முடிவுகளைப் பற்றியும் முதல் இயலில் விரிவாக ஆய்வு செய்யப் படுவதால் இங்கு ஆய்வு செய்யப் பெறவில்லை.

அடிக்குறிப்பு

1. Subba Rao, B., Personality of India, .p. 6
2. Kandaswamy, S.P., The History of the Kongu Vellalas (Unpublished Ph.D. Thesis university of Madras) 1985. p. 172.

3. Arokiaswamy, M. The Kongu Country,
   Ramamoorthy,V., The History of Kongu p. 21.

4. Kandaswamy, S.P., The name Kongu, in Silver Jublee Sovieneer, N.G.M. College. Pollachi, 1984, p. XII.

5. சுப்பராயலு, நாட்டுப் பிரிவுகள் ஆய்வுத்தேன், ப. 41

6. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, ப.14.

7. Padmavathi P. History of Coimbatore Region, (Unpublished M. Phil. Diss. Annamalai University, 1989) p.18.

8. Burton Stein, Peasant State and Society in Medieval South India, p.5.

9. Subrahmaniya Aiyer, K.V. Historical Sketches of Ancient Dekhan vol. II p. 79, FN4.

10. Annual Report on South Indian Epigraphy.

11. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 60.
    Ramamoorthy, V., op. cit. p. 280.

12. S.I.T.I Vol. III, Part II.

13. Padmavathi, P., op. cit. p. 18.

14. சுந்தர பாண்டியன் (கொங்கு பாண்டியர்) கல்வெட்டுக்களில் கொங்குச் சோழர்களின் நிருவாகம் பின்பற்றப் பெறுவதற்குச் சில சான்றுகள். மன்றாட்டு, மன்றாட்டுக் காணி.

15. கோவை கிழார் முன். கு. நூ.பக் 174 – 85
    Subrahmaniya Aiyer, K.V., op. cit. pp. 60 - 65

16. Arokiaswami, M., op. cit.
    Ramamoorthi, V., op. cit.

சான்றாதாரங்கள்

கொங்கு வரலாற்றை எழுதுவதற்குப் பயன்படும் கருவிச் சான்றுகள் பல திறத்தன. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் கொங்கு வரலாற்றை எழுதியவர்கள் இலக்கியங்களை முதன்மைச் சான்றாகக் கொண்டனர். அதிலும் பிற்கால இலக்கியங்களையே முதன்மைச் சான்றாகக் கொண்டனர்.[1] முதன் முதலில் கோவைகிழார் தன்னுடைய கொங்கு நாட்டு வரலாறு என்ற நூலில் பலதிறச் சான்றுகளைப் பயன்படுத்தினார். இலக்கியம், பட்டயம், கல்வெட்டு, காசு, வெளிநாட்டார் குறிப்பு, மானிடவியல் குறிப்புக்கள், மரபுவழிக் கதைகள் இடப்பெயராய்வு ஆகிய துறைகளில் கொங்கு நாடு பற்றிக் கிடைக்கின்ற அனைத்துச் செய்திகளையும் தன் கொங்கு ஆய்வுக்கு அவர் பயன்படுத்தினார். அவருக்குப் பின்புதான் கொங்கு வரலாற்றிற்குச் சான்றுகளைத் தேடி ஆய்வு செய்யும் போக்கு உருவாயிற்று. மு. ஆரோக்கியசாமி, புலவர். குழந்தை, மயிலை சீனி வேங்கடசாமி, கா. அப்பாதுரை, வீ. இராமமூர்த்தி இந்தவகையில் குறிப்பிடத் தக்கவர்கள்.[2] கே.வி. சுப்ரமணிய அய்யர் கல்வெட்டுச் சான்றுகளை மட்டும் கொண்டு கொங்கு வரலாற்றினை இரத்தினச் சுருக்கமாக எழுதியுள்ளார்.[3] அவருடைய மகன் கே.எஸ்.வைத்தியநாதன் என்பார் கொங்குநாட்டுப் பூகோளம் என்ற நூலில் கல்வெட்டு, இலக்கியம், வெளிநாட்டார் குறிப்பு ஆகியவற்றைப் பயன் படுத்தியுள்ளார்.[4] சென்ற இருபது ஆண்டுகளாக மேல்நாட்டு ஆய்வாளர்கள் கொங்குச் சமூக அமைப்பினைப் பற்றி ஆய்வு செய்து வருகின்றனர். அவர்கள் பிறநாட்டுச் சமூக மானிடவியல் செய்திகளைக் கொங்குச் சமூக ஆய்வில் பயன்படுத்தியுள்ளனர்.[5]

கொங்கு நாட்டு வரலாறு பற்றி நாற்பதாண்டு காலமாக சிந்திக்கப்பட்டு வருவதால் எந்தெந்தச் சான்றுகளைப் பயன்படுத்துவது என்பதில் ஒருமித்த கருத்து ஏற்பட்டுள்ளது என்று தான் கூற வேண்டும். இலக்கியம், பட்டயம், அகழ்வுச் சான்று, கல்வெட்டு , காசு, வெளிநாட்டார் குறிப்பு, மானிடவியல் சான்றுகள் ஆகியன கொங்கு வரலாற்றினை எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கொங்கு நாட்டு வரலாற்றில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டிற்கு முன், வாழ்க்கை நாடோடித் தன்மையைக் கொண்டிருந்தது.[6] பெருவழிகளும்,

பெருவழிகளில் உள்ள ஊர்களும் வளம் பெற்றிருந்தமையால் மக்கள் வாழ்க்கை அவற்றுடன் பிணைந்திருந்தன. பிற பகுதிகளில் கால்நடை வளர்ப்பும் வேட்டைத் தொழிலும் சிறப்புற்றிருந்தன. அதனால் ஆவணங்களை எழுதும் மரபு அருகியே காணப்பட்டது.

கொங்கில் நாடோடி வாழ்க்கை மிகுந்து காணப்பட்ட போதிலும் தமிழ்இலக்கியம், வெளிநாட்டார் குறிப்பு, கல்வெட்டு, ஆகியவற்றுடன் காசுகள், அகழ்வுச் சான்றுகள் ஓரளவு கிடைத்துள்ளன. இவற்றில் கி.பி. 10–ஆம் நூற்றாண்டிற்கு முன் கல்வெட்டுக்கள் குறைந்த எண்ணிக்கையில் கிடைக்கின்றன. நாட்டார் வழக்காறுகள் பற்றி ஏதும் தெரியவில்லை. ஆனால் கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் கல்வெட்டுக்கள் மிகுதியாகவும் இலக்கியம், காசு, வெளிநாட்டார் குறிப்பு போன்றவை அருகியும் காணப்படுவது முரண்பட்ட போக்குத்தான். இன்றைய ஆய்வு நிலையில் இதற்கான காரணத்தை அறுதியிட்டுக் கூற முடியாது.

சான்றாதாரங்கள் முதன்மைச் சான்றாதாரங்கள் என்றும் சார்புச் சான்றாதாரங்கள் என்றும் வரையறை செய்யப்படுகின்றன. முதன்மைச் சான்றாதாரங்கள் என்பன கல்வெட்டுச் சான்றுகள், அகழ்வுச் சான்றுகள், காசுகள் ஆகியவற்றைக் குறிக்கும். சார்புச் சான்றாதாரங்கள் என்பன பட்டயங்கள், இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்களையும், இலக்கியங்களையும் பற்றி எழுந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் என்று பகுத்துக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அகழ்வுச் சான்று

அகழ்வுச் சான்றுகள் ஒரு நாட்டினுடைய சமூக வரலாற்றினை எழுதுவதற்குப் பயன்படும் சிறந்த கருவிகள். கொங்கு நாட்டில் முறையான அகழ்வுச் சான்றுகள் 1970 – ஆம் ஆண்டிலிருந்து தொடங்கின என்று கூறலாம். போளுவாம்பட்டி, கொடுமணல், கரூர், மாங்கரைம்பொழி போன்ற ஊர்களில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற சான்றுகள் கிடைக்கின்றன.[7] அவற்றில் சில பொருட்கள் இவ்வாய்வுக் காலத்தினைச் (கி.பி. 10–ஆம் நூற்றாண்டு முதல் 14–ஆம் நூற்றாண்டு வரை) சேர்ந்தவை. கட்டடப் பகுதி (போளுவாம்பட்டி) இயக்கன்,

இயக்கி உருவங்கள், மட்பாண்டங்கள், மணிகள் போன்றவை கி.பி. 10–12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. பேரூரிலும் அகழ்வுச் சான்றுகள் மிகுதியும் கிடைத்து வருகின்றன.

கல்வெட்டுக்கள்

இந்தியாவில் கல்வெட்டுத்துறை தொடங்கி நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்தியா முழுவதும் 1,50,000 – கல்வெட்டுக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.[8] இவற்றில் 75,000 கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில் உள்ளன. படியெடுக்கப்பட்ட தமிழகக் கல்வெட்டுக்கள் 30,000–த்திற்கும் அதிகமாகும். இவற்றில் அச்சேறியவை 5,000 கல்வெட்டுக்கள். கொங்கு நாட்டில் (இன்றைய கோவை, பெரியார், சேலம் (மேற்கு), கரூர், பழனி பகுதிகள்) 2,000–த்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பெற்றன.[9] இவற்றில் 300–க்கும் குறைவான கல்வெட்டுக்களே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. தமிழக அரசு தொல்லியல் கோவைப் பிரிவு 1,000 கல்வெட்டுக்களைப் பார்வை படியெடுத்து அலுவலகத்தில் வைத்து உள்ளது. இராசு,மா.கணேசன், நாமகிரிப் பேட்டை வெ.இரா.துரைசாமி போன்ற ஆர்வலர்கள் கொங்குக் கல்வெட்டுக்களைப் பார்வைப் படியெடுத்து வருகின்றனர்.[10]

கொங்குச் சோழர் காலத்து வடகொங்கு இன்றைய பெரியார் மாவட்டம், கோவை மாவட்டத்தின் அவினாசி வட்டம், வடக்குக் கோவை வட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது . தாராபுரம் வட்டத்தில் 250 கல்வெட்டுக்களும், பவானி வட்டத்தில் 100 கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. தென் கொங்கில் அடங்கியிருந்த பல்லடம் வட்டத்தில் 70 கல்வெட்டுக்களும், தெற்குக் கோவை வட்டத்தில் 150 கல்வெட்டுக்களும் , பொள்ளாச்சி வட்டத்தில் 100 கல்வெட்டுக்களும், உடுமலை வட்டத்தில் 200 கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன.

ஒரு நாட்டினுடைய அரசியல், சமூக, பொருளாதார வரலாறுகளை எழுதுவதற்குக் கல்வெட்டுக்களைத் தவிர சிறந்த சான்று ஏதுமில்லை. கல்வெட்டுக்கள் இலக்கியங்களைப் போலப் பெயர்த்து எழுதப்பெறுவதில்லை. இலக்கியங்கள் காலந்தோறும் பெயர்த்தெழுதப்படுவதால் பாட வேறுபாடுகள், எழுதுபவர்கள்

விருப்பப்படி திருத்துதல் போன்ற குறைகள் ஏற்பட்டு வருகின்றன. அதனால் உண்மைப் பாடத்தைக் கண்டறிவது கடினமாகி விடுகின்றது. ஆனால் கல்வெட்டுக்களில் அத்தகைய பாடவேறுபாடுகளும் திருத்தங்களும் ஏற்படும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. அதனால் கல்வெட்டுக்களை முழுமையும் நம்பத்தகுந்த சான்றுகளாகக் கொள்ளலாம். மேலும் கல்வெட்டு எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டு காலத்தைத் தெளிவாக வரையறுப்பது எளிது. ஆகையால் கல்வெட்டுச் சான்றுகள் வரலாற்று ஆய்வாளர்களால் போற்றப் பெறுகின்றன.

கொங்கு நாட்டில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் தமிழ்ப்பிராமி, வட்டெழுத்து, தமிழ் எழுத்து, கிரந்தம், கன்னடம், தெலுங்கு ஆகிய எழுத்துக்களில் கிடைக்கின்றன.[11] அவை தமிழ், வடமொழி, கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் எழுதப் பெற்றுள்ளன. கல், மண், மரம், செம்பு, ஓலை, துணி, காகிதம் போன்ற பொருட்களின் மீது எழுதப் பெற்றுள்ளன. அதனால் சில அறிஞர்கள் கல்வெட்டு என்று கூறாமல் சாசனம் என்று கூறுகின்றனர்.[12]

கொங்குக் கல்வெட்டுக்களில் பல அரசராலும் , ஊர்த் தலைவர்களாலும் ஆணைகளாக அளிக்கப் பெற்றவை. யார் அளித்த போதிலும் அவை மக்களுக்கு அளிக்கப் பெற்றமையால் மக்கள் மொழியில் எழுதப் பெற்றன. நிலக்கொடை, காசுக் கொடை போன்றவை மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

நீர் நிருவாகம், பஞ்சம் போன்றவற்றைப் பற்றிச் சில கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. மாடுபிடி சண்டை, நடுகல், கட்டடக் கலை, திருமணம், பலதரப்பட்ட மக்கள் பெயர், குலப் பெயர், வாணிகம், வேளாண்மை, கைத்தொழில் போன்றவை பற்றிக் கல்வெட்டுக்கள் தெளிவாகப் பேசுகின்றன. நாட்டுச்சபை, ஊர்ச்சபை, பிரமதேய சபை, வாணிகர் சபை, கம்மாளர், நிமந்தக்காரர், தேவரடியார் போன்றவர்களின் சபை ஆகியவை பற்றி விவரிக்கின்றன. ஆகையால் கல்வெட்டுக்கள் இவ்வாய்விற்கு முழுமையும் பயன்படுத்தப்படுகின்றன.

கொங்குச் சோழர் காலத்தில் எழுநூற்றுக்கும் அதிகமான கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. வடமொழி, தமிழ் ஆகிய

மொழிகளிலும் கிரந்தம், வட்டெழுத்து, தமிழ் எழுத்து ஆகிய எழுத்துக்களாலும் பொறிக்கப்பட்டுள்ளன. வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் காலத்தால் முற்பட்டவை. இவ்வாய்வில் 90 விழுக்காடு கல்வெட்டுச் சான்றுகளே பயன்படுத்தப் பெறுகின்றன.

கொங்குச் சோழர் காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை கோயில்களுக்கு அளிக்கப் பெற்ற கொடைகள் பற்றியவை. மேலும் தெய்வ உருவங்கள், கோயில்கள் ஆகியவை பற்றி 95 விழுக்காடு கல்வெட்டுக்கள் பேசுகின்றன. சைவம், வைணவம், சமணம், சிறு தெய்வ வழிபாடு பற்றியே இக்கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன.

செப்பேடுகள்

கொங்குச் சோழர் காலத்தில் சில செப்பேடுகள் கிடைத்துள்ளன. பேரூர், வெள்ளலூர் , ஈரோடு போன்ற ஊர்களில் வாழும் சிவாச்சாரியர்கள் செப்பேடுகளை வைத்திருந்தனர்.[13] அச்செப்பேடுகள் பற்றி கோவைகிழார் குறிப்பிடுவார்.

காசுகள்

கொங்குநாடு வாணிகத்தில் சிறப்புற்றிருந்தமையால் இங்கு காசுகள் மிகுதியும் கிடைக்கின்றன. கல்வெட்டுக்களில் ஆனை அச்சு, பழஞ்சலாகை, இடைச்சலாகை, புதுச்சலாகை, ஸ்ரீயக்கி, பணம், கழஞ்சு போன்றவை கூறப்பெறுகின்றன.[14] வீரகேரளன் வெளியிட்ட சில காசுகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைக்கின்றன. அவை வெள்ளிக்காசுகள். அவற்றில் வீரகேரள என்றும், கண்டராங்குஸ்ய என்றும் எழுதப்பெற்றிருந்தது.[15] மேலும் கொங்கு நாட்டில் இடைக்கால சோழர் காசு, சேரர் காசு, பாண்டியர் காசு போன்றவை கிடைக்கின்றன. இவற்றைப் பற்றி விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்விற்குக் காசுகளும் பயன்படும்.

பழமொழி

பழமொழிகள் மக்கள் வாழ்க்கையில் முகிழ்த்தவை. காலந்தோறும் மக்கள் வாழ்க்கையில் நிலைபெற்றிருந்த நம்பிக்கைகள்,

பழக்க வழக்கங்கள், முரண்பாடுகள், சாதிக் கொள்கைகள் போன்றவை பழமொழிகளில் பொதிந்துள்ளன. சான்றுக்கு 'வெட்ட வெட்டத் தழைக்கும் வேட்டுவர் படை' என்ற பழமொழியைக் கூறலாம். வேட்டுவர்கள் ஒரு காலத்தில் கூட்டு வாழ்க்கையில் வாழ்ந்த தன்மையை இது சுட்டுகின்றது. கூட்டு வாழ்க்கையில் வாழ்பவர்கள் மாற்றாருடன் போரிடும் போது இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் போரிட வருவர். இறுதி வேட்டுவன் இறக்கும் வரை போரில் பங்கு கொள்வர். பின்வாங்கிச் செல்ல மாட்டார்கள். இறக்க இறக்க உயிருள்ளவர்கள் புதிதாக வந்து போரிடுவர், இந்தக் கருத்தையே இது சுட்டுகின்றது எனலாம். ஆகையால் பழமொழிகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்படும். கொங்கு நாட்டுப் பழமொழிகள் பற்றி திருமதி. ஜெயாமீனாட்சி சுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[16]

சார்புச் சான்றாதாரங்கள்

1. இலக்கியம்

தமிழ் இலக்கிய மரபு கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது. சங்க இலக்கியம், மக்கள் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி என்று கூறலாம்.[17] அதற்குப் பின் எழுதப் பெற்ற தமிழ் இலக்கியங்களில் பக்தி இலக்கியம் தவிர பிற இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையில் இருந்து விலகியே நிற்கின்றன. அரசியல் வரலாறு எழுதுவதற்கு கொங்கு நாட்டு இலக்கியம் பயன்படவில்லையானாலும் சமயம், சிறு தெய்வம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்புகளைத் தருகின்றன.

சங்க இலக்கியங்கள் இவ்வாய்விற்குப் பயன்படுவது குறைவே. ஐந்திணை வருணனை ஒவ்வொரு திணையிலும் நிலைபெற்றுள்ள மக்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றது. அவற்றில் முல்லை, குறிஞ்சி நில வருணனைகள் கால் நடை மேய்ப்பர்களையும், வேட்டுவர்களையும் பற்றி விவரித்துப் பேசுகின்றன. சோழர் காலத்திற்கு முன் இம்மக்களே இப்பகுதியில் மிகுந்து காணப்பட்டனர். அவர்கள் சோழர் காலத்திலும் தொடர்ந்து வாழ்ந்தனர். இம்மக்களைப் பற்றி ஆய்வு செய்வதற்குச் சங்க இலக்கியம் ஓரளவு பயன்படும். மேலும் பண்டைய கொங்கு

மக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்குச் செய்திகளைத் தருகின்றன. சிறு தெய்வ வணக்கம், தொல்பழங்காலச் சடங்குகள் சோழர் காலத்தில் நிலைபெற்றிருந்தமையால் அவற்றை விளக்குவதற்குச் சங்க இலக்கியம் பயன்படும்.[18]

தமிழ்க் காப்பியங்களில் பெருங்கதை கொங்கு வேளிரால் எழுதப்பெற்ற சிறந்த இலக்கியம். இது வடமொழியிலிருந்து 'பிருகத்கதா' என்பதன் மொழிபெயர்ப்பு என்று கருதுகின்றனர்.[19] ஆனால் அண்மையில் இந்நூல் 'பைசாசி' மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பெற்றது என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.[20] கதை வடநாட்டைப் பற்றியதாயினும் கொங்கு வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பாக முல்லை, குறிஞ்சி ஆகிய நில மக்கள் வாழ்க்கையைப் பற்றி விளக்குவது இவ்வாய்விற்குப் பயன்படும்.

கி.பி. 6–ஆம் நூற்றாண்டிலிருந்து பக்தி இலக்கியம் மிகுந்து காணப்படுகிறது. நாயன்மார் பதிகங்களிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் உள்ளூர் வரலாறு, நாட்டார் வழக்காற்றியல் போன்றவை பயின்று வரக்காணலாம். திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடல்களில் அந்தந்த ஊரில் பயின்றுவரும் 'கருப்பொருள்களும்' பேசப்படுவதைக் காணலாம்.[21] திருஞான சம்பந்தர் பாடல்களில் மக்கள் வாழ்க்கை விளக்கப் பெறுகின்றது. 'கொங்கேழ்' சிவாலயங்கள் தேவாரப்பாடல் பெற்ற தலங்களாகப் போற்றப் பெறுகின்றன.[22] ஆனால் உண்மையில் ஏழுக்கும் மேற்பட்ட தலங்கள் (வைப்புத்தலம் உட்பட) போற்றப்பட்டுள்ளன. சுந்தரர் பாடிய தலங்கள் கொங்குநாட்டுப் பெருவழிகளில் நிலை பெற்றிருந்த வாணிகத் தலங்களே.[23] வெஞ்சமாங்கூடல், திருமுருகன் பூண்டி போன்ற ஊர்களைப் பற்றிய தேவாரப் பாடல்கள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவை. இவ்வூர்கள் 'மாநகர்' என்று கூறப்பெறுகின்றன. திருஞான சம்பந்தர் திருஞ்செங்கோட்டை 'கொடிமாடச் செங்குன்றூர் ' என்று கூறுவார்.[24] கொங்கு நாட்டில் வாழ்ந்த வடுகவேடுவர் 'ஆறலை கள்வர்' என்று கூறப்படுவதைக் காணலாம்.[25] வேளாண்மை வளர்ச்சி இவ்வூர்களில் சிவ வழிபாடு நிலைபெறுவதற்குக் காரணமாயிற்று.

தமிழகம் முழுவதும் தேவாரப்பாடல் பெற்ற தலங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது கொங்குநாட்டில் குறைந்த

தலங்களே பாடல் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. காரணம் வேளாண்மை வளர்ச்சி குறைந்திருந்தமையே ஆகும். ஆனால் தேவாரப் பாடல்களில் கூறப்பெறும் சிறுசிறு குறிப்புகளும் இங்கு நிலைபெற்றிருந்த சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன.

இடைக்காலத் தமிழ் இலக்கியம் உள்ளூர்த் தலைவர்களாலும் சிற்றரசர்களாலும் ஆதரிக்கப்பெற்றது. திருவெண்ணெய்நல்லூர் சடையப்பவள்ளல் கம்பரை ஆதரித்தமையே இதற்குச் சிறந்த சான்று. கொங்கு நாட்டில் சோழ நாட்டு வள்ளல்களைப் போன்ற வள்ளல்கள் யாருமில்லை. சோழர் காலத்தில்தான் கொங்கு நாட்டில் வேளாண்மை விரிவாக்க முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. ஆய்வுக்குரிய கொங்குச் சோழர் காலத்தில் இலக்கிய ஆசிரியர் கருவூர்த்தேவரைத் தவிர யாரும் கொங்கு நாட்டில் தோன்றவில்லை.[26]

கருவூர்த்தேவர் எழுதிய திருவிசைப்பா கொங்குச் சோழர் காலத்தைச் சேர்ந்த சமயநூல். அந்நூலில் மழை வரவழைத்தது, மீன் வரவழைத்தது போன்ற செய்திகள் பேசப்படுகின்றன. இச்செயல்கள் தாந்திரீக மரபினை ஒட்டி எழுந்தவை என்று கருதலாம்.[27] தாந்திரீக மரபில் பஞ்ச மகரங்கள் என்று கூறுவதில் மீனும் அடங்கும். தக்கயாகப் பரணியில் பஞ்சமகரங்கள் பற்றித் தெளிவாகப் பேசப்படுகின்றது. மழை வரவழைப்பதும் தாந்திரீக மரபிற்குரியது. இது பழங்குடி வாழ்க்கையில் நிலைபெற்றுள்ளது. கொங்கு நாட்டு 'வருண தேவன் வழிபாடு' ஒரு வகையில் மழை வரவழைக்கும் சடங்குதான்.

இடைக்காலத் தமிழ் இலக்கியம் பல்கிப் பெருகிய போதிலும் அவற்றில் கொங்கு நாட்டைப் பற்றிய செய்திகள் அருகியே காணப்படுகின்றன. சீவக சிந்தாமணி, இராமாயணம், சூளாமணி போன்ற காப்பியங்கள் தோன்றிய போதிலும் கொங்கு நாட்டைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ ஏதும் கூறவில்லை. கி.பி. 12–ஆம் நூற்றாண்டிற்குப் பின் கொங்கு நாட்டைப் பற்றிய இலக்கியக் குறிப்புகள் கிடைக்கின்றன.[28] ஆனால் கி.பி. 15–16ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டு இலக்கியம் பல்கிப் பெருகியது. இது பட்டக்காரர், பாளையக்காரர் ஆகியோர் பற்றியதாக அமைந்திருந்தது.[29] அருணகிரிநாதர் திருப்புகழில் சில குறிப்புகள் கிடைக்கின்றன.[30]

தலபுராணங்களும், மண்டல சதகங்களும் கொங்குநாடு பற்றிய பல செய்திகளை நமக்கு அளிக்கின்றன. கொங்கு மண்டல சதகம், ஓதாளர் குறவஞ்சி, பேரூர்ப் புராணம், கரூர்ப் புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம், வேளாளர் புராணம், பஞ்சவர்ண காவியம், குருகுல காவியம் போன்றவை சில சான்றுகளைத் தருகின்றன. இவை கற்பனை மிகுந்த இலக்கியங்களாக இருந்த போதிலும் வெள்ளாளர் குடிப் பெயர்ச்சி, பஞ்சசாதி பற்றிய குறிப்புகள் போன்றவற்றைத் தருகின்றன.[31] மேலும் சேரர்கள் ஆட்சி நடைபெற்ற முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது.[32]

ஓதாளர் குறவஞ்சியை ஊன்றிப் படிப்பவர்கள் வெள்ளாளர் குலங்கள், வேட்டுவ வெள்ளாளர் போர், இணைப்பு ஆகிய செய்திகளைப் பற்றி நிறைய சான்றுகளைப் பார்க்கக்கூடும்.[33] கார்மேகக் கவிஞர் எழுதிய கொங்குமண்டல சதகத்தில் சிவ பிராமணர் குடிப்பெயர்ச்சி, வெள்ளாளர் குடிப்பெயர்ச்சி, சிற்றரசர்கள், பட்டக்காரர்கள், காமிண்டர்கள், தெய்வத் தலங்கள் ஆகியவை பற்றிக் கூறப் பெற்றுள்ளது. அந்நூலுக்கு முத்துசாமிக் கோனார் எழுதிய உரை குறிப்பிடத்தக்கது.[34]

தல புராணங்களில் சில வரலாற்றுச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. அண்மையில் கொங்கு நாட்டுத் தல புராணங்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது.[35] தலபுராணங்கள் மக்கள் நம்பிக்கைகள், மரபுவழிக் கதைகள், வரலாறு போன்றவற்றை உள்ளடக்கி நிற்கக் காணலாம். சமூக வரலாற்றுக் கூறுகளைக் கண்டறிய தலபுராணங்கள் உதவியாக நிற்கின்றன. நீலகண்டசாஸ்திரி தல புராணங்கள் சில உண்மைகளை மறைத்து வைத்திருக்கும் கற்பனைக் கடல்கள் என்று கூறினார்.[36] பேரூர்ப் புராணத்தில் பயின்று வரும் நாட்டுப் படலம், பள்ளுப் படலம் போன்றவற்றில் இப்பகுதி வேளாண்மை, வேளாண்மைத் தொடர்பு உடைய மக்கள், அரசியல், வரலாறு போன்றவை பயின்று வரக் காண்கிறோம். இந்த வகையில் செங்கோட்டுப் பள்ளு என்ற பள்ளுநூலும் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. அதிலும் வேளாண்மை பற்றி மிகுதியாகப் பேசப்படுகின்றது. வேளாளர் புராணத்தில் பயின்று வரும் ' ஏர்ப்படலம்' குறிப்பிடத்தக்க சிறப்புடையது.

பட்டயம்

ஓலைச் சுவடியில் எழுதப் பெற்ற பட்டயங்கள் குறிப்பிடத்தக்க செய்திகளை நமக்கு அளிக்கின்றன. சோழன் பூர்வ பட்டயம், வேட்டுவ பூர்வ பட்டயம், திருச் செங்கோட்டுப் பட்டயம் (அரைய நாட்டுப் பட்டயம்) பல்வேறு நாட்டுப் பட்டயங்கள் போன்றவை இந்த வகையில் குறிப்பிடத் தக்கவை. இவ்வாய்விற்கு இப்பட்டயங்களில் சில செய்திகள் கிடைக்கின்றன. இவை கி.பி. 15–ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையானாலும் 10ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டு வரையிலான சமூகத்தினைப் பற்றிச் சில செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன.[37] ஆகையால் இப்பட்டயங்கள் இவ்வாய்விற்குப் பயன்படும் என்பதில் ஐயமில்லை.சோழன் பூர்வ பட்டயம் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கூறுவர். ஆனால் இப்பட்டயத்தில் பயின்று வரும் செய்திகள் கி.பி. 12–13ஆம் நூற்றாண்டில் பயின்று வருவதாகக் கூறுவர்.[38] இந்நூலினை வேளாளர் குடிப்பெயர்ச்சி பற்றிக் கூறும் சிறந்த நூல் என்று அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். வேட்டுவர்களைப் பற்றியும், பழங்குடிகளைப் பற்றியும் இந்நூல் விளக்குகின்றது.

மேலும் இந்தப் பட்டயத்தில் கூறப்படுகின்ற செய்திகள் குறிப்பிடத்தக்கவை. கோவை கிழார் அவர்கள் இந்நூலில் கூறப்படும் அரசன் கரிகாலன் என்பவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான் என்று கூறுகிறார்.[39] முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டை வென்ற பின் சோழர்கள் தலைகீழ் மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள்; காடு கெடுத்து நாடாக்கினார்கள். அதற்காகத் தமிழகத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து வேளாளர்களைக் குடியேற்றினார்கள்.[40] இங்குள்ள பழங்குடிகளை வேளாண்குடிகளாக மாற்றினார்கள். அப்பழங்குடிகளின் பெயர்களையும் பட்டயம் குறிப்பிட்டுள்ளது. காவலர், மாவலர், பூவலர், குறும்பர், வேட்டுவர், இருளர் போன்ற பழங்குடிகள் வாழ்ந்து வந்தனர்.[41] அவர்களை நாடோடி வாழ்க்கையிலிருந்து வேளாண்மை வாழ்க்கைக்கு மாற்றிய பெருமை சோழர்களையே சேரும். இப்பழங்குடிகள் வேளாண்மை செய்தால் வரிவிலக்கு அளிக்கப் பெற்ற செய்தியைச் சோழன் பூர்வ பட்டயம் கூறுகின்றது.[42]

வேட்டுவர் பூர்வபட்டயம் பத்தாண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப் பெற்று பதிப்பிக்கப் பெற்றது. இப்பட்டயத்தில் கி.பி.16–17ஆம் நூற்றாண்டு சமூக வாழ்க்கை பேசப்படுகின்றது. இப் பட்டயம் வேளாளர், வேட்டுவர், செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றி விரிவாகப் பேசுகின்றது. வேட்டுவர்கள் தங்களுடைய காணியாட்சி, ஊராட்சி ஆகிய உரிமைகளை விற்றுவிட்ட செய்தியை மையமாக வைத்துப் பேசுகின்றது. இப்பட்டயம் வேட்டுவர்கள் வேளாண்மையிலிருந்து ஒதுங்கிச் சென்றதையும், வேளாளர்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியதையும் வலியுறுத்திப் பேசுகின்றது. சோழர்கள் வேட்டுவர்களை வேளாண்மைக்குக் கொண்டு வருவதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் வேட்டுவரில் ஒரு பகுதியினர் ஈடுபாடு காட்டவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

மதுக்கரைப் பட்டயம் கொங்கு வேளாளர்க்கும் கொங்குக் குலாலருக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசுகின்றது.[43] கொங்குக் குலாலர்கள் கொங்கு வேளாளர்களால் கொங்கு நாட்டிற்குக் கொண்டு வந்து குடியேற்றப்பட்டவர்கள். மட்பாண்டம் வனைதல் வேண்டி இந்த ஏற்பாடு செய்யப்பெற்றது. மேலும் இந்தப் பட்டயம் வேளாளர் பழக்க வழக்கங்களைப் பற்றி இயம்புகின்றது.

திருமுருகன் பூண்டிப் பட்டயம், பொள்ளாச்சிப் பட்டயம் போன்ற பட்டயங்கள் வேளாளர் குடிப் பெயர்ச்சி பற்றிக் கூறுகின்றன.[44] இவை அனைத்தும் கோவை தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டு பிடிக்கப் பெற்றவை. கோவை அலுவலகத்தில் இவற்றின் நகல்கள் உள்ளன.

வாய்மொழிக் காவியம்

கொங்கு நாட்டில் வாய்மொழிக் காவியங்களாக விளங்குபவை அண்ணன்மார் சுவாமிகதை, கள்ளழகர் அம்மானை ஆகியவை. வேளாளர் சமூகத்தைப் பற்றிய பல அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறும் இலக்கியங்கள் அவை. வாய்மொழிக்கதைப் பாடல்கள் பாமரர்களின் பொழுது போக்கிற்காகப் பாடப்பட்டவை என்று கருதப்பெறுகின்றது.[45] மேலும் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் 'வாய்மொழி இலக்கியம்' என்பது எளிமையாகவும் சொற்செட்டாகவும்

பாடுவதற்கு அமைந்த கதைப்பாடல்கள் என்று கூறுகின்றது.[46] மேலே கூறப்பெற்ற கதைப்பாடல்களை யாத்தவர்கள் தங்கள் காலத்தைச் சேர்ந்த சமூகத்தைப் பற்றிய செய்திகளைப் பற்றித் தெளிந்த ஞானம் பெற்றிருந்தனர். அதனால் அவர்கள் காலத்துச் சமூக நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்றவை கதைப் பாடல்களில் பயின்று வரச்செய்கின்றனர்.[47] சுனித்குமார்சட்டர்ஜி என்பவர் 'தமிழ் வாய்மொழிக் காவியங்கள் வரலாற்று மாணவர்களுக்கு வெட்ட வெட்டக் குறையாத சுரங்கங்கள் போன்றவை' என்று கூறுவர்.[48] கள்ளழகர் அம்மானையும், அண்ணன்மார் சுவாமிகதையும், வேளாளர் வேட்டுவர் போராட்டத்தினைப் பற்றிய சிறந்த வரலாற்றுக் காவியங்கள் என்று பேசப்படுகின்றது. அண்ணன்மார் சுவாமிகதை மொகலாயர் காலத்தைச் சேர்ந்த இலக்கியம் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[49] காரணம் அக்காவியத்தில் முசுலீம்களைப் பற்றிய குறிப்புகள் மிகுந்து காணப்படுகின்றன. மேலும் மதுரை நாயக்கர்களைப் பற்றிய குறிப்புக்கள் கூறப்படுகின்றன. இந்தக் காவியம் மொகலாயர் காலத்தைச் சேர்ந்தது என்று கூறினாலும் சோழர் காலத்துச் சமூகத்தைப் பற்றியது என்று கொள்வதில் தவறில்லை.

அண்மைக் காலத்தில் கொங்கு நாடோடிப் பாடல்கள் தொகுக்கப் பெற்று வருகின்றன.[50] அவற்றில் சில வரலாற்றுச் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. 'ஓலையக்கா கொண்டையிலே' என்ற பாடல் குறிப்பிடத்தக்கது.[51] இந்தப் பாடல் வேளாளர் குடியேற்றத்தைப் பேசும் வாய்மொழிப்பாடல் என்று அனைவராலும் போற்றப்படுகின்றது. இது போன்ற பல பாடல்கள் தொகுக்கப் பெற்று வருகின்றன. அவையும் கொங்குச் சமூக வரலாற்றிற்குப் பயன்படும் தன்மையுடையவை.

கொங்கு நாட்டு வரலாறு பற்றி இந்நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து சிந்திக்கப்பெற்று வருகின்றது. திரு. முத்துசாமிக் கோனார் எழுதிய 'கொங்குநாடு' என்ற நூல் ஒரு வகையில் வரலாற்றுத் தலைவர்களைப் பற்றிய நூலாகவே அமைந்து விட்டது.[52] அதியமான்கள், மழவர்கள், ஓரிகள், பின்னாளைய சிற்றரசர்கள் (பட்டக்காரர், பாளையக்காரர்) போன்றவர்களைப் பற்றியதாகவே அமைந்திருக்கின்றது. கொங்குச் சோழர்கள் பற்றியும், அவர்கள்

காலத்துச் சமய வாழ்க்கை பற்றியும் ஓரளவே செய்திகள் கிடைக்கின்றன.

ஆய்வு நூல்கள் – கட்டுரைகள்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களைப் பற்றி விரிவான ஆய்வு செய்யப்பெற்று வருகின்றது. பேராசிரியர் வி.மாணிக்கம் கொங்கு நாட்டுப் பொருளாதாரம் என்ற பொருள் பற்றி பிஎச்.டி. ஆய்வு செய்துள்ளார்.[53] 'கொங்கேழ் சிவாலயக் கல்வெட்டுக்கள்' என்ற தலைப்பில் பேராசிரியர் மா.கணேசன் ஆய்வு செய்துள்ளார்.[54] பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குட்பட்ட பேரூர் தமிழ்க் கல்லூரி பல ஊர்க்கல்வெட்டுக்கள் பற்றி ஆய்வு செய்ய வகை செய்துள்ளது.[55] ஆகையால் கொங்குக் கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வு சென்ற பத்தாண்டுகளில் வளர்ச்சி அடைந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். மேலும் தொல்லியல் ஆர்வலர்கள் கொங்குக் கல்வெட்டுக்களைப்பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருகின்றனர். பெரும்பாலான கல்வெட்டு, ஆய்வுக் கட்டுரைகள் அரசர்களைப் பற்றியும், அரசியல் வரலாறு பற்றியும் அமைந்துள்ளன. கல்வெட்டுக்கள் மக்கள் தொடர்புடையவை. ஆகையால் காலந்தோறும் சமூக வரலாறு எப்படி மாறிவந்தது என்பதை எடுத்துக்காட்ட வாய்ப்பு இருந்தும் யாரும் பயன்படுத்தவில்லை. மேலும் கல்வெட்டில் பயின்று வரும் சொற்களுக்கு மனம்போன போக்கில் பொருள் கொள்கின்றனர். அல்லது இக்காலப் பொருட்களை அவற்றின் மீது திணிக்கின்றனர்.

சான்றுக்கு ஒன்றைக் காட்டலாம். 'கரைநாடு' என்ற சொல்லாட்சி கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் மிகுதியும் பயின்று வருகின்றது. இரண்டு கரைநாடு, மூன்று கரைநாடு, நான்கு கரைநாடு, ஐந்து கரைநாடு, ஏழுகரைநாடு, ஒன்பது கரைநாடு என்று பல 'கரைநாடு' கூறப்பெறுகின்றன.[56] கொங்கு நாட்டு மக்கள் வழக்கில் 'கரை' என்பது ஆற்றையும் குறிக்கும். இதுகொண்டு கே.எஸ்.வைத்தியநாதன் அவர்கள் ஆறுகளைக் கொண்ட நாடு என்ற பொருளில் 'கரைநாடு' என்ற பெயர் உருவாக்கியிருக்க வேண்டும் என்பர். 'ஏழுகரை நாடு' என்று கூறுவது ஏழு ஆறுகளைக் கொண்ட கொங்கு நாடு என்று கூறுகிறார்.[57] ஆனால் திருச்செங்கோட்டுக் கல்வெட்டு ஒன்று 'கீழ்க்கரை ஏழுகரை நாடும் மேல்கரை

இருபத்திநான்கு நாடும்' என்று கூறுவதால் ஏழுகரை என்பது கொங்குநாடு முழுவதையும் குறிக்கவில்லை என்பது உறுதிப்படுகின்றது.[58] மேலும் 'கரை' என்பது ஆறு என்ற பொருளில் பயன்படுத்தப்படவில்லை என்பதும் புலப்படும். இங்கு கரை என்பது குடும்பம், பங்கு போன்ற பொருளில் வழங்கியது. இது பற்றி ஆய்வில் விரிவாகப் பேசப்படும். கோவை கிழார் (கோ.ம.இராமச்சந்திரஞ் செட்டியார்) எழுதிய கொங்குநாட்டு வரலாறு முறைப்படி எழுதப்பெற்ற முதல் கொங்கு வரலாற்று நூல் (1954). இந்நூலின் இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பு ஆகியன வெளிவந்துள்ளன.[59] அவர் இந்நூலை முதலில் வெளியிட்ட பின்பு அளவு கடந்த வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன. ஆனால் இச்சான்றுகளைக் கொண்டு இந்நூல் திருத்தி எழுதப் பெறவில்லை. கோவைகிழார் கொங்குநாட்டு வரலாற்றைச் சான்றுகளின் அடிப்படையில் எழுதினார். மேலும் அரசபரம்பரைகளைக் கால அடைவில் வரிசைப்படுத்தி எழுதினார். ஒவ்வொரு காலத்திலும் நிலை பெற்றிருந்த சமய வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவைகளைப் பற்றிக் குறிப்புரைகளைத் தந்துள்ளார். விரிவான ஆராய்ச்சி ஏதும் செய்யவில்லை. காலந்தோறும் கொங்கு வரலாறு சென்றவிதம் பற்றிச் சில குறைபாடுகள் உள்ளன.[60] அவை ஆசிரியரால் ஏற்பட்டவை அல்ல. வரலாற்றுச் சான்றுகள் இல்லாத குறையே அதற்குக் காரணம். கொங்குச் சோழர் அரசியல் வரலாற்றை எழுதுவதற்கு இந்நூலின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. மேலும் கோயில்களைப் பற்றியும், சமயத் தலைவர்களைப் பற்றியும், குறிப்பிட்டுள்ள செய்திகள் இவ்வாய்விற்குப் பயன்படத்தக்கன.

மு.ஆரோக்கியசாமி எழுதிய ஆங்கில நூல் கோவை கிழாரின் தமிழ் நூலைப் பின்பற்றி எழுதப்பெற்றது. அந்நூலில் காலந்தோறும் நிலை பெற்றிருந்த சமூக அமைப்பு பற்றி அவர் விரிவாக ஆய்வு செய்துள்ளார்[61] சமய வாழ்க்கை பற்றியும் விரிவான குறிப்பு எழுதியுள்ளார். அவருடைய ஆய்வு முடிவுகள் இன்று கிடைக்கும் சான்றுகளால் மாற்றியமைக்கப்பட வேண்டியவை. கொங்குச் சோழர் காலத்தைப் பற்றி அவர் விரிவாக ஆய்வு செய்துள்ளார். அவர் நூல் வெளிவந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் கூறும் கொங்குச் சோழர் அரசியல் பற்றிப் பல புதிய சான்றுகள் கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி ஆரோக்கியசாமி எழுதிய கொங்குச் சோழர்

அரசியல் பற்றிய கருத்துக்களை மாற்றியமைக்கலாம்.[62] சமூகம் பற்றி அவர்தம் ஆய்வு குறிப்பிடத்தக்கது. அவர் பின்பற்றிய வரலாற்றாய்வு முறை குறிப்பிடத்தக்கதாயினும் இன்றைய வரலாற்றாய்வு சிறந்த நெறிகளை மேற்கொண்டுள்ளது. அந்த நெறிகளின் அடிப்படையிலும் கொங்குச் சோழர் காலத்துச் சமூகத்தை ஆய்வு செய்ய முடியும்.

தொடர்ந்து கொங்கு வரலாற்றில் ஈடுபட்டு எழுதியவர்களில் புலவர் குழந்தையும் ஒருவர். அவர் கொங்கு நாடு என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அந்நூலில் கால அடைவிலான வரலாறு ஏதும் கூறப்படவில்லை. ஆனால் சில பொருள்கள் (தலைப்பு) பற்றி அவர் எழுதியுள்ளமை சிந்தனைக்குரியது.[63] சமூக வரலாறு பற்றிய சில கோட்பாடுகளை மனத்திலிறுத்தி அவர் செய்துள்ள ஆய்வுகள் நவீன கருத்துக்களைக் கொண்டுள்ளன. மேலும் கொங்குச் சோழர்கள் காலத்தில் நிலைபெற்றிருந்த சமூகத்தினைப் பற்றிச் சில செய்திகள் இந்நூலில் உள்ளன.

காலஞ்சென்ற மயிலை, சீனி.வேங்கடசாமி கொங்குநாட்டு வரலாறு எழுதியுள்ளார்.[64] அந்நூல் சங்ககாலக் கொங்குநாடு பற்றிக் கூறுகின்றது. இவ்வாய்வு தொடர்பான காலத்தைப் (கி.பி. 10–14ஆம் நூற்றாண்டு) பற்றி அந்நூலில் ஏதுமில்லை.

1985–ஆம் ஆண்டு கொங்கு நாட்டு வரலாறு (The History of Kongu) என்ற நூல் வீ.இராமமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் தொல்பழங்காலம் முதல் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைப்பற்றி விரிவாகவும் ஆழமாகவும் எழுதப்பெற்றுள்ளது.[65] முன் எழுதியவர்கள் செய்துள்ள குற்றங்களை நீக்கிச் சிறந்த முறையில் எழுதப் பெற்றுள்ள தன்மை புலப்படும். கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் தகுந்த முறையில் பயன்படுத்தியுள்ளார். மேலும் பல அரிய முடிவுகளையும் தந்துள்ளார். இவ்வளவு சிறப்பு இருப்பினும் அவர் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு வெறும் அரசியல் வரலாறாகவே அமைந்து விட்டது. கொங்கு நாட்டுச் சமூகம் பற்றிய வரலாற்றினை விளக்கமாக எழுதவில்லை. இந்நூலின் தமிழ் வடிவம் ஏற்கனவே வெளிவந்தது (1978). அது 'கொங்கு நாட்டுக் கவுண்டர்கள்' என்ற தலைப்பில் உள்ளது. அந்நூலில் வேட்டுவர்,

வேளாளர் ஆகிய சமூகங்களைப் பற்றி குறிப்புகள் தந்துள்ளார். கொங்குச்சோழர் கால வேளாளர் குடிப்பெயர்ச்சி பற்றிய ஆய்வு குறிப்பிடத்தக்கது.[66]

எல்லைகள்

நாற்பதாண்டுக் காலமாகக் கொங்கு நாட்டு வரலாறு பற்றி எழுதியவர்கள் எல்லைகளைத் தெளிவாக வகுத்துக் கொண்டு எழுதவில்லை என்றே தோன்றுகிறது. வடக்கெல்லையும் கிழக்கெல்லையும் தெளிவுபட வரையறுத்துக் கொள்ளவில்லை. கொங்குமண்டல சதகத்தினையும், பழம்பாடலையும் எல்லை பற்றிக் கூறும் போது மேற்கோள் காட்டினாலும் அப்பாடல்கள் கூறும் எல்லைகளுக்கும் அப்பால் கொங்குநாடு இருந்தது என்று கருதி வரலாறு எழுதுகின்றனர். வீ.இராமமூர்த்தி கருநாடக மாநிலத்தில் காவிரிக்குத் தெற்கில் உள்ள பகுதியையும் கொங்கு நாடு என்று கருதுகின்றார்.[67] அதற்கு அவர் கூறும் சான்றுகள் இராட்டிரகூட மன்னன் அமோகவர்ஷனின் செப்பேடு ஒன்று, கன்னட இலக்கண நூல் கவிராஜ மார்கம் ஆகியவை. இவ்விரு சான்றுகளும் கருநாடகத்தின் தென்எல்லை காவிரி என்றுதான் கூறுகின்றன. ஆனால் காவிரிக்குத் தெற்கிலும் தலைமலைக்கு வடக்கிலும் உள்ள பகுதி கொங்கு நாட்டில் அமைந்திருக்கவில்லை. மாறாக புன்னாடு என்ற தனி நாடாக அமைந்திருந்தது.[68]

கோவைகிழார், ஆரோக்கியசாமி, புலவர் குழந்தை ஆகியோர் எழுதிய நூலில் சேலம் மாவட்டம் முழுவதையும், தருமபுரி மாவட்டத்தையும் கொங்கு நாட்டின் பகுதியாகக் கருதி ஆய்வு செய்கின்றனர்.[69] கொங்கு என்ற பெயர் அப்பகுதிக் கல்வெட்டுக்களில் எந்தக் காலத்திலும் கூறப்பெறவில்லை. சேலம் மாவட்டம் முழுவதும் சோழர் காலத்தில் மைய அரசின் நேரடி ஆட்சியிலிருந்தது. கரூர்ப் பகுதியிலும் கொங்குச் சோழர் ஆட்சி நிலைபெற்றிருக்கவில்லை. கொங்குநாட்டுப் பகுதியாக அமைந்திருந்தபோதிலும் அது சோழர்களின் நேரடி ஆட்சியில் அமைந்திருந்தது. கொங்குச் சோழர்கள் ஆட்சியிலிருந்த பகுதி இன்றைய கோவை, பெரியார் மாவட்டங்கள், அண்ணா மாவட்டத்தின் பழனி வட்டம் ஆகிய பகுதிகள். இவ்வாய்விற்கு இப்பகுதியில் கிடைக்கின்ற கொங்குச் சோழர் கல்வெட்டுக்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

கொங்குநாடு என்று கருதப்படும் பிற பகுதிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவில்லை.

கொங்குநாட்டு வரலாறு மட்டுமின்றி இப்பகுதியில் வாழும் சாதியார் பற்றியும், பழங்குடிகள் பற்றியும் ஆய்வுகள் வந்த வண்ணம் உள்ளன. அவற்றில் கொங்கு வெள்ளாளர் பற்றி நான்கு நூல்கள் உள்ளன. இந்நூல்களில் வரலாற்றியல் நெறிமுறைகள் தெளிவாகப் பயன்படுத்தப்படவில்லையானாலும், இவ்வாய்விற்குரிய தரவுகளைப் பெற்று விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.[70] சின்னசாமிக் கவுண்டர் (1955), சக்தி தேவி ஆகியோர் எழுதிய கொங்கு வேளாளர் பற்றிய வரலாற்று நூல்களில், பல தரவுகள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை. மானிடவியல் கோட்பாடுகளைப் பின்பற்றி கிருஷ்ணசாமி எழுதிய நூல் 'கூட்டமும் திருமணமும்' என்பதாகும்.[71] இந்நூல் குலச்சின்னங்களின் அடிப்படையை ஆய்வு செய்கின்றது.

பிருந்தாபெக் கொங்கு வேளாளர்பற்றி சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்துள்ளார். அந்நூல கொங்குச் சோழர் காலத்துச் சமூகத்தில் எழுந்த வலங்கை இடங்கை பற்றிய ஆய்வு ஆகும்.[72] மேலும் அவரே பதிப்பித்த 'வட்டாரப்பண்பாடு பற்றிய சில கருத்துக்கள்' **(Perspectives on a regional culture)** என்ற நூலில் 'நாடு' என்ற பொருளில் எழுதப் பெற்றுள்ள கட்டுரை பல நோக்கில் சிறப்புடையது. அரசியல் புவியியல் ஆய்விற்கு உற்ற துணையாக அமைந்துள்ளது. மேலும் ஆய்வுக் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளும் இவ்வாய்வுக்குப் பயன்படும் தன்மையுடையவை. பழங்குடிகளைப்பற்றிச் சில ஆய்வுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. அவ்வாய்வுகளும் இவ்வாய்வில் நன்கு பயன்படுத்தப்பெறும்.

அமெரிக்க ஆய்வாளர் பர்ட்டன்ஸ்டீன் எழுதிய 'இடைக்கால வேளாளர்' வேளாளர் அரசு என்ற நூல் தென்னிந்திய வரலாற்றாய்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.[73] இந்நூல் முழுமையும் தமிழ்நாட்டைப் பற்றியதாகும். அவர் இந்நூலில் இடங்கை வலங்கை பற்றியும், அக்கால பிரமதேயங்கள் பற்றியும், நாட்டுச் சபை பற்றியும், சித்திரமேழிப் பெரிய நாடு பற்றியும் விரிவாக ஆய்வு செய்துள்ளார். கொங்கு நாடு பற்றியும், இங்கு நிலை பெற்றிருந்த சமயம் பற்றியும்,

சமூகம் பற்றியும் அவர் கூறியுள்ள முடிவுகள்[74] புதுமையானவை. அவருக்கு முன் அந்த நோக்கில் யாரும் கூறவில்லை. அவருடைய நூலில் கொங்குச் சோழர் பற்றியும் சில அரிய குறிப்புகளைத் தந்துள்ளார்.[75] அக்குறிப்புகள் இவ்வாய்விற்குப் பயன்படும் என்பது உறுதி.

முடிவுரை

கொங்குச் சோழர்கள் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளருக்குப் பல்வேறுபட்ட வரலாற்று ஆவணங்கள் கிடைக்கின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை கல்வெட்டுக்களும் செப்பேடுகளும். கொங்கு நாட்டில் அகழாய்வு தொடக்க நிலையிலேயே உள்ளது. மேலும் இதுவரை நடைபெற்ற அகழாய்வுகள் பண்டைக் காலத்தைப் பற்றிய செய்திகளையே மிகுதியாகத் தருகின்றன. கொங்குச் சோழர்கள் பற்றிய சான்றுகள் அகழாய்வில் குறைவாகவே கிடைக்கின்றன. மரபு வழிப்பட்டயங்கள் மிகுதியும் கிடைத்திருப்பினும் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவை என்று கருதும் அளவிற்கு ஒரே தன்மைத்தான செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன. அதனால் அவை தரும் சான்றுகளை முதன்மைச் சான்றாதாரங்களுடன் (கல்வெட்டு, அகழாய்வு) ஒப்பிட்டு முடிவு கூறலாம். புராணங்களில் பயின்று வரும் செய்திகளையும் ஆய்வு செய்யலாம். மானிடவியல் புராணங்களைப் பற்றிய ஆய்வுகள் தெளிவான முடிவுகளை அளித்துள்ளது. அவற்றை இவ்வாய்வில் பயன்படுத்தலாம்.

அடிக்குறிப்புகள்

1. பழனிச்சாமிப் புலவர் கொங்குச் செல்வி.
2. Arokyaswami, M.,The Kongu Country,
   Ramamoorthy,V.The History of Kongu,
   புலவர்குழந்தை,கொங்குநாடு,
   வேங்கடசாமி, சீனி, மயிலை,கொங்குநாட்டு வரலாறு,
   அப்பாதுரை.கா,கொங்கு நாட்டு வரலாறு,சென்னை,
   கோவைகிழார்,கொங்கு நாட்டு வரலாறு,1972.

3. Subrahmaniya Aiyer, K.V. Historical Sketches of Ancient Dekhan, Vol. II pp 43-101.

4. Vaidyanathan, K.S., The Ancient Geography of the Kongu Country, Erode, 1983.

5. Branda E.F. Beck, Peasant Society in Kongu (Vancouver, 1966)
Perspectives on a regional culture, (Edited by her) New Delhi, 1972.

6. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, ப.68

7. பூங்குன்றன், ஆர்., கொங்கு நாட்டு அகழ்வாய்வு, கோவைகிழார் நூற்றாண்டு விழாக்கருத்தரங்கு, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி மார்ச் 1987.

8. பூங்குன்றன், ஆர்., கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் வானொலி உரை, 1978.

9. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 89

10. இவ்வாய்வாளர்கள் தொகுத்துள்ள கல்வெட்டுக்கள் அவரவரிடம் உள்ளன.

11. பூங்குன்றன், ஆர்., கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் வானொலி உரை 1978.

12. வேலுப்பிள்ளை, ஆ., சாசனமும் தமிழும், முன்னுரை.

13. இராமச்சந்திரஞ் செட்டியார், சி.எம். திருப்பேரூரின் பண்டைய சரித வரலாறு, பேரூர் புராணம் (வசன சுருக்கம்) ப. 61.

14. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 93.

15. Nagasamy, R., Tamil coin - A study . p. 15.

16. Jaya Meenakshisundaram, Kongu proverbs. Gnanamanipannai, Coimbatore 1984.

17. Burton Stein, Peasant State and Society in Medieval South India p.2.

18. கொற்றவை வழிபாடு (அகம் 309) நடுகல் வழிபாடு (அகம் 35. 63, 69) போன்றவற்றைச் சான்றுக்குக் காட்டலாம்.

19. வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கிய சிந்தனைகள், ப. 457.

20. Vijayalakshmi, R., Perunkatai - A study p.23.

21. இங்கு கருப்பொருள் என்பது மக்கள் தொழில், இயற்கைச் சூழல் போன்றவையாகும்.

22. கொங்கு மண்டல சதகம் பக். 9–15.

23. கணேசன், மா., கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலங்களில் கல்வெட்டுக்கள் ஓர் ஆய்வு பிஎச்.டி. ஆய்வேடு சென்னைப் பல்கலைக் கழகம், 1987.

24. திருஞானசம்பந்தர் தேவாரம், திருச்செங்கோட்டுப் பதிகம், பாட்டு1.

25. சுந்தரர் தேவாரம், திருமுருகன் பூண்டிப் பதிகம், முதல்பாட்டு.

26. கருவூர்த்தேவர் கொங்கு நாட்டினர் என்று கொண்டாலும் அவர் நூலில் கொங்கு பற்றிய குறிப்பு ஓரளவே உள்ளது.

27. சாமி, பி.எல்., தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு ப.70

28. சேக்கிழாரும் கூட, சுந்தரர் சேரநாட்டுப் பயணம்பற்றிக் கூறும்போது கொங்கு பற்றிச் சுருக்கமாகவே கூறுகிறார். (சேரமான் பாடல் எண். 141, 164, ஏயர்கோ, 85 வெள்ளானைச் – 15)

29. பாம்பண்ணன் குறவஞ்சி, (அருணாசலக் கவுண்டர், கு. ப.ஆ)
பேரூர்புராணம், (ப.ஆ.இல்லை)
திருச்செங்கோட்டுப் பள்ளு, (கந்தசாமி.ப.ஆ),
சர்க்கரை மன்றாடியர் காதல் (அருணாசலக்கவுண்டர். கு.)

30. பழனி (சேரர் வைகாவூர்), சென்னிமலை, பேரூர் (இது சென்னைக் கருகில் உள்ள திருப்பேரூர் என்றும் கருதுவர்), சிவன்மலை பற்றி அருணகிரிநாதர் பாடியுள்ளார். (செய்தி தவத்திரு சுந்தரசாமிகள் கௌமார மடாலயம்).

31. சான்றுக்கு ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சியைக் கூறலாம் ப.39.

32. அவினாசி புராணம், முருகன் பூண்டி புராணம், பேரூர் புராணம்.

33. ஓதாளர் குறவஞ்சி என்னும் அலகுமலைக் குறவஞ்சி, பக். 38–39

34. கோனார் அவர்கள் அதியேந்திர விஷ்ணு கிரகம், காமிண்டர். சிவாச்சாரியார், மன்றாடி போன்றவற்றிற்கு எழுதியுள்ள உரையைக் குறிப்பிடலாம். (கொங்கு மண்டல சதகம், பக். 69, 80,103,109).

35. பூங்குன்றன், ஆர்., கொங்குநாட்டுத் தலங்களும் இலக்கியங்களும், கொங்கு நாட்டியல் (செயராமன்.நா., சந்திரசேகரன். இரா., ப.ஆ) பக். 152 – 71.

36. Nilakanta Sastri, K.A., Pandiyan Kingdom, p.15.

37. சோழன் பூர்வ பட்டயம் (முன்னுரை)

38. நாச்சிமுத்து. கி., சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள் ப. 33.

39. மேலது (மேற்கோள்) ப. 32.

40. Kandaswamy, S.P., op.cit. p. 100.

41. நாச்சிமுத்து, கி.முன்.கு.நூ.ப.36.

42. மேலது ப. 4.

43. மதுக்கரை பட்டயம், ப.2.

44. திருமுருகன் பூண்டி பட்டயம் வேளாளர் குடியேற்றத்தையும், பொள்ளாச்சி பட்டயம் கண்ணகுலத்தினர் குடிப்பெயர்ச்சியையும் கூறுகின்றன.

45. Casall's Encyclopeadia, Vol. II.

47. அண்ணன்மார் கதையில் 'மலடி' பற்றிய வேளாளர் நம்பிக்கை, கன்னிப் பெண் பற்றிய நம்பிக்கை போன்றவை பேசப்பட்டுள்ளன.

(Kandaswamy. S.P., op. cit. p.181)

48. Chatterge, S.K., Selected Papers p.105.

49. கால ஆராய்ச்சி அண்ணன்மார் சுவாமி கதை (சக்திகனல் பதிப்பு)

50. கிருட்டிணசாமி, க., கொங்கு நாடோடிப் பாடல்கள் (இரண்டு தொகுதிகள்), 1977, 1980 மக்கள் வெளியீடு, சென்னை – 2.

51. கோவைகிழார் , எங்கள் நாட்டுப்புறம் , ப.171

52. முத்துசாமி கோனார், கொங்கு நாடு.

53. Manickam, V., Economic Condition in Medieval Kongu (Ph.D. Thesis University of Madras) 1983.

54. கணேசன், மா., முன்.கு.நூ.

55. இந்த வகையில் அவினாசி கல்வெட்டுக்கள் ஓர் ஆய்வு, சேவூர் கோயில்கள் ஓர் ஆய்வு, முட்டத்து நாகேஸ்வரம் ஓர் ஆய்வு போன்ற எம்.ஃபில் ஆய்வேடுகளைக் கூறலாம். பாரதியார் பல்கலைக் கழகம், 1984.

56. Vaidyanathan, K.S., op. cit. p.38.

57. Ibid . p.38

58. Ibid . p.39.

59. கோவைகிழார், முன்.கு.நூ. 1954 சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி பேரூர் பதிப்பாக வெளிவந்தவை 1972, 1988.

60. மேலது. ப. 171.
சான்றுக்கு கொங்குச் சோழர் பரம்பரையில் முதல் மன்னனாக விக்ரம சோழன் 1 என்பவனைக் கூறுகிறார். ஆனால் அவனுக்கு முன் இரண்டு மன்னர்கள் (வீர சோழன், வீர சோழ கலிமூர்க்கன்) ஆண்டுள்ளார்கள்.

61. Arokiaswami, M., op. cit. pp 182 - 86, 256 - 80.
இந்நூலில் சங்க கால சமுதாயம், கங்கர் கால சமுதாயம், சோழர் கால சமுதாயம் என்று ஒவ்வொரு கால சமுதாயத்தின் இயல்பினைப் பற்றி விரிவாகப் பேசியுள்ளார். அவ்அவ்கால சமுதாயங்களைப் பற்றிய கற்பனைச் சித்திரங்களாக அவை அமைந்திருந்த போதிலும் பின்னால் வந்த ஆய்வாளருக்கு ஒரு வகை மாதிரியாக அமைந்துவிட்டது.

62. Ibid. p. 234.
ஆசிரியர் கோவைகிழாரைப் பின்பற்றி எழுதியுள்ள அரசியல் வரலாறு. அவ்வரலாறு கோவைகிழார் எழுதியுள்ள அரசியல் வரலாற்றில் உள்ள குறைகளைப் பெற்று விளங்குகிறது.

63. குழந்தை முன்.கு.நூ.
இந்நூலில் கொங்கு வேளாளர் குலச்சின்னங்களைப் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

64. மயிலை, சீனி வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு 1972.

65. Ramamoorthy,V., The History of Kongu, 1985, Madras.

66. வீயாரெம், கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் 1976, லோட்டஸ் பதிப்பகம்.

67. Ramamoorthy, V., op. cit. p.3

68. Gopal, B.R,,Minor Dynasties of South India, Karnataka, pp. 7 - 14.

69. கோவை கிழார், முன்.கு.நூ, ப. 165.,
Arokiaswami, M., op.cit. p.
இவ்விரு ஆசிரியர்களும் குலோத்துங்க சோழன் பற்றி எழுதும் போது, தருமபுரி தீர்த்தமலையில் உள்ள குலோத்துங்க சோழன் கல்வெட்டுக்களை, கொங்குச்சோழர் மரபினைச் சார்ந்தவனாகக் கருதி தருமபுரியிலும் கொங்குச் சோழர் ஆட்சி பரவியிருந்ததாக எழுதியுள்ளனர்.

70. சின்னசாமிக் கவுண்டர், கொங்கு வேளாளர், சக்திதேவி டி.கே., கொங்கு வேளாளர் வரலாறு, இந்நூல்களில் கூறப்பெற்ற செய்திகள் இவ்வாய்விற்குப் பயன்படும். மரபு வழிக்கதைகள், புராணங்கள், காணியாட்சிப் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

71. இந்நூல் 1984ல் கூட்டமும் திருமணமும் என்றும், 1985ல் கூட்டச் சின்னவியல் என்றும் வெளியிடப்பெற்றுள்ளது.

72. இந்நூல் 1978-ம் ஆண்டில் வெளிவந்தது. அதன் பிறகு பிருந்தா இ.எப்.பெக்., மர்ட்டன் ஆகியோர் கட்டுரைகள் வெளியிட்டுள்ளனர்.

73. Burtan Stein. op.cit.

74. Ibid . p. 310

75. Ibid . p. 311.

அரசியல் பின்னணி

'கொங்குச் சோழர்' வரலாறு பற்றி நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. மத்திய தொல்லியல் துறை ஆண்டறிக்கையில் முதன் முதலில் 'கொங்கு சோழர்' என்ற அரச பரம்பரையினர் பற்றிக் கூறப்படுகின்றது.[1] கி.பி.பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையில் கொங்கு நாட்டை ஆண்ட மன்னர்கள் 'சோழன்' என்ற அடைமொழியுடன் தங்களைக் கூறிக்கொண்டமையால் 'கொங்குச் சோழர்' என்று அவர்கள் அழைக்கப்பட்டனர். கொங்குச் சோழர் யார் என்பது பற்றிக் கால் நூற்றாண்டுக் காலமாக ஆய்வுகள் நடந்த வண்ணம் உள்ளன. கோவைகிழார், எம்.ஆரோக்கியசாமி, சதாசிவபண்டாரத்தார், எம்.எஸ்.கோவிந்தசாமி, புலவர்.இராசு, வி.இராமமூர்த்தி போன்றவர்கள் கொங்குச்சோழர் மரபு, தோற்றம் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.[2]

கொங்குச் சோழர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் கொங்கு நாட்டில் பாண்டியர்கள், கங்கர்கள், சேரர்கள் போன்ற அரச பரம்பரையினர் ஆண்டுள்ளனர். கி.பி. 9–10ஆம் நூற்றாண்டு வரை இவர்கள் ஆட்சி நிலைபெற்றிருந்தது.[3] பாண்டியர்களில் இரண்டாம் வரகுணன், பராந்தக வீரநாராயணன் போன்றவர்கள் ஆண்டுள்ளனர்.[4] சேரர்களில் கோக்கண்டன் வீரநாராயணன், கோக்கண்டன் ரவி, இரவிகண்டன் போன்ற மன்னர்கள் ஆண்டுள்ளனர்.[5] இவர்கள் கல்வெட்டு கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்றது. பாண்டியர் கல்வெட்டு பழனிப் பகுதியில் மட்டும் கிடைக்கின்றது.[6] கங்கர்கள் பவானிக் கரையிலும் சேலம் பகுதியிலும் ஆட்சி செய்தனர். சேலத்தில் கிடைத்த ஸ்ரீபுருஷன் செப்பேடு, ஆலத்தூரில் கிடைத்த சிந்தரையர் கல்வெட்டுக்கள் இதனை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளன.[7] ஆனால் கொங்கு நாட்டின் அரசியல் வரலாறு நிலையற்ற போக்கினையே காட்டி நின்றது. வரகுணபாண்டியன் காலத்தில் ஆதித்தனால் கொங்குநாடு சோழர் ஆட்சிக்குட்பட்டது. அதுவும் நிலையற்றதாகவே விளங்கியது. முதலாம் ஆதித்தனுடைய கல்வெட்டு கொங்கின் மேற்குப்பகுதியில் கிடைக்கின்றது.[8] ஆனால் அவனுக்குப் பின் வந்த சோழர்கள் கல்வெட்டு ஏதும் கிடைக்கவில்லை. முதலாம்

இராஜராஜன் காலத்தில் தென்கொங்கினை ஆண்டு வந்த அமரபுயங்கரன் என்ற கேரள மன்னன் சோழர்களுக்கு எதிராக நின்றவன் என்று கூறப்படுகின்றான். அவனை இராஜராஜன் தோற்கடித்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறும். திருக்கோயிலூர் கல்வெட்டு 'கொங்கபூமி வெளிப்படுத்தி' என்று TW«.[9] இந்தக் கல்வெட்டு வாசகம் கூறும் செய்தி பற்றி விளங்கிக் கொள்வது கடினமாக உள்ளது. ஆனால் தென்கொங்கில் ஆட்சி செய்த அமரபுயங்கரன் என்பவனைத் தோற்கடித்த செய்தியை இந்தக் கல்வெட்டு கூறுவதாகக் கொள்ளலாம்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கொங்கு அரசியல், போராட்டங்களும் படையெடுப்புகளும், வெற்றி தோல்விகளும் நிறைந்ததாக விளங்கியது. மேலும் பல அரசர்களின் தாக்குதலுக்குள்ளானது. அதனால் அரசியல் வாழ்க்கை நிலையற்றதாக விளங்கியது. ஆனால் சமூகப் பொருளாதார வாழ்க்கை மாற்றமின்றியே நிலைபெற்றிருந்தது. இருக்கவும் கொங்கு மக்கள் அரசியல் மாற்றங்களினூடே மகிழ்ச்சியுடனும், தொல்லையின்றியும் வாழ்ந்தனர். சமூக நிருவாகம் பண்டைய நிலையிலேயே வலிமை பெற்று விளங்கியது. அது முன்னைப்பழமை இருந்தவாறே இருந்தது.

கொங்குச் சோழர்கள் சோழமரபினரே என்று புலவர் செ.இராசு அவர்களும், சேர மரபினரே என்று வி.இராமமூர்த்தி அவர்களும், முத்தரையரே என்று நடன.காசிநாதன் அவர்களும், கருநாடக இருக்குவேளிரே என்று கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், டி.என். சுப்ரமணியம் ஆகியோரும், கோ நாட்டு இருக்கு வேளிரே என்று கே.வி.சுப்ரமணிய அய்யரும் கூறுவதைக் காணலாம். இக்கருத்துக்களின் வன்மையை ஆய்வு செய்தல் சிறப்புடையது.

சோழ மரபினரே

செ.இராசு, கொங்குச்சோழர் தஞ்சைச் சோழரின் வழிவந்தவர்கள் என்ற கருத்தினை வலியுறுத்துவார்.[10] அவர் கருத்துப்படி தஞ்சைச் சோழர்களில் கண்டராதித்தன் 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று கூறுவது கொங்கு நாட்டிற்கு வந்து தங்கியதையே ஆகும்.அவனுடைய மனைவி செம்பியன்மாதேவி

மழவரையர் மகளாவார். அதனால் மாமனார் நாட்டிற்கு வந்தடைந்தார் என்பார்.[11] அவருடைய மகன் உத்தமசோழன் பெயரில் உத்தம சோழபுரம் (சேலம் அருகில் உள்ள ஊர்) என்ற பெயர் வந்ததென்றும், இது கண்டராதித்தன் பரம்பரை தொடர்ந்து கொங்கு நாட்டை ஆண்டதற்குச் சிறந்த சான்று என்றும் கூறுவார். அண்மையில் கண்டு பிடிக்கப்பெற்ற இராசகேசரி பெருவழி கண்டராதித்தன் காலத்தைச் சேர்ந்தது என்று கூறுவார்.[12] இன்றைய சேலம் மாவட்டம் (கண்டராதித்தனின் மாமனார் பகுதி) முழுவதும் கருவூர்ப்பகுதியும் அந்நாளில் தஞ்சைச் சோழர்களின் ஆட்சியின் கீழ் இருந்ததே ஒழிய கொங்குச் சோழர்களின் ஆட்சியில் இருந்ததில்லை. சேலம் பகுதி கொங்குச் சோழர் ஆட்சியில் ஒருபோதும் இருந்ததில்லை. ஆகையால் கண்டராதித்தன், உத்தமசோழன் போன்றவர்கள் மட்டுமின்றி பின்னால் ஆட்சி செய்த மூன்றாம் குலோத்துங்கன் வரையில் சேலம் மாவட்டம் தஞ்சைச் சோழர் ஆட்சியில் இருந்தது. பெரியார் மாவட்டம் (வடகொங்கு) கோநாட்டார் (கொங்குச் சோழர்) ஆட்சியில் இருந்தது. கோவை மாவட்டம் (தென்கொங்கு) வீரகேரளர் ஆட்சியில் நிலைபெற்றிருந்தது. இது பற்றிப் பின்னர் விளக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் சான்றுகளைத் தஞ்சைச் சோழர் வரலாற்றுடன் வைத்துப் பார்க்க வேண்டுமேயொழிய கொங்குச் சோழர் மரபுடன் சேர்த்துப் பார்ப்பது வரலாற்று முரண். மேலும் கொங்குச் சோழர்கள் தஞ்சைச் சோழர்களுடன் திருமண உறவு வைத்திருந்தார்கள்.[13] ஒரே குலத்தினைச் சார்ந்தவர்கள் திருமண உறவு வைத்துக் கொள்வது தமிழக மண உறவு மரபிற்கு முரணானது. இந்தக் காரணங்களால் கொங்குச் சோழர் தஞ்சைச் சோழர் மரபிலிருந்து மாறுபட்டவர்கள் என்பது புலப்படும்.

சேரமரபினரே

வி.இராமமூர்த்தி என்பார் கொங்குச் சோழர்கள் சேரமரபினைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகின்றார்.[14] அவர் அதற்கு நாமக்கல் செப்பேட்டினைச் சான்று காட்டுகின்றார். அதில் வீரசோழன் என்பவனுடைய முன்னோர் இரவி, கண்டன் ஆகிய பெயர்களால் கூறப்படுகின்றனர். இவை சேரமரபினர் பெயர்கள் என்று

கருதப்படுகின்றன. நாமக்கல் செப்பேட்டில் வீர சோழன் என்பவன் பிராமணர்களுக்கு நிலக்கொடை அளித்ததைப் பற்றிக் கூறப்படுகின்றது. அந்தச் செப்பேட்டினைக் கண்டுபிடித்துப் பதிப்பித்தவர் இச்செப்பேட்டில் குறிக்கப்பெறும் மன்னன் பராந்தகசோழனாக இருக்கலாம் என்று கருதுகின்றார்.[15] ஆனால் வீரசோழனின் முன்னோர் இரவி, கண்டன் என்று கூறப்படுகின்றனர். இந்தப் பெயர்களைக்கொண்டு நாமக்கல் செட்பேட்டில் பயின்று வரும் வீரசோழன் சேரமரபினைச் சேர்ந்தவன் என இராமமூர்த்தி கருதுகின்றார். கோநாட்டான் வீரசோழன் என்ற பெயர் கோனவளநாடு என்பதன் அடிப்படையில் ஏற்பட்டது என்பதும் அவர் கருத்து.

சோழர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பல சான்றுகளால் அறியக் கிடக்கின்றது. 'கண்டன்' என்ற பெயர் முதலாம் ஆதித்தனுக்கு உண்டு என்பது தில்லைஸ்தானம் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது. அக்கல்வெட்டில் 'ஸ்வஸ்திஸ்ரீ பல்யானைக் கோக்கண்டனாயின தொண்டைநாடு பாவிய இராஜகேசரியாலும் சேரமான் கோத்தாணுரவியாலும்'[16] என்று தொடங்குகிறது. சோழர் மரபில் தொண்டைநாடு பாவிய இராஜகேசரி முதலாம் ஆதித்தனைத் தவிர வேறுயாருமில்லை. ஆகையால் 'பல்யானைக் கோக்கண்டன்' என்ற பெயர் முதலாம் ஆதித்தனுக்கு அளிக்கப்பெற்ற விருதுப்பெயர் ஆகலாம். ஆதித்தனுடைய மகனாகிய முதலாம் பராந்தகனுக்கு 'வீரசோழன்' என்ற பெயரும் உண்டு என்பது கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் உறுதிப்படுகின்றது. ஆகையால் நாமக்கல் செப்பேட்டில் கூறப்படுபவன் முதலாம் பராந்தகனாகலாம்.

இராமமூர்த்தி அவர்கள் வீரசோழனுக்குரிய 'கோநாட்டான்' என்ற அடைமொழியை கோன வளநாடு (புதுக்கோட்டை) என்பதுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நிலவியல் முரண். 'கோன வளநாடு' என்ற பெயர் அலகு மலைக் குறவஞ்சியில் மட்டுமே கூறப்படுகின்றது.[17] எந்தக் கல்வெட்டிலும் கூறப்படவில்லை. ஆகையால் கி.பி. 17–18ஆம் நூற்றாண்டில் பயின்று வரும் பெயருடன் பொருத்திப் பார்ப்பது காலமுரண்.

முத்தரையரே

தொல்லியல் துறை இயக்குநர் நடன. காசிநாதன் கோநாட்டுப்

முத்தரையர் மரபினரே கொங்குச் சோழர் என்று கூறுவார்.[18] புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் குன்னாண்டார் கோயில் கல்வெட்டு 'வாலி வடுகன் கலிமூர்க்க இளவரையன்' என்ற பெயரைக் குறிப்பிடுகின்றது.[19] கொங்குச் சோழர் பரம்பரையில் கலிமூர்க்கன் என்ற பெயர் இரண்டு மன்னர்களின் பெயர்களுடன் சேர்த்துக் கூறப்படுவதைக் காணலாம். வீரசோழக் கலிமூர்க்கன் என்றும் கலிமூர்க்க விக்கிரம சோழன் என்றும் கூறப்படுகின்றது.[20] கலிமூர்க்கன் என்ற பெயர் ஒற்றுமை கொண்டு காசிநாதன் கொங்குச் சோழர் முத்தரையர் மரபினர் என்று கருதுகின்றார். ஆனால் குன்னாண்டார் கோயில் கல்வெட்டு கூறும் கலிமூர்க்கன் என்ற பெயர் விருதுப்பெயர். கொங்குக் கல்வெட்டில் வரும் பெயர் ஆள்பெயர் (Proper Name). ஆகையால் கொங்குச் சோழ மன்னன் 'கலிமூர்க்கன்' என்ற பெயர் முத்தரையர் மரபினைக் குறிக்காது. 'கலிமூர்க்கன்' என்ற பெயர் கலியைக் கடிந்தவன் என்ற பொருளில் வழங்கியது. பல்லவ–சோழர் காலத்தில் கலி என்பது கலியுகம், கொடுமை, தர்ம அழிவு ஆகியவற்றைக் குறித்து வந்தது. கலிமூர்க்கன் என்ற பெயர் துன்ப மிக்க கலிகாலம் அழித்தவன் (கலி அழித்தவன்) என்று பொருள்படும். இது விருதுப் பெயராகவும் ஆள் பெயராகவும் பயன்பட்டுள்ளது. கோநாட்டில் விருதுப் பெயராகப் பயன்பட்ட 'கலிமூர்க்கன்' என்ற பெயர் கொங்கு நாட்டில் ஆள் பெயராகப் பயன்பட்டது.

வீரசோழக் கலிமூர்க்கன் என்பதில் இரண்டு பெயர்கள் உள்ளன. வீரசோழன்+கலிமூர்க்கன். இவற்றில் வீரசோழன் என்ற பெயர் தந்தையின் பெயரையும், கலிமூர்க்கன் என்ற பெயர் மகனின் பெயரையும் குறித்து வந்தது. ஆகையால் கொங்குச் சோழர் மரபில் வரும் கலிமூர்க்கன் என்ற பெயர் ஆள்பெயர் என்றுதான் கூற முடியும். சிலர் கருதுவது போல விருதுப் பெயர் அல்ல. மேலும் கொடுவாய் என்ற ஊரில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்று 'கலிமூர்க்கப் பெருமாள்'[21] என்று தொடங்கும். இந்தப் பெயரில் ஓர் அரசன் இருந்துள்ளதையே குறிக்கின்றது. ஆகையால் கொங்குச் சோழர் மரபில் வரும் 'கலிமூர்க்கன்' கோநாட்டு மன்னர் மரபினைச் சேர்ந்தவனே.

கருநாடக இருக்கு வேளிரே

கொங்குச்சோழர்கள் கோநாட்டு 'இருக்கு வேளிர்' மரபினர் என்று கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, கே.வி.சுப்ரமணியஐயர் போன்றவர்கள் கருதுகின்றனர். இக்கருத்து வரலாற்றுப் பொருத்தமுடையது என்று கூறலாம்.[22] கொங்குச் சோழர்களில் முதல் மூன்று அரசர்கள் 'கோநாட்டான்' என்று தங்களைக் கூறிக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். 'கோநாட்டான்' என்ற அடைமொழி இவர்கள் கோநாட்டு மரபினர் என்பதையும், இருக்குவேளிர் பரம்பரையினர் என்பதையும் காட்டுகின்றது என்று கே.வி.சுப்பிரமணியஅய்யர் கூறுவார். கே.ஏ.நீலகண்டசாஸ்திரி இருக்குவேளிர் பரம்பரையினர் என்று ஒப்புக் கொண்டாலும் இவர்கள் கருநாடகத்தில் உள்ள கொட்டமண்டலம் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவார்.[23] அங்கு ஆட்சி செய்த அப்பரமேயன் என்பவன் போசளர்களை எதிர்த்த போரில் முதலாம் இராசேந்திரனுடன் சென்றவன். அவன் சோழர்கள் சார்பில் போசளர்களை வென்று வெற்றித் தூண் நாட்டினான்.[24] இந்த வெற்றியைப் பாராட்டும் வகையில் அவனுக்குப் 'பஞ்சவன் மாராயன்' என்ற விருதுப்பெயர் அளிக்கப்பெற்றது. அவன் பெயரில் தாராபுரம் அருகில் உள்ள கொற்றனூரில் (மறவ பாளையம்) அப்பரமேயீசுவரம் என்ற கோயில் கட்டப் பெற்றது என்று நீலகண்டசாஸ்திரியார் கூறுவார்.[25] இந்த அப்பரமேயனே பின்னாளில் விக்கிரமசோழன் என்ற பெயர் பெற்றிருந்தான் என்பதும் அவர் கருத்து. அவர், தைய குலத்தைச் சேர்ந்த அப்பரமேயன் என்பவன் கொங்குச் சோழர்களின் பரம்பரையைத் தொடக்கி வைத்தவன் என்றும், அவனே கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் என்றும் கருதுகிறார். ஆனால் கல்வெட்டில் வரும் 'தையீய குலம்' என்பது 'தெல்ல குலம்' என்று வாசிக்கப்படுகின்றது.[26] இதுவே சரியான வாசிப்பு. 'தெல்ல குலம்' என்பது அப்பரமேயனுடைய 'தேஜகுல' மாக இருக்க முடியாது என்பது வெளிப்படை. ஆகையால் கொங்குச் சோழர்கள் அப்பரமேயன் மரபினைச் சேர்ந்தவர்கள் என்று கொள்வது கடினமே. இவர்கள் கோநாட்டு இருக்குவேளிர் மரபினைச் சேர்ந்தவர்களே.

கோநாட்டு இருக்குவேளிரே

கோநாட்டு மரபினைத் தோற்றுவித்தவன் 'கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன்' என்று கருதப்படுகின்றான். ஆனால் கே.வி.சுப்பிரமணியஅய்யர் கருதுவதே சரியான கருத்து. கொங்குநாட்டில் 'வீரசோழன்' பெயரில் மூன்று பேர்கள் கூறப்படுகின்றனர். ஒருவன் நாமக்கல் செப்பேட்டில் கூறப்படும் வீரசோழன். மற்றொருவன் திருச்செங்கோட்டுச் செப்பேட்டில் கூறப்படும் பராந்தக இளங்கோவேளார் என்பவன். இவன் இருக்குவேளிருடைய மகிமாலியனின் பேரன் ஆகலாம் என்று கருதப்படுகின்றான்.[27] இன்னுமொருவன் கோவை மாவட்டம் அவினாசி வட்டம் ஆலத்தூர்க் கல்வெட்டில் கூறப்பெறும் வீரசோழன் என்பவன் ஆவான்.[28] இவர்களில் முதலிருவர் சோழர் ஆட்சியில் இருந்தவர்கள். திருச்செங்கோட்டுச் செப்பேட்டில் கூறப்படுபவன் இருக்குவேளிர் பரம்பரையைச் சேர்ந்தவனாக இருப்பினும் கொங்குச் சோழர் மரபினைச் சேர்ந்தவன் அல்ல. திருச்செங்கோட்டுச் செப்பேடு கி.பி.பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது.[29] ஆனால் கொங்குச் சோழர் மரபினைச் சேர்ந்த வீரசோழன் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டவன். மேலும் ஆலத்தூர்க் கல்வெட்டில் கூறப்படும் வீரசோழன் என்பவன் கோவை பெரியார் மாவட்டப் பகுதிகளை ஆண்டவன்.

வீரசோழன் என்பவன் கலிமூர்க்கனுடைய தந்தை. விக்கிரம சோழனுடைய தந்தை கலிமூர்க்கன். வீரசோழன் கி.பி. 943–ல் ஆட்சிக்கு வருகின்றான். இவன் காலம் பராந்தகனுடைய ஆட்சியின் இறுதி நாட்களைச் சேர்ந்தது. பராந்தகனின் இறுதிக் காலங்களில் சோழப்பேரரசு வலிமை இழந்தது. வடக்கில் தொண்டை மண்டலம் சோழர் ஆதிக்கத்திலிருந்து இராட்டிரகூடர் ஆதிக்கத்திற்கு மாறியது.[30] தெற்கில் பாண்டியர்கள் எழுச்சிபெறத் தொடங்கினார்கள். அதனால் கொங்குப்பகுதியைத் தன்னுடைய நம்பிக்கைக்குரிய இருக்குவேள் பரம்பரையினரிடம் ஒப்படைத்தான். சோழர்கள் அரசியல் நிருவாகத்திற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

வடகொங்கு

கொங்குச் சோழர்கள் ஆட்சி கொங்கு நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் நிலைத்திருந்தது. வடகொங்கு என்று அழைக்கப்பெற்ற பெரியார் மாவட்டப் பகுதியை அவர்கள் ஆண்டார்கள். இங்கு கொங்கு நாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்ற தன்மைபற்றிக் கூற வேண்டும். சோழர்கள் உருவாக்கிய மண்டலப் பிரிவு அந்நாளைய வேளாண் பருவ நிலையைப் பின்னணியாகக் கொண்டது என்பர்.[31] இன்றும் கொங்கு நாட்டில் மூன்று வகையான வேளாண் பருவங்கள் நிலை பெற்றிருப்பதைக் காணலாம். கோவை மாவட்டம் பவானி, நொய்யல், அமராவதி ஆகியவை நீர்வளம் கொழிக்கும் பகுதி. மேலும் வடகிழக்குப் பருவ மழையால் மழை மிகுந்திருந்தது. மழை மிகுதியால் அங்கு சோழர்கள் வருகைக்கு முன்பே ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் போன்றவை உருவாக்கப் பெற்றன. சதுர்வேதிமங்கலங்களும் மிகுதியாக நிலைபெற்றிருந்தன. சதுர்வேதிமங்கலங்கள் நீர்வளம் மிக்க பகுதியில் உருவாக்கப்பெற்றன என்பது தற்போதைய ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பெற்றுள்ளது.[32]

அந்த வகையில் மூன்று நாட்டுப் பிரிவுகளும் மூன்று நிருவாகங்களில் நிலைபெற்றிருந்தன. கோவை மாவட்டத்தில் சேரர், வீரகேரளர் செல்வாக்கு மிகுந்திருந்தது. ஊர்ப்பெயர், நாட்டுப்பெயர், மக்கள் பெயர் போன்றவைகளில் சேரர் செல்வாக்கு மேலோங்கி நின்றது. கொங்குச் சோழர்கள் ஆட்சியின் முற்பகுதியில் வீரகேரளர்கள் தென்கொங்கை ஆண்டனர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. வீரகேரளர்கள் கேரளநாட்டைச் சேர்ந்த சேரமன்னர்களின் கீழ் ஆண்ட சிற்றரசர்கள். இம்மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் பழனி, பேரூர், வெள்ளலூர், ஆனைமலை போன்ற பகுதிகளில் கிடைக்கின்றன. ஆனைமலைப் பகுதியிலும் இம்மன்னர்களின் கல்வெட்டு மிகுதியும் உண்டு. இவர்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை தென்கொங்கினை ஆண்டுள்ளார்கள். பின்னர் கொங்குச் சோழர்களால் தோற்கடிக்கப் பெற்று வரலாற்றுத் திரையிலிருந்து மறைந்தொழிந்தார்கள்.

வடகொங்கு என்று அழைக்கப் பெற்ற பகுதி (இன்றைய பெரியார் மாவட்டம், பழனி வட்டம், கரூர் வட்டத்தின் மேல் பகுதி)

கொங்குச் சோழர் ஆட்சியில் நிலைபெற்றிருந்தது. இன்றைய பெரியார் மாவட்டத்திலும், பழனி கரூர் வட்டங்களிலும் அவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. வடபரிசாரநாடு கோவை மாவட்டத்தில் அவினாசி வட்டத்தையும், கோவை வட்டத்தின் வடபகுதியையும் பெற்றிருந்தது. இந்தப் பகுதியைக் கொங்குச் சோழர் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை ஆண்டனர்.)

கொங்குச் சோழர் வழிமுறை

கொங்குச் சோழ அரசர்களின் வரிசை முறை பற்றி வரலாற்றாய்வாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றனர். கோவை கிழார் கொங்குச் சோழரின் முதல் அரசன் கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் என்பார்.[33] ஆனால் கே.வி.சுப்பிரமணியஅய்யர் அவர்கள் கலிமூர்க்கன் என்ற பெயர் விருதுப்பெயர் என்று கருதுகின்றார்.[34] ஆனால் சுப்பிரமணியஅய்யர் கருதுவது வரலாற்றுப் பொருத்தமுடையது. காரணம் கலிமூர்க்க விக்கிரம சோழன் என்பதில் உள்ள முதல் பெயர் கலிமூர்க்கன் என்பது மகன் பெயராகவும் கொள்ளலாம். அவினாசி வட்டத்தில் உள்ள சமணர் கோயிலில் உள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று 'வீரசோழப் பெருமானடிகள்' என்று தொடங்குகின்றது.[35]

வள்ளியெறிச்சல் என்ற ஊரில் உள்ள கோயில் கல்வெட்டு கலிமூர்க்கப் பெருமாள் என்று கூறுகின்றது.[36] ஆகையால் கொங்குச் சோழர் அரசமரபில் கலிமூர்க்கப் பெருமாள் என்ற மன்னன் ஆண்டுள்ளான் என்பது உறுதிப்படுகின்றது. கொங்கில் கிடைக்கின்ற கல்வெட்டு ஆண்டு முறைப்படி வீரசோழன் 942 முதல் 980 வரையும், கலிமூர்க்க விக்கிரமசோழன் 1004 முதல் 1049 வரையும், ஆண்டுள்ளனர்.[37]

ஆலத்தூர் என்ற ஊரில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று 'ஸ்வஸ்திஸ்ரீ' கோநாட்டான் வீரசோழப் பெருமானடிகளுக்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு முப்பத்தேழாவது[38] என்று தொடங்குகின்றது. இக்கல்வெட்டு வட்டெழுத்தில் அமைந்துள்ளது. தந்தை பெயருடன் இணைந்து காணப்படவில்லை. 'வீரசோழப் பெருமான்' என்று கூறப்படுவதால் வீரசோழக் கலிமூர்க்கன்

என்பவரின் தந்தையாக இவனை எடுத்துக் கொள்வதில் தவறில்லை.

வீரசோழனுக்குப் பின் கலிமூர்க்கன் என்பான் ஆட்சி செய்தான். இவனுடைய கல்வெட்டுக்கள் கொடுவாய், பிரமியம், வள்ளியெறிச்சல் ஆகிய ஊர்களில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.[39] பிரமியத்தில் இம்மன்னனின் இருபத்திநான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கிடைக்கின்றது. 'ஸ்வஸ்திஸ்ரீ' கோவீரசோழக் கலிமூர்க்கப் பெருமாளுக்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற யாண்டு 24 இவ்வாண்டு வீர சங்காத சருப்பேதி மங்கலத் திருவலஞ்சுழி தேவர்க்கு திருமெழுக்குப் புறமாக நம்பிராட்டியார் வளவன் மாதேவியாரான இட்டி முட்டியார் விளக்குக் கொண்டு வச்ச பூமி.'[40] இக்கல்வெட்டு கலிமூர்க்கன் என்பவன் ஆட்சி நிலைபெற்றிருந்த தன்மையை வலியுறுத்தும்.

விக்கிரம சோழன்

முதலாம் விக்கிரம சோழனின் கல்வெட்டு சக ஆண்டுடன் கிடைப்பதால் அவனுடைய ஆட்சி ஆண்டை உறுதிப்படுத்துவது எளிமையாக உள்ளது. திங்களூரில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் சக ஆண்டுடன் அமைந்து உள்ளன. 'ஸ்வஸ்திஸ்ரீ' கோநாட்டான் விக்கிரம சோழ தேவர்க்கு செல்லா நின்ற யாண்டு நாற்பதாவது அறத்துளான்தேவன் பேரன் ஆன நான் கணிதமாணிக்கசெட்டி சந்திரவசதியில் முகமண்டபம் எடுப்பித்தேன் சகரயாண்டு 967 சிங்களாந்தகனேன் புதுமண்டபம்.[41] சக ஆண்டுடன் 78 ஆண்டுகளைக் கூட்டினால் (967 + 78) கி.பி. ஆண்டு (1045) கிடைக்கும். அவனுடைய 40–ஆம் ஆட்சி ஆண்டு 1045 என்றால் 1005 ல் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தலாம். இவன் மட்டுமே மெய்க்கீர்த்தி வெளியிட்டுள்ளான்.[42]

'திருவெழுத்திட்டுச் செங்கோலோச்சி
வெள்ளி வெண்குடை மிளிரவேந்தி
நாடுவளம் படுத்தி நய்யும் குடிஓம்பி
ஆறில் ஒன்று கொண்டு அல்லவை கடிந்து
கோவிற்றுருந்து குடி புறங்காத்து
பெற்ற குழவிக்குற்ற நற்றாய்போல்'[43]

இம்மெய்க்கீர்த்தி விக்கிரமசோழனின் வெற்றியையோ, படையெடுப்பையோ சுட்டவில்லை. மாறாகக் கொங்குநாட்டுக் குடிகளைப் போற்றிய சிறப்பினைக் கூறுகின்றது எனலாம். சக ஆண்டில் விக்கிரமசோழன் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இவனுடைய முதல் மந்திரியாகக் கூறப்படுபவன் நானாதேசி நாட்டுச் செட்டி வீரசங்காத சுற்றியதேவன் என்பவன். பிரமியம் என்ற ஊர் இவன் பெயரால் வீரசங்காத சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பெற்றது.[44] ஆலத்தூரில் வீரசங்காதப் பெரும்பள்ளி உருவாயிற்று.[45] வழக்கமாக மன்னர்கள் பெயரால் தான் சதுர்வேதிமங்கலமும், பெரும்பள்ளிகளும் உருவாகும். ஆனால் கொங்கில் மன்னர் பெயரால் ஏற்படவில்லை. முதல்மந்திரி பெயரால்தான் ஏற்பட்டுள்ளது. அதனால் மந்திரியின் புகழ் புலப்படுகின்றது. விக்கிரமசோழனின் கல்வெட்டுக்கள் வடகொங்கில் மட்டும் கிடைக்கின்றன.

விக்கிரமசோழனுக்குப் பின் பரகேசரி அபிமானசோழன், உத்தமசோழ வீரநாராயணன் ஆகியோர் ஆண்டனர். பரகேசரி அபிமானசோழன் பற்றிய வரலாறு தெளிவற்ற நிலையில் உள்ளது. இவனுடைய ஒரே கல்வெட்டு கிடைத்துள்ளது.[46] அவனுடைய பெயர் இராஜாதிராஜன் என்ற மன்னனுடைய வரலாற்றுடன் வைத்துப் பேசப்படுகின்றது. திருமுருகன் பூண்டிக் கல்வெட்டு அபிமான சோழன் பெயருடன் தொடங்குகின்றது.

மேலே கூறப்பட்ட நான்கு அரசர்களிலும் அபிமான சோழ இராஜாதிராஜன் , இராஜாதிராஜ வீரசோழன் – 2 ஆகியோர் ஆட்சி ஆண்டுடன் சக ஆண்டும் கூறப்படுகின்றது. முதலாமானவர் ஆட்சி ஆண்டு (14 + 1) சக ஆண்டு 1022 உடன் கூறப்படுகின்றது.[47] அக்கல்வெட்டில் (14 + 1) என்று கூறப்படுகின்றது. அவனுடைய ஆட்சித் தொடக்கம் கி.பி.1085.[48] அவனுடைய இறுதி ஆட்சி ஆண்டு பதினைந்தாவது. இது கி.பி. 1100–ஆம் ஆண்டில் நிகழ்கின்றது. இராஜாதிராஜ வீரசோழன் என்பவன் ஆட்சி ஆண்டு (5) சக ஆண்டு 1044.[49] ஆகையால் அவன் ஆட்சி 1118–ல் தொடங்குகின்றது. இந்தச் சான்றுகளுடன் பரகேசரி அபிமான சோழன், இராஜாதிராஜ உத்தம சோழன் ஆகியோர் வரலாற்றினைப்பற்றிப் பார்ப்போம்.

அபிமானசோழ ராஜாதிராஜனுடைய ஆட்சியின் இறுதி ஆண்டு பதினைந்து. அபிமானசோழ ராஜாதிராஜன் ஆட்சிக்கு வந்த ஆண்டு கி.பி. 1085 ஆகும். ஆனால் இவ்வரசனுக்கும் முதல் விக்கிரம சோழனுக்கும் இடையில் கால இடைவெளி (கி.பி.1047 முதல் 1085 வரை) மிகுதியாக இருக்கின்றது. இக்கால கட்டத்தில் ஆட்சி செய்த அரசன் பற்றி கொங்கு வரலாற்றாசிரியர் யாரும் கூறவில்லை. இந்த ஆண்டுகளில் (கி.பி.1047 முதல் 1085 வரை) ஓர் அரசன் ஆண்டிருக்க வேண்டும்.[50] அவனே அபிமானசோழன் என்பவன். அவன் மகன் இராஜாதிராஜன். அவன் அபிமானசோழ ராஜாதிராஜன் என்று அழைக்கப் பெறுகின்றான்.

மேலே கூறப்பட்ட இராஜாதிராஜனுடைய இறுதி ஆண்டும், இரண்டாம் வீரசோழனுடைய தொடக்க ஆண்டும் முறையே 1100, 1118 ஆகும். இவ்விரு மன்னர்களுக்கிடையில் 18 ஆண்டுகள் இடைவெளி உள்ளது.

உத்தம சோழனுடைய ஆட்சி ஆண்டும் 1118 என்பதால் இந்த இடைவெளியில் அவன் ஆண்டதாகக் கொள்ளலாம். ஆனால் இரண்டாம் வீரசோழனுடைய 5–6ஆம் ஆண்டுக் கல்வெட்டு சக ஆண்டு 1047 என்று கூறப்படுகின்றது. திருமுருகன் பூண்டியில் கிடைக்கும் மற்றொரு கல்வெட்டு இராஜகேசரி வீரசோழனின் 20–ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றது.[51] வீரசோழப் பெருமானடிகள் மூன்றாம் வீரசோழன் ஆகியோரிலிருந்து இவன் வேறுபட்டிருக்க வேண்டும். ஆகையால் இராஜாதிராஜ வீரசோழனும், இராஜகேசரி வீரசோழனும் ஒருவனே எனலாம். இந்த அடிப்படையில் நான்கு அரசர்களின் வரிசையைப் பின்வருமாறு அமைக்கலாம்.

பரகேசரி அபிமான சோழன் (38 ஆண்டு) 1047 – 1085

அபிமான சோழ இராஜாதிராஜன் (15 ஆண்டு) 1085 – 1100

இராஜாதிராஜ உத்தமசோழன் (18 ஆண்டு) 1100 – 1118

இராஜகேசரி இராஜாதிராஜ வீரசோழன் (வீரசோழன்) 1118 – 1138

உத்தம சோழன், வீரசோழன் (இராஜாதிராஜன் மக்கள்) ஆகியோரைப் பற்றி விரிவாகக் கூறவேண்டும். விஜயமங்கலம்

கல்வெட்டில் கூறப்பெறும் ஆட்சியாண்டு (1+ 1) சக ஆண்டு (1022) ஆகியவற்றைக் கொண்டு கே.வி.சுப்ரமணியஅய்யர் அவர்கள் ஆட்சி தொடக்கம் கி.பி.1080 என்று கணித்துள்ளார்.

மேலும் அவரே மற்றோரிடத்தில்

''இராஜாதிராஜனுக்கும் இராஜாதிராஜ வீரசோழனுக்கு மிடையில் வேறு அரசர் யாருமில்லையென்று கருதினால் ஆட்சியாண்டு 28 என்றும் 38 என்றும் கருத வேண்டி வரும். இது ஒன்றும் முடியாதது அல்ல. இவ்விரு மன்னர்களுக்கிடையில் ஓர் அரசன் ஆண்டிருக்க வேண்டும் என்று கருதினால் அவன் 18 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்திருக்க முடியாது என்று கருதலாம்' [52]

மேலே கூறியது போல 18 ஆண்டு வரை ஆட்சி செய்த உத்தம சோழன் வரலாற்றைச் சரியாகவே பிரித்துக் கூற முடியும். மேலும் இராஜாதிராஜனின் ஆட்சி 2 ஆண்டுகள் நடைபெற்றது என்பதைவிட 15 ஆண்டுகள் நடைபெற்றது என்றே கூற வேண்டும். உத்தமசோழன் இரண்டாம் வீரசோழனின் அண்ணன் ஆவான்.

இவர்களுக்குப் பின் ஆண்டவர்கள் உத்தமசோழ வீரநாராயணன், இராஜகேசரி குலோத்துங்கன் என்று கே.வி.சுப்ரமணியஅய்யர் கருதுகிறார். இராஜகேசரி குலோத்துங்க சோழனின் ஆட்சி ஆண்டுடன் (14) சக ஆண்டு 1085 கூறப்படுகிறது.[53] ஆகையால் அவன் ஆட்சி ஆண்டு கி.பி.1149 என்று கொள்ளலாம். இந்த சக ஆண்டு கொண்டு நாம் மற்ற மன்னனின் ஆட்சி ஆண்டை உறுதிப்படுத்த முடியும். மேலே கூறப்பட்ட இராஜகேசரி வீரசோழனின் ஆட்சியாண்டின் இறுதிக்கும் (கி.பி. 1138) இராஜகேசரி குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு தொடக்கத்திற்கும் (கி.பி. 1149) இடையில் 11ஆண்டு இடைவெளி உள்ளது. கொங்கு வரலாற்றில் மூன்று வீரநாராயணர்கள் கூறப்படுகின்றார்கள். அவர்கள் அதிசய சோழவீரநாராயணன், பரகேசரி வீரநாராயணன், இராஜகேசரி வீரநாராயணன் ஆகியோர். இம்மூவரில் அதிசய சோழவீரநாராயணன் சேரமரபினைச் சேர்ந்தவன் என்று உறுதியாகக்

கூறலாம். ஆகையால் மற்ற இருவரில் ஒருவர், மேலே கூறப்பட்ட இராஜகேசரி வீரசோழனுக்கும், இராஜகேசரி குலோத்துங்கனுக்கும் இடையில் ஆட்சி செய்திருக்கக்கூடும்.

கே.வி.சுப்ரமணியஅய்யர் அவர்கள் இராஜகேசரிபட்டம் உத்தமசோழ வீரநாராயணன் என்பவனுக்கு அளித்துள்ளார். அவர் கொடுத்த அரசர் பட்டியலில் இராஜகேசரி உத்தமசோழ வீரநாராயணனுக்குப் பின் இராஜகேசரி குலோத்துங்க சோழன் வருகிறான். இரண்டு அரசர்களும் இராஜகேசரிப்பட்டம் தரித்திருப்பதால் இணைந்து ஆட்சி செய்திருக்க வேண்டும் என்றும் அவர் கருதுகிறார்.[54] ஆனால் கல்வெட்டு சான்றுகளைக் கொண்டு சரியான முடிவினைக் கூறமுடியும். மேலே கூறப்பட்ட சான்றுகளைக் கொண்டு பார்த்தால் இரண்டாம் வீரசோழனின் பட்டப்பெயர் இராஜகேசரி என்பதாகும். ஆகையால் உத்தமசோழ வீரநாராயணனைப் 'பரகேசரி' என்று கொள்ளலாம். இந்த வீரநாராயணனுக்குரிய இறுதி ஆட்சி ஆண்டு 11 ஆகும். இந்த இடைவெளி (11ஆண்டுகள்) இராஜகேசரி இரண்டாம் வீரசோழனின் முடிவு ஆண்டிற்கும் (கி.பி.1138) இராஜகேசரி குலோத்துங்கனின் தொடக்க ஆண்டிற்கும் (கி.பி. 1149) இடைப்பட்ட காலம் என்று உறுதியாகக் கூறலாம்.

இராஜாதிராஜனுடைய மக்களான இராஜாதிராஜ உத்தமசோழனும் இராஜாதிராஜ வீரசோழனும் அடுத்தடுத்து ஆண்டுள்ளனர். இவர்களில் உத்தம சோழனுடைய மகனான வீரநாராயணன் தந்தைக்குப் பின் ஆட்சிக்கு வரவில்லை. சிறிய தந்தையான இரண்டாம் வீரசோழனின் ஆட்சிக்குப்பின் ஆட்சி செய்கிறான். ஆகையால் தந்தை இறந்தபோது வீரநாராயணன் சிறு குழந்தையாக இருக்க வேண்டும் என்று கருத வேண்டும்.

இராஜகேசரி குலோத்துங்கசோழனின் ஆட்சி பற்றி விவரிக்க வேண்டும். காரணம் இராஜகேசரி குலோத்துங்கன் என்ற பெயரிலேயே இரண்டு அரசர்கள் ஆண்டுள்ளனர். முதல் குலோத்துங்கன் கி.பி.1149ல் ஆட்சிக்கு வருகிறான். இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1196ல் ஆட்சிக்கு வருகிறான். நெரூரில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று முதல் குலோத்துங்கனின் 17–ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1165–66)

பொறிக்கப்பெற்றது.[55] தீர்த்தமலை (தர்மபுரி) கல்வெட்டைக் கொண்டு இராஜகேசரி குலோத்துங்கன் 34 ஆண்டுவரை ஆட்சிசெய்துள்ளான் என்று கருதுகின்றனர்.[56] ஆனால் தீர்த்தமலைப்பகுதி கொங்குச் சோழர் ஆட்சியில் நிலை பெற்றிருக்கவில்லை. அது தகடூர் நாட்டில் இடம் பெற்றிருந்தது. மேலே கூறப்பட்ட நெரூர்க் கல்வெட்டு கொண்டு முதல் குலோத்துங்கன் 17 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. அந்தக் கல்வெட்டு குலோத்துங்கன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் தலையிட்டான் என்று கூறுகின்றது. மேலும் முதல் குலோத்துங்கனின் இறுதி ஆட்சி ஆண்டு மூன்றாம் வீரசோழனின் தொடக்க ஆண்டுடன் (கி.பி. 1168) ஒன்று படுகின்றது. ஆகையால் இராஜகேசரி குலோத்துங்கன் இருபது ஆண்டுகள் (கி.பி. 1149–1168) ஆண்டான் என்று கொள்ளலாம். உத்தமசோழ வீரநாராயணன் இராஜகேசரி குலோத்துங்கன் ஆகியோரைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

8. பரகேசரி உத்தம சோழ வீரநாராயணன் (கி.பி. 1137–1149)

9. இராஜகேசரி குலோத்துங்கன் 1 (கி.பி. 1149 – 1167)

இங்கு முதலாம் குலோத்துங்கனுக்கும், முன் ஆண்ட வீர நாராயணனுக்கும் இடையில் உள்ள உறவு பற்றிக் கூற வேண்டும். நெரூர்க் கல்வெட்டில் முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் வீரசோழனின் பேரன் என்று கூறிக் கொள்கிறான். ஆனால் இரண்டாம் வீரசோழனுக்குப்பின் அவனுடைய அண்ணன் மகன் வீரநாராயணன் ஆட்சிக்கு வருகிறான். இரண்டாம் வீரசோழன் திடீர் என்று இறந்து பட்டமையால் வீரநாராயணன் ஆட்சிக்கு வந்தான். அதுபோலவே வீரநாராயணன் திடீரென்று இறந்தமையால் குலோத்துங்கன் 1 ஆட்சிக்கு வந்தான் என்று கொள்ளலாம். இவன் பெரும்பாலும் இரண்டாம் வீரசோழனின் பேரனாகலாம். தந்தை மகன் பெயர்கள் இணைந்து வந்த நிலை வீரநாராயணனுக்குப் பின் காணப்படவில்லை. ஆகையால் அரசர் வரிசையை உறுதிப்படுத்துவது கடினமாக உள்ளது. முதல் குலோத்துங்கனுக்குப் பின் மூன்றாம் வீரசோழன் ஆட்சிக்கு வந்தான். அவன் பரகேசரி வீரசோழன் என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றான்.

மூன்றாம் வீரசோழன் (1168 – 96)

முதலாம் குலோத்துங்கனுக்குப் பின் இம்மன்னன் ஆட்சிக்கு வருகிறான். இவனைக் குலோத்துங்கனின் மகனாகவே கொள்ள வேண்டும். காரணம் முதல் குலோத்துங்கன் இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தான். மூன்றாம் வீரசோழன் பரகேசரி என்றபட்டத்துடன் ஆட்சி செய்தான். அவனுக்குப் பின் வந்த இரண்டாம் குலோத்துங்கன் இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்கிறான். முதல் குலோத்துங்கனின் பேரன் இராஜகேசரி குலோத்துங்கன். இவ்விருவருக்கிடையில் ஒரு பரகேசரி ஆண்டுள்ளான். அவனே மூன்றாம் வீரசோழன்.

இவன் இருகொங்கையும் ஆண்டவன் என்று கூறிக் கொள்ளுகின்றான்.[57] இரு கொங்கு என்பது வடகொங்கு, தென்கொங்கு எனும் இரு பிரிவைக் குறிக்கும். கொழுமம் கல்வெட்டு ஒன்று இவன் பிறந்த நாளும் சூரிய கிரகணமும் ஒரே நாளில் இருந்தமையால் ஏற்பட்ட தோஷத்தைப் போக்க வீரசோழீசுவரம் என்ற கோயிலைக் கொழுமத்தில் கட்டினான் என்றுகூறும்.[58] இவன் அக்கோயிலுக்கு இரட்டையம்பாடி என்ற ஊரையும், வீர சோழநல்லூர் என்ற ஊரையும் தானமாக அளித்தான்.[59] வீரசோழீசுரத்தைக் கட்டிய சிற்பியின் பெயரும், கட்டுவதற்குக் காரணமாயிருந்த பிரமாதிராயன் பெயரும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. கொழுமம் கல்வெட்டில் சூரிய கிரகணம் பற்றிக் குறிப்பு வருவதால் இவனுடைய ஆட்சியாண்டை அறுதியிட்டுக் கூற முடிகின்றது. இவன் கீழ் பணிபுரிந்த அதிகாரிகளும், சேனாதிபதிகளும் கொங்குநாடு முழுவதுமுள்ள கோயில்களுக்குத் தானம் அளித்துள்ளனர்.[60] இவ்வரசன் இரு கொங்கையும் ஆண்டதால் கொங்கு நாட்டு அனைத்துக் கோயில்களுக்கும் ஊரையும், ஊர்வரியையும் தானமாக அளித்தான். மன்னீசுவரர் கோயிலுக்கு வீரசோழநல்லூர் என்ற ஊரைத் தேவதானமாக அளித்துள்ளான். அக்கல்வெட்டு மன்னியூர் ஊரார்க்கும் தேவகன்மிகளுக்கும் நம் ஒலை கொடுத்தபடியாவது என்று தொடங்குகின்றது.[61] அதனால் இவ்வூரை அரசன் தானே தானமாகக் கொடுத்துள்ளான் என்று தெரிகிறது.

இரண்டாம் குலோத்துங்கன் (1196 – 1210)

இவன் மூன்றாம் வீரசோழனுக்குப் பின் ஆண்டிருக்க வேண்டும். இவன் கி.பி. 1196 ல் ஆட்சிக்கு வருகிறான். இது அன்னூர்க் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது.[62] அந்தக் கல்வெட்டு அரசனின் ஏழாம் ஆட்சி ஆண்டையும் சக ஆண்டையும் (1125) சேர்த்துக் கூறுகின்றது. ஆகையால் இம்மன்னனின் ஆட்சியாண்டை உறுதிப் படுத்த முடியும். மூன்றாம் வீரசோழனுக்குப் பின் வீரராசேந்திரன் என்பவன் ஆண்டான் என்று கொங்கு வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.[63] ஆனால் மூன்றாம் வீரசோழன் ஆட்சி கி.பி. 1196 ல் முற்றுப் பெறுகின்றது. கி.பி. 1206 ல் வீரராசேந்திரனின் கல்வெட்டு தொடங்குகின்றது. இரண்டு அரசர்களின் ஆட்சிக்கிடையில் பத்தாண்டு இடைவெளி உள்ளது. ஆகையால் இவ்விருவருக்கிடையில் ஓர் அரசன் ஆண்டிருக்க வேண்டும். அவன் தான் இராஜகேசரி பட்டம் தரித்த இரண்டாம் குலோத்துங்கன் என்பவன்.

மூன்றாம் வீரசோழனுக்கும் வீரராசேந்திரனுக்குமிடையில் வரும் குழப்பத்தைப் போக்க விஜயமங்கலத்தில் கிடைக்கும் ஒரு கல்வெட்டு உதவியாக நிற்கின்றது.[64] குலோத்துங்கனின் 13 ம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டில் மூன்று பிராமணர்கள் கொடையைப் பெறுபவர்களாகக் கூறப்பெறுகிறார்கள். அவர்களில் ஒருவன் அதே ஊரில் கிடைக்கின்ற வீரராசேந்திரன் (20) மற்றொரு கல்வெட்டில் (கி.பி. 1226) கூறப்பெறுகின்றான்.[65] ஆகையால் விஜயமங்கலம் கல்வெட்டில் கூறப்பெறும் குலோத்துங்கன் வீரராஜேந்திரனுக்கு முன் ஆட்சி செய்தவன் ஆகலாம். ஆரோக்கியசாமி கருதுவது போல இருவரும் இணைந்து ஆட்சி செய்திருக்க வேண்டும்.[66] அதே ஊரில் கிடைக்கின்ற இரண்டாம் விக்கிரம சோழனின் கல்வெட்டில் திருப்பணி செய்தது பற்றியும் திருப்பணிக்குப் பின் குலோத்துங்க சோழன், வீரராசேந்திரன் ஆகியோர் கல்வெட்டுக்களை மறுபடியும் பொறித்தது பற்றியும் கூறுகின்றது.இந்தக் கல்வெட்டுக்களில் குலோத்துங்கன், வீரராசேந்திரன் ஆகியோர் காலத்தில் அளிக்கப்பெற்ற புதுச்சலாகை அச்சு என்பது சுட்டப் பெறுகின்றது. மேலும் குலோத்துங்கனின் 14 ம் ஆட்சி ஆண்டு வரை அளிக்கப் பெற்ற கொடைகளைத் தொகுத்துக் கூறுவதால் குலோத்துங்கன் 14 ஆண்டுகள் (கி.பி. 1196–1210) ஆட்சி செய்தான் என்று கருதலாம்.

வீரராசேந்திரன் (1206 – 1256)

வீரசோழனின் மகனான வீரராசேந்திரன் கி.பி. 1206–ல் பட்டத்துக்கு வந்தான். இவனும் இரு கொங்கையும் ஆண்டதாக கூறிக் கொள்கிறான்.[67] அன்னூரில் இவனுடைய கல்வெட்டுக்களில் ஆட்சியாண்டைக் குறிப்பிடும் பொழுது 'எதிராமாண்டு' என்ற சொல் குறிப்பிடப் படுகின்றது. சான்றாக 'ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு எதிர் பதினேழாம் ஆண்டு' என்று வருவதைக் கூறலாம்.[68] எதிர் என்ற வாசகம் பயன் படுத்தப்பட்டால் அதைக் கூட்டி ஆட்சியாண்டைக் கொள்ள வேண்டும். அன்னூரில் எதிராமாண்டைக் குறிக்கின்ற கல்வெட்டுக்கள் ஏழு கிடைத்துள்ளன. கொங்குநாடு முழுவதும் இவனுடைய கல்வெட்டுக்கள் முந்நூறுக்கும் அதிகமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஏழாம் ஆண்டு தொடங்கி முப்பத்தைந்தாம் ஆண்டு வரையிலான கல்வெட்டுக்கள் அன்னூரில் கிடைத்துள்ளன.[69]

இரண்டாம் விக்கிரம சோழன்

வீரராசேந்திர சோழனுக்குப் பின் விக்கிரம சோழன் என்று பல கல்வெட்டுக்கள் குறிக்கப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் இரண்டு அரசர்கள் விக்கரமசோழன் என்ற பெயரில் வாழ்ந்ததைக் குறிக்கின்றன. இவ்விருவருக்குரிய கல்வெட்டுக்களையும் வகைப்படுத்திப் பார்ப்பது அரிதாக உள்ளது. வரலாற்றாசிரியர் இரண்டாம் விக்கிரம சோழன் என்றும், மூன்றாம் விக்கிரமசோழன் என்றும் இருவரைப் பிரித்துக் கூறுவர்.[70] மேலும் மாறவர்மன் சுந்தர பாண்டியன் II, மாறவர்மன் விக்கிரமபாண்டியன் II ஆகியோர் கல்வெட்டுக்களில் மச்சுனனார் என்று விக்கிரம சோழனை அழைக்கின்றனர்.[71] இது கொண்டு கே.வி. சுப்பிரமணியஅய்யர் வீரராசேந்திரன் (விக்கிரம சோழனின் தந்தை) தன்னுடைய இரண்டு பெண்மக்களை பாண்டிய மன்னர்களுக்கு மணம் முடித்துக் கொடுத்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். மேலே கூறப்பெற்ற பாண்டிய மன்னர்களின் காலம் வீரராசேந்திரனின் காலம் ஆகியன ஒன்றேயாகையால் விக்கிரம சோழன் பாண்டிய நாட்டிற்கு வந்திருக்க வேண்டும்.

இரண்டாம் விக்கிரமனின் ஆட்சியாண்டு (7) சக ஆண்டு 1185 உடன் வருவதால் அவன் வீரராசேந்திரனுக்குப் பின் (கி.பி. 1256) ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.[72] மற்றொரு விக்கிரம சோழன் 3 கல்வெட்டுக்களில் கூறப்படுவதால் இவனுடைய இறுதி ஆட்சி ஆண்டினை உறுதிப்படுத்துவது கடினமாக உள்ளது. மூன்றாம் விக்கிரமசோழன் கி.பி. 1274 ல் ஆட்சிக்கு வந்தான். இருவருடைய ஆட்சிக்கும் இடையில் பதினெட்டு ஆண்டுகள் இடைவெளி. அதனால் கல்வெட்டு எழுத்து வடிவத்தைக் கொண்டு இருவரையும் பிரித்தறிவது கடினம்.[73] ஆனால் இருவரும், 'பரகேசரி' என்ற பட்டப் பெயரைத் தாங்கி இருப்பதால் இருவருக்குமிடையில் ஒரு 'இராஜகேசரி' ஆண்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. இரண்டாம் விக்கிரம சோழன் ஏழு ஆண்டுகளே (கி.பி. 1256–63) ஆண்டான் என்று கொண்டால் இவனுக்குப் பின் ஓர் இராஜகேசரி பத்தாண்டுகள் ஆண்டிருக்க வேண்டும் என்று கருதலாம். ஏனென்றால் மூன்றாம் விக்கிரம சோழன் ஆட்சி கி.பி. 1273 ல் தொடங்குகின்றது. மூன்றாம் விக்கிரம சோழனை இரண்டாம் விக்கிரம சோழனின் பேரன் என்று கருதலாம். கொங்குச் சோழரின் இறுதி மன்னன் மூன்றாம் விக்கிரம சோழன் 32 ஆண்டுகள் ஆண்டான். ஆகையால் அவன் ஆட்சி கி.பி. 1305ல் முடிவுறுகின்றது. அதே ஆண்டு கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதி ஆண்டு எனலாம்.

முடிவுரை

கொங்குச் சோழர்கள் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் இருந்த போதிலும் அவர்கள் கோநாட்டு இருக்கு வேளிர் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பது அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களாலேயே புலப்படும். அவர்கள் கி.பி. 942 முதல் கி.பி. 1305 வரை ஆட்சி செய்தார்கள். முதல் பகுதியில் (942 முதல் 1183 வரை) ஆட்சி செய்தவர்கள் வடகொங்கினை மட்டும் ஆட்சி செய்தார்கள். ஆனால் கி.பி. 1183 முதல் 1305 வரை ஆட்சி செய்தவர்கள் வடகொங்கு, தென்கொங்கு ஆகிய இரு பகுதிகளையும் ஆட்சி செய்தார்கள். கொங்குச் சோழர்களுடைய வழிமுறை (Geneology)யை இன்று தெளிவாக வரையறுத்துக் கூறப்பெற்றுள்ளது. இறுதி நாட்களில் ...ல. கொங்குச் சோழர்கள் ஆட்சி கட்டி...

அடிக்கடி அவர்களுடைய ஆட்சி பரப்பு குறைந்தும் கூடியும் மாறிமாறி வந்துகொண்டிருப்பதைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன. ஒரு நாட்டை ஆளும் மன்னன் தன்னுடைய நாட்டின் மீது பிறர் படையெடுத்து வெற்றி கொண்டதைப் பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் கொங்குச் சோழர் ஆட்சியில் மிகுதியும் கிடைத்துள்ளன. இது அவர்கள் அரசியல் அதிகாரத்தின் பலமற்ற தன்மையை வலியுறுத்திக் காட்டுகின்றது. கொங்குச் சோழர்கள் சில காலங்களில் பிற அரசர்களுக்கு (மூவேந்தர்களில் ஒருவரான பாண்டியர்) போர்க்காலங்களில் படையனுப்பி உதவி செய்யும் அளவுக்கு வலிமை பெற்றிருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் கி.பி. 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கொங்குச் சோழர்கள் பலம் குன்றினார்கள். சோழர்களின் கீழ் ஆட்சி செய்த சிற்றரசர்களாக இருந்த போதிலும் தன்னாட்சி பெற்ற அரசர்களாகவே இவர்கள் விளங்கினார்கள். மேலும் தங்கள் பெயருக்குப் பின்னால் சோழர் என்ற பெயரைச் சேர்த்துக் கொண்டார்கள். அதற்குக் காரணம் இங்கு சோழர் ஆட்சியே நடைபெறுகின்றது என்ற உண்மையை வலியுறுத்தவே ஆகும். அவர்களில் ஒரு மன்னன் மட்டும் மெய்க்கீர்த்தியை வெட்டினான். அது கொங்கு நாட்டில் அவன் செய்த சமூக பொருளாதார மாற்றங்களை மட்டும் கூறுகின்றது. கொங்குச் சோழர்கள் பிற சிற்றரச பரம்பரையைக் காட்டிலும் நீண்டகாலம் (350) ஆட்சி செய்தார்கள். சோழப் பேரரசு அழிந்த பின்னும் அவர்கள் ஆட்சி தொடர்ந்தது. அதற்குக் காரணம் அவர்கள் சோழர்களின் சிற்றரசர்கள் என்ற நிலையிலிருந்து பாண்டியர்களின் உறவினர் என்ற நிலைக்கு மாறினார்கள். தமிழக அரசியல் காற்றின் திசை மாற்றங்களுக்கு ஏற்ப, தங்கள் அரசியல் கூட்டுகளை மாற்றிக்கொண்டு வந்தார்கள்.

அடிக்குறிப்புகள்

1. ARE 1920, p., 109.

2. கோவைகிழார், கொங்குநாட்டு வரலாறு,
   Arokyaswami, M., The Kongu Country,
   சதாசிவ பண்டாரத்தார்.தி.வை. சோழர் வரலாறு.
   Govindasamy M.S., Feudaturies under Cholas,

இராசு. தேனோலை, இதழ் 10,
Ramamoorthi, V., The History of Kongu,
Nilakanta Sastri, K.A., Subrahmaniyan T.N.,
Thingalur inscription of Ko-Nattan Vikrama
Chola saka 967 in Epigraphic IndicaVol.XXX, pp.247-49
Subrahmaniya Aiyer K.V., Historical Sketches of
Ancient Dekhan, Vol II, pp. 43 - 101.

3. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, பக். 48 – 49.

4. மேலது ப. 49.

5. ARE 147 and 148 of 1910.

6. புவனேசுவரி, க.அ., முன்.கு. நூ. ப. 49

7. கோவை மாவட்டம், ஆலத்தூர்க் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ.

8. பூங்குன்றன், ஆர்., பேரூர், ப. இல்லை.

9. S.I.I, Vol., V.No. 338

10. தேனோலை, இதழ் 10, ப. 10

11. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் தொகுதி 3, பகுதி 2, வரலாற்று முன்னுரை

12. தேனோலை, இதழ் 10, ப. 10

13. Epigraphia Indica Vol. XXX, p. 105

14. Ramamoorthy, V., op. cit. p. 253.

15. Indian Anty quairy valuom

16. S.I.I. Vol. III, No. 89

17. ஒதாளர் குறவஞ்சி எனும் அலகுமலைக் குறவஞ்சி, ப. 79

18. நடன. காசிநாதன், 'யார் இந்தக் கலிமூர்க்கன்' கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, 1976.

19. Epigraphia Indica Vol. XXX, p. 100

20. Subrahmaniya Aiyer, K.V. op. cit. p. 64.

21. Epigraphia Indica Vol. XXX, p. 102.

22. Ibid, p. 249

23. Ibid, p. 100

24. Ibid, p. 248

25. Ibid, p. 248

26. Epigraphica Carnatica Vol. I. p. 807.

27. S.I.I. Vol. III, No. 213.

28. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 52

29. S.I.I. Vol. III, No. 214.

30. சதாசிவபண்டாரத்தார், தி.வை., முன். கு. நூ. பக். 51 – 52.

31. Ravi Aravind palat, The Agrarian System of Jayan Kondacola Mandalam - under Vijayanagara rule AD 1350 - 1565 (unpublished M. Phil Thesis) Jawaharlal Nehru University, New Delhi 1981, p. 407.

32. Burton Stein, op., cit. p 151.

33. கோவைகிழார், கொங்குநாட்டு வரலாறு, ப.171

34. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 64.

35. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, ப.52

36. Damulica Vol. I, p. 23

37. Subrahmaniya Aiyer, K.V., op. cit. .p 64

38. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 52

39. Eigraphia Indica, Vol. XXX, pp 102 and 103, Damulica Vol. I, p.23.

40. Epigaphia Indica Vol. XXX, p. 104.

41. Ibid, p. 249

42. Subrahmaniya Aiyer, K.V., op cit. p. 61

43. Epigraphia Indica Vol. XXX, p. 111

44. Ibid, p. 106

45. ஆலத்தூர் வட்டெழுத்துக் கல்வெட்டு, கோவை தொல்பொருள் ஆய்வுத்துறையில் உள்ளது.

46. ARE 96 of 1915

47. ARE 573 of 1905

48. ARE 592 of 1905.

49. ARE 593 of 1905

50. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை) உரையாடல். (10.06.90 – ம் நாள்)

51. ARE 114 of 1920

52. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 62

53. Ibid, p. 69

54. Ibid, p. 69

55. Ibid, p. 64

56. ARE 598 of 1905

57. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 57

58. Ibid, p. 70

59. Ibid

60. Ibid

61. அன்னூர், கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

62. ஆர்.பூங்குன்றன், கல்வெட்டு ஆய்வாளர், உதகை, உரையாடல்

63. இரா.பா. கருணானந்தம்., காப்பாட்சியர், கோவை.

64. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

65. மேலது

66. Arokyaswami, M., op. cit.

67. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 74.

68. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ

69. கோவை மாவட்டம் அன்னூர் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ

70. Arokyaswami, M., op. cit. pp. 237-38

71. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p. 74.

72. Ibid, p. 79, F.N. 4

73. Ibid, p. 85.

அரசியல் புவியியல்

கொங்குச் சோழர் காலத்தில் கொங்கு நாட்டு அரசியல் புவியியல் தெளிவாக வளர்ந்த தன்மையைக் காண்கிறோம். அதற்கு முன்பு கொங்கை வென்றவர்கள் கொங்கு நாட்டினை ஆளவில்லை. மாறாக அப்போதைக்கப்போது கொள்ளை அடித்துச் சென்றனர். ஆனால் சோழர்கள் கொங்கை வென்றபின் கொங்கில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அதனால் சமூக அமைப்பு, அரசியல் நிருவாகம் ஆகியன மாற்றமடைந்தன. அதன் விளைவாகக் கொங்கு அரசியல் புவியியலில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. புதுப்புது நாட்டுப்பிரிவுகள் உருவாக்கப்பெற்றன. குடியேற்றங்கள் உருவானமையால் இப்பிரிவுகள் பல்கிப் பெருகின. இப்பிரிவுகள் தோன்றுமுன் இருந்த நிலையும், தோன்றிய பின் இருந்த நிலையும் பற்றி இவ்வியலில் ஆய்வு செய்யப் பெறுகின்றன.

கொங்கு நாட்டின் அரசியல் புவியியல் தனித்தன்மை வாய்ந்தது. இன்று வரையில் அது பற்றிய ஆய்வு செய்யப்படவில்லை. ஒய், சுப்பராயலு ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.[1] கே.எஸ். வைத்தியநாதன் 'பழங்கொங்கு நாட்டின் புவியியல்' என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார்.[2] இரண்டாவது குறிப்பிட்டது அரசியல் (Political Geography) புவியியல் அல்ல. கொங்குச் சோழர்களுக்கு முன் கொங்கு நாடு முப்பெரும் பிரிவாகப் பிரிந்திருந்தது. மழகொங்கம், குடகொங்கு, கொங்கபூமி ஆகிய பெரும் பிரிவுகள் அவை.[3] மழகொங்கம் இன்றைய சேலம் மாவட்டம், கரூர்ப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி நின்றது. குடகொங்கு இன்றைய கோயம்புத்தூர் மாவட்டம்; கொங்க பூமி இன்றைய பெரியார் மாவட்டம்; இவற்றில் ஆட்சி செய்தவர்கள் அதியமான்கள் (மழகொங்கு), கங்கர்கள் (கொங்கபூமி), சேரர்கள் (குடகொங்கு) ஆகியோர் ஆவர். கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து கொங்குச் சோழர்கள் வடகொங்குப் பகுதியை ஆட்சி செய்தார்கள்.[4] தென்கொங்குப் பகுதியை வீரகேரளர்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தார்கள்.[5] கி.பி.12ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை தென்கொங்கும் கோநாட்டார் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

வடகொங்கு, தென்கொங்கு

கொங்குச் சோழர் ஆட்சி தொடங்கிய போதோ அல்லது அதற்கு முன்போ வடகொங்கு, தென்கொங்கு என்ற பிரிவு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் கல்வெட்டுக்களில் கி.பி. 12 –13ஆம் நூற்றாண்டில் இப்பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. ஒருக்கால் வீரகேரளர் ஆட்சியைப் பிடித்த பின்பு நிருவாக வாய்ப்புக் கருதி அப்பகுதியைத் தென்கொங்கு என்றும், கொங்குச் சோழர் தாங்கள் ஆண்ட பகுதியை வடகொங்கு என்றும் கூறியிருக்க வாய்ப்பு உண்டு.

வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பெரும் பிரிவுகள் இரு வேறுபட்ட வேளாண் பருவ நிலையைப் பின்பற்றி எழுந்திருக்க வேண்டும். கோநாட்டார் ஆட்சி தொடங்கியபோது கொங்கில் நாட்டுப் பிரிவுகள் (Micro - Region) என்ற இரு நாட்டுப் பிரிவுகள் மட்டும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டன.[6] பொதுவாக வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பெரும் பிரிவுகள் தாம் அமைந்துள்ளன. காரணம் வேளாண்மை வளர்ச்சி இல்லாமையும், மக்கள் நெருக்கம் இன்மையும் ஆகும். மேலும் மக்கள் பழங்குடி வாழ்க்கையில் தொடர்ந்து நிலைபெற்றிருந்தார்கள் என்பதும் ஒரு காரணம். ஓரிடத்தில் தங்காமல் பல இடங்களுக்கு ஆடுமாடு மேய்க்க வேண்டியும், வேட்டைக்காகவும் குடிபெயர்ந்து கொண்டே இருந்தமையால் நாட்டுப் பிரிவுகள் உருவாகவில்லை. பரந்துபட்ட நிலப்பகுதியைக் குறிக்கவே வடகொங்கு, தென்கொங்கு என்ற பெயர் உருவாயிற்றே தவிர அரசியல்புவியியல் என்ற அடிப்படையில் உருவாகவில்லை. இந்தப் பெரும்பிரிவு கொங்குச் சோழர் ஆட்சிக் காலம் வரை நிலை பெற்றிருந்தது.

வட கொங்கு கரூர்ப் பகுதிக்கு அருகில் தொடங்கி கஜலட்டிக் கணவாய் வரை பரவியிருந்தது. சில காலங்களில் தான் கரூர்ப் பகுதியும் வடகொங்கில் இணைக்கப்பெற்றிருந்தது. இது வீரசோழ மண்டலத்தின் மேற்கு எல்லைப்புறத்தில் இருந்தமையால் இந்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். சோழப்பேரரசு பலம் குன்றிய போது கொங்குச் சோழர்கள் கரூர்ப் பகுதியில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினார்கள். இது இரண்டாம் இராஜராஜன் காலத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

குலோத்துங்கனுக்கு முன்பு கலிமூர்க்கன் கல்வெட்டு நெரூரில் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது.[7] நெரூர் தவிரப்பிற ஊர்களில் கல்வெட்டு ஏதும் கிடைக்காமையால் கரூர்ப் பகுதி சோழர் ஆதிக்கத்தில் நிலைபெற்றிருந்தது என்பதும், கொங்குச் சோழர்கள் அப்போதைக்கப்போது படையெடுத்துச் சென்று சிறிது காலம் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினார்கள் என்பதும் உறுதிப்படுகின்றன.

திரிபுவனவீரதேவனின் கல்வெட்டு ஒன்று வடகொங்கில் உள்ள 20 உள் பிரிவு (நாடு) களைச் சுட்டுகின்றது.[8] பாண்டியர் காலத்தில் கம்மாளர்க்கு உரிமை அளிக்கும் கல்வெட்டு வாசகம் ஒன்று கோவை மாவட்டம் முழுவதும் கிடைக்கின்றது. அக்கல்வெட்டு 'தென் கொங்கில் கம்மாளர்க்கு' என்று தொடங்குகின்றது.[9] ஆகையால் தென்கொங்கு என்ற பெயர் மிகுதியும் கி.பி.13ஆம் நூற்றாண்டில் கல்வெட்டில் பயின்றிருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறலாம். சோழர்கள் மழகொங்கை (சேலம் – கரூர்ப் பகுதி) வீரசோழ மண்டலம் என்று பெயரிட்டுத் தங்களுடைய நேரடி ஆட்சியில் வைத்திருந்தனர்.[10] அங்கு ஆட்சி நிருவாகம் சோழர்களின் ஆட்சி நிருவாகத்தை முழுமையும் ஒத்திருந்தது. வரிவசூல், நிலவுடைமை, அரசு அதிகாரிகள், ஊர் அமைப்பு போன்றவை சோழர் நிருவாகத்தை ஒத்தவை. வீரசோழ மண்டலம் என்ற பெயர் மட்டுமின்றி அதி ராஜமண்டலம், வீரகேரள மண்டலம் என்ற பெயர்கள் காலந்தோறும் உருவாயின.[11] வடகொங்கு இன்றைய பெரியார் மாவட்டம், பழனி வட்டத்தின் கிழக்குப்பகுதி போன்றவற்றை உள்ளடக்கி நின்றது. தென் கொங்கில் பேரூர்நாடு, வாயறைக்கால்நாடு, கரைவழிநாடு, காவடிக்கர்நாடு, வெண்டையூர்க்கால் வீரகேரள வளநாடு ஆகிய நாட்டுப் பிரிவுகள் இருந்தன. வடகொங்கில் 20 நாடுகள் இருந்தன.

வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பகுதிகள் எந்தெந்த நிலப் பகுதியை அடக்கி நிற்கின்றன என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. கே.வி.சுப்ரமணியஅய்யர் தகடூர்நாடு, சேலம் பகுதி ஆகியவை உள்ளடக்கி அதிகமான் ஆட்சிக்குட்பட்ட பகுதிதான் வடகொங்கு என்றும், இன்றைய கோவை பெரியார் மாவட்டம் தென்கொங்கு என்றும் கூறினார்.[12] ஆனால் கொங்கு சோழர் காலத்தில், சேலம் தகடூர் பகுதி வடகொங்கு என்று கல்வெட்டுக்களில் கூறப்பெறவில்லை.

கொங்குச்சோழர் ஆட்சி முடிந்து அரை நூற்றாண்டு கழிந்த பின் சுந்தரபாண்டியன் காலத்தில் சேலம் பகுதி வடகொங்கு என்று அழைக்கப்பெற்றது.[13] அதற்கு முன்பு பெரியார் மாவட்டப் பகுதி, கரூர்ப் பகுதி, பழனிப் பகுதி ஆகியவை வடகொங்கில் அடங்கியிருந்தன. வடகொங்கில் தான் கருநாடகத்தோடு தொடர்புடைய இரண்டு கணவாய்கள் உள்ளன. கரூரைத் தொட்டுச் சென்ற பெருவழி இந்தக் கணவாய்களைக் கடந்து சென்றமையால் கொங்குச் சோழர் வட கொங்கைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். தென்கொங்கு பாலக்காட்டுக் கணவாயினை அடுத்து அமைந்திருந்தது. அதுவும் பாண்டிய நாட்டிற்குச் சென்ற பெருவழியை மையமாகக் கொண்டு உருவாயிற்று. தென்கொங்குப் பகுதியையும், வடகொங்குப் பகுதியையும் தெளிவாக வரையறுத்துக் கூறியவர் கே.எஸ். வைத்தியநாதன் ஆவார்.[14]

மண்டலம்

சோழர்கள் நேரடி ஆட்சிக்குட்பட்ட சேலம்–கரூர்ப் பகுதிகள் மட்டுமே மண்டலம் என்ற பிரிவாக அங்கீகரிக்கப்பட்டு நிருவாகம் செய்யப் பெற்றது. ஆனால் முந்தைய ஆய்வாளர்கள் சோழர்கள் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் கூறப்பெறும் 'வீரசோழ மண்டலம்' போன்ற பெயரை கொங்கு நாடு முழுவதற்கும் பொருத்திப் பார்க்கின்றனர்.[15] வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பகுதிகளில் வீரசோழ மண்டலம் என்றோ வீரகேரள மண்டலம் என்றோ கூறும் கல்வெட்டு ஏதும் காணப்பெறவில்லை. அப்படியே கூறியிருந்தாலும் சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலிருந்து வந்தவர்கள் செய்த தானத்தைப் பற்றிய கல்வெட்டுக்களாகவே உள்ளன. ஆகையால் கொங்குச் சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மண்டலம் என்ற பிரிவு கூறப்பெறவில்லை எனலாம். மண்டலம் கூறப்பெற்றிருப்பின் மண்டலமுதலி என்ற அதிகாரி நியமிக்கப்பெற்றிருப்பான். ஆனால் வட, தென்கொங்குப் பகுதிகள் தன்னாட்சி பெற்ற பகுதிகள். ஆகையால் மண்டலமுதலி நியமிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

நாடு

நாடு வளநாடு, வெள்ளாநாடு, பூலுவநாடு போன்ற பிரிவுகள் கூறப்பெறுகின்றன. இவற்றில் பின்னிரண்டு சமுதாயப் பிரிவுகள்.[16] வடகொங்கில் 20 நாடுகள் (Micro Region) இருந்துள்ளன. நாட்டுப் பிரிவுகள் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஒரு சிலவே இருந்தன. ஆனால் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் 27 நாடுகள் உருவாகிவிட்டன. இவை பெரும்பாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், குடியேற்றத்தாலும் உருவானவை.[17]

சிறு பிரிவுகளை ஆள்வதற்கு அந்தந்த நாட்டுப் பிரிவுகளிலிருந்து தெரிந்தெடுக்கப் பெற்ற சிலர் அடங்கிய குழு அமைக்கப்பெறும்.[18] அது நாட்டார் சபை என்று கூறப்பெறும்.[19] அந்தக் குழுவில் சேர்ந்தவன் 'நாட்டான்' என்று அழைக்கப் பெறுவான். நிலம் தொடர்பான ஆவணங்கள் நாட்டுச் சபையிடமே இருக்கும்.[20] இத்தகைய நாட்டுப் பிரிவுகள் கொங்கு நாட்டில் கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் உருவாயிற்று.[21] நாட்டுச் சபை உருவாவதற்கு இரு நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இதற்குக் காரணம் உண்டு. கொங்கு நாட்டில் நன்கு வரையறுக்கப் பெற்ற நிருவாக அமைப்பு சோழர்கள் வரும்வரையும், வந்த பின்பு சில நூற்றாண்டுகள் வரையும் உருவாகவில்லை. அதற்கு முன்பே குலத்தலைவர்களும் (வேளாண் – வேள்) குறுநில மன்னர்களும் ஆண்டனர்.[22] அவர்கள் பேரரசர்களுக்குக் கப்பம் கட்டி விட்டு தன்னாட்சி செய்தனர். பல அடுக்குகளைக் கொண்ட நிருவாக அமைப்பு தேவையற்றதாகவே இருந்தது.

நாடு – வேளாண் நிலம்

ஈரோட்டுப் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலில் கிடைத்த செப்பேட்டி (இரவி கோதை காலத்தைச் சேர்ந்தது) ல், 'நாடு' என்பது வேளாண் நிலம் என்ற பொருளில் ஆளப்பெற்றது. ரவி கோதையிடம் ஒருவன் "எனக்கு நாடு வேண்டும்'' என்று கேட்கிறான். இங்கு 'நாடு' என்பது பயிர் செய்யும் வேளாண் நிலத்தைக் குறிக்கும்.[23] இது சங்க காலத்திலிருந்து உருவான போக்கு. பட்டினப்பாலையில் 'காடு கொன்று நாடாக்கி', (பட்டினப்–283) என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

புறநானூற்றில் குன்று, மலை, காடு, நாடு (புறம்–17) என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

இவ்விடங்களில் 'நாடு' என்பதற்கு வேளாண்மை நிலம் என்று பொருள்படும். இந்தப் பொருள் கொங்கு நாட்டில் கி.பி.10–ஆம் நூற்றாண்டிலும் பயின்று வந்துள்ளது என்பது புலப்படும். பழஞ்சொற்கள் சமூக மாற்றங்கள் ஏற்பட்ட பின்னும் வழக்கத்தில் இருந்துள்ளன.

தமிழகத்தில் நாட்டுப் பிரிவுகள் உருவான தன்மை பற்றி விரிவாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. பேராசிரியர் . ஏ. சுப்பராயலு தான் எழுதிய 'சோழ மண்டலத்து அரசியல் புவியியல்' என்ற நூலில் நாடு உருவான முறை பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வு பின்னாளில் உருவாகும் ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது. அவர் கருத்துப்படி சங்க காலத்திலேயே நாடு என்பது வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு உருவாயிற்று. அது காடழித்துத் திருத்தப் பெற்ற நிலப்பகுதி என்ற பொருள்பட நின்றது.[24] பின்னாளில் 'நாடு' என்பது குறிப்பிட்ட குலப்பிரிவுடைய வேளாளர்கள் வாழும் பகுதியைக் குறித்து வந்தது. அந்த நாட்டிற்குள் வாழும் வேளாளர்கள் தங்களுக்குள் ஒரு சபை வைத்திருந்தனர். அதுவே நாட்டுச் சபை.[25] ஆனால் கல்வெட்டுக்களில் 'நாடு' என்ற சொல் நாட்டுப் பிரிவின் புவியியலையும் நாட்டுச் சபையையும் குறித்தது.[26] பல்லவர் காலத்திலிருந்து இந்தப் போக்கு உருவாகிவிட்டது.

ஆரம்பத்தில் ஆற்றங்கரையை ஒட்டியே நாட்டுப் பிரிவு ஏற்பட்டது. அதற்குக் காரணம் வேளாண்மை. ஆற்று நீரைப் பயன்படுத்தி வளர்த்தமையால் வேளாண்மையில் ஈடுபட்ட வேளாளர் குடியிருப்பாக 'நாடு' ஆற்றங்கரையை ஒட்டி ஏற்பட்டது. இதுவே சோழ மண்டலத்திலும் நிலை பெற்றிருந்தது.[27]

நாட்டுப் பிரிவுகள் – பெருக்கம்

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் வடகரை நாடு, தென்கரை நாடு, போன்ற நாடுகள் மட்டுமே நிலைபெற்றிருந்தன. ஊர்கள்

கி.பி.9–10ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இருந்தபோதிலும் இந்த நாட்டுப்பிரிவுகள் கூறப்பெறவில்லை. வெளிலூர் (வெள்ளலூர்), ஆலத்தூர், எழுமாத்தூர் போன்ற ஊர்ப்பெயர்கள் கி.பி. 9–10 ஆம் நூற்றாண்டிலேயே கூறப்பெறுகின்றன. ஆனால் அவை எந்த நாட்டைச் சேர்ந்தவை என்று கூறவில்லை. வெள்ளலூர் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுக்களில் 'பேரூர் நாட்டு வெள்ளலூர்' என்று கூறப்பெறுகின்றது. ஆலத்தூர் கி.பி.12ஆம் நூற்றாண்டிலிருந்து நாட்டுப் பிரிவுகளுடன் சேர்த்து கூறப்பெறுகின்றது. ஆகையால் பெரும்பாலான நாட்டுப்பிரிவுகள் ஆக்கம் கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாகப் பெருமை பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டுப் பிரிவும் குறிப்பிட்ட காலத்தில் உருவாகிய தன்மையை அறுதியிட்டுக் கூறுவது கடினம். அதற்குக் கல்வெட்டுச் சான்று இல்லை.

வடகொங்கில் இருபது நாடுகள்

வடகொங்கில் 20 நாடுகள் இருந்தன என்பது ஒரே வாசகத்தைக் கொண்ட ஐந்து கல்வெட்டுக்களால் அறியப் பெறுகின்றது. அவை கூகலூர், பாரியூர், திங்களூர், விஜயமங்கலம், மொடக்கூர் ஆகிய ஊர்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. மேலும் அவை வடகொங்குப் பகுதியில் மட்டும் உள்ளன. அக்கல்வெட்டுக்களில் கூறப்பெறும் நாட்டுப் பிரிவுகள் 1. நரையனூர்நாடு, 2. பொங்கலூர்க்காநாடு 3. தென்கரைநாடு 4. அண்டநாடு 5. தலையூர்நாடு 6. வடகரை மணலூர்நாடு 7. அரையநாடு 8. கிழங்கநாடு 9. வெங்காலநாடு 10. தட்டையூர்நாடு 11. இடைப்புழுதிநாடு 12. காங்கயநாடு 13. வீரசோழவளநாடு 14. வலுப்பூர்காநாடு 15. குறுப்புநாடு 16. வடபரிசாரநாடு 17. காஞ்சிக் கூவல் நாடு 18. பூந்துறைநாடு 19. கீழ்பாநாடு 20. வடகரைநாடு ஆகியன.[28] இவை இன்றைய பெரியார் மாவட்டத்தின் முழுப்பகுதியையும், கோவை மாவட்டத்தின் வடக்கு கோவை வட்டம், அவினாசி வட்டம் ஆகிய பகுதிகளையும், கரூர் வட்டத்தின் முழுப் பகுதியையும் பழனி வட்டத்தின் கிழக்குப் பகுதியையும் உள்ளடக்கி நின்றன.[29] இக்கல்வெட்டு கிடைக்கும் பகுதியில் கோநாட்டார் (கொங்குச் சோழர்) ஆட்சி நிலைபெற்றிருந்தது. மேலே கூறப்பெற்ற கல்வெட்டுக்கள் அனைத்தும் திரிபுவன வீரதேவன்

என்பவனின் காலத்தைச் சேர்ந்தவை. இவன் கொங்குச் சோழர் மரபில் வரும் மூன்றாம் வீரசோழன் எனலாம்.[30]

கால் நாடு

தென்கொங்கு, வடகொங்கு ஆகிய இருபெரும் பிரிவுகளில் அடங்கிய நாடுகள் மொத்தம் இருபத்தைந்து. இவற்றில் 'கால் நாடு' என்பதும், 'வள நாடு' என்பதும் குறிப்பிடத்தக்கவை. 'கால் நாடு ' என்பதற்குக் கால்வாய் நாடு என்று பொருள் கொள்ளப்படுகின்றது.[31] பழந்தமிழில் கால் என்பது கால்வாயைக் குறிக்கும் என்றும், ஊரிலிருந்து செல்லும் கால்வாயின் அடிப்படையில் இந்நாட்டுப் பெயர்கள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறுவர். ஆனால் கொங்கு நாட்டுப் புவியியல் அமைப்பு கால்வாய் வெட்டி நீர்பாய்ச்சும் அளவிற்கு வாய்ப்பாக அமையவில்லை. நவீன அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீரைக் கொண்டு செல்கின்றனர். ஆனால் சோழர் காலத்தில் மேட்டிலிருந்து பள்ளத்திற்குக் கொண்டு சென்றனரேயொழிய பள்ளத்திலிருந்து மேட்டிற்குக் கொண்டு சென்றதற்கான வாய்ப்பு குறைவு. அதனால் கால் என்பது கால்வாயைக் குறித்திருக்க வாய்ப்பு குறைவு. அதனால் கால் என்பது கால்வாயைக் குறித்திருக்க வாய்ப்பு இல்லை. கால் என்பதற்குக் காடு என்ற பொருளும் உண்டு. ஆகையால் காடு நிறைந்த நாடு , அதிலும் 'கால் நடைமேயும் காடு நிறைந்த நாடு' என்று பொருள் கொள்ளலாம்.[32] கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு நாட்டிலும் காடு நிறைந்து 80% இருந்தது என்ற பிரைன்.ஜே.மர்ட்டன் என்பார் கூற்று இங்கு நினைக்கத்தக்கது.[33] பொங்கலூர்க் கால்நாடு, வெண்டையூர்க்கால் வீரகேரள வளநாடு, வலுப்பூர்க்கால் நாடு போன்ற பிரிவுகள் 'கால்நாடு' என்ற அடைமொழியுடன் பயின்று வரக் காணலாம்.[34]

'வளநாடு' என்ற அடைமொழியும் குறிப்பிடத்தக்கது. வளநாடு என்பது பாண்டிய நாட்டில் கி.பி.9ஆம் நூற்றாண்டிலிருந்து பயின்று வருகின்றது.[35] அங்கு ஒரு நாட்டுப் பிரிவையே (Micro Region) குறிக்கும். ஆனால் சோழர் காலத்தில் இராஜராஜன் காலம் முதல் 'வளநாடு' என்பது சில நாடுகளை (Micro Region) உள்ளடக்கிய

பகுதி என்ற கருத்தில் உருவாயிற்று.[36] கொங்கு நாட்டில் 'வளநாடு' என்பது பாண்டியர் மரபினைச் சேர்ந்தது. இது சோழர் மரபினைப் பின்பற்றி அமையவில்லை. வெண்டையூர்க் கால் வீரகேரள வளநாடு, வீர சோழ வளநாடு, விக்கிரம சோழ வளநாடு, வீரராஜேந்திர வளநாடு போன்ற நாடுகள் கல்வெட்டுக்களில் பயின்று வருகின்றன. [37]

நாட்டுப் பெயர்கள் – காரணம்

கொங்குச் சோழர்காலத்தில் பல நாட்டுப் பிரிவுகள் தலைமை ஊர்ப் பெயர்களைக் கொண்டும், புவியியல் அமைப்பைக் கொண்டும், கிடைக்கும் பொருளைக்கொண்டும், திசையைக் கொண்டும் அமைந்தன. ஊர்ப் பெயர்களைக் கொண்டு அமைந்தவை பொங்கலூர்க்கால்நாடு, பூந்துறைநாடு, மணலூர்நாடு, நரையனூர்நாடு, பேரூர்நாடு, தட்டையூர்நாடு, அரையநாடு, வலுப்பூர்க்காநாடு ஆகியன. இந்நாடுகளின் தலைமை ஊர்கள் நாட்டுப் பிரிவு உருவாவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே நிலைபெற்றிருக்க வேண்டும். அரையநாடு சங்ககாலத்து அரையத்தை நினைவு படுத்துகின்றது.[38] வடகரைநாடு, தென்கரைநாடு, வடபரிசாரநாடு போன்றவை திசையை அடிப்படையாக வைத்து எண்ணப்பெற்றவை. பொங்கலூர்க்கா நாடு என்பதைப் பொன்+கல்+ஊர்+கால்+நாடு என்று பிரிக்கலாம் என்பர். பெரில், அக்வோமேரியா போன்ற அழகு மணிக்கற்கள் (பொன்) கிடைத்தமையால் பொன் கல்லூர்க்காநாடு என்று அழைக்கப்பெற்றது.[39] வாயறைக்கால் நாடு என்பது சிறுசிறு பாறைகள் நிறைந்த பகுதியைக் குறித்தது. கீழ்பாநாடு என்பது திசையை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. [40] கரைவழி நாடு என்பது ஆற்றங்கரையிலுள்ள நீர்வளம் மிக்க பகுதியைக் குறித்து வந்தது. இன்றும் கொங்கில் கரைவழி என்பது மருதநிலத்தைக் குறிக்கின்றது.[41]

கொங்கு நாட்டில் நாட்டார் சபை பிற்காலத்தில் ஏற்பட்டது. அதுவும் வடகொங்கில் மட்டுமே நாட்டார் சபை வழக்கத்திலிருந்து உள்ளது. தென்கொங்கில் நாட்டார் சபை இருந்ததற்கான சான்று இல்லை. அதற்குரிய காரணம் தென்கொங்கில் இருந்த பழங்குடிகளிடையில் சமூக மாற்றம் முழுமையற்றதாக இருந்திருக்க வேண்டும். வடகொங்கில் நாட்டார் நிலக் கொடை அளிப்பது,

நிலத்தை விற்பது போன்ற உரிமைகளைப் பெற்றிருந்தனர்.[42] நாட்டார் சபையின் ஆட்சி, நாயக்கர் காலம்வரை தொடர்ந்து நிலைபெற்றிருந்தது.[43] ஆனால் தமிழ் நாட்டின் பிற பகுதிகளில் நாட்டார் சபையின் ஆளுமை விஜயநகரர் காலத்திலிருந்து படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது.[44] நாயக்கர் காலத்தில் முழுமையும் அழிந்தது.

மக்கள்குழுநாடு

வெள்ளாநாடு, பூலுவநாடு, திருவாய்ப்பாடிநாடு ஆகிய பிரிவுகள் கொங்குக் கல்வெட்டுக்களில் சுட்டப்பெறுகின்றன.[45] இவை அரசியல் புவியியல் பிரிவுகளாகக் கருதப்படுகின்றன.[46] வெள்ளாநாடு என்பது வெள்ளாளர்கள் நாட்டுச்சபையையும், பூலுவநாடு என்பது பூலுவர்கள் நாட்டுச்சபையையும் குறிக்கும்.[47] இவ்விரு சமுதாயப்பிரிவுகள் வடபரிசார நாட்டிலும், பொங்கலூர்க்கா நாட்டிலும் மட்டுமே உண்டு. வெள்ளாளர்கள் நிலையான வேளாண்மை செய்யும் பழக்கமுடையவர்கள். பூலுவர்கள் ஓரிடத்தில் தங்காமல் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு திரிந்தவர்கள்.[48] ஆகையால் இருபெரும் பிரிவுகளுக்கிடையில் நிருவாக நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் பெரும் வேறுபாடுகள் இருக்க வாய்ப்பு உண்டு. அது கருதியே இப்பிரிவினர்கள் தங்களுக்கெனத் தனிநிருவாக அமைப்பினைப் பெற்றிருந்தனர். நாட்டளவில் சமுதாயசபை இருந்தது போலவே ஊர் அளவிலும் சமுதாயசபை தனித்தனியே நிலை பெற்றிருந்தது. அவை வெள்ளானூர், பூலுவனூர் என்ற பெயர்களைப் பெற்றிருந்தன.[49] சான்றுக்குச் சேவூரில் இருந்த வெள்ளானூர், பூலுவனூர் என்ற இரண்டு சபைகளைக் காட்டலாம்.

'திருவாய்பாடிநாடு' என்ற பெயர் ஈரோடு, கரூர் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் கிடைக்கின்றன.[50] கே.எஸ்.வைத்தியநாதன் இப்பெயர் ஒரு அரசியல் புவியியல் பிரிவினைக் குறிப்பதாகக் கொள்வார். காரணம் அந்தப் பெயருடன் ஓர் ஊர் விஜயமங்கலம் அருகில் உள்ளது. அதனால் இப்பெயர் ஏற்பட்டதாகக் கூறுவார். ஆனால் திருவாய்ப்பாடிநாடு என்ற பெயர் பிற பகுதிக் கல்வெட்டிலும் பயின்றுவரக் காண்கிறோம்.[51] இவ்விரு கல்வெட்டுக்களிலும் கூறப்பெறுபவர்கள் இடையர்கள், ஆயர்கள் ஆகிய

கால்நடை மேய்ப்பர்கள் அன்றிப் பிறர் அல்லர். அதனால் இப்பிரிவு கால்நடை மேய்ப்பர்களின் சமுதாயப் பிரிவு என்று மட்டும் கொள்ளலாம். வைத்தியநாதன் கருதுவது போல அரசியல் புவியியல் பிரிவு அல்ல.

வடபரிசார நாடு

வடபரிசாரநாடு கொங்கு நாட்டுப் பிரிவுகளில் மிகப்பெரியது. இந்நாட்டினைச் சதகங்களும், பட்டயங்களும் 'ஆறைநாடு' என்று கூறும்.[52] ஆறை நாடு என்பதில் வடபரிசாரநாடு மட்டுமின்றி பேரூர் நாடும் அடங்கியிருந்தது. ஆறை நாடு என்பதன் பொருள் தெளிவாக்கப் பெறவில்லை. 'ஆறுநாடு' என்பதன் திரிபாக ஆறை நாடு என்ற பெயர் உருவாகியிருக்கலாம். இரண்டு ஆறுகளுக்கிடையில் 'அமைந்த நாடு' என்றும் பொருள் கொள்ளலாம். வடக்கே வாணியாறும், தெற்கே காஞ்சியாறும் எல்லைகளாக நிற்கின்றன. ஆறைநாடு என்பதனை வேறொருபொருளிலும் வழங்கியதாகக் கொள்ளலாம். ஆறுநாட்டு வேளாளர் என்ற பிரிவும் உண்டு,[53] இந்தச் சமுதாயப் பிரிவின் அடியாகவும் ஆறுநாடு என்று பெயர் வழங்கி ஆறை நாடு என்று மருவி வழங்கியிருக்கலாம்.

கல்வெட்டுக்களில் வடபரிசாரநாடு என்றும், வடபாரிசாரநாடு என்றும் பயின்று வருகின்றது. இரண்டாவதாகக் குறிக்கப்பெற்ற பெயர் ஓலைச் சுவடியில் பயின்று வருகின்றது. புலவர் ஐ.இராமசாமி அவர்கள் பாரிசாரநாடு என்ற பெயரினைக் கொண்டு பாரி ஆண்ட பகுதியே பாரிசாரநாடு என்று வழங்கியது என்று கூறுவார். [54] கல்வெட்டுக்களில் பாரிசாரநாடு என்று ஓரிடத்தில் பயின்று வருகின்றது. இது பெரும்பாலும் எழுதியவர் தவறாக இருக்கலாம். ஆகையால் இந்தச் சொல்லாட்சி கொண்டு பாரி ஆண்ட நாடு என்று கொள்ள முடியாது. அதற்கு வேறு சான்றுகளும் தேவை. பரிசார நாடு என்று வரும் பெயரே சரியான பெயர் என்று கொள்ளலாம். நொய்யலுக்கு வடக்கே அமைந்திருப்பதால் வடபரிசாரநாடு என்ற பெயர் வந்திருக்கலாம். நொய்யலுக்குத் தெற்கே அமைந்த பகுதியில் தென்பரிசாரநாடு என்றொரு நாடு சுட்டப்படவில்லை. அதற்குக் காரணம் உண்டு. வடபரிசாரநாடு என்ற பெயர் கி.பி.12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றது. அதற்கு முன்பு வடபரிசார

நாட்டில் பயின்று வரும் ஊர்ப் பெயர்கள் மட்டுமே கூறப் பெறுகின்றனவே ஒழிய நாட்டுப் பெயர்கள் கூறப்பெறவில்லை. அதனால் 'வடபரிசாரநாடு' என்ற அமைப்பு கி.பி.12ஆம் நூற்றாண்டில் உருவாகியிருக்க வேண்டும் என்று கருத வேண்டும். ஆனால் நொய்யலுக்குத் தெற்கே கி.பி.11ஆம் நூற்றாண்டில் காங்கயநாடு, வாயறைக்காநாடு போன்ற பிரிவுகள் உருவாகிவிட்டன.[54] நொய்யலுக்கு வடபகுதியில் பழங்குடிகள் நிறைந்திருந்தார்கள். அவர்களுக்குத் தனி அரசியல் புவியியல் பிரிவு இல்லை. கொங்குச் சோழர்கள் ஆட்சி ஏற்பட்டு இருநூற்றாண்டுகள் சென்ற பின் 'வடபரிசார நாடு' என்ற அரசியல் புவியியல் பிரிவு தேவை கருதி ஏற்படுத்தப்பெற்றது. ஆனால் வடபரிசார நாட்டு நாட்டார் சபை ஏதுமில்லை. இந்நாட்டிற்குள் சமுதாயப் பிரிவு நாட்டுச் சபைகளே இருந்துள்ளன.

கொங்குச் சோழர்க்கு முன் நாட்டு ஆட்சி 'வேளான்' என்ற அதிகாரிகள் மூலம் நடத்தப் பெற்றது.[55] 'அண்ட நாட்டு வேளான்' என்றொரு வேளாண் குறிப்பிடப்படுகின்றான்.[56] அவனைப் போலவே ஆரம்ப காலத்தில் எல்லா நாடுகளுக்கும் நாட்டு வேளான்கள் நியமிக்கப் பெற்றிருக்க வேண்டும். பின்னாளில் நாட்டுச் சபை உருவான பின் வேளான்களின் ஆட்சி செல்வாக்கு இழந்திருக்க வாய்ப்பு உண்டு. நாட்டுச்சபை என்ற அமைப்பு ஏற்பட்ட பின்பும் வேட்டுவர்கள் 'வேளான்' ஆட்சிக்குட்பட்டே வாழ்ந்தனர்.[57] கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை 'வேட்டுவரில் வேளான்' என்ற அதிகாரி குறிப்பிடப்படுகிறான். அவன் ஊர் அளவில் வேளானாக இருந்துள்ளான். வேட்டுவரில் நாட்டுவேளான் என்ற பெயர் காணப்பெறவில்லை. ஆகையால் வேட்டுவர்கள் நாடு அளவில் தங்கள் அமைப்பை விரிவு படுத்தவில்லை என்றே தோன்றுகிறது. மேலும் வேளாளர்கள் ஆட்சிக்கு வேட்டுவர் ஊர்கள் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை.

இருபத்துநான்கு நாடு என்ற மரபு உருவாகிய பின் வேட்டுவர்களிடையிலும் இருபத்துநான்கு நாட்டுப் பிரிவுகள் இருந்ததாகக் கூறப் பெறுகின்றது.[58] ஆனால் கல்வெட்டுக்களில் வெள்ளாநாடு, பூலுவநாடு என்ற பிரிவுகள் கூறப்பெறுவது போல 'வேட்டுவநாடு' என்றொரு நாடு கூறப்பெறவில்லை. அதனால் சோழர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்னும் வேட்டுவர்கள்நாடு என்ற

காலநடை மேய்ப்பர்கள் அன்றிப் பிறர் அல்லர். அதனால் இப்பிரிவு காலநடை மேய்ப்பர்களின் சமுதாயப் பிரிவு என்று மட்டும் கொள்ளலாம். வைத்தியநாதன் கருதுவது போல அரசியல் புவியியல் பிரிவு அல்ல.

வடபரிசார நாடு

வடபரிசாரநாடு கொங்கு நாட்டுப் பிரிவுகளில் மிகப்பெரியது. இந்நாட்டினைச் சதகங்களும், பட்டயங்களும் 'ஆறைநாடு' என்று கூறும்.[52] ஆறை நாடு என்பதில் வடபரிசாரநாடு மட்டுமின்றி பேரூர் நாடும் அடங்கியிருந்தது. ஆறை நாடு என்பதன் பொருள் தெளிவாக்கப் பெறவில்லை. 'ஆறுநாடு' என்பதன் திரிபாக ஆறை நாடு என்ற பெயர் உருவாகியிருக்கலாம். இரண்டு ஆறுகளுக்கிடையில் 'அமைந்த நாடு' என்றும் பொருள் கொள்ளலாம். வடக்கே வாணியாறும், தெற்கே காஞ்சியாறும் எல்லைகளாக நிற்கின்றன. ஆறைநாடு என்பதனை வேறொருபொருளிலும் வழங்கியதாகக் கொள்ளலாம். ஆறுநாட்டு வேளாளர் என்ற பிரிவும் உண்டு,[53] இந்தச் சமுதாயப் பிரிவின் அடியாகவும் ஆறுநாடு என்று பெயர் வழங்கி ஆறை நாடு என்று மருவி வழங்கியிருக்கலாம்.

கல்வெட்டுக்களில் வடபரிசாரநாடு என்றும், வடபாரிசாரநாடு என்றும் பயின்று வருகின்றது. இரண்டாவதாகக் குறிக்கப்பெற்ற பெயர் ஓலைச் சுவடியில் பயின்று வருகின்றது. புலவர் ஐ.இராமசாமி அவர்கள் பாரிசாரநாடு என்ற பெயரினைக் கொண்டு பாரி ஆண்ட பகுதியே பாரிசாரநாடு என்று வழங்கியது என்று கூறுவார்.[54] கல்வெட்டுக்களில் பாரிசாரநாடு என்று ஓரிடத்தில் பயின்று வருகின்றது. இது பெரும்பாலும் எழுதியவர் தவறாக இருக்கலாம். ஆகையால் இந்தச் சொல்லாட்சி கொண்டு பாரி ஆண்ட நாடு என்று கொள்ள முடியாது. அதற்கு வேறு சான்றுகளும் தேவை. பரிசார நாடு என்று வரும் பெயரே சரியான பெயர் என்று கொள்ளலாம். நொய்யலுக்கு வடக்கே அமைந்திருப்பதால் வடபரிசாரநாடு என்ற பெயர் வந்திருக்கலாம். நொய்யலுக்குத் தெற்கே அமைந்த பகுதியில் தென்பரிசாரநாடு என்றொரு நாடு சுட்டப்படவில்லை. அதற்குக் காரணம் உண்டு. வடபரிசாரநாடு என்ற பெயர் கி.பி.12ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றது. அதற்கு முன்பு வடபரிசார

நாட்டில் பயின்று வரும் ஊர்ப் பெயர்கள் மட்டுமே கூறப் பெறுகின்றனவே ஒழிய நாட்டுப் பெயர்கள் கூறப்பெறவில்லை. அதனால் 'வடபரிசாரநாடு' என்ற அமைப்பு கி.பி.12ஆம் நூற்றாண்டில் உருவாகியிருக்க வேண்டும் என்று கருத வேண்டும். ஆனால் நொய்யலுக்குத் தெற்கே கி.பி.11ஆம் நூற்றாண்டில் காங்கயநாடு, வாயறைக்காநாடு போன்ற பிரிவுகள் உருவாகிவிட்டன.[54] நொய்யலுக்கு வடபகுதியில் பழங்குடிகள் நிறைந்திருந்தார்கள். அவர்களுக்குத் தனி அரசியல் புவியியல் பிரிவு இல்லை. கொங்குச் சோழர்கள் ஆட்சி ஏற்பட்டு இருநூற்றாண்டுகள் சென்ற பின் 'வடபரிசார நாடு' என்ற அரசியல் புவியியல் பிரிவு தேவை கருதி ஏற்படுத்தப்பெற்றது. ஆனால் வடபரிசார நாட்டு நாட்டார் சபை ஏதுமில்லை. இந்நாட்டிற்குள் சமுதாயப் பிரிவு நாட்டுச் சபைகளே இருந்துள்ளன.

கொங்குச் சோழர்க்கு முன் நாட்டு ஆட்சி 'வேளான்' என்ற அதிகாரிகள் மூலம் நடத்தப் பெற்றது.[55] 'அண்ட நாட்டு வேளான்' என்றொரு வேளாண் குறிப்பிடப்படுகின்றான்.[56] அவனைப் போலவே ஆரம்ப காலத்தில் எல்லா நாடுகளுக்கும் நாட்டு வேளான்கள் நியமிக்கப் பெற்றிருக்க வேண்டும். பின்னாளில் நாட்டுச் சபை உருவான பின் வேளான்களின் ஆட்சி செல்வாக்கு இழந்திருக்க வாய்ப்பு உண்டு. நாட்டுச்சபை என்ற அமைப்பு ஏற்பட்ட பின்பும் வேட்டுவர்கள் 'வேளான்' ஆட்சிக்குட்பட்டே வாழ்ந்தனர்.[57] கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை 'வேட்டுவரில் வேளான்' என்ற அதிகாரி குறிப்பிடப்படுகிறான். அவன் ஊர் அளவில் வேளானாக இருந்துள்ளான். வேட்டுவரில் நாட்டுவேளான் என்ற பெயர் காணப்பெறவில்லை. ஆகையால் வேட்டுவர்கள் நாடு அளவில் தங்கள் அமைப்பை விரிவு படுத்தவில்லை என்றே தோன்றுகிறது. மேலும் வேளாளர்கள் ஆட்சிக்கு வேட்டுவர் ஊர்கள் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை.

இருபத்துநான்கு நாடு என்ற மரபு உருவாகிய பின் வேட்டுவர்களிடையிலும் இருபத்துநான்கு நாட்டுப் பிரிவுகள் இருந்ததாகக் கூறப் பெறுகின்றது.[58] ஆனால் கல்வெட்டுக்களில் வெள்ளாநாடு, பூலுவநாடு என்ற பிரிவுகள் கூறப்பெறுவது போல 'வேட்டுவநாடு' என்றொரு நாடு கூறப்பெறவில்லை. அதனால் சோழர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்னும் வேட்டுவர்கள்நாடு என்ற

அமைப்பிற்குள் கொண்டு வரப்படவில்லை என்றே தோன்றுகின்றது. வேட்டுவர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடாமல் ஊர்த்தலைவர்களாகவும், காவலர்களாகவும் வாழ்ந்தனர் என்று கூறலாம்.

'நானாதேசி நாடு' என்றொரு நாடு கூறப்பெறுகின்றது. இது பெரும்பாலும் நானாதேசிகளுடைய சபையாகலாம்.[59] கி.பி.11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் இப்பெயர் சுட்டப்பெறுவதால் கொங்குச்சோழரின் தொடக்க ஆட்சி முதலே எந்த வகையான அரசியல் புவியியலும் இல்லாமலேயே நாட்டுச்சபை அமைப்பு இருந்தது என்று கருத வேண்டியுள்ளது.

ஊர்ப்பெயர்கள்

கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்கள் ஊர் உருவான முறையை அறிய உதவுகின்றன. பள்ளி, எறிச்சல், தொழு, குறிச்சி, புரம், நகரம், அடிக்கீழ்த்தளம், தாவளம் போன்ற பெயர் விகுதிகள் சமுதாய வாழ்க்கையையும், அரசியல் புவியியலையும் அறிந்து கொள்ள உதவும். கோவைகிழார் அறுபது ஆண்டுகளுக்கு முன் இந்தியபுவியியல் சங்கத்தின் சஞ்சிகையில் எழுதிய கட்டுரைகள் பலவற்றில் கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்கள் பற்றி ஆய்வு செய்துள்ளார்.[60] அண்மையில் டாக்டர்கி.நாச்சிமுத்து எழுதிய 'தமிழில் இடப்பெயர் ஆய்வு' என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் கொங்கு நாட்டு ஊர்ப் பெயர்கள் பற்றி ஆய்வு செய்யப் பெற்றுள்ளது.[61]

பள்ளி

வடபரிசார நாட்டில் 'பள்ளி' என்ற விகுதியையுடைய ஊர்ப் பெயர்கள் மிகுதியும் பயின்று வருகின்றன. 'பள்ளி' என்ற விகுதி பயின்று வந்தால் 'சமணத் திருப்பதி' என்றே பொருள் கூறக் காண்கிறோம்.[62] வடபரிசார நாட்டில் சமணப்பள்ளிகளும் இருந்துள்ளன. ஆனால் சமணப்பள்ளிகள் இல்லாத ஊர்களும் பள்ளி என்று கூறப்படுவதைக் காண்கிறோம். பள்ளி என்பது கால்நடை மேய்ப்பவர்கள் குடியிருப்பு என்ற பொருளில் மலைபடுகடாத்தில் பயின்று வரக்காணலாம்.[63] அது மட்டுமில்லாமல் செங்கம் பகுதியில் அண்மையில்

கண்டுபிடிக்கப் பெற்ற நடுகற்களில் பள்ளி என்ற பெயர் விகுதியுடன் ஊர்ப் பெயர்கள் பல கூறப்பெறுகின்றன.[64] நடுகற்கள் மாடுபிடி சண்டையில் ஈடுபட்டவர்களுக்காக எடுக்கப்பெற்றவை. கால்நடை மேய்ப்பவர்கள் குடியிருப்பு என்ற பொருளில் வடபரிசார நாட்டு ஊர்ப் பெயர்கள் வழங்கியிருக்க வேண்டும்.

தொழு

தொழு என்ற பெயர் விகுதியும் கால்நடை மேய்ப்பவர்கள் குடியிருப்பினைக் குறித்து வந்திருக்க வேண்டும். கலித்தொகையில் முல்லைத் திணைப்பாடல்களில் தொழு என்ற சொல் பயின்று வருகின்றது.[65] அது மாட்டுத்தொழு என்ற பொருளில் வழங்கி வந்தது. இன்றும் வழக்குத் தமிழில் அதே பொருளில் வழங்கி வருகின்றது. ஆகையால் இச்சொல் இடைக்காலத்திலும் இப்பொருளில் வழங்கியிருக்க வேண்டும். 'பாடி' என்ற பெயர் விகுதியும் கால்நடை மேய்ப்பவர்கள் குடியிருப்பு என்ற பொருளில் வழங்கியது. மூலத்திராவிடத்திலும், பிற திராவிடமொழிகளிலும் இச்சொல் கால்நடை வளர்ப்போடு தொடர்புடைய சொல்லாக நிலை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.[66] மேலும் 'பண்டம் பாடி பார்க்காமல் ஊர் சுற்றும் சோம்பேறி' என்று பயின்று வரும் கொங்கு வழக்குச் சொற்களும் இங்கு நினைக்கத்தக்கன.

மேற்குக் கொங்குப் பகுதியிலும் (கல்வெட்டுக்களில் தென் கொங்கு, வடபரிசார நாடு என்று அழைக்கப்பெறுகின்றது) புத்தூர் என்று முடியும் ஊர்ப்பெயர்கள் பயின்று வருகின்றன. கவையம்புத்தூர், கோவம்புத்தூர் ஆகிய பெயர்கள் கல்வெட்டுக்களில் பயின்று வருகின்றன. நாச்சிமுத்து புத்தூர், புதூர் ஆகிய விகுதிப் பெயர்கள் வெவ்வேறு காலங்களில் பயின்று வருபவை என்று கூறுவார். புத்தூர் என்பது சோழர் காலத்திலும், புதூர் நாயக்கர் காலத்திலும் உருவான பெயர் விகுதிகள் என்று கூறுவார்.[67] புத்தூர் என்ற விகுதி கொண்டவை சோழர் காலத்து ஊர்கள் என்றுகொண்டால் ஒரு சில புத்தூர்களே உருவாயின என்று கொள்ள வேண்டியுள்ளன. ஆனால் உண்மையில் பல ஊர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். கல்வெட்டுக்களில் குறிப்பிடுவதால் சில புத்தூர்கள் தாம் இருந்தன என்று கொள்ள

முடியாது. மேலும் கலையமுத்தூர், முத்தூர் போன்ற ஊர்கள் மத்திய காலத்தில் உருவான ஊர்கள் என்று கொள்ள முடியும். புத்தூர்கள் என்பது புதிதாக உருவான ஊர்கள் என்று கொள்கிறார்கள்.

எறிச்சில்

எறிச்சில் என்ற ஊர்ப் பெயர் விகுதி குறிப்பிடத்தக்கது. எறிச்சல் என்ற விகுதிகளைக் கொண்டு விளங்கிய பெயர்கள் இடைக்காலத்தில் மிகுதியும் பயின்று வருகின்றன. சங்க இலக்கியத்தில் கோநாட்டு எறிச்சிலூர் மாடலமறையோன் என்பவனைப் பற்றிய குறிப்பு வருகின்றது.[67] மேலும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் 'பச்செறிச்சல்' என்ற ஒரு பெயர் குறிக்கப் பெறுகின்றது.[69] ஆகையால் இப்பெயர் விகுதி கோநாட்டில் (புதுக்கோட்டை) பண்டைக்காலத்திலேயே பயின்று வருகின்றது என்று கூறலாம். கோநாட்டில் இன்றும் இப்பெயர்கள் மிகுதியும் பயின்று வருகின்றன. எறிச்சில் என்ற பெயரின் வேர்ச்சொல் 'எறி' என்பதாகும். சங்கப்பாடல்களில் இச்சொல்லுக்கு அழித்தல் என்று பொருள்.[70] பெரும்பாலும் படையெடுத்து அழித்தல் என்ற பொருளிலேயே வழங்கியது. அது கொண்டு இச்சொல் அப்பொருளில் மட்டும் வழங்கியது என்று கொள்ள முடியாது. வேறு பொருளிலும் வழங்கியிருக்கலாம். 'எறிபுனக் குறவன்' என்றும் 'எறிபுனம் வித்தி' என்றும் பயின்று வரக்காணலாம்.[71] இங்கு எறிபுனம் என்பது சுட்டெரித்தபுனம் என்ற பொருளில் வழங்கியுள்ளது. ஆகையால் 'எறி', 'எரி', ஆகிய இரண்டு பகுதிகளும் ஒரு காலத்தில் ஒரே பொருளில் வழங்கியதாகக் கருதலாம்.[72] காட்டுப் பகுதிகளைத் தீயிட்டு அழித்து அதன்பின் வேளாண்மை செய்தார்கள் என்று கொள்வது சிறப்புடையது. சோழர்காலக் கொங்குநாட்டில் காடழித்து வேளாண்மை செய்தார்கள் என்ற கருத்து இச்சொல்லில் அடங்கியுள்ளது.[73]

தாவளம்

தாவளம் என்ற விகுதி பெற்ற ஊர்கள் சில கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன. தாவளம் என்பது கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் வழக்கத்திலிருந்த ஊர்ப்பெயர்.[74] சர்க்கார்பெரியபாளையம் கல்வெட்டு அறுபத்தி நான்கு கடிகைத்

தாவளம் என்பது பற்றிக் கூறுகின்றது.[75] கொங்கு நாட்டில் இன்றும் பல ஊர்ப்பெயர்கள் தாவளம் என்று கூறுவதைப் பார்க்கிறோம்.[76] கடிகைத் தாவளம் என்பது வடமொழியில் 'கடிகாஸ்தான்' என்று கூறப்படுவதாகவும் அது 'பாதுகாப்பு மிக்க இடம்' என்ற பொருளில் வழங்கப் பெற்றது என்றும் கூறப்படுகின்றது.[77] தாவளம் என்பது வாரந்தோறும் அல்லது திங்கள் தோறும் நடைபெறும் சந்தை என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது. அது ஒரு வகையில் சரியான பொருள் என்று கொள்ளலாம். அத்தகைய சந்தை நடைபெறும் போது உடன் வீரர்களும் இருந்துள்ளனர். அதையே சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு 'தாவளத்து தன்மை வளர்க்கும் செட்டியும் செட்டி வீர புத்திரர்களும்' என்று கூறும்.[78] செட்டி வீரபுத்திரர்கள் மட்டுமின்றி பெருவழி வீரர்களாகிய எறிவீரர்களும் இங்கு நிறுத்தப் பெற்றிருந்தனர்.

அடிக்கீழ்த்தளம்

கொங்கு நாட்டில் கிடைக்கின்ற பல கல்வெட்டுக்களில் 'அடிக்கீழ்த்தளம்' என்ற பெயர் கூறப்பெறுகின்றது. இராஜராஜபுரம் (தாராபுரம்), மன்னியூர் (அன்னூர்), திருமுருகன் பூண்டி ஆகிய ஊர்களில் அடிக்கீழ்த்தளம் என்ற பெயர் பெற்ற ஊர்கள் இருந்துள்ளன. இம்மூன்று அடிக்கீழ்த்தளங்களும் அந்நாளைய வடகொங்குப் பகுதியில் இருந்துள்ளன. அந்த மூன்றிலும் இரண்டு வடபரிசார நாட்டில் உருவாக்கப்பட்டவை. அடிக்கீழ்த்தளங்கள் யாது காரணம் பற்றி உருவானவை, அந்நாளைய அரசியலுக்கும் அடிக்கீழ்த்தளத்திற்கும் இடையிலான தொடர்பு ஆகியவை ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

அடிக்கீழ்த்தளம் என்ற சொல்லில் அடிக்கீழ்+தளம் என்று பிரித்துப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொள்வோமாயின் அது அகராதிப் பொருளாகவே முடிந்துவிடும். அதற்கும் மேல் அச்சொல் வேறுபொருளில் வழங்கியிருக்க வேண்டும். அடிக்கீழ்த்தளம் என்ற பெயர் ஏற்கனவே உள்ள ஊருக்குத்தான் அளிக்கப் பெற்றுள்ளது. மன்னியூர் அடிக்கீழ்த்தளம், இராஜராஜபுரமான அடிக்கீழ்த்தளம், கரையான அடிக்கீழ்த்தளம் ஆகியவை கொங்குச் சோழர் காலத்தில் உருவாக்கப் பெற்றவை. இப்பெயர்களில் முன்னொட்டாக அமைந்துள்ள மன்னியூர், இராசராசபுரம், கரை ஆகியவை ஏற்கனவே வழக்கத்திலிருந்த பெயர்கள். அதாவது அடிக்கீழ்த்தளம் உருவாவதற்கு

முன்னிருந்த பெரும் ஊர்கள் அவை. இடைக்காலத்தில் ஏற்பட்ட தேவை கருதி அடிக்கீழ்த்தளங்கள் உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். இந்த ஆக்கமும் வாணிக வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டவை என்று கருத வேண்டியுள்ளது. அதனால் வாணிகத்திற்கும், அடிக்கீழ்த்தளத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கொள்ளலாம். அடிக்கீழ்த்தளம் பற்றி பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறுகின்றது.[80] அதனால் அடிக் கீழ்த்தளத்தின் அரசியல் முக்கியத்துவம் விளங்கும். மேலும் வடகொங்கு நாடுகளுக்கு (Micro Region) அளிக்கப் பெற்ற ஆணை நாடுகளின் நாட்டுச் சாமந்தர்க்கும் இராசராசபுரம் அடிக்கீழ்த்தளத்திற்கும் அளிக்கப் பெற்றதாகக் கூறப்படுகின்றது.[81] ஆகையால் அடிக்கீழ்த்தளம் அரசியல் நிருவாக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கொள்ளவேண்டும். அடிக்கீழ்த்தளம் வாணிகம் சார்ந்த நகரங்களோடு தொடர்புடையமையால் வாணிகத்திற்கும், அடிக்கீழ்த் தளத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்று உறுதியாகக் கொள்ளலாம். தளம் என்பது படையையும், படை தங்கியிருந்த இடத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்தப் படையும் வாணிகப்படையாக இருக்கவேண்டும். வாணிகத்தின் படைவலிமை அடிக்கீழ்த்தளம் உருவாவதற்குக் காரணமாயிற்று.

முடிவுரை

கொங்கு நாட்டு அரசியல்புவியியல் (Political Geography) கொங்குச்சோழர் ஆட்சிக்கு முன் விரிவானதாகவும், பன்முகப்பட்டதாகவும் அமைந்திருக்கவில்லை. எளிய அளவிலேயே அமைந்திருந்தது. கொங்கில் நாடுகள் (Micro Region) கி.பி.10ஆம் நூற்றாண்டு முதலே உருவாகியிருக்க வேண்டும். அதற்கு முன் கொங்கு உள் நாட்டுப் பிரிவுகள் இருந்ததற்கான சான்று இல்லை. வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பெரும்பிரிவுகள் கூட கி.பி.10ம் நூற்றாண்டிலிருந்து வழக்கத்திலிருந்திருக்க வேண்டும். ஆனால் இவை பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் கி.பி.12–13ஆம் நூற்றாண்டில் கிடைக்கின்றன. பிற்காலத்தில் கிடைப்பதால் முற்காலங்களில் அப்பிரிவுகள் இல்லை என்று கொள்ள முடியாது. முற்காலங்களில் கல்வெட்டில் கூற வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. வடகொங்குக் கோயில் வரிநீக்கம்பற்றி அரசன் ஆணையிட்டதால் வடகொங்கு பற்றியும், தென்கொங்குக் கம்மாளர்க்கு உரிமை கொடுத்து ஆணை

வெளியிட்டமையால் தென்கொங்கு என்ற பெயரும் வரக்காரணமாயிற்று.. இப்பெரும்பிரிவுகளும் கூட வேளாண் பருவநிலையை (Agroclimatic) அடிப்படையாக வைத்து உருவாகியிருக்க வேண்டும்.

கொங்கில் மூன்று பெரும் பிரிவுகள் இருந்துள்ளன. வடகொங்கு, தென்கொங்கு, கொங்கான வீரசோழ மண்டலம் ஆகியவை அவை. இறுதியில் கூறப்பெற்ற பெரும் பிரிவு கரூர்ப் பகுதியும், சேலம் பகுதியும் அடங்கிய பகுதியாகும். அது தஞ்சைச் சோழர்களின் நேரடி ஆட்சியிலிருந்தது. ஆனால் வடகொங்கு கோநாட்டார் ஆட்சியிலும், தென் கொங்கு கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை வீரகேரளர் ஆட்சியிலும் கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை கொங்குச்சோழர் ஆட்சியிலும் நிலைபெற்றிருந்தது. ஆகையால் வீரசோழன் (கி.பி 1168–1196) ஆட்சி செய்த கொங்குச் சோழ மன்னர்களில் இரு கொங்கும் ஆண்டவன் என்ற அடைமொழியுடன் கூறப் பெறுகின்றான்.

வடகொங்கில் இருபது உள்நாடுகளும் (Micro Region) தென்கொங்கில் ஏழு உள்நாடுகளும் இருந்துள்ளன. தொடக்கத்தில் ஆற்றங்கரை ஓரமே நாட்டுப் பிரிவுகள் தோன்றின. காரணம் நீர் வளமே ஆகும். கொங்குச் சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் கொங்கின் உள்பகுதியில் குளம் தொட்டு வளம் பெருக்கினர். அதனால் ஆற்றங்கரைக்கப்பாலும் நாடுகள் பெருகின. நாட்டுப் பெயர்களில் கொங்கிற்கேயுரிய கால்நாடு (காநாடு) பெயர் கொங்குப் புவியியல் அமைப்பால் உருவானது. திருமணிக்கற்கள் கிடைக்கும் பகுதி பொன்கல்லூர்க்கா நாடு என்று அழைக்கப் பெற்றது.

கொங்கு நாட்டில் அரசியல்புவியியல் அல்லாத சில நாட்டுப் பிரிவுகள் சுட்டப்பெறுகின்றன. அவை வெள்ளாநாடு, பூலுவநாடு, திருவாய்பாடிநாடு என்பன. இவற்றை அரசியல்புவியியல் என்று கருதுவது தவறு. வடபரிசார நாட்டு வெள்ளாநாடு, பூலுவநாடு என்று கூறுவதால் வடபரிசார நாட்டில் செயல்பட்ட வெள்ளாளர் நாட்டுச்சபையும், பூலுவர் நாட்டுச்சபையும் என்று தான் கொள்ள முடியும். திருவாய்ப்பாடி நாடு என்பது தமிழகம் முழுவதும் காணப்பெறும் ஆயர் நாட்டுச் சபையாகும். ஆகையால் அப்பிரிவினையும் அரசியல் புவியியல் பிரிவாகக் கொள்வது கடினமே. நானாதேசி நாடு என்பதும் வணிகர் குழுவே தவிர நாட்டுப் பிரிவு அல்ல.

வடபரிசாரநாடு கொங்கு உள்நாட்டுப் பிரிவுகளிலேயே மிகப்பெரிய பிரிவு ஆகும். பல தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது. இங்கு இரண்டு நாட்டுச்சபைகள் இருந்துள்ளன. வடகொங்கு முழுவதும் நாட்டுச்சபை இருந்துள்ளது. தென்கொங்கில் நாட்டுச்சபை இருந்ததற்கான சான்று இல்லை. வடகொங்கிலும் கூட வேட்டுவர்கள் நாட்டுச்சபை இல்லை. வேட்டுவர்கள் 'வேளான்'கள் ஆட்சியில் நிலை பெற்றிருந்தனர்.

கொங்கு நாட்டிற்கே உரிய ஊர்ப்பெயர்கள் கொங்குச் சோழர்காலக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன. அவை கால்நடைவளர்ப்பு, புஞ்சை வேளாண்மை, மணிக்கற்கள் ஆகியவற்றின் காரணமாக எழுச்சி பெற்றவை. கரப்பாடி, வைரம்பள்ளி, பெருந்தொழு போன்ற பெயர்கள் பள்ளியெறிச்சில், சிறக்கெறிச்சில் போன்ற பெயர்கள் தீயிட்டுக் காடழித்துப் புஞ்சை வேளாண்மை செய்தமையால் உருவான பெயர்கள். பொங்கலூர் என்ற பெயர் பொன் என்பதால் ஏற்பட்ட பெயர்.

இடைக்காலக் கொங்கில் கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் வாணிகம் பெருவளர்ச்சி அடைந்தது. அதனால் வாணிகத் தொடர்பான ஊர்ப்பெயர்கள் ஆக்கம் பெற்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை தாவளம், அடிக்கீழ்த்தளம் ஆகியவை. இப்பெயர்கள் கொங்குச் சோழர் காலத்திற்குப் பின் கொங்குப்பாண்டியர் காலம் வரை நிலைபெற்று பின் மறைந்து விட்டன. கொங்கு அரசியல் புவியியல் பிரிவுகள் கொங்குச் சோழர் காலத்தில் திட்டமிட்டு உருவாக்கப் பெற்றன. அவற்றில் பல கூறுகள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி வரை நிலை பெற்றிருந்தன.

அடிக் குறிப்புகள்

1. சுப்பராயலு, ஒய். நாட்டுப் பிரிவுகள், ஆய்வுத்தேன் (பதிப்பாசிரியர், கொடு முடி. சண்முகப் பிரகதம். ச) பக். 43 – 51

2. Vaidyanathan, K.S., The Ancient Geography of the Kongu Country, (Published by Kalaimagal Kalvi Nilayam, Erode) 1983.

வடபரிசாரநாடு கொங்கு உள்நாட்டுப் பிரிவுகளிலேயே மிகப்பெரிய பிரிவு ஆகும். பல தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குகின்றது. இங்கு இரண்டு நாட்டுச்சபைகள் இருந்துள்ளன. வடகொங்கு முழுவதும் நாட்டுச்சபை இருந்துள்ளது. தென்கொங்கில் நாட்டுச்சபை இருந்ததற்கான சான்று இல்லை. வடகொங்கிலும் கூட வேட்டுவர்கள் நாட்டுச்சபை இல்லை. வேட்டுவர்கள் 'வேளான்'கள் ஆட்சியில் நிலை பெற்றிருந்தனர்.

கொங்கு நாட்டிற்கே உரிய ஊர்ப்பெயர்கள் கொங்குச் சோழர்காலக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன. அவை கால்நடைவளர்ப்பு, புஞ்சை வேளாண்மை, மணிக்கற்கள் ஆகியவற்றின் காரணமாக எழுச்சி பெற்றவை. கரப்பாடி, வைரம்பள்ளி, பெருந்தொழு போன்ற பெயர்கள் பள்ளியெறிச்சில், சிறக்கெறிச்சில் போன்ற பெயர்கள் தீயிட்டுக் காடழித்துப் புஞ்சை வேளாண்மை செய்தமையால் உருவான பெயர்கள். பொங்கலூர் என்ற பெயர் பொன் என்பதால் ஏற்பட்ட பெயர்.

இடைக்காலக் கொங்கில் கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் வாணிகம் பெருவளர்ச்சி அடைந்தது. அதனால் வாணிகத் தொடர்பான ஊர்ப்பெயர்கள் ஆக்கம் பெற்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை தாவளம், அடிக்கீழ்த்தளம் ஆகியவை. இப்பெயர்கள் கொங்குச் சோழர் காலத்திற்குப் பின் கொங்குப்பாண்டியர் காலம் வரை நிலைபெற்று பின் மறைந்து விட்டன. கொங்கு அரசியல் புவியியல் பிரிவுகள் கொங்குச் சோழர் காலத்தில் திட்டமிட்டு உருவாக்கப் பெற்றன. அவற்றில் பல கூறுகள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி வரை நிலை பெற்றிருந்தன.

அடிக் குறிப்புகள்

1. **சுப்பராயலு, ஒய். நாட்டுப் பிரிவுகள், ஆய்வுத்தேன் (பதிப்பாசிரியர், கொடு முடி. சண்முகப் பிரகதம். ச) பக். 43 – 51**

2. Vaidyanathan, K.S., The Ancient Geography of the Kongu Country, (Published by Kalaimagal Kalvi Nilayam, Erode) 1983.

3. பாண்டியர் செப்பேடுகள், பத்து, பக். 46, 58, 65

4. Padmavathi, P., History of Coimbatore (Unpublished M. Phil. Dissertation, Annamalai University) 1989, p. 20

5. Ibid, p. 21

6. Kandaswamy, S.P., The History of the Kongu Vellalar, (Unpublished Ph.D. Thesis University of Madras) 1985. p. 84

7. ARE 334 of 1927 - 28

8. S.I.T.I. Vol. I, No. 291

9. S.I.I. Vol. V, No. 228

10. S.I.I. Vol. IV, No. 391

11. S.I.I. Vol. III, No. 22

12. Subrahmaniya Aiyer, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol II, p. 84

13. S.I.I. Vol. XXII Part I, No. 13

14. Vaidhyanathan, K.S., op. cit. p.16.

15. கோவைகிழார், கொங்கு நாட்டு வரலாறு, ப. 164

16. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, பக். 71 – 72

17. Kandaswamy, S.P., op. cit. p. 97

18. Subbarayalu. Y. The Political Geography of the Chola Country, p. 34.

19. Ibid, p. 33

20. பாண்டியர் செப்பேடுகள் பத்து, ப. 29

21. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர் (ஊட்டி) கடிதம்

22. பிரமியம் கல்வெட்டுக்கள்., தொ.பொ.ஆ.கோ.

23. இராசு. செ, துணைப்பேராசிரியர்., கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் – 5.

24. Subbarayalu, Y., op. cit. p. 32

25. Ibid, p. 33-34

26. Ibid, p.19

27. Ibid, p. 20

28. S.I.T.I. Vol. I. No. 291

29. இந்நூலில் அரசியல் பின்னணி

30. நன்னிலம் கல்வெட்டுக்கள் முதல் தொகுதி எண். 190/1977

31. சுப்பராயலு. ஒய் , முன்.கு.நூ.பக். 45–46

32. Kandaswamy, S.P., op. cit. p. 86

33. Brain J. Murton, Settlement structure in Northen Kongu of 1800 AD in Perspectives on a Regional Culture, (Ed. by Brenda E.F. Beck) p.14.

34. Vaidhyanathan. K.S. op. cit. pp. 51 and 54

35. Subbarayalu, Y., op. cit. p. 56.

36. Ibid

37. Vaidhyanathan, K.S., op. cit. pp. 53 and 55

38. புறநானூறு, செய்யுள், 202

39. Vaidhyanathan. K.S., op. cit. p. 78

40. பூங்குன்றன். ஆர்., (கல்வெட்டாய்வாளர், ஊட்டி) அவர்கள் கடிதம்.

41. ஆய்வாளர் கள ஆய்வில் கண்டறிந்த சொல்.

42. S.I.T.I. Vol. II, Nos. 1095. S.I.I. Vol. V No.op.225

43. Nagaswamy. R., Studies in Ancient Tamil Law and Socity, p. 92.

44. Burton Stein, Peasant state and society in Medieval South India, pp. 416 - 17

45. ARE 110 of 1910, ARE 635 of 1922

46. Vaidhyanathan. K.S., op. cit. pp 119 and 138

47. புவனேசுவரி. க.அ., முன்.கு. நூ.பக். 71 – 72

48. மேலது ப. 71

49. ARE 191 of 1909

50. ARE 171 of 1910

51. ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் ஆரணி வட்டம், பூண்டி கல்வெட்டு 1972 (தமிழக அரசு தொல்லியல் துறை, உதகை)

52. நாச்சிமுத்து. கி., சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள் ப. 46

53. பூங்குன்றன். ஆர்., (கல்வெட்டாய்வாளர், ஊட்டி) கடிதம்.

54. புவனேசுவரி.க.அ., முன்.கு.நூ. ப. 19

55. ARE 346 of 1909

56. பிரமியம் கல்வெட்டுக்கள், தொ.பொ, ஆ.கோ.

57. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன் பேட்டை கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

58. இராசு. செ, (இணைப்பேராசிரியர், கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 5.)கூறிய செய்தி நாள் 25.10.90

59. E.I. 1 Vol XXX, p. 109

60. Indian Geographical Journal Vol. 5 Nos. 2 & 3

61. நாச்சிமுத்து, கி., தமிழ் இடப்பெயராய்வு ப. 151.

63. மலைபடுகடாம், வரி, 451.

64. செங்கம் நடுகற்கள், எண். 97, 1971

65. கலித்தொகை, பாடல்கள் , 101, 104.

66. DED No. 4064.

67. நாச்சிமுத்து. கி. முன்.கு.நூ. 151 (தமிழ் இடப் பெயராய்வு)

68. புறநானூறு, பாடல், 54

69. இராசேந்திரன், அ., (பதிப்பாசிரியர்), தொல்லியல் கருத்தரங்கு ப.163.

70. சங்க இலக்கிய சொற்களஞ்சியம். ப. 208

71. புறநானூறு, பாடல் 231

72. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், ஊட்டி, கடிதம்.

73. Karunanandam, R.P., A Possible interpretation of Ericcil in plans bulletin No. 48 p. 4

74. இராசேந்திரன், அ., (பதிப்பாசிரியர்) முன்.கு.நூ.

75. பெரியார் மாவட்டம், சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ.

76. வண்டித்தாவளம், தாவளம், தா(வ)ளவதி, வேம்படி தா(வ)ளம் ஆகிய ஊர்கள்

77. Subrahmaniya Aiyer, K.V., Largest Provincial Organisation in Ancient India, p. 77.

78. பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம் , சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

79. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.பக். 38 – 39

80. மேலது ப. 36

81. S.I.T.I. Vol. I No. 291.

இலக்கிய வளர்ச்சி

சோழர் காலத்தில் தமிழ் இலக்கியம் பெருங்காவியங்களைப் பெற்றுச் சிறப்படைந்த நிலையைப் பெற்றிருந்தது. பக்தி இயக்கத்தின் காரணமாகப் பல்வேறு இசைப் பதிகங்கள் எழுச்சி பெற்ற காலமும் அதுவே. அவர்கள் காலக் காவியங்களில் சூளாமணி, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவை தோன்றிய காலந்தொட்டு இன்று வரை தமிழர்களை ஆட்கொள்ளும் சிறப்புடைய காவியங்கள். இதேகாலத்தில் தோன்றிய இலக்கண நூல்களும், பாட்டியல் நூல்களும் பலப்பல. அந்நூல்கள் தமிழ் இலக்கணத் துறையில் காலத்திற்கு ஏற்ற புதுமைகளைத்தந்தன. அரசியலில் பரந்துபட்ட பேரரசினை உருவாக்கிப் பெருமை பெற்ற சோழர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்டனர். முதலாம் இராசராசனின் அரசியல் ஆலோசகராகக் கருவூர்த்தேவர் வாழ்ந்தார். தஞ்சைப்பெருவுடையார் கோயிலில் கருவூர்த்தேவர் தன்னுடன் நிற்பது போன்ற காட்சியை வரைந்து பெருமைப்படுத்தினான்.[1] தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் ஒருவரே ஓவியத்தில் காட்சி அளிக்கும் புலவர். அவர் பெயரே அவரைக் கொங்கு நாட்டவர் என்பதை உறுதிப்படுத்தும். வச்சநந்தி மாலை எழுதிய குணவீரபண்டிதர் கொங்கு நாட்டவர் என்று கருதப் பெறுகின்றது. பிற்கூறப் பெற்ற இரண்டு புலவர்களின் வாழ்விடம் பற்றித் தெளிவான முடிவு ஏற்படவில்லை. ஆனால் கருவூர்த்தேவர் கொங்கு நாட்டவர் என்பதில் இருவிதக் கருத்தில்லை.

கருவூர்த்தேவர் தாம் பாடிய பதிகங்களின் இறுதியில் உள்ள திருக்கடைக் காப்புச் செய்யுட்களில் 'கருவூரன்' என்றும், 'கருவூரனேன் ' என்றும் தம்மைக் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினால் இவர் கருவூரிற் பிறந்து வளர்ந்தவரென்பதும், கருவூருடன் நெருங்கிய தொடர்புடையமையால் கருவூரன் என அழைக்கப் பெற்றாரென்பதும் நன்கு விளங்கும். கருவூர் என்பது கொங்கு நாட்டுச் சிவதலங்களுள் ஒன்று. இவ்வூரிலுள்ள திருக்கோயில் திருவானிலையென வழங்கப் பெறும். இக்கோயிலினுள்ளே தென்மேற்குத் திசையில் கருவூர்த்தேவருக்குரிய கோயில் அமைந்துள்ளது.[2]

கருவூர்த்தேவர் வேதியர் குலத்தில் பிறந்தவர். வேதங்களை முறைப்படியோதி வைதிக நெறியில் வழுவாதொழுகிய பெரியார். இச்செய்தி 'ஆரணம் பிதற்றும் பித்தனேன்' என்றும் 'செழுமறை தெரியுந்திகழ்

கருவூரனேன்' என்றும் 'கருவூர் ஆரணம் பொழிந்த பவளவாய்' என்றும் இவ்வாசிரியர் தம்மைப் பற்றிக் கூறுவதால் விளங்கும். [3]

காலம்

கி.பி. 985 முதல் 1017 வரை தமிழகத்தை ஆட்சி புரிந்த பெருவேந்தன் முதலாம் இராசராச சோழனாவான். [4] இவ்வேந்தர் பெருமான் தஞ்சை நகரத்தில் தக்கினமேருவென்னும் பெயருடன் இராசராசேச்சுரத் திருக்கோயிலைக் கட்டினான்.[5] இவன் மகன் கங்கையாறு பாயும் பகுதியை ஆண்ட வடநாட்டு மன்னரைத் தன்னடிப்படுத்திக் கடல் கடந்து கடாரம் முதலிய நாடுகளையும் வென்று மேம்பட்ட கங்கை கொண்ட சோழனென்பான். இவன் தன் பெயரால் அமைத்த கங்கை கொண்ட சோழேச்சுரம் என்ற திருக்கோயிலைக் கட்டினான்.[6] இவ்வேந்தன் கி.பி. 1012 முதல் 1044 ஆம் ஆண்டு வரை தமிழகத்தை ஆட்சி புரிந்தான்.[7] இவ்விரு பெருவேந்தர்களாலும் கட்டப் பெற்ற இரண்டு திருக்கோயில்களையும் நேரில் கண்டு மகிழ்ந்த கருவூர்த்தேவர் அங்கு எழுந்தருளிய சிவபெருமானைத் திருவிசைப்பா பாடிப்பரவிப் போற்றியுள்ளார்.[8] எனவே இப்பெரியார் மேற்குறித்த முதலாம் இராசராசசோழன், முதலாம் இராசேந்திரன் ஆகிய இரு பெருவேந்தர் காலத்தும் இருந்தவரென்பது நன்கு துணியப்படும். எனவே இவ்வாசிரியர் கி.பி.10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவரெனக் கொள்ளலாம்.

கொங்குச் சோழர் காலத்தவர்

கொங்குச் சோழர்கள் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொங்கினை ஆளத்தொடங்கினரர்கள். முதலாம் இராசராசனுக்கு முன் கொங்கில் ஆண்ட முதலாம் வீரசோழன், முதல் கொங்குச் சோழன். இவன் பராந்தக சோழனின் பிற்பகுதியில் ஆட்சியைத் தொடங்கியவன்.[9] இவன் காலத்திறுதியில் அல்லது இவன் மகன் கலிமூர்க்கன் காலத் தொடக்கத்தில் கருவூர்த்தேவர் தோன்றியிருக்க வேண்டும். இவன் மகன் கலிமூர்க்க விக்கிரமசோழன் காலத்தில் கருவூர்த்தேவர் இராஜகுருவாகத் தஞ்சை அரண்மனையை அலங்கரித்தார்.

பகற்பொழுதெல்லாம் இறைவனை இனிய தமிழாற் பாடிப் பரவுதலும், நள்ளிருட் பொழுதில் ஒரிடத்து அசையாவண்ணம் அமர்ந்திருந்து தம்

உயிர்க்குயிராகிய இறைவனை உற்று நோக்கி அப்பெருமானுடன் ஒன்றி நிற்கும் சிவயோகநெறியில் நிலைபெறவிருத்தலும் இவருடைய அன்றாட வழக்கங்களாயின. தாம் பெற்ற பேரின்பத்தினை எல்லோரும் பெற்று இன்புற வேண்டுமென விரும்பினார். வேதமாகிய தேனை நிறையப் பருகியின்புற்ற இப்பெரியார் வேதங்கள் 'ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய' இறைவனது திருவருளையடைந் தின்புறுதற்கு வீறுயர் செந்தமிழால் ஞானசம்பந்தப்பிள்ளையார் அமைத்த பதிகப் பெருவழியை நாடினார். இறைவனது பேரருட் பண்பினை இவ்வுலகோரனைவரும் உணர்ந்து மகிழ்தற்கேற்ற வகையில் இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடியருளினார். அப்பெருமானது திருவருளில் ஒன்றி இன்புறும் நிலையில் தாம் திருவிசைப்பாப் பாடிய திறத்தினை,

> **''ஒருங்கிருங் கண்ணின் எண்ணில் புன்மாக்கள்**
> **உறங்கிருள் நடுகல் யாமத்தோர்**
> **கருங்கணின்றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்**
> **கலந்தெனக் கலந்துணர் கருவூர்**
> **திருங் கரும்பனைய தீந்தமிழ் மாலை''**[10]

எனவருந் தொடராற் கருவூர்த் தேவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

கருவூர்த் தேவர் பாடியனவாகத் திருவிசைப்பாவில் பத்துத் திருப்பதிகங்கள் காணப்படுகின்றன. அவை தில்லைச் சிற்றம்பலம், திருக்களந்தை, ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைமருதூர் என்னும் திருத்தலங்களிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானைப் பரவிப் போற்றியனவாக அமைந்துள்ளன.

கருவூர்த்தேவர் பாடிய பத்துப்பதிகங்களிலும் நூற்று மூன்று பாடல்கள் காணப்பெறுகின்றன. "கணம் விரி குடுமி" யெனத் தொடங்கும் திருவிசைப்பாப்பதிகம் தில்லைபெருங்கோயிலைப் போற்றுவதாகும். இதன் கண் அமைந்த பாடல்கள் யாவும் 'பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே '[11] என்ற முடிவுடன் அமைந்துள்ளன. கடத்தற்கரிய பிறவிப் பெருங்கடலிற் கிடந்து கரை காணாது அலமரும் உயிர்க்கு 'அஞ்சற்க' என்று சொல்லித் திருவருள் புரியும் இறைவன் எழுந்தருளிய கோயில் பெரும்பற்றப்

புலியூரிலமைந்த திருவளர் திருச் சிற்றம்பலமே என்பதனை,

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்றால்
அஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழங்குழைத்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே. [12]

என வரும் அழகிய பாடலிற் கருவூர்த் தேவர் விளக்கியுள்ளார்.

இப்பாடல்

''புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
யறிவழிந்திட்டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வான்
அமருங்கோயில்'' [13]

எனவரும் திருஞானசம்பந்தர் திருப்பாடற்பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் புலப்படுகின்றது.

கருவூர்த்தேவர் திருவாசகத்தேனை நன்கு துய்த்தவர் என்பதற்கு அவர் யாத்த பாடல்கள் பலவற்றில் சான்றுகள் உள்ளன. சான்றுக்கு ஒன்றைக் காட்டலாம்.

''பூத்திரளுருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற்றோன்றிய தோற்றம்
தோன்ற நின்றவன்'' [14]

எனக் கருவூர்த் தேவர் இறைவனது தெய்வக் காட்சியை விளக்கும் பகுதி,

''இன்றெனக் கருளி யிருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தேன்'' [15]

என்ற திருவாசகத் தொடரையும்,

> **''பளிங்கே போல் அரிவை பாகம்**
> **ஒத்தாறு சமயங்கட் கொரு தலைவன்''** [16]

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடரையும் நினைவு படுத்துகிறது.

களந்தை ஆதித்தேச்சுரம் என்ற கோயிலைப் பற்றி கருவூர்த்தேவர் அழகிய பதிகம் ஒன்றினைப் பாடியுள்ளார். இந்தக் களந்தை ஆதித்தேச்சுரம் எந்தப் பகுதியிலிருக்கின்றது என்பதில் இரண்டுவிதக் கருத்துக்கள் உள்ளன.

களந்தையென்பது தஞ்சைமாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள களப்பாள் என்ற ஊர் என்றும், களப்பாள் களந்தையென மருவிற்று என்றும் கருதப் பெறுகின்றது.[17] இவ்வூரிலுள்ள கோயில்களுள் அழகிய நாதசுவாமி திருக்கோயில் முதலாம் ஆதித்த சோழனாற் கட்டப்பெற்றமையால் ஆதித்தீச்சுரம் எனவழங்கப் பெறுகின்றது என்றும் கருதப்பெறுகின்றது. புலவர் இராசு கொங்குநாட்டுக் களந்தை ஆதித்தேச்சுரமே கருவூர்த்தேவரால் போற்றப் பெற்றது என்று கருதுகின்றார்.[18]

கல்வெட்டிலக்கியம்

கொங்குச்சோழர் காலத்தில் கருவூர்த்தேவர் தவிர கொங்குநாட்டுப் புலவர் என்று கூறும் வகையில் யாரும் கொங்கில் வாழ்ந்ததாகத் தெரியவில்லை. கொங்கு நாட்டைப் பற்றிய வேறு இலக்கியம் ஏதும் இவர்கள் காலத்தில் எழுச்சி பெற்றதாகத் தெரியவில்லை. கொங்குச்சோழர் விட்டுச் சென்ற நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்களில் ஒரு மெய்க்கீர்த்தியும், தமிழிலக்கிய வாசகங்களும் பயின்று வரக் காண்கிறோம். தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் உள்ள கல்வெட்டுக்களில் தேவாரத்தில் பயின்று வரும் சொற்கள் ஆளப் பெற்றுள்ளன. கொங்குச் சோழ மன்னனொருவன் அழகிய மெய்க்கீர்த்தியை அளித்துள்ளான்.

கொங்குச் சோழர்களில் மூன்றாவது மன்னன் மெய்க்கீர்த்தியை எழுதியுள்ளான். அவன் அளித்துச் சென்ற மெய்க்கீர்த்தி சிறந்த ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது.

> **"திருவெழுத் திட்டுச் செங்கோல் ஓச்சி**
> **வெள்ளி வெண்குடை மிளிர வேந்தி**

நாடு வளம் படுத்து நையும் குடி ஓம்பி
ஆறில் ஒன்று கொண்டு அல்லவை கடிந்து
கோவீற்றிருந்து குடிப் புறங்காத்து
பெற்ற குழவிக்கு உற்ற நற்றாய் போல்'' [19]

இந்த மெய்க்கீர்த்தியில் பழந்தமிழ் இலக்கிய மொழி பொன்னைப் போல் போற்றப் பெற்றுள்ளது. இறுதி அடியில் வரும் 'பெற்ற குழவிக்கு உற்றநற்றாய்' என்பது புறநானூற்றில் (5ம் பாடலில்) பயின்று வரும் 'குழவி கொள்பவரின் ஓம்புமதி' என்ற சொற்றொடருடனும், பதிற்றுப்பத்து ஆறாம்பதிகத்தில் பயின்று வரும், 'குழவி கொள்பவரின் குடிபுறந்தந்து' என்ற சொற்றொடருடனும் ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. மேலும் ' நாடு வளம் படுத்து' என்ற சொற்றொடர் மூர்த்திநாயனார்புராணத்தில் 'வண்டமிழ்நாடு வளம்படுத்து' என்று கூறும் [20] வரிகளோடு ஒப்பிடத்தக்கதாய் உள்ளது.

இந்த மெய்க்கீர்த்தியை உருவாக்கிய புலவன் திருக்குறள் கருத்தையும், மொழியையும் நன்கு பயின்றவன் என்பதை பின்வரும் குறட்பாக்களே உறுதிப்படுத்தும்.

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையனாம் வேந்தர்க் கொளி (30 :10)
குடிபுறங்காத்தோம்பிக் குற்றங்கடிதல்
வடுவன்று வேந்தர் தொழில் (55 : 9)
அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா
மானமுடையது அரசு (39 : 4)

இந்த மூன்று குறட்பாக்களின் மொழிப் பொருளும், மொழியும் பொன்னேபோல் போற்றப் பெறுகின்றது என்பது இக்குறட்பாக்களை ஊன்றிப் படிப்பார்க்குப் புலனாகாமல் போகாது.

தேவார சொல்லாட்சி

கல்வெட்டுக்களில் தேவார சொல்லாட்சி பயின்று வருவது தமிழ்நாடு முழுவதும் காணப்பெறும் போக்கு. ஏட்டில் கிடைக்காத ஒரு பதிகமே கல்வெட்டில் பொறிக்கப் பெற்றிருந்தது.[21] அதுபோன்றதொரு பதிகம் கொங்கில் கிடைக்கவில்லை. ஆனால் கொங்குக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் தேவாரச் சொல்லாட்சி பயின்று வருகின்றது. திருமுருகன் பூண்டிப் பதிகத்தில்

அவ்வூர் அம்மனை 'முயங்கு பூண் முலையாள்' [22] என்று புகழ்ந்துள்ளார் ஆருரார். அதே சொல் கல்வெட்டுக்களில் பயின்று வருகின்றது.[23] பேரூர் இறைவனைப் 'பிறவா நெறியானே' என்று கூறக் காண்கிறோம்.[24] அந்தச் சொல் ஒரு கல்வெட்டில் 'பிறவா நெறிக் காணி' என்று கூறப் பெறுகின்றது.[25]

சமண சமயத் தீர்த்தங்கரரை 'அணியாத அழகியார்' [26] என்றும் ஆடவல்லப் பெருமானை 'நித்தம் நின்றாடுவார்' [27] என்றும் கல்வெட்டுகள் பெயரிட்டு அழைக்கின்றன. இது கொங்குச்சோழர் காலத்து இலக்கிய ஆர்வத்தைக் காட்டுகின்றது.

முடிவுரை

கொங்குச் சோழர் காலத்து இலக்கிய வளர்ச்சி இடைக்காலத் தமிழகத்தின் பொதுவான போக்கையே கொண்டு விளங்கியது. பக்தி இயக்க வளர்ச்சியின் பிழிவாகப் பன்னிரு திருமுறைகள் உருவாயின. அவற்றில் ஒன்றான ஒன்பதாம் திருமுறையில் தொகுக்கப் பெற்ற கருவூர்த் தேவரின் இசைப்பாக்கள் தத்துவ ஞானத்தையும், ஒன்றி நிற்கும் யோக நெறியையும் தாங்கி நிற்கின்றன. இடைக்காலப் பக்தி இலக்கியத்திற்கு இது கொங்கின் பங்களிப்பு எனலாம். கொங்குச் சோழர்களில் ஒரு மன்னன் அழகிய மெய்க்கீர்த்தியை அளித்துச்சென்றான். அது சிறந்த அகவற்பாவில் அமைந்துள்ளது. பண்டைய தமிழ் இலக்கிய மரபினைப் பின்பற்றி நிற்கின்றது. கல்வெட்டுக்களில் தேவாரமொழி நன்கு பயன்படுத்தப் பெறுகின்றது என்பதற்குச் சில சான்றுகள் கிடைத்துள்ளன.

அடிக்குறிப்புகள்

1. Nagaswamy, R., Art of Tamil nadu, Plate No. 112
2. ஒன்பதாம் திருமுறை, ஆசிரியர்கள் வரலாறு, ப. 60
3. மேலது, பாடல் 111, 151.
4. Ramamoorthy, V., The History of Kongu, p.276.
5. Nagaswamy, R., op. cit. .p. 6.

6. Ibid

7. Ramamoorthy, V., op. cit. p. 278.

8. ஒன்பதாம் திருமுறை, பாடல்கள் 162 – 72, 133 – 143.

9. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு. ப. 51

10. ஒன்பதாம் திருமுறை., பாடல் 182.

11. மேலது, பாடல், 80

12. மேலது, பாடல், 81

13. திருஞான சம்பந்தர், தேவாரம். திருவையாற்றுப் பதிகம் பாட்டு 1.

14. ஒன்பதாம் திருமுறை, பாடல், 86.

15. திருவாசகம், கோயில் திருப்பதிகம், பாட்டு 7.

16. திருஞான சம்பந்தர், முன்.கு.நூ.

17. ஒன்பதாம் திருமுறை, தலங்களின் வரலாற்றுக் குறிப்பு, ப. 5

19. Epigrapia Indica, Vol. III, p.109.

20. பெரியபுராணம், மூர்த்தி நாயனார் புராணம், செய்யுள். 13.

21. அருணாசலம். மு, தமிழ் இலக்கிய வரலாறு, (பத்தாம் நூற்றாண்டு)

22. சுந்தரர் தேவாரம், திருமுருகன் பூண்டிப் பதிகம், பாட்டு. 5

23. திருமுருகன் பூண்டிக் கல்வெட்டுகள். தொ.பொ.ஆ.கோ.

24. சுந்தரர் தேவாரம், கோயில் பதிகம். பாட்டு 4.

25. S.I.I. Vol. V. No. 242

26. கோவை மாவட்டம், அவினாசி வட்டம், ஆலத்தூர்க் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

27. S.I.I. Vol. XXVI No. 144.

நிருவாகம்

கொங்குநாட்டு வரலாற்றில் நன்கு வரையறுக்கப் பெற்ற நிருவாகம் கொங்குச்சோழர் காலத்தில் ஏற்பட்டது. கொங்குச்சோழர்களுக்கு முன் நிருவாகம் சிறு சிறு குலங்கள் அளவில் நின்றுவிட்டது. கி.பி.10ஆம் நூற்றாண்டிற்கு முன் செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் வேள், வேளான் போன்ற அரசியல் தலைவர்களுடைய பெயர்கள் கூறப்பெற்றன.[1] ஆனால் அவர்களின் நிருவாக முறை எப்படி இருந்தது என்பது பற்றி செய்தி ஏதுமில்லை. கொங்குநாட்டில் பல மன்னர்கள் அல்லது வேளான்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றமையாலும், சமூகம் சிறு சிறு குலங்களாகப் பிரிந்து கிடந்தமையாலும் அக்குலங்களைக் கூறாக்கநிலை குலங்கள் (Segmentary Lineages) என்று கூறலாம்.[2] அவற்றிற்கிடையில் முரண்பாடுகளும், உடன்பாடுகளும் மிகுந்திருந்தன. கூறாக்கநிலைக் குடிகள் இணைக்கப்பெற்று பெருஞ்சமூகமாகக் கொங்குச்சமூகம் உருவாக்கப் பெற்றது. அதனால் பரந்துபட்ட நாடாயிற்று. அதற்குரிய நிருவாகமும் ஏற்பட்டது. கொங்குச் சோழர்கள் ஏற்படுத்திய நிருவாகம் அண்மைக்காலம் வரை நிலை பெற்றிருந்தது.

கொங்குநாடு சோழப்பேரரசின் ஒரு பகுதியாக இருந்தமையால் தஞ்சைச்சோழர்கள் முறையான நிருவாகம் ஏற்படக் காரணமாயிருந்தனர் எனலாம். கொங்குச் சோழர்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு வரை வடகொங்கையும், அந்நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தென்கொங்கையும் சேர்த்து ஆட்சி செய்தனர்.[3] அதனால் 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை தென்கொங்கின் நிருவாக முறை வேறு விதமாக இருந்தது எனலாம். மேலும் நிருவாகம் தஞ்சைச்சோழர்களின் நிருவாக முறையினை பெரும்பான்மை பின்பற்றியிருந்தது.

அரசு நிருவாகம் வரிவசூலையும், மக்கள் வாழ்க்கையில் ஒழுங்கு நிலையையும் குறிக்கோளாகக் கொண்டு விளங்கியது. அரசன் சிற்றரசன் ஆகையால் அந்த சிற்றரசிற்குரிய குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிருவாகம் உருவாயிற்று. பிரமியம் கல்வெட்டில் கூறப்பெறும் விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தி

கொங்குச்சோழர்களின் நிருவாகத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"ஸ்வஸ்தஸ்ரீ கோகலிமூர்க்க ஸ்ரீ விக்கிரம சோழ
தேவற்குத் திருவெழுத்திட்டுச்
செங்கோலோச்சி வெள்ளி வெங்குடை
மிளிர வேந்தி நாடு வளம்படுத்தி நயுங்
குடியோம்பி ஆறிலொன்று கொண்டு
அல்லவை கடிந்து கோவீற்றிருந்து குடி
புறங்காத்துப் பெற்றக் குழவிக்குற்ற நற்றாய்
போல் திருமிகு சிறப்பிற் செல்லா நின்ற திரு
நல்லியாண்டு''

மேலே கூறப்பெற்ற மெய்க்கீர்த்தியில் வரிவசூல் பற்றியும், நாடு வளம் படுத்துதல் (நீர்ப்பாசனம்) பற்றியும், நயும் குடி (பழங்குடி) யைப் பற்றியும் அரசு நிருவாகத்தைக் கொண்டு செலுத்தியதாகக் கூறப்பெறுகின்றது.

அரசுப்பரிவாரம்

கொங்குச்சோழர் ஆட்சியின் தொடக்க நாட்களில் அமைச்சர், வேளான், சேனாபதி, சாமந்தர் போன்ற அரசு அலுவலர்கள் கூறப் பெறுகின்றனர். பிரமியம் கல்வெட்டுக்களில் வானவன் உத்தரமந்திரி என்பவன் கூறப்பெறுகின்றான். அதனால் கொங்குச்சோழர்கள் தொடக்கம் முதலே தங்கள் நிருவாகத்தில் அமைச்சர் ஒருவரை வைத்திருந்தனர் என்பது உறுதிப்படுகின்றது.[4] மேலும் கி.பி.10ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் வேளான்கள் பலர் கூறப்பெறுகின்றனர். கரூர்க்கல்வெட்டிலும், ஈரோட்டுக் கல்வெட்டிலும் 'வஞ்சிவேள்' என்பவன் கூறப்பெறுகின்றான்.[5] பிரமியம், கொக்கராயன் பேட்டை, அந்தியூர் போன்ற ஊர்களில் வேட்டுவரில் வேளான் ஆட்சி நடந்தது பற்றியும் கல்வெட்டுக்கள் கூறும்.[6]

அரையர்

கரூர் கல்வெட்டு 'பெருமாள் பெருந்தனத்து அரையர்களில் நக்கன் விடங்கனான விக்கிரம சோழப் பல்லவரையனேன்' என்று கூறுகின்றது.[7] ஆகையால் கோநாட்டில் பெருமை பெற்றிருந்த 'அரையர்'

நிருவாக முறை கொங்கு நாட்டில் அறிமுகப்படுத்தப் பெற்றது என்று கருதலாம். கோநாட்டில் நிலைபெற்றிருந்த அரையர்கள் ஆட்சி பற்றி பேராசிரியர் சுப்பராயலுவால் விரிவாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. கி.பி.1176ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்று ஓர் அரையனைப் பற்றிக் கூறுகின்றது. கி.பி.1153ஆம் ஆண்டு கல்வெட்டு விருதராஜபயங்கரபுரத்து நகரத்தார் தாங்கள் கோயிலுக்கு அளித்த கொடையை அரையர் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.[8] மற்றொரு கல்வெட்டில் (கி.பி. 1237) ஓர் ஊரின் மூன்று கூறுகளில் அரையர்கள் கூறப் பெறுகின்றனர்.[9] புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் கீரனூர் கல்வெட்டுக்கள் அரையர்கள் நிருவாகம் பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. அக்கல்வெட்டின் செய்திப்படி ஊராரும், அரையர்களும் சேர்ந்து கோயிலுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை முறையாகச் செலுத்துவது பற்றி முடிவு செய்கின்றனர். அந்த முடிவினை அரையர்கள் அறிவிக்கின்றனர். அது மட்டுமில்லாமல் ஒம்படையில் உறத்தூர் கூற்றத்தைச் சேர்ந்த இருபத்திரண்டு அரையர்களும், வடசிறுவாய் நாட்டினைச் சேர்ந்த இருபத்தாறு அரையர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.[10] மற்றொரு கல்வெட்டு 'ஊருக்குச் சமைந்த அரையர்கள்' என்று கூறும். திருமெய்யம் கல்வெட்டு அரையர்கள் நாடுகாப்பார்களாகக் கூறுகின்றது.[11] மேலே கூறப்பெற்ற கல்வெட்டுச் சான்றுகளால் அரையர்கள் நாடு காக்கும் வீரர்களாகவும், நிலவுடைமையாளர்களானவுடன் நாட்டுச்சபை உறுப்பினர்களாகவும் மாறினர் என்று கருதலாம்.[12] கொங்கு நாட்டிலும் காவல் தொழிலையே அவர்கள் செய்திருக்க வேண்டும். கொங்கில் நாட்டுப் பிரிவுகளில் அரையநாடும் ஒன்று.[13] இது அரையர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததையே காட்டுகின்றது.

பிரமதேயம்

கொங்குச்சோழர் காலத்தில் சில பிரம்மதேயங்கள் இருந்துள்ளன. வீரசங்காத சதுர்வேதிமங்கலம், கற்றாயங் கன்னியான விக்கிரம சோழ சதுர்வேதி மங்கலம், குமரங்க பீம சதுர்வேதி மங்கலம், வீரசோழ சதுர்வேதி மங்கலம், அம்மடி சதுர்வேதி மங்கலம், இரவிவன்ம சதுர்வேதி மங்கலம், வீரநாராயண சதுர்வேதி மங்கலம் போன்ற சதுர்வேதி மங்கலங்கள் கூறப்பெறுகின்றன.[14] அமெரிக்க ஆய்வாளர்

கூற்றுப்படி பிரமதேயங்கள் நீர்வளம் மிக்க பகுதியில் தான் உருவாக்கப்பெறும்.[15] கொங்கு நாட்டிலும் ஆறுகளின் அருகிலேயே பிரமதேயங்கள் உருவாக்கப்பெற்றிருக்கின்றன. நீர்வளம் இல்லாத பகுதியில் பிரமதேயங்கள் உருவாக்கப் பெறவில்லை. ஆனால் சோழ மண்டலத்துப் பிரமதேயங்களைப் போல விரிவான நிருவாகத்தையும் ஊர்களின் நிருவாகத்தையும் சேர்த்துக் கவனித்தனர்.[16] ஆரம்பகாலத்தில் கோயில் கொடைகளை சபையிடமே ஒப்படைத்தனர். பின்னாளிலும் சபைகள் வழியாகவே தருமங்கள் செய்யப்பெற்றன.

ஊர்ச்சபை

பிரமியம் கல்வெட்டுக்களில் ஊரார் குறிப்புக்கள் கிடைக்கின்றன. கொங்குச் சோழர்கள் ஆட்சியில் ஊர்கள் (பிராமணர் அல்லாதார் ஊர்) தங்களுக்குள் ஊர்ச்சபை உருவாக்கிக் கொண்டு ஆட்சி செய்து கொண்டனர். முதலாம் விக்கிரம சோழன் காலத்தில் வெள்ளானூர்[17] என்ற ஊர்ச்சபை பற்றிய குறிப்பு காணப்பெறுகின்றது. இது கொண்டு வெள்ளாளர்கள் கி.பி. 11ஆம் நூற்றாண்டு முதலே தனிச் சபையாகச் செயல்பட்டனர் எனலாம். கொங்குநாட்டில் வெள்ளாளர்கள் தனிச்சபையாக நாடு அளவில் மட்டுமின்றி ஊர் அளவிலும் செயல் பட்டனர் என்பது புலப்படும்.

வேளான்

கொங்குச் சோழர் ஆட்சியின் தொடக்க காலத்தில் கிடைக்கின்ற சில கல்வெட்டுக்களில் 'வேளான்' பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. வேளான் என்பது வேள் என்பதுடன் 'ஆன்' விகுதி பெற்று உருவான சொல். கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன் வேள் ஆட்சியே கொங்கில் நிலை பெற்றிருந்தது. 'வஞ்சிவேள்' என்று கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் குறிப்பிடப்படுகின்றது.[18] முதல் பராந்தகன் வஞ்சிவேள் பரம்பரையைத் தோற்கடித்தான்.[19] வஞ்சிவேள் என்பது கரூரிலிருந்து ஆட்சி செய்த வேளிர் பரம்பரையாகலாம். மேலும் காவிரி, பவானி ஆற்றங்கரையில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் 'வேட்டுவரில் வேளான்' என்று கூறப்படுகின்றது.[20] வேட்டுவரில் 'வேளான்' என்பது குறிப்பிட்ட ஊரின் அல்லது வேட்டுவ குலத்தின் தலைவன் என்று பொருள்படும்.

சோழர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் 'குடித்தலைவர்' (Lineage Chief) ஆட்சிதான் நடந்தது. அந்தக் குடித்தலைவர்கள் அதிகாரம் இரத்த உறவின் அடிப்படையில் நிலைபெற்றிருந்தது.[21] சோழர் ஆட்சி ஏற்பட்டவுடன் குடித்தலைவர் அரசியல் நிருவாகத்தின் அடிப்படை அதிகார உறுப்பாகச் செயல்படத் தலைப்பட்டனர். இந்தநிலை சோழர் ஆட்சிக்குப் பின்னும் தொடர்ந்து நீடித்தது.

காமிண்டன்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை காமிண்டன், காவுண்டன், கவுண்டன், ஊர்க்கவுண்டன் என்ற பொறுப்புப் பெயர்கள் காலந்தோறும் செல்வாக்குப் பெற்றுப் பெருமை பெற்றது.[22] கொங்கு நாட்டில் இன்று அனைத்துச் சாதியாரும் கவுண்டர் என்ற பட்டத்தை விரும்பிப் போட்டுக் கொள்கின்றனர். ஆனால் கி.பி.13ஆம் நூற்றாண்டில் பத்துக்கும் குறைவான கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றது.[23] ஆனால் விஜயநகரநாயக்கர் காலத்தில் காமிண்டன் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக வருகின்றன. எது எப்படியிருப்பினும் காமிண்டன் என்ற நிருவாகி கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதியில் அறிமுகப்படுத்தப்படுகிறான். அதுவும் மூன்று ஊர்க் கல்வெட்டுக்களில் மட்டும் கிடைக்கின்றது. நிருவாகத் தேவையால் இந்த ஊர்களில் மட்டும் காமிண்டன் என்ற நிருவாகி உருவாக்கப்பெற்றான். காமிண்டன் என்பதைக் கா+மிண்டன் என்று பிரித்துப் பொருள் கூறலாம். கா என்பது மேய்ச்சல் நிலத்தையும், மிண்டன் என்பது வலிமையானவன் என்ற பொருளையும் அளித்தது.[25] ஆகையால் மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாப்பவன், காவல் காப்பவன் என்ற பொருளில் காமிண்டன் சொல் வழக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

காமிண்டன் நிருவாகம் கொங்கில் கி.பி.13ம் நூற்றாண்டில் அறிமுகப் படுத்தப்பட்டாலும் கருநாடகத்தில் கி.பி.6ஆம் நூற்றாண்டு முதலே வழக்கத்தில் வந்தது. அங்கு இச்சொல் கால்நடை வளர்ப்பு – போர் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருந்தது.[24] இந்தப் பொருளிலேயே கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் பயின்று வந்திருக்கும் என்று கொள்வது கடினம். இங்கு ஊர்த்தலைவன் என்ற பொருளில் மட்டும் வழங்கியிருக்க வேண்டும். கால்நடை வளர்ப்புடனோ அல்லது போருடனோ தொடர்புடையதாகத் தெரியவில்லை.

சாமந்தர்

கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுக்களில் சாமந்தர் என்ற அதிகாரி கூறப்பெறுகிறான்.[27] மேலும் கி.பி.12ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் சாமந்தப்பேறு என்ற சொல் பயின்று வருகின்றது.[28] இது பெரும்பாலும் சாமந்தர்களுக்கு அளிக்கப்பெற்ற கொடையாக இருக்கலாம் அல்லது கடமையாக (tribute) இருக்கலாம். சாமந்தர் என்பதற்கு அரசு அதிகாரி, நிலமானியத் தலைவர் (Feudal lord)என்று பல பொருள் கூறப் பெறுகின்றது.[29] ஆனால் கொங்கு நாட்டில் அரசு அதிகாரிகளாக மட்டும் செயல்பட்டனர் என்று கருத வேண்டியுள்ளது. நம்கன்மி, பெருமாள் அதிகாரஞ் செய்வார், மூவேந்த வேளான் ஆகிய அதிகாரிகள் குறிப்பிடப் பெறுகின்றனர்.[30] மூவேந்த வேளான், நிலம் தொடர்பான ஆவணங்களில் கையொப்பமிட்டுச் செயல்படுத்துபவனாகக் கருத வாய்ப்புண்டு. கொங்கு நாட்டில் மூவேந்த வேளான் நிருவாகம் கி.பி.12 ஆம் நூற்றாண்டிலிருந்து கொங்குச் சோழர் ஆட்சி முடியும் வரையில் நிலைபெற்றிருந்தது. கொங்குச் சோழர் ஆட்சி முடிந்த பின் மூவேந்த வேளான் பற்றிய குறிப்புக்கள் இல்லை.

மூவேந்த வேளான் முதல் பராந்தகன் காலத்தில் அறிமுகப் படுத்தப் பெற்ற அரசு அதிகாரி.[31] அவர்கள் இன்றைய இந்திய ஆட்சிப் பணியாளர்களைப் போன்றவர்கள். மூவேந்த வேளான் என்பது மூன்று வேந்தர்கள் (சேர, சோழ, பாண்டிய) நாடுகளில் பணிபுரிய பயிற்சி பெற்றவர்கள் என்று கருதப்பெறுகின்றது.[32] மூவேந்த வேளான்கள் பெரும்பாலும் வேளாளர்களிடையில் உருவானவர்கள்.

ஊராளி

கி.பி.12ஆம் நூற்றாண்டிற்குப் பின் (12ஆம் நூற்றாண் டிலிருந்து) "ஊரும் ஊராளிகளும்" என்று கூறப் பெறுவதைக் காணலாம்.[33] இங்கு ஊர் என்பது ஊர்ச் சபையையும், ஊராளிகள் என்பது ஊரை ஆட்சி செய்யும் அரசு அதிகாரிகளையும் குறிக்கும். ஊராளி என்பது இன்றைய கிராம அலுவலர்களைப் போன்றதொரு பொறுப்பினைக் குறிக்கும். ஊராளிகளுக்கு ஊதியத்திற்காக நிலம் அளிக்கப் பெற்றது. அதற்கு ஊராண்மைக்காணி என்று பெயர்.[34]

படை

கொங்குச் சோழர்கள் படை வைத்திருந்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் தொடக்க நாட்களில் ஏதும் கிடைக்கவில்லை. பிரமியம் கல்வெட்டு கூறும் அரையர்கள், படை செய்ய வேண்டிய காவல் பணிகளைச் செய்தனர் என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் கி.பி. 12ஆம் நூற்றாண்டிலிருந்து தங்களுக்கெனப் படைகளை வைத்துக் கொண்டதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. கொங்குச் சோழரில் முதலாம் குலோத்துங்கன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் குலசேகரப் பாண்டியனை ஆதரித்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன.[35] ஆகையால் குலோத்துங்கன் காலத்திலிருந்தாவது படை வைத்திருக்க வேண்டும் எனலாம். வீரராசேந்திரன் பிலாம்பிறைக் கோட்டை என்ற ஊரில் நிலைப்படை ஒன்றை வைத்திருந்தான்.[36] அந்தப்படையில் ஆயிரம் பேர் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறும்.

கடத்தூர்க் கல்வெட்டில் பல்வேறு படைகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. மலையாளப் படை, குதிரைப்படை போன்ற படைகள் குறிப்பிடப் பெறுகின்றன.[37] பல படைத் தலைவர்கள் குறிப்பிடப் பெறுகின்றனர்.[38] 'ஆயிரவர் தலைவன்' போன்றவர்களைப் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது.[39]

அரசர்கள் படையெடுப்புப் பற்றி செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் விரிவாகப் பேசுகின்றன. வீரகேரளனின் செப்பேடு பேரூர் அய்யர் ஒருவரிடம் இருந்தது.[40] உத்தமசோழன் படையெடுத்து காரைத்தொழுவினைப் பிடித்துக் கொண்டதாகக் கூறுகின்றது. கொழுமத்திலிருந்து கடற்றூரின் மீது படையெடுத்தபோது பேரூரில் வழிபாடு செய்த தளபதியைப் பற்றிக் கூறுகின்றது.[41] பேரூர்க் கல்வெட்டு ஒன்று கோவன்புத்தூர் (கோயம்புத்தூர்) மீது படையெடுத்தது பற்றிக் கூறுகின்றது.

> " நாம் மலையிராச்சியத்திலிருந்து கொண்டு
> நம் இராச்சியத்தில் படையெற்றிக் கோவன் புத்தூரை
> எறிந்து கொண்டு நாம் உடையாரைத் தண்டன்
> பண்ணிக் கொண்டு நமக்கும், அய்யனுக்கும்
> நன்றாக நாம் உதகம் பண்ணிக் குடுத்த ஊராவது''[42]

இக்கல்வெட்டு கோவன்புத்தூர் மீது அரசன் படையெடுத்தது பற்றிக் கூறுகின்றது. தம் இராச்சியத்தின் மீது தானே படையெடுத்ததாக ஓர் அரசன் கூறிக் கொள்கிறான். அது கொண்டு கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அரசு அதிகாரம் கட்டிறுக்கம் வாய்ந்ததாக இருக்கவில்லை எனலாம். அதனால் ஒவ்வொரு குறுநிலப் பகுதியும் தன்னாட்சிமிக்கதாக அறிவித்துக் கொண்டதையே இது காட்டுகின்றது. அதன் விளைவு அரசன் தன் இராச்சியத்தின் மீதே, படையெடுக்க வேண்டியிருந்தது.

படைப் பிரிவுகள்

அரசப்படை சிறப்புற்ற நகரங்களில் நிலையாக வைக்கப் பெற்றிருந்தது. அப்படை மூத்த சமக்கட்டு, இளைய சமக்கட்டு என்று இரண்டு பெரும் பிரிவினைப் பெற்றிருந்தது.[43] வெள்ளலூர், திருமுருகன்பூண்டி, கொழுமம், ஆனைமலை (நன்னனூர்), சேவூர், அவினாசி, விஜயமங்கலம், கரூர், பேரூர், ஆகிய ஊர்களில் படைப் பிரிவுகள் இருந்துள்ளன.[44] இப்படைப் பிரிவுகளுக்கு சேனாபதி, இடங்கை நாயகம் செய்வார் ஆகியவர்கள் படைகளை நடத்திச் செல்லும் தலைவர்களாக விளங்கினர்.[45] வணிகர்கள், வேளாளர்கள் ஆகிய செல்வாக்கு மிக்க சமூகத்தினர் கூட படைகளை வைத்திருந்தனர். இவற்றிற்கு இடங்கை, வலங்கைப் படைப்பிரிவுகள் என்று பெயர் கூறப்பெறும்.[46] கொங்குச்சோழர் காலத்தின் இறுதியில் படையினர் கோயில்நிருவாகத்தில் பங்கேற்றனர். கொழுமத்தில் கோயிலைப் பாதுகாக்கும் பணியில் படைகள் ஈடுபட்டன.[47] அன்னூரைப் பற்றிப் பேசும் திருமுருகன் பூண்டிக் கல்வெட்டு ஒன்று பல படைப்பிரிவினர் அளித்த கொடை பற்றிக் கூறுகின்றது.[48]

அரசு மட்டுமின்றி வணிகர்கள், வேளாளர் ஆகிய செல்வாக்குமிக்க மக்கள், பிரிவினர்கள் கூட படையை வைத்திருந்தனர். வணிகர்கள், எறிவீரர், செட்டிவீரர், நீரவியார், முனைவீரர் போன்ற படைப்பிரிவுகளை வைத்திருந்தனர்.[49] நாட்டுச்செட்டித்தளம், அடிக்கீழ்த்தளம் போன்ற படைப்பிரிவுகள் இருந்துள்ளன. இவை அனைத்தும் வணிகர்கள் பற்றிப் பயின்று வரும் கல்வெட்டுக்களில் கூறப் பெறுகின்றன.[50] வணிகர்கள் படைப் பிரிவினை இடங்கைப் படை

என்று கல்வெட்டுக்கள் கூறும்.[51] கொங்குக் கல்வெட்டுக்களில் இடங்கைப் படை பற்றிய குறிப்பு ஒன்று கிடைத்துள்ளது. இடங்கை நாயகம் செய்வார் என்று மட்டும் கூறப் பெறுகின்றது.[52] அது கொண்டு இடங்கை நாயகம் செய்வார் இடங்கைப் படைப் பிரிவின் தலைவன் என்று கொள்ளலாம். வேளாளர் படைப்பிரிவு பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை.

மூன்றுகைமகாசேனை

தென்னகத்துக் கோயில் கல்வெட்டுக்களில் மூன்றுகை மகாசேனை என்றொரு சேனை கூறப்பெறுகின்றது.[53] மூன்றுகை என்பதற்கு வலங்கைப் படை, இடங்கைப்படை, கோயில் வைத்திருந்த படை என்று மூன்று படைப் பிரிவினைக் குறிக்கும் என்று சுப்பிரமணியம் கூறுவார்.[54] கொங்கு நாட்டுக் கோயில்களில் படை இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. கொழுமம்கல்வெட்டு ஒன்று அங்கு கோயில் பாதுகாப்பிற்கென படை இருந்தமை பற்றிக் கூறுகின்றது. மேலும் வடகொங்குப் பகுதியிலிருந்த கோயில்கள் அளித்து வந்த 'ஒட்டச்சு' என்ற வரியை நீக்கியமை பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[55] ஒட்டச்சு என்பதை ஒட்டு+அச்சு என்று பிரித்துப் பொருள் கூறலாம். ஒட்டு என்பதற்கு ஒப்பந்தம் என்றும் அச்சு என்பதற்கு வரி என்றும் பொருள் கொண்டு ஒட்டச்சு என்பது ஒப்பந்தப்படி அளிக்கப்பெறும் வரி என்று பொருள் கூறுகின்றனர்.[56] ஆனால் ஒட்டு என்பது ஒருவகைப் படை என்று பொருள் கொண்டு ஒட்டு என்ற படைக்கு அளிக்கப் பெறும் வரி ஒட்டச்சு என்று பொருள் கொள்ள வாய்ப்புண்டு.[57] அவ்வாறு பொருள் கொண்டால் கோயில்களில் வைக்கப் பெற்றிருந்த படைக்கு அளிக்கப் பெற்ற வரி என்று பொருள் கொள்ளலாம். அப்படிப் பொருள் கொள்வது உறுதிப்படும் போது கொங்கு நாட்டுக் கோயில்களில் படை வைத்திருந்தமை புலப்படும். அந்தப் படை வைத்திருந்தமைக்கான வரியை அரசன் நீக்கியுள்ளான் என்று கொள்ளலாம்.

மக்கள் ஆட்சி

அரசு நிருவாகம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில் நாட்டு மக்களிடையில் சுயாட்சித் தன்மையுடன் விளங்கிய

குழு (சபை) நிருவாகமும் செல்வாக்குப் பெற்று நின்றது. நிற்கவும் நாட்டுச்சபை, ஊர்ச்சபை, நகரசபை , பிரமதேயம், சித்திரமேழி பெரியநாடு, கோயில் நிருவாகசபை போன்ற சபைகள் நிலைபெற்றிருந்தன. நாட்டுச்சபை வடகொங்கில் மட்டுமே சிறப்புற்றிருந்தது. பிரமதேயம், ஊர், நகரம், கோயில் நிருவாகம் போன்றவை இருகொங்கிலும் பெருமை பெற்றிருந்தன. 'மன்றாட்டு' நிருவாகம் தென்கொங்கில் பெருமை பெற்றது. அது வடகொங்கில் வடபரிசார நாட்டில் மட்டும் பெருமை பெற்றது.[58]

நாட்டுச் சபை

கொங்குச் சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் நாட்டுச் சபை பற்றிய குறிப்புக்கள் மிகுதியும் கிடைக்கின்றன. பூந்துறை நாட்டோம், காங்கய நாட்டோம், காஞ்சிக் கூவல் நாட்டோம், வடபரிசார நாட்டில் வெள்ளாநாட்டோம், பூலுவநாட்டோம், பொங்கலூர்கா நாட்டில் வெள்ளாநாட்டோம், பூலுவநாட்டோம், எழுகரை திருவாய்பாடிநாட்டோம் என்று கல்வெட்டுக்களில் கூறிக் கொள்வதைக் காண்கிறோம். கரைநாடு என்றொரு அமைப்பும் பிற்காலக் கல்வெட்டுக்கள் கூறுவதைக் காணலாம்.

வடகொங்கில் இருபது நாடுகள் (Micro regions) இருந்தமை பற்றி ஐந்து கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இந்த இருபது நாடுகளிலும் நாட்டுச் சபைகள் இருந்துள்ளன. அது பற்றிக் கொடுவாய், பொன்னிவாடி, கொடுமுடி, பெருந்தலையூர், பாரியூர், மொடக்கூர், கூகலூர், திங்களூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் பேசுகின்றன.[59] நாட்டுச் சபை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள செல்வம் மிக்க வெள்ளாளர்களின் குழு என்று பேராசிரியர் ஏ.சுப்பராயலு அவர்கள் கூறுவார்.[60] அவர் கூறுவது சோழ மண்டலத்திற் குரியதாயினும் கொங்கு மண்டலத்திலும் அத்தகைய சூழ்நிலை இருந்தது. நாட்டுச் சபையார் நிலக்கொடை, நிலவரி, நிலமாற்றம் தொடர்பான நிருவாகத்தில் முழு அதிகாரம் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர்.[61] அதனால் கொங்குக் கிராம வாழ்க்கையில் நாட்டுச் சபையின் செல்வாக்கு பெருமை பெற்றது. மக்களுக்கும் அரசிற்குமிடையில் ஒரு பாலமாக நாட்டுச் சபை விளங்கியது. வரிநீக்கம், வரிமாற்றம் பற்றிய ஆணைகள் நாட்டுச் சபைக்கும் அளிக்கப் பெற்றது.

வடபரிசார நாட்டிலும், பொங்கலூர்க்கா நாட்டிலும் வெள்ளாநாடு, பூலவநாடு என்ற இரு நாட்டுச்சபைகள் இருந்துள்ளன.[62] வெள்ளாநாடு என்பது வெள்ளாளர் சபையையும், பூலுவநாடு என்பது பூலுவர் சபையையும் குறிக்கும். அவிநாசி, சேவூர், திருமுருகன் பூண்டி, அன்னூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் வெள்ளா நாட்டாரும், பூலுவ நாட்டாரும் சேர்ந்து நிலக்கொடை அளித்தமை பற்றிக் கூறுகின்றது.[63] சான்றுக்குச் சேவூர் கல்வெட்டினைக் கூறலாம்.

> "வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடிநல்லூர்
> நாயனார் அழகப் பெருமானான சுந்தர பாண்டிய
> விண்ணகர எம்பெருமான் கோயில் நம்பி மாற்கும் ஸ்ரீ
> வைஷ்ணவர்களுக்கும் இன்னாட்டு வெள்ளா நாட்டோ
> மும் பூலுவநாட்டோம் பிடிபாடு குடுத்த பரிசாவது
> இன்னாயனாற்கு அமுதுபடி உள்ளிட்ட விஞ்சனங்
> களுக்குதிருவிடையாட்ட இறையிலி ஆகயிருவது
> முதல்குடி ஏற்றிக் கொள்வதாக நாங்கள்
> நீர்வார்த்துக்குடுத்த காரை
> ய்ப்பாடி நான் கெல்லைக்குட்பட்ட நிலம் [64]

இக்கல்வெட்டு வெள்ளாநாட்டாரும், பூலுவநாட்டாரும் இணைந்து அளித்த கொடையைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. இது போன்ற கல்வெட்டுக்கள் மேலே கூறப் பெற்ற ஊர்களிலிருந்து கிடைக்கின்றன.

திருவாய்ப்பாடி நாடு

ஈரோடு, கரூர் ஆகிய ஊர்களிலிருந்து கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் திருவாய்ப்பாடிநாடு என்றொரு நாடு பற்றிக் கூறுகின்றன. கே. எஸ், வைத்தியநாதன் அவர்கள் திருவாய்ப்பாடி நாடு என்பதற்கு அரசியல்புவியியல் பிரிவு (Political Geography) என்றுபொருள் கொள்கிறார். அதுவும் விஜயமங்கலம் அருகிலுள்ள திருவாய்ப்பாடியைச் சுற்றியுள்ள பகுதியைத் திருவாய்ப்பாடிநாடு என்று கூறுகிறார்.[65] ஆனால் ஈரோடு கல்வெட்டு 'எழுகரைத் திருவாய்ப்பாடி நாடு' என்று கூறுகிறது.[66] எழுகரை என்பது அவர் கருத்துப்படி கொங்கு நாடு முழுவதும் பாய்ந்தோடும் ஏழு ஆறுகளைக் குறிக்கும். ஆனால்

எழுகரை என்ற அடைமொழி கொங்குநாட்டிற்குட்பட்ட திருவாய்ப்பாடி என்றொரு சிறு நாட்டுப்பிரிவு (Micro Region) என்று அவர் கொள்கிறார்.[67] திருவாய்ப்பாடிநாடு ஒரு அரசியல்புவியியல் பிரிவு என்று கூறுவது வரலாற்றுச் சான்றுகளுக்குப் புறம்பானது. எழுகரை என்பதற்கு அவர் கூறும் பொருளும் தவறு. அது பற்றிப் பின்னர் பேசப்படும். திருவாய்ப்பாடி நாடு என்பது இடையர்களுக்கு இடையில் அமைந்திருந்த நாட்டுச்சபையே அன்றி அரசியல்புவியியல் பிரிவு அல்ல.[68] கரூர் பகுதியிலும் "திருவாய்ப்பாடி நாட்டோம்'' என்று கல்வெட்டுக்கள் கூறும்.[69] அதனால்'திருவாய்ப்பாடிநாடு' என்பது கரூர்ப் பகுதியிலிருந்து அரசியல் புவியியல் பிரிவு என்று கொள்ள வேண்டி வரும். ஒரே பெயரில் இரண்டு அரசியல் பிரிவுகள் கொங்கு மண்டலத்திற்குள் இருந்ததில்லை. இதே திருவாய்ப்பாடிநாடு தொண்டை மண்டலத்தில் பல கல்வெட்டுக்களில் கூறப் பெறுகின்றது.[70] மேலே கூறப்பெற்ற எல்லாக் கல்வெட்டுக்களிலும் 'திருவாய்ப்பாடிநாடு' என்பது அரசியல் புவியியல் பிரிவாகக் கருதப்பெறவில்லை. சமுதாயச் சபையாகவே கருதப் பெற்றது. ஆகையால் கொங்கு நாட்டிலும் திருவாய்ப்பாடி என்பது சமுதாயப் பிரிவாகவே கருதப் பெற்றது என்று கருதலாம்.

கரைநாடு

கொங்குச்சோழர் காலத்திறுதியில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் இரண்டு கரைநாடு, மூன்று கரைநாடு, நான்கு கரைநாடு , ஐந்து கரைநாடு, ஏழுகரைநாடு, ஒன்பது கரைநாடு என்று கரைநாடு பெயர்கள் கூறப் பெறுகின்றன.[71] கரைநாடு பற்றி முதன் முதலில் ஆய்வு செய்தவர் கே.எஸ். வைத்தியநாதன்.[72] அவர் கருத்துப்படி கரை என்பது ஆறு என்றும், ஏழுகரை என்பது ஏழு ஆறுகளைக் கொண்ட நாடு என்றும் பொருள்படும். மேலும் கொங்கு நாட்டில் ஏழு ஆறுகள் ஓடுவதாகவும் , அதனால் கொங்கு நாடே எழுகரை நாடு என்று பொருள்படும் என்றும் கூறக் காண்கிறோம்.[73] ஆனால் அவரே காட்டும் சான்று ஒன்று அவர் கருத்துக்கு எதிராக நிற்கிறது. "மேல்கரை இருபத்தி நான்கு நாடும், கீழ்க்கரை எழுகரை பூந்துரை நாடும்''[74] என்று அவர் ஒரு கல்வெட்டுச் சான்றினை எடுத்துக் காட்டுகிறார். அதை உண்மையென்று கொண்டு பார்த்தால் காவிரிக்குக் கிழக்கில் இருந்த பகுதி எழுகரை நாடு என்று பொருள் படுகின்றது.

அவர் கருத்துப்படி கோவை, பெரியார், சேலம் மாவட்டம் முழுவதும் கொங்கு என்று கொண்டு அந்தப் பகுதியில் ஓடும் ஏழு ஆறுகளே எழுகரை என்று கொள்ள வேண்டும் என்று கருதப்படவேண்டும். இருப்பினும் அவர் காட்டும் சான்று சேலம் பகுதியை மட்டும் எழுகரை நாடு என்று கூறுகின்றது. அதனால் கரைநாடு என்பது ஆறு என்ற பொருளில் ஆளப்பெறவில்லை. வேறு பொருளில் ஆளப்பெறுகின்றது என்று கருத வேண்டியுள்ளது.

கரை என்பதுதான்என்ன?

கரை என்பது சோழர்காலக் கல்வெட்டுக்களில் 'Share' என்ற பொருளில் வழங்கப்பெற்றது. அக்காலத்துக் கிராமங்களில் உள்ள நிலம் பல கரைகளாகப் பிரிக்கப் பெற்று ஆண்டு தோறும் ஒரு குடும்பத்திற்கு ஒரு கரை நிலம் அளிக்கப் பெற்றது.[75] இந்த ஆண்டில் அளிக்கப்பெற்ற கரைநிலம் அடுத்த ஆண்டில் அதே குடும்பத்திற்குக் கிடைக்கும் என்பது உறுதியில்லை. கரைநிலப் பங்கீடு திருவுளச் சீட்டு (Lot) போட்டு எடுக்கப் பெறுவது.[76] அதனால் குறிப்பிட்ட கரைநிலம் குறிப்பிட்ட குடும்பத்திற்குத் தொடர்ந்து கிடைக்கும் என்ற உறுதியில்லை. இந்தக் கருத்தினைத் திருப்பாலத்துறைக் கல்வெட்டு உறுதிப் படுத்துகின்றது. கரை என்பது குடும்பத்தோடும், திருவுளச் சீட்டோடும் தொடர்பு கொண்டிருந்தமையால் பின்னாளில் குடும்பத்தையும் திருவுளச் சீட்டையும் (Lot) குறித்து வந்தது. கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் 'கரை' என்ற சொல்லும் 'கரைநிலம்' என்ற சொல்லும் பயின்று வருகின்றது.[77] அங்கெல்லாம் பங்கு என்றும், பங்குநிலம் என்றும் பொருள்படும். ஆனால் இரண்டு கரை, மூன்று கரை, நான்கு கரை, ஐந்து கரை என்று எண்ணடை சேர்ந்து வரும் போது கரை என்பது குடும்பு அல்லது குடும்பம் (House Hold) என்ற பொருளில் வழங்கியிருக்க வேண்டும்.[78] இன்றும் கொங்கு நாட்டில் சில சாதியாரிடம் கரை வழக்கம் உள்ளது. அது குல தெய்வ வழிபாட்டில் மட்டும் நிலைத்துள்ளது. சமூகப் பொருளாதாரக் காரணங்கள் மறைந்து விட்டன.[79] அவ்வாறு மறைந்ததற்கான காரணம் நிலத்தில் தனியுடைமை முழுச் செல்வாக்கு பெற்றிருப்பதேயாகும். கரையீடு முறை சமூகத்தில் நிலவுடைமை பொதுவாக அனுபவிக்கப் பெற்றதால் உருவான ஒன்று. அது அழிந்ததும், கரையும், கரையீடும் அழிந்துபோயின. ஆனால்

குலதெய்வ வழிபாட்டில் அது தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. நிலைபெற்றுள்ள அந்தக்கரை அமைப்பினை ஆய்வு செய்தால் சோழர் காலக்கரை, கரையீடு, கரைநாடு ஆகியவை விளக்கம் பெறும்.

சித்திரமேழிபெரியநாடு

கி.பி.13–14ஆம் நூற்றாண்டுக்கல்வெட்டுக்களில் சித்திரமேழிப் பெரியநாடு பற்றிய செய்திகள் மிகுதியும் கிடைக்கின்றன. சித்திரமேழி மெய்க்கீர்த்தி,[80] சித்திரமேழி விண்ணகர்,[81] சித்திர மேழி ஈஸ்வரம்,[82] சித்திரமேழிபட்டன்,[83] சித்திர மேழி தட்டான்,[84] சித்திரமேழி கணக்கன்[85] போன்ற பெயர்கள் கொங்கு நாடு முழுவதும் கிடைக்கின்ற கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கின்றன. அதனால் கி.பி.13–14ஆம் நூற்றாண்டில் சித்திரமேழிப்பெரிய நாட்டார் செல்வாக்கு புலப்படும். சித்திரமேழிப் பெரிய நாடு வெள்ளாளர் – வணிகர் கூட்டமைப்பின் ஒரு வெளிப்பாடு என்று கூறப்படுகின்றது.[86] தென்னிந்தியாவில் திருநெல்வெலி முதல் ஷோலாப்பூர் வரை பரவியிருந்தார்கள்.

சித்திரமேழிப் பெரியநாட்டாரின் மெய்க்கீர்த்தி குறிப்பிடத்தக்கது.

> ஸ்ரீ பஞ்ச சதவிரசாத நலெக கன லக்குன
> லக்கும் இலாவிருதவழ்கதிர் ஸ்ரீ வாசுதேவ சகாயாய கண்டறி
> முலபத்திரரா மென் ஸ்ரீஐம் பொற்பரமேஸ்வரிக்கும்
> பட்டாரகிக்கும் ஸ்ரீபகவதிக்கும் ஸ்ரீதேவிக்கும் பாத்தரராகி
> தெந்தமிழ் வடகலை தெரிந்துணர்ந்து நீதி சாத்திர நிபுண
> ராயி சொல்லால் லினிதுரைத்து வன்சொல்லால்
> மறங்கடிந்து சமத்தாராககப் பரிமண்டலத்து சந்திராதித்வரை
> தழைத்தோங்கி இந்திராதிதேவர் களினிதுரைத்து
> வாதராசன் காற்றசைப்ப வருணராசன் நீர்தெளிப்பத்
> தேவரான பதமென்னத் திருவுடனெ விளங்கா நின்ற சகை
> குணசம்பந்தராகி நீதி உத்தமகுண பண்டிதர்களாய்ச்
> சமையத்து வளர்கின்ற இமையப் பேர்மலைய் ஏழுகட
> லளவையுடுத்த எடுத்தவி பண்டிகையுமுள்ள தலம்
> புக மந்தனமாக நாவலன் தீவென்று நன்னாடர் பொன்திகழ்
> பூம்புகார் திருவாரூர் புகழ்படலம் கொடும்பாளூர்

நாமம் புகழும் திருபழனமும் எழில் பாச்சில் ....
மற்று மென்பட்ட பதியனைத்தும் விருப்புடந் விளங்கு
வித்தோர் பின்னிரண்டு மொழியாத பன்னிரண்டு நகரமிவை
பழசாகப் படையோர் கொங்குலொன்பது மாநகரங்கள்
குடிகொண்டங்கி நிதுறைத்து''

கல்வெட்டறிஞர் கே.வி.சுப்பிரமணியஐயர் அவர்கள் கருத்துப்படி சித்திரமேழிப் பெரியநாடு போன்ற பேரமைப்பு அந்நாளைய மக்களுக்கும் அரசியற்குமிடையில் சிறந்த நிருவாகப் பாலமாக அமைந்திருந்தது.[88] வரிவசூல், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைக் கொண்டு செலுத்துவதில் இவ்வமைப்பு சிறந்த கருவியாகப் பயன்பட்டது என்பது ஐயர் அவர்களின் கருத்து. ஆனால் பர்ட்டன்ஸ்டீன் என்பார் சித்திரமேழிப் பெரியநாடு உருவாக்கியபோது அரசு என்று ஒன்றில்லை. அதனால் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக இருந்திருக்க வாய்ப்பில்லை என்று கூறுவார்.[89] சித்திரமேழிப் பெரிய நாடு இரண்டு நூற்றாண்டுகள் அரசியல் நிருவாகத்தில் சிறந்த செல்வாக்குப் பெற்று விளங்கியது என்பதில் ஐயமில்லை.

கோயில்நிருவாகம்

கோயில் நிருவாகம் சுயாட்சி பெற்றிருந்தாலும் அரசனுடைய தலையீடு தேவையேற்படும்போது இருந்தது. கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நிலக்கொடை பெரும்பாலும் அரசனால் அளிக்கப்பெற்றது.[90] கோயில் தேவதானங்களில் தன்னுடைய முழு அதிகாரத்தையும் பயன்படுத்தியது. ஊரை உருவாக்கிப் புதுக்குடிகளை நியமிக்கின்ற பொறுப்பு சிவப்பிராமணர்களிடமும் கோயில் தானத்தாரிடமும் இருந்துள்ளது.[91] கோயில் சமூக வாழ்க்கையில் பெரும்பங்கு வகித்தது. குளம் வெட்டி வளம் பெருக்குவதற்குக் கோயில்கள் பெரும்பங்காற்றின. ஊரிலிருந்த நிலம் முழுவதும் கோயிலுக்குச் சொந்தமாய் இருந்தது. அதனால் நிலத்தை உழுது வாழ்ந்தவர்கள் கோயில் ஆட்சிக்குக் கீழ் வாழ்ந்தனர். கோயில் மக்களுக்கும் அரசிற்குமிடையில் பாலமாக நின்று அரசு நிருவாகம் நடைபெறுவதற்குச் சிறந்த கருவியாக நின்றது. மேலும் அரசனுடைய செயல்களைப் புனிதப்படுத்தும் வகையில் செயல்பட்டது. அதில் வெற்றியும் கண்டது என்று கூறலாம்.

சோழர் காலத்தில் கோயில்கள் தன்னாட்சிமிக்க பொருளாதார நிறுவனமாக விளங்கியது. கோயிலில் சிவப்பிராமணர், தேவகன்மிகள், தானத்தார், மன்றாடி, நிமந்தகாரர், தேவரடியார், பட்டர் போன்ற நிருவாகிகளும், பணியாளர்களும் நியமிக்கப்பெற்றிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் அரசனால் நியமிக்கப் பெற்றனர். சிவப்பிராமணர் காசு கொடுத்துக் காணியாட்சியை விலைக்கு வாங்கினர்.[91] மன்றாடிகள் தேவதான ஊர்களைக் கூறிட்டு அனுபவித்துக் கொண்டு கோயிலுக்கு வருவாயை அளித்து வந்தனர். தேவதான ஊர்கள் மன்றாட்டுக்களாகப் பிரிக்கப்பெற்று ஒவ்வொரு மன்றாடிக்கும் அளிக்கப்பெற்றது.[92] ஒவ்வொரு மன்றாடியும் தன்னுடைய வாழ்க்கைக் கென்று ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு பிற பகுதி வருமானத்தைக் கோயிலுக்கு அளித்தான். நிமந்தகாரர் கோயில் பணிகளைச் செய்யும் பணியாளர்கள்.[93] தேவரடியார் கோயிலில் விழாக்காலங்களில் நாட்டியமாடுவதற்காக நியமிக்கப்பெற்றவர்கள். பேரூர்க் கல்வெட்டு ஒன்று கோயில் பண்டாரம் அழிவுபட்ட போது மேலே கூறப்பெற்றவர்கள் அரசனிடம் சென்று முறையிடுகின்றனர்.[94] மேலும் அரசன் அளித்த ஆணை ஒலை கோயில்தானத்தார்க்கு அளிக்கப்பெற்றது. அதனால் கோயில் தானத்தார் கோயில் நிருவாகத்தில் தலைமையிடத்தில் இருந்தார்கள் என்பது புலப்படும்.

மக்கள் தொழில் குழு

கொங்குச்சோழர் ஆட்சியின் இறுதியில் மக்கள் தொழில் குழு (Guild) செல்வாக்குப் பெற்று விளங்கியது. சித்திரமேழி பெரியநாடு, கம்மாளர் குழு, நானாதேசி, ஐந்நூற்றுவர், நகரத்தார், நாட்டுச் செட்டிகள், அடிக்கீழ்த்தளம், சாலியநகரத்தார், கவரை, வளஞ்சியர், அக்கசாலைகள் போன்ற குழுக்கள் கொங்குச் சோழர் காலத்திறுதியில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. கி.பி.9–10 ஆம் நூற்றாண்டில் அத்திகோசத்தார், வீரகோசத்தார் ஆகிய இரு குழுக்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன.[95] இவை மட்டுமில்லாமல் வெள்ளாளர், பார்ப்பார், வாணியர் (Oil Monger), பொற் கொல்லர், நிமந்தகாரர், தேவரடியார் போன்றவர்கள் தனித்தனிக் குழுக்களை அமைத்திருந்தனர்.[96] அவர்கள் குழுவாகச் செயல்பட்டதற்கு நேரடிச்சான்று இல்லையானாலும் அரசன் அந்தந்தச்சாதியார்க்கு அளித்த உரிமைகள் பற்றிய கல்வெட்டுக்கள்

அந்தந்தச் சாதியார் தொழிற்குழு வைத்திருந்ததையே காட்டுகின்றது.[97] சித்திரமேழிப் பெரிய நாட்டார் குழு செயல்பட்ட தன்மை பற்றி விரிவான கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. பிற குழுக்கள் செயல்பட்ட வகை பற்றிக் கல்வெட்டு எதும் கிடைக்கவில்லை.

இடைக்காலத்தில் உருவாகிய குழுக்கள் பற்றி அக்கால நீதி நூல்கள் விதந்து கூறுகின்றன. தொழிற்குழுவில் சேர்ந்திருப்பவர்கள் ஒரே தொழிலைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஒரே பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.[98] இந்தத் தொழிற்குழுவின் உள்நிருவாகத்தில் அரசன் தலையிடக்கூடாது. குழு எப்போதும் குழுவாகவே அதிகாரத்தைச் செலுத்தும். தனி மனிதர்கள் அதிகாரம், அங்கு செல்லுபடியாகாது. கொங்கு நாட்டில் நிலைபெற்றிருந்த தொழிற்குழுக்கள் தங்கள் சாதியார்க்கென உரிமைகளைப் பெற்றனர். 'தென்கொங்கில் கம்மாளர்க்குக் குடுத்த பரிசாவது', 'வடபரிசாரநாட்டுப் பார்ப்பார் சான்றோர்க்குக் குடுத்த பரிசாவது', 'நிமிந்தகாரர்க்கும் தேவரடியார்க்கும் கொடுத்த பரிசாவது' என்று அரசன் ஆணை கொடுத்து உரிமைகளைக் கொடுத்துள்ளான். அவற்றில் சான்றுக்கு ஓர் ஆணையை எடுத்துக் காட்டுவது தொழில் குழுவின் செல்வாக்கினை விளங்கிக் கொள்ள உதவும். கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

> **"ஸ்வஸ்தஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் வடபரிசாரநாட்டு பார்ப்பார் சான்றார்க்கு நாம் ஓலை கொடுத்த படியாவது இவர்கள் நம் சரக்கிற்கு பொருள் வைத்தமையில் இவர்களுக்கு நாம் கொடுத்த வரிசையாவது மேலமர்ந்து உலாக்கமும் கீழேற்றம் குதிரையும் தழையுஞ் சீனக்குடையும் சேகண்டியும் பெற்று வருவார்களாகவும் மைச்சுக்கு சாந்திட பெறுவார்களாகவும் இரட்டை தலைக்கடைக்கு கொறடு கட்டிக் கொள்ள பெறுவார்களாகவும் படைக் கணிக்கு ஆரம்பூணப் பெறுவார்களாகவும் தங்கப்பச்சைப் பிடாம் (படாம்) போர்க்கப் பெறுவார் களாகவும் தங்கள் மக்களுக்கு பொன்னின் காரைக்**

கட்டப் பெறுவார்களாகவும் கல்லியானத்துக்கு கட்டணம் கட்டி எரியோம்பி ஊர் சூழப் பெற கடவார்களாகவும் இவ்வரிசையில் இவர்கள் மக்கள் மக்களுக்கு சந்திராதித்த வரை செல்வதாகவும் இப்படிக்குச் செப்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவார்களாகவும் நம் ஓலை குடுத்தோம்''

இந்தக் கல்வெட்டு அவினாசி அம்மன் கோயிலில் வடிக்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு தொழிற் குழுவினரும் தங்களுக்கென கோயில்களைக் கட்டி வழிபட்டனர். சித்திரமேழி விண்ணகரம், சித்திரமேழி ஈஸ்வரம் ஆகிய கோயில்கள் சித்திரமேழி பெரிய நாட்டார் கட்டிய கோயில்கள், சேவூரிலுள்ள அக்கசாலீஸ்வரம், வடபரிசார நாட்டு அக்கசாலைகள் என்றதொழிற் குழு கட்டிய கோயில், ஆனைமலையிலிருந்த ஆனைக்கீஸ்வரமுடையார்கோயில் அத்திகோசத்தார் (ஆனைப்படைவீரர்) கட்டிய கோயில் ஆகலாம்.[101] இடங்கை நாயகீஸ்வர முடையார் கோயில் இடங்கைப் படைப்பிரிவினர் கட்டிய கோயில். ஐநூற்றுவர் கட்டிய கோயில் ஐநூற்றீஸ்வரம் என்று அழைக்கப்பெற்றது. இவ்வாறு அந்தந்தத் தொழிற்குழுக்கள் தனித்தனிக் கோயில்களைக் கட்டி வழிபட்டமுறை சமூகம் தனித்தனிக் குழுக்களாகப் பிரிந்து கிடந்ததையே காட்டுகின்றது.

முடிவுரை

கொங்குச்சோழரின் கீழ் நிருவாகம் சோழநாட்டு நிருவாக அமைப்பினைப் பின்பற்றியதாகவும், உள்ளூர் நிலைமைக்குத் தக்க வகையில் சில மாற்றங்களுடனும் கொண்டு செலுத்தப் பெற்றது. கோநாட்டில் நிலைபெற்றிருந்த நிருவாகக் கூறுகளும் இதில் அடங்கியிருந்தன. அதற்குச் சான்று அரையர்கள். கோநாட்டில் அரையர்கள் படை தொடர்புடையவர்களாகவே காட்சியளிக்கின்றனர். அந்த அடிப்படையிலேயே கொங்குநாட்டு அரையர் நிருவாகம் நடைபெற்றிருக்க வேண்டும். அரையர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் கொங்குநாட்டில் தான் காலத்தால் முற்பட்டதாகக் கிடைக்கின்றன. இங்கு கி.பி.11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே அரையர்கள்

பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. ஆனால் கோநாட்டில் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து கிடைக்கின்றன. அதனால் அரையர்கள் கொங்கு நாட்டில் உருவானவர்களோ என்று கருத வேண்டியுள்ளது.

வேட்டுவர்கள் வேளான்களி (Chief)ன் கீழ் வாழ்ந்தார்கள். பூலுவர், காவலர், குறும்பர், வெள்ளாளர் போன்றவர்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்ட நாட்டுச்சபைகளைப் பெற்றிருந்தனர். ஒவ்வொரு தொழிலிலும் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் ஒரு சபை வைத்திருந்தனர். அந்தச் சபை அந்தந்தத் தொழில் பிரிவினரின் நன்மை தீமைகளைக் கவனித்த அதே நேரத்தில், நாட்டின் பொதுவான நிருவாகத்திலும் எல்லாச் சபைகளும் பங்காற்றி வந்துள்ளன. வணிகர்களிடையில் நாட்டுச் செட்டி, நானாதேசி, நகரம், ஐந்நூற்றுவர் போன்ற பிரிவினர்களும், அவர்கள் படைப் பிரிவுகளும் தனித்தனிச் சபையினை வைத்திருந்தன. இந்தச் சபைகள் சித்திரமேழி பெரிய நாட்டுடன் இணைந்து செயல்பட்டன. தனித்தனியாகவும் செயல்பட்டன. ஒன்றாகவும் செயல்பட்டன. இந்த நிலையை ஒரு வகையான கூறாக்க நிலை (Segmentary) என்று கொள்ளலாம். சமூகத்தின் ஒவ்வொரு கூறும் (Segment) தனக்கே உரிய நிருவாகத்தைப் பெற்றிருந்தது. இதில் தொழிற் குழுவும், சாதிக் குழுவும் (Craft - Guild + Cast Guild) அடங்கும்.

நாட்டு நிருவாகத்தில் அரசனே முழு முதல் தலைவனாக விளங்கினான். நிலக்கொடை, நீர்பகிர்ந்தளிப்பு, புத்தூர் ஆக்கம், காட்டை அழித்து வேளாண் நிலமாக்குதல், வரிநீக்கம், கோயிலுக்கு வரி அளித்தல் , வணிக உரிமை, ஊராளி, மன்றாடி போன்றவர்களை நியமித்தல் போன்ற அனைத்தையும் தன் அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தான். மேலும் அரசனுக்கு நிருவாகத்தில் உதவி புரிய வேண்டி அமைச்சர், சாமந்தர், படைத் தலைவர் போன்றவர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர். அவர்கள் எல்லாக் காலங்களிலும் செயலாற்றினார்கள். அரசனின் மனைவியும் அரசியல் நிருவாகத்தில் பங்காற்றினாள். அரசர்கள் கொங்குநாட்டின் பல்வேறு மையங்களிலும் (Startegic places) படைகளை வைத்திருந்தனர். பிரமியம் மெய்க்கீர்த்தி கூறுவது போல ஆறில் ஒன்று வரியாக வாங்கப் பெற்றிருக்க வேண்டும்.

கோயில் நிருவாகத்தில் தேவகன்மிகள், மன்றாடிகள், தானத்தார், சிவப்பிராமணர் போன்றவர்கள் செயல்பட்டுள்ளனர். பிரமியம், விசயமங்கலம், பேரூர், கொழுமம் போன்ற பழைய ஊர்களில் பிரமதேய சபையாரும் கோயில் நிருவாகத்தை நடத்தியுள்ளனர். ஆனால் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பிரிவினர் செயல்பட்டுள்ளனர்.

கொங்குச் சோழர் ஆட்சியில் நிருவாகம் அரசு நிலை, மக்கள் நிலை என இருவகைப்பட்டதாக இருந்தது. அரசன் தொடக்க காலத்தில் (கி.பி.10–12ஆம் நூற்றாண்டுகளில்) நிருவாகத்தில் செல்வாக்கும் முழுமுதல் அதிகாரம் பெற்றும் ஆண்டான். ஆனால் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து மக்கள் சபைகளே நிருவாகத்தினை நடத்திக்கொண்டன.

அடிக்குறிப்பு

1. நாகசாமி, இரா., கருவூர் – வஞ்சி, ப. இல்லை. பெரியார் மாவட்டம்.தாராபுரம் வட்டம், பிரமியம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

2. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், ஊட்டி உரையாடல். நாள் 10.02.90.

3. Kandaswamy, S.P., Kongu and the Imperial Cholas, Paper Presented in the Seminer, on Cholas held at Tamil University in connection with 1000th year of Rajaraja I, Aug. 1984.

4. Epigraphia Indica, Vol. XXX, p.109

5. நாகசாமி, ஆர்., முன்.கு.நூ.

6. Indian Archaeoology 1967-68A Review p. 53 சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன் பேட்டை கல்வெட்டுக்கள், தொ.பொ. ஆ.கோ.

7. பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், பிரம்மியம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

8. Inscriptions of the Pudukkottai State, No. 184.

9. Ibid, No. 313

10. Ibid, No. 198

11. Ibid, No. 340

12. Subbarayalu, Y., Political Geography of the Chola country p. 39.

13. Vaidyanathan, K.S., The Ancient Geography of the Kongu Country, p. 51.

14. E.1, Vol. XXX, p. 109 ARE 336 of 1927 - 28 , ARE 336 of 1090 ARE 417 of 1958 - 59.

15. Burton Stein, Peasant State and Society in Medieval South India, p. 151.

16. Epigraphia Indica, Vol. XXX, p. 109-110

17. Ibid p. 106.

18. Vaidyanathan, K.S., op. cit. p. 16.

19. S.I.I. Vol. XIII. No. 129.

20. Rajasekara Thangamani, M. Vettuva in Kongu Country (M. Phil Dissert) Bharadhidasan University, 1990.

21. Ibid

22. பிரும்மராயர், காமிண்டன், கொங்கு, திங்களிதழ் (ஆக. 1972) ப: 208.

23. சேலூர், கடத்தூர் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

24. பூங்குன்றன், ஆர்., செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல், (எம்.பில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம் 1989) ப. 164.

25. மேலது ப. 163

26. ARE 34 of 1960 - 61

27. ARE 114 of 1909

28. கொழுமம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

29. Sircar, D.C., Indian Epigraphical Glossary, p. 289.

30. கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

31. Subbarayalu, Y., Cola State in Studies in History. Vol. IV No. 2., 1982, p. 280.

32. Arokiaswami, M., The inscriptional term. Muvendavelan, Journal of Indian History, Vol. 34 (AP - 1956) p. 191.

33. கண்ணாடிப்புத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

34. மேலது.

35. Subrahmaniya Aiyer, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol II, p. 71.

36. Ibid .p. 79

37. கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

38. மேலது.

39. மேலது.

40. இராமச்சந்திரஞ்செட்டியார், சி.எம்., திருப்பேரூரின் பண்டைய சரித வரலாறு, பேரூர் புராணம், வசன சுருக்கம், ப. 61

41. பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

42. S.I.T.I. Vol. I. No. p 255

43. வெள்ளலூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

44. Mani, Army in Meedeival Kongu (M.A. Project 6th Century AD to 14 th Century AD, Bharathiyar University 1989) p. 26.

45. Ibid p. 39.

46. Burton Stein, op.cit. p. 174.

47. Mani, op. cit. p. 39.

48. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு பக். 82-83

49. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ.

51. Burton Stein, op. cit. 199.

52. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. ப:35

53 . S.I.T.I. Vol. III, Part II, Historical Introduction (Tamil) pp 99-100.

54. கொழுமம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

55. S.I.T.I. Vol. I, No. 291.

56. Ibid, Glossory

57. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், ஊட்டி-2 உரையாடல் நாள் 10.02.90.

58. Poongundran, The term Manrattu paper presented in the XIIth Annual Congress, Epigraphical Society of India, Held at Tamil University, Tanjore. Feb. 1991.

59. S.I.T.I. Vol. III, Part I, No. 1055 Vol. I, No.292 Vol. II, No.722.

60. Subbarayalu, Y. op. cit. p. 36.

61. Ibid

62. பொன்னிவாடிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

63. ARE 620 of 1992, 635 of 1992.

64. சேவூர்க் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

65. Vaidyanathan, K.S., op. cit. p.134.

66. ARE 171 of 1910

67. Vaidyanathan, K.S., op. cit. p.138

68. கந்தசாமி, எஸ்.பி. நாட்டுப் பிரிவுகள், கல்வெட்டு செய்தனவும், செய்ய வேண்டுவனவும், கருத்தரங்கு, தமிழ்ப்பல்கலைக் கழகம், டிசம்பர், 1990.

69. கரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

70. வடஆற்காடு மாவட்டம், ஆரணி வட்டம் காமக்கூர் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.து. உதகை, எண். 187 ஏ 1972.

71. Vaidyanathan, K.S., op. cit. pp. 38,39, 40 and 41

72. Ibid, pp 38 - 42

73. Ibid.p. 41

74. Ibid.p. 49

75. பூங்குன்றன், ஆர்., கரையோலை, வரலாற்றில் புதுவெள்ளம், ப.170

76. மேலது ப.173.

77. S.I.I. Vol. XVII, No.540, 721.

78. பூங்குன்றன், ஆர்., முன்.கு.நூ. ப.173.

79. இராசு. செ., இணைப்பேராசிரியர் கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

80. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

81. ARE 564 of 1905

82. கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

83. இடிகரைக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

84. கணக்கம்பாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

85. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

86. Kandasamy, S.P., The History of the Kongu Vellalas (Ph.D. Thesis University of Madras, 1985) pp-135-36.

87. சர்க்கார் பெரியபாளையம், கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

88. Subrahmaniya Aiyer, K.V., Largest Provincial Organization in Ancient India, p.3.

89. Burton Stein, op. cit. p.218.

90. தேவதானம் பற்றிய கல்வெட்டுக்கள், கொழுமம், குமரலிங்கம், சோழமாதேவி, கண்ணாடிப்புத்தூர், பேரூர், அன்னூர், அவினாசி, சேவூர், திருமுருகன் பூண்டி ஆகிய ஊர்களிலிருந்து எடுக்கப் பெற்ற கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

91. புவனேசுவரி. க.அ., முன்.கு.நூ. ப. 79.

92. Poongundran, R., op. cit.

93. S.I.T.I. Vol III, Part II, Glossary.

94. பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

95. இராசேந்திரன்.அ (ப.ஆ), தொல்லியல் கருத்தரங்கு, பக். 74 - 75

96. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. ப. 82

97. கணேசன், மா., கொங்கு வேந்தர் தந்த வரிசை கொங்கு நாட்டுக் கருத்தரங்கு, வாசவி கல்லூரி (ஈரோடு) ஜூலை, 1980.

98. Apadurai, A, Economic conditions of Southern India, Vol I, pp 357 - 58.

99. கணேசன், மா., முன்.கு. கட்டுரை.

100. S.I.I. Vol. V, No. 228.

101. கல்வெட்டு, காலாண்டிதழ், எண் 16. ப:6

பழங்குடி இணைப்பு

கொங்குநாடு பழங்குடிகள் நிறைந்த நாடு. இன்றும் கொங்கு மக்கள் தொகையில் ஆயிரத்திற்கு நூறுபேராவது கொங்கு பழங்குடிகள் வாழ்கின்றனர். காடர்,முதுவர், மலைசர், ஊராளி, சோலை நாயகர், தோதர், குறும்பர், இருளர், புலையர், போன்றவர் மலைகளில் வாழ்கின்றனர். கேரள எல்லையில் கேரளப் பழங்குடிகள் வாழ்கின்றனர். கொங்குச் சமவெளிப் பகுதியில் பழங்குடிகள் வாழ்ந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் குறும்பர், வேட்டுவர், படைத்தலை, பூலுவர், காவலர், ஆவியர், குறும்பில்லார் ஆகியோர். சோழன் பூர்வபட்டயம் மாவலவர் என்ற பழங்குடியைப் பற்றிக் கூறுகின்றது. சங்ககாலம் முதல் பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைந்து வந்தனர். அல்லது இணைக்கப்பெற்று வந்தனர். அண்டர், ஆவியர், குறும்பர் ஆகியோர் இணைக்கப் பெற்றதற்கான தெளிவான சான்று ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் அண்டநாடு, ஆவியர் நாடு, குறும்பு நாடு, ஆகிய பெயர்கள் இப்பழங்குடிகள் அரசியல் சமூகவியல் நீரோட்டத்தில் கலந்து விட்டதையே உறுதிப்படுத்துகின்றது.[1] இவர்கள் சோழர் காலத்திற்கு முன்பே இணைக்கப்பெற்றிருக்க வேண்டும். சோழர் காலத்தில் மேலும் பல பழங்குடிகள் இணைக்கப் பெற்றனர்.

இந்தியா முழுவதும் பழங்குடி இணைப்பு ஒரு சமூக இயக்கமாகவே நடைபெற்று வந்துள்ளது. இந்தப் பழங்குடி இணைப்பிற்குப் பிராமணர்கள் பேருதவி புரிந்துள்ளனர். அவர்கள் பழங்குடிப் பகுதிக்குச் சென்று பழங்குடிகளிடையில் பேரரசின் கொள்கைகளைப் பரப்பி அவ்வரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தனர். பழங்குடி சாதியானது; அரசு நிருவாக ஆணைக்குக் கீழ்ப் படிந்து நின்றது. வள்ளுவர் பழங்குடிகளைக் 'கொல்குறும்புகள்' என்று குறிப்பிட்டார். தென் கிழக்கு ஆசியா பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளை அரசும் அதனைச் சேர்ந்த சமூகமும் கொன்று குவித்த கொடுமையை நாம் அறிவோம். அது பற்றி பர்ட்டன்ஸ்டீன் கூறுவது எடுத்துக்காட்டத் தக்கது.

"தென்னிந்திய சமுதாய வரலாற்றில் ஒரு மாறுபட்ட போக்குகாணப்படுகின்றது. அதுவே வேளாளர்களுக்கும் குறிஞ்சி, பாலை மக்களுக்குமிடையில் நிலைபெற்றிருந்த கலவர நிலைக்கு மாறான

தன்மை. தென்னிந்திய வேளாளர்கள் குறிஞ்சி, பாலைப் பழங்குடிகளிடமிருந்து பண்பாட்டுக் கூறுகளை நிறையவே பெற்றனர். தென் கிழக்காசியாவிலிருந்த நிலைமைக்கு இதுமாறானது. தென்கிழக்காசியாவில் அரசும், வேளாளர்களும் பழங்குடிகளைக் கொன்றுகுவித்தனர்.[2] ஆனால் தென்னிந்தியாவில் நிலைமை வேறுவிதமாக இருந்தது. அநாகரிகக் குடிகளையும் நாகரிகக் குடிகளாக மாற்ற முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டனர். சைவ சமய வரலாற்றில் பழங்குடிகளும் கூறப்பெறுகின்றனர். பல்வேறு வகைப்பட்ட மக்கள் சிவநேயச் செல்வர்களாக ஆக்கப்பெற்றனர். ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்களையும், கொல், வெட்டு, குத்து என்று கொலைத் தொழில் புரிந்தோர்களையும் தாம் வணங்கும் தெய்வங்களாகக் கண்ட பெருமை சைவத்திற்குண்டு. பழங்குடி இணைப்பில் சைவம் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

பழங்குடி இணைப்பு

கொங்குப் பழங்குடிகளின் வாழ்க்கை உலகம் முழுவதும் காணப்பெறும் பழங்குடி வாழ்க்கையினை முழுமையும் ஒத்திருந்தது. வேட்டுவ வாழ்க்கை, கால்நடை வளர்ப்பு (முல்லை), குமரி வேளாண்மை (Shifting Cultivation) போன்ற பழங்குடிப் பொருளியல் வாழ்க்கையே மேலோங்கி நின்றது. ஒவ்வொரு பழங்குடியும் தங்களுக்கென நிலப்பகுதியை வரையறுத்துக் கொண்டு வாழ்ந்தது என்று கருத வேண்டியுள்ளது.[3] குறும்பர் மையக்கொங்கிலும், ஆவியர், அண்டர் தென்கிழக்குக் கொங்கிலும், பூலுவர் வடமேற்குக் கொங்கிலும், வேட்டுவர், கொங்கர் கிழக்கு (கரூர்ப் பகுதி) கொங்கிலும் வாழ்ந்தனர். இப்பழங்குடிகளில் ஆவியர், கொங்கர் போன்ற பழங்குடிகள் குடித்தலைவர்களைப் (Lineage Chief) பெற்றிருந்தன. ஆவியர் பெருமகன், வஞ்சிவேள் (கொங்கர் பெருமகன்?) ஆகியோர் சங்க இலக்கியத்திலும் இடைக்காலக் கல்வெட்டுக்களிலும் கூறப்பெறுகின்றனர்.[4] மழகொங்கம் மழவர்களுடைய நிலப்பகுதி. ஆனால் மழவர்கள் தனிக்குடியல்ல. எல்லாப் பழங்குடிகளிலுமிருந்த 'இளம்' வீரர்கள்.[5] ஆகையால் அவர்களைக் குடிகள் என்று கொள்ள முடியாது. காழூர்த்தலைவன் கழுவுள், ஆனூர் தலைவன் கொடுமுடி போன்றவர்கள் சில பழங்குடிகளின் தலைவர்கள் என்று கொள்ளலாம்.[6]

ஆனால் அந்தப் பழங்குடிகள் எவை என்பன இலக்கியங்களாலும், கல்வெட்டுக்களாலும் கூறப்பெறவில்லை. கழுவுள் காமூரில் வாழ்பவர்கள் 'ஆன்பயன் வாழ்நர்'என்று கூறுவதால் கழுவுள் குடியினரும் கொங்கரின் இணைக்குடியினர் என்று கருதலாம்.[7]

ஆகெழுகொங்கர்

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த பழங்குடியினர் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டனர். காமூர்க் கழுவுளை பதினான்கு வேளிர் போரிட்டு ஒடுக்கினர்.[8] இதுவும் ஆகோள் பூசல். சேரமன்னர் கூட 'ஆகெழு கொங்கர் நாடு அகப்படுத்தினான்' என்று பதிற்றுப்பத்து (22:15) கூறும். சங்க காலக் கொங்கில் கால்நடை மேய்ப்பவர்களும் அவர்களுடைய தலைவர்களும் பெருமை பெற்றனர். கரூர்ப் பகுதியில் அண்மையில் கண்டெடுக்கப் பெற்ற சங்ககாலக் காசுகளில் மாடும் பொறிக்கப் பெற்றுள்ளது.[9] கி.பி. எட்டாம் நூற்றாண்டு நடுகல் 'கருவூர் வேள்' நிரைகோடலில் மாண்டான் என்று கூறுகிறது.

முன் இடைக்காலம் வரை கரூரில் கால்நடை மேய்ப்பர்களும், தொறுப்பூசல் வேளிர்களும் நிறைந்திருந்தமையை கரூர் நடுகற்களால் அறியலாம். ஆகையால் கொங்குநாடு முழுவதும் கால்நடை வளர்ப்பு சிறந்த தொழிலாக இருந்தது என்று உறுதியாகக் கூறலாம். கால்நடை வளர்ப்பிற்கே உரிய பண்பாட்டுக் கூறுகள் மிகுந்து காணப்பெறுகின்றன. மேலும் கால்நடை தொடர்பான அகழ்வுச் சான்றுகள் மிகுதியும் கிடைக்கின்றன. கரூர்ப்பகுதியிலும், ஈரோட்டுப் பகுதியிலும் திருவாய்ப்பாடிநாடு என்றொரு நாடு (சமுதாய சங்கம்) கூறப்படுகின்றது.[10] இது கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த இடையர்களையும், முல்லை நில ஆயர்களையும் உள்ளடக்கிய சங்கமாக விளங்கியது. அவினாசியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் கால் நடை தானம் அளிக்கப் பெற்ற செய்தி கூறப்பெறுகின்றது.[11] கி.பி.9 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த செங்கம் நடுகற்களில் 'கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடை சிற்றன்' என்பவன் பற்றிக் கூறப்படுகின்றது.[12] அவனும் மாடுபிடிச் சண்டையில் இறந்துள்ளான். ஆகையால் கி.பி.9–10 ஆம் நூற்றாண்டிலும் கால்நடைச் செல்வம் பெருஞ்செல்வமாக விளங்கியது எனலாம்.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்களும் ஓரிடத்தில் தங்காமல் மேய்ச்சல் இடம் வேண்டிப் பல இடங்களுக்கு அலைந்து திரிந்தனர். காடுகளிலும் புல்வெளிகளிலும் அவர்களால் தற்காலிகக் குடியிருப்புக்கள் உருவாக்கப் பெற்றிருந்தன. அவர்கள் செய்து வந்த வேளாண்மை ஓரிடத்தில் செய்யப்பெற்ற வேளாண்மை அல்ல. பல்வேறிடங்களிலும் சென்று சில திங்கள் தங்கிச் செய்யும் வேளாண்மையாக இது இருந்தது. பெரும்பாலும் வான் பயிராக இருந்தது. விளைச்சலும் உறுதியற்ற நிலையிலேயே இருந்தது. 'நறுங்காழ் கொன்று கோடுவித்தி'.[13] என்று மதுரைக் காஞ்சி கூறுவது போலக் காட்டினைத் தீயிட்டு அழித்து வேளாண்மை செய்தனர். இந்த வேளாண்மையில் தீயிடப்படும் மரஞ்செடி கொடிகளே சாம்பலாகி எருவாகின்றன. கால்நடை வளர்ப்பினால் கிடைக்கும் சாணம் எருவாகப் பயன்படுத்தப்பெற்றது. இந்த நிலையற்ற வேளாண்மையை மாற்றி ஓரிடத்தில் தங்கி வேலை செய்யும் நிலையான வேளாண்மைக்குப் பழங்குடிகளைக் கொண்டு வந்தனர் கொங்குச் சோழர்கள்.

பூலுவர்

பூலுவர் என்ற பழங்குடியினர் பெயர் 'புல்' என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவாயிற்று. 'புல்' ஆடுமாடு மேய்வதற்குரியது. புல்லினத்தாயர் என்பது போல புல்லுவர் என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும். புல்லுவர் என்பதிலுள்ள 'லகர' மெய் கெட்டமையால் புல்லுவர் பூலுவர் என்றாகிறது.[14] வெள்ளாளர், வேளாளர் என்றாகியது போல இச்சொல் இரண்டாவதாக வரும் லகரமெய் கெட்டதால் புல்லுவர் பூலுவராகியது. பூலுவர்கள் கால்நடை மேய்ப்பர்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன.

கருநாடக மாநிலத்தில் ஆட்சி செய்த போசள மன்னனின் கல்வெட்டு ஒன்று பூலுவர் (பொலவர்)களைப் பற்றி கூறுகின்றது.[15] போசளமன்னன் தன்னுடைய படையெடுப்பின் போது வென்றடக்கிய மக்களையும், மன்னர்களையும் வரிசைப்படுத்திக் கூறியுள்ளான். அவன் வென்றடக்கிய மக்கள் குழுக்களில் பூலுவர் குழுவும் அடங்கும். பூலுவர்கள் கொங்கு நாட்டின் வடபகுதியில் வாழ்ந்தனர். போசள மன்னன் நீலகிரியையும், வடகொங்குப் பகுதியையும் வென்றான் என்பது அவன்

சாசனத்தில் கூறப் பெறுகின்றது. வடகொங்குப் பகுதியில் பழங்குடிகள் ஆட்சிதான் நடந்தது என்று கருத வேண்டியுள்ளது. அவன் கொங்கர், பூலுவர், மலையாளர் ஆகியோரை வென்றதாகக் கூறிக்கொள்கிறான்.

வரலாறு வாய்பேசாமலிருக்கும் போது இடப்பெயர்கள் வரலாற்றை இயம்புகின்றன என்பது உண்மையே. பூலுவர்கள் கால்நடை மேய்ப்பர்கள் என்பதை அறிந்து கொள்ள அவர்கள் வாழ்ந்த வாழ்விடங்களின் பெயர்களே துணை நிற்கின்றன. அவர்களது ஊர்கள் 'பள்ளி' என்ற விகுதியோடு முடிகின்றன. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டோர் வாழ்ந்த ஊர்கள் விண்ணம் பள்ளி, வைரம் பள்ளி, நரியம் பள்ளி, வடக்கிற் பள்ளி, தெற்கிற்பள்ளி, கைஞ்சப் பள்ளி, மேலைப் பள்ளி போன்ற ஊர்கள் பள்ளி என்ற விகுதியுடன் வருகின்றன.[16] பள்ளி என்பது கால்நடை மேய்ப்பவர்கள் வாழ்ந்த ஊர் என்று நச்சினார்க்கினியர் கூறுவார். அண்மையில் இலலிதாபிரபு என்பார் 'பள்ளி' பற்றி ஆய்வு செய்து அது திராவிடச் சொல் என்றும் தொடக்கத்தில் பழங்குடிகள் வாழ்ந்த ஊர் என்றும் பொருள் கூறியுள்ளார்.[17] ஆபிரர்கள் குடியிருப்பு பள்ளி என்று அழைக்கப் பெற்றது என்பது மகாபாஷியத்தால் உறுதிப்படுகின்றது.[18] மேற்கூறிய சான்றுகளால் பள்ளி என்பது கால்நடை மேய்ப்பவர்களின் வாழ்விடம் என்று கொள்ளலாம். செங்கம் நடுகற்களிலும் பள்ளி என்ற ஊர்ப் பெயர்கள் மிகுதியும் உண்டு. நடுகற்கள் மாடுபிடி சண்டையில் மாண்டவர்களுக்கு எடுக்கப்பெற்றது.

மாடுபிடி சண்டை

சங்க காலத்திற்கு முன்பே கூட மாடுபிடி சண்டை நடைபெற்றிருக்க வேண்டும். கொங்கில் கிடைக்கும் தொல் பழங்கால ஓவியங்கள் சிலவற்றில் சண்டைக் காட்சியும் அதன் அருகில் மாடு நிற்பதையும் ஓவியமாக வரைந்துள்ளனர்.[19] ஆகையால் கால்நடை வளர்ப்பும் மாடுபிடிச்சண்டையும் தொல்பழங்காலம் முதல் கி.பி.19ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்றது எனலாம். ஆனால் கொங்குச் சோழர் காலத்திலிருந்து படிப்படியாகக் குறைந்தது.

கால்நடை வளர்ப்பே முதன்மைத் தொழிலாக இருந்தமையால் மாடுபிடி சண்டை அன்றாட வாழ்க்கையாக இருந்தது. மாடுபிடி சண்டையில் இறந்தவர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.

கொங்குச் சோழர் காலத்து நடுகற்கள் பல கண்டுபிடிக்கப்பெற்றன. ஆனால் சிலவற்றில் மட்டுமே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. பழமங்கலம், துக்காச்சி, கன்னிவாடி, செலக்கறிச்சல் போன்ற ஊர்களில் கிடைக்கின்ற நடுகற்களில் மட்டும் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.[20] பல நடுகற்கள் எழுத்துக்களின்றி காட்சியளிக்கின்றன. கணியூர், களந்தை, ஆனைமலை, பிரமியம், நரசிபுரம், அந்தியூர், சேவூர், பெரியபாளையம், கொழுமம் போன்ற ஊர்களில் கிடைக்கின்ற நடுகற்களில் எழுத்துக்கள் இல்லை. கால்நடை வளர்ப்பு சமூகம், எழுத்தறிவு தேவையற்ற சமூகம். தங்களுடைய வரவு செலவுகளை எழுதிவைக்கும் தேவையற்றவர்கள். அவர்களைக் கல்லா (preliterate) மாக்கள் என்று கூறலாம்.[21] வேதகால ஆரியர்கள், ஆப்பிரிக்க மசாய், நீலகிரி தோதர்கள் போன்ற கால்நடை மேய்ப்பர்களிடையில் எழுத்தின் பயன் இல்லையென்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.[22] முதலில் எழுத்தின்றி நடுகற்களை வைத்துப் பழகினர். பின்னர் ஓவியம் வரைந்து வழிபாடு செய்தனர்.[23] கால அடைவில் எழுத்து நடுகல்லில் அறிமுகப்படுத்தப்பெற்றது. எழுத்துக்கள் தமிழ்ச்சமூகத்தில் தோன்றிய பின்பும் கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் அறிமுகம் ஆகவில்லை போலும். அதன் விளைவாகக் கொங்கு நாட்டு நடுகற்களில் எழுத்து பொறிக்கப் பெறவில்லை. கொங்கு நாட்டின் எல்லைப் புறத்தில் எழுத்து பொறித்த நடுகற்கள் கிடைக்கின்றன. அதற்குக் காரணம் சோழ, பாண்டிய பேரரசின் முன் முயற்சியே ஆகும்.

வேட்டுவர்கள்

வேட்டுவர்கள் பதிற்றுப்பத்தில் கூறப் பெறுகின்றனர். அவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். தேன் எடுத்தல், தினை விளைத்தல் போன்ற தொழில்களைச் செய்து வாழ்ந்தனர்.[24] வறட்சிக் காலங்களில் ஆறலைத்தல் போன்ற தொழிலைச் செய்தனர்.[25] ஓரிடத்தில் தங்காமல் ஓடித்திரிந்தனர். வேட்டுவர்களுக்கென்று வாழ்விடம் தொடக்கத்தில் இல்லை. மலை முழுஞ்சுகளிலும், மரங்களிலும் கட்டிய சிறுவீடுகளிலும் வாழ்ந்தனர். காலப்போக்கில் குறிச்சி என்று பெயர் கொண்ட இருப்பிடத்தில் வாழத்தலைப்பட்டனர். பெருங்கதையில் வேட்டுவர்களைப் பற்றிக் கூறும் போது 'ஆடூஉம் மகடூஉம் மாடுமறியார்'

என்று கூறுவார்.[26] பொற்காசுகளின் உண்மை மதிப்பினை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பெருங்கதை ஆசிரியர் காலம்வரை பெரும்பாலான வேட்டுவர் வாழ்க்கையில் மாற்றம் ஏதுமில்லை என்று தெரிகின்றது. பின்னாளில் எழுதப்பெற்ற சுந்தரர் தேவாரத்தில் 'கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்' சுந்தரரிடம் பொருள்களைக் கொள்ளையடித்ததாகக் கூறப்படுகின்றது. சுந்தரர் காலத்திற்குப் பின் கொங்கு வேட்டுவர் வாழ்க்கையில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்தன.

கங்கமன்னன் சிவமாறனின் கல்லகெரே செப்பேடு வேட்டுவ அரசர்களின் அரண்களை எறிந்து வேட்டுவ அரசிகளைச் சிறைப்பிடித்தான் என்று கூறுகின்றது.[27] செப்பேடு வடமொழியில் அமைந்திருந்தமையால் வேட்டுவர்களை அச்செப்பேடு 'கிராதர்' என்று கூறுகின்றது. கிராதர் என்பதற்கு வேட்டுவர் என்று பொருள் கூறப்பெறுகின்றது. கல்லகெரெ செப்பேட்டில் கூறப்பெறும் கிராதர்கள் (வேட்டுவர்கள்) கொங்கு நாட்டின் வடபகுதியிலும், கருநாடகத்தின் தென்பகுதியிலும் வாழ்பவர்கள் என்று டி.என்.சுப்ரமணியம் கருதுகிறார்.[29] பிற்காலச் சோழர்களில் முதலாம் ஆதித்தன் கொங்கின் 'வேட இராஜாக்களை' வென்றான் என்று கொங்கு தேச இராஜாக்கள் என்ற மரபுவழி நூல் கூறும்.[30] சிவமாறன் போரும், ஆதித்தன் போரும் கி.பி.9–10ஆம் நூற்றாண்டில் வேட்டுவ இராஜாக்கள் (Chief) உருவாகிவிட்டார்கள் என்பதை வலியுறுத்துகின்றது.

வேட்டுவ குடித்தலைவர்கள்

ஆதித்தன் காலத்து வேட்டுவ இராஜாக்கள் பலர் என்று கொங்கு தேச இராஜாக்கள் என்ற நூல் கூறுகின்றது. ஆகையால் கொங்கு நாடு முழுவதும் ஒரு குடையின் கீழ் ஆளப்பெறவில்லை என்பது புலப்படுகின்றது. ஒவ்வொரு குடியும் தனக்கென ஒரு தலைவனைப் பெற்றிருந்தது. அந்தத் தலைவன் வட மொழியில் 'இராஜா' என்றும், தமிழ் மொழியில் 'வேள்' அல்லது 'வேளான்' என்றும் கூறப் பெறுகின்றான். இராஜா என்பதும் வேள் என்பதும் ஒரு பொருள் நுதலிய சொற்கள் என்று ரோமிலாதாப்பர் கூறுவார்.[31] அது உண்மையாயின் கொங்கு தேச ராஜாக்கள் கூறும் வேட்டுவ இராஜாக்கள் குடித்தலைவர்களே தவிர ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆட்சி செய்த

அரசியல் தலைவர்கள் என்று கருத முடியாது. சிறுசிறு குடிகளாக வேட்டுவர்கள் வடகொங்கில் வாழ்ந்திருக்க வேண்டும். பின்னாளில் கிடைக்கும் கல்வெட்டுக்களிலும் வேட்டுவர் குடிப்பெயர்கள் கூறப்பெறுகின்றன. கரையகுலம்,[32] கிழங்கவேட்டுவர்,[33] வெங்கச்சி, வேட்டுவன்[34] போன்றவை சான்றுகள். இப்பெயர்களில் கரையகுலம் குறிப்பிடத்தக்கது. குடியைக் குலம் என்ற வடமொழிச் சொல்லால் குறிப்பதைப் பார்க்கின்றோம். வேட்டுவர்களிடையில் வடமொழித்தாக்கம் ஏற்பட்டுவிட்டதையே இது காட்டுகின்றது. வடமொழித் தாக்கம் ஏற்பட்டுவிட்டதானது பிராமணியப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டதையே வலியுறுத்துகின்றது. பெரும்பாலான வேட்டுவர்கள் பிராமணியப் பண்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லையானாலும் குடியில் உயர்ந்து நின்றவர்கள் ஏற்றுக் கொண்டனர் என்று கொள்ளலாம். பிற வேட்டுவர் தொல்குடி வாழ்க்கையையே பின்பற்றினர் என்பதை அண்ணன்மார் சுவாமி கதையாலும் பிற மரபு வழிப் பட்டயங்களாலும் அறியலாம்.[35]

பழங்குடி இணைப்புப் பற்றிக் கல்வெட்டுச் செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் மரபுவழிக் கதைகளிலும், பிற்காலப் பட்டயங்களிலும் பழங்குடி இணைப்புப் பற்றிப் பேசப் பெறுகின்றது. சோழர்கள் ஆட்சி ஏற்பட்ட பின் கொங்குப் பழங்குடிகளை வேளாண் குடிகளாகவும், நாகரிகக் குடிகளாகவும் மாற்றும் பணி மேற்கொள்ளப் பெற்றது. அதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் வரி நீக்கமும் வரிச் சலுகையும் அளிக்கப் பெற்றது. மலைவாழ் மக்கள் காடு திருத்தி வேளாண்மை செய்தால் வரியில்லையென்றும், சமவெளிப் பகுதியில் வேளாண்மை செய்தால் பத்தில் ஒரு பகுதி வரி அளிக்கலாம் என்றும் கூறப் பெறுகின்றது.[36] சோழர்கள் தமிழகம் முழுவதும் இந்த முயற்சியை மிகவும் விரிவாக மேற்கொண்டனர். மேற்குத் தொடர்ச்சிமலை, கிழக்குத் தொடர்ச்சி மலை ஆகிய மலைகளில் வாழும் பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் கலந்தனர்.

பொருளியல் வகையில் பழங்குடிகள் செல்வாக்குப் பெற்றபின் கோயில் கொடை அளிப்பதில் பெருமை பெற்றனர். கோயில் கட்டுவதில் பங்கு பெறுவது பழங்குடிகளைச் சமூக அளவில் உயர்த்தியது. கோயில் தூண் அமைப்பது, வாயிற்கால் அமைப்பது, மண்டபம் எடுப்பது, நந்தா விளக்கு வைப்பது போன்ற கோயில் பணிகளைச் செய்து புகழ்பெற

விரும்பினர்.[37] சைவசமயத்தில் பல்வேறு பழங்குடிகளும், சாதியார்களும் இணைக்கப் பெற்று சைவ அடியாராயினர். அவர்களுள் சேக்கிழாரால் பெருமைப்படுத்தப்பெற்றவர் கண்ணப்பநாயனார்.[38]
கண்ணப்பநாயனாரைத் தங்கள் குலநாயகனாகக் கருதி அவருடைய திருமேனிகளைக் கோயிலில் செய்து வைத்து வழிபட்டு வருகின்றனர். கொடுமுடியில் கி.பி. 11ஆம் நூற்றாண்டுக் கண்ணப்பர் செப்புத் திருமேனி ஒன்றுள்ளது.[39] பெருந்தலையூர், திங்களூர், அவினாசி, அந்தியூர், ஈரோடு, கருவூர், திருமுருகன் பூண்டி, அன்னூர் போன்ற ஊர்களில் கண்ணப்பநாயனார் கற்சிற்பங்கள் உள்ளன.[40] இதுமட்டுமல்லாமல் 'கிராதார் ஜீனியம்' காட்சி அவினாசி, விஜய மங்கலம், திருமுருகன் பூண்டி, சேவூர் போன்ற ஊர்களில் வடிக்கப் பெற்றுள்ளது.[41]

மருதவேளாண்மையில்பழங்குடிகள்

பழங்குடி இணைப்பிற்கு முன் தேவை மருத வேளாண்மை. மருத வேளாண்மை (Irrigated Agriculture) செய்வதற்கு நீர்ப்பாசன வசதிகள் தேவைப்படும். நீர்ப்பாசன வசதிகளைப் பழங்குடிப் பகுதிகளில் உருவாக்கினர். ஆறுகளிலிருந்து கால்வாய்களையும், குளங்களையும் வெட்டினர். நீர்ப்பாசனம் பற்றிய கல்வெட்டுக்கள் பழங்குடிகள் வாழ்ந்த பல ஊர்களில் காணப்படுகின்றன. திங்களூர், பாரியூர், அன்னூர், சேவூர், கோயில்பாளையம், இடிகரை, பேரூர், முடுதுறை, கருவூர், வெஞ்ச மாங்கூடல், கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், ஆனைமலை, ஈரோடு, அந்தியூர், கருவலூர் போன்ற ஊர்களில் கால்வாய் வெட்டியமை பற்றியும், குளம் வெட்டியமை பற்றியும் பேசுகின்றன.[42] இவற்றில் சிலவற்றைப் பழங்குடியைச் சேர்ந்தவர்களே வெட்டியுள்ளனர். அரசர்களும், சாமந்தர்களும், பிராமணர்களும், கோயில்களும், நீர்ப்பாசன வசதிகளைச் செய்தனர்.[43] நொய்யலாற்றில் முட்டம் கோடி முப்பத்திரண்டு அணைகள் கட்டப் பெற்றதாகக் கூறப்பெறுகின்றது.[44] அமராவதி ஆற்றிலும் இத்தகைய அணைகள் கட்டப்பெற்றன. பவானியில் காலிங்கராயன் என்ற உத்தர மந்திரி அணையைக் கட்டிப் பெரிய கால்வாயை வெட்டியுள்ளான்.[45] பழங்குடிப்பகுதியில் நீர்ப்பாசன வசதிகள் செய்தமையால் அலைந்து திரியும் வாழ்க்கையை விட்டு ஒரிடத்தில் தங்கி வாழும் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு வேளாண்மையில் ஈடுபட்டனர். இது பழங்குடியினர் சமூக நீரோட்டத்தில் கலந்து நிற்பதற்கு வழி செய்தது. மேலும் சமூகத்தில் செல்வாக்குப் பெறுவதற்கும் காரணமாயிற்று.

காடு கொன்று நாடாக்கியது

பழங்குடி இணைப்பு 'காடு கொன்று நாடாக்கும் பணியை' ஊக்கப்படுத்தியது. காடழிக்கும் பணி பற்றி சோழன் பூர்வ பட்டயம் விரிவாகப் பேசுகின்றது.[46] கல்வெட்டுக்களும் காடழித்து வேளாண் நிலம் ஏற்படுத்தியமை பற்றிக் கூறுகின்றன. குன்றத்தூர், கொழுமம், குமரலிங்கம், விசயமங்கலம், அன்னூர் போன்ற ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் காடழித்து வேளாண் நிலமாக மாற்றியமை பற்றிய கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. [47] மேலும் கொங்குச் சோழர் காலத்து ஊர்ப் பெயர்களில் சில 'எறிச்சில்' என்ற அடைமொழியுடன் கூறப் பெறுகின்றது. [48] அது 'காடு கெடுத்து நாடாக்கும் பணியை' நினைவு படுத்துகின்றது. எறிச்சில் அல்லது எறி என்பது தீயிட்டு அழித்துச் செய்யும் வேளாண்மையை நினைவுபடுத்துகின்றது. [49]

மன்னறை என்ற சொல் கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றது. இச்சொல் சோழநாட்டு 'வயக்கல்' வசக்கல் என்ற சொற்களோடு ஒப்பிடத் தக்கதாய் உள்ளது.[50] கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் பத்திற்கும் அதிகமாக மன்னறை கூறப்பெறுகின்றது. இராஜராஜ மன்னறை, முக்கோக்கிழானடி மன்னறை, வீர சோழ மன்னறை, வீரராசேந்திர மன்னறை போன்ற மன்னறைகளைச் சான்றுக்குக் காட்டலாம்.[51] இந்த நிலங்கள் பெரும்பாலும் காடழித்து வேளாண்மை செய்யும் நிலங்களாகஉருவாகியிருக்க வேண்டும். இந்த ஆக்கமும் பழங்குடிகள் வேளாண் குடிகளாக மாறுவதற்கு ஏற்பட்டதாகும்.

புத்தூர்

கொங்குச்சோழர் காலத்தில் புத்தூர்கள் பல உருவாக்கப் பெற்றன. கண்ணாடிப் புத்தூர், கோவன் புத்தூர், கவையன் புத்தூர் போன்ற ஊர்கள் கல்வெட்டில் கூறப்பெறுகின்றது. புத்தூர் என்ற பெயர் புதிதாக உருவாக்கப் பெற்ற ஊர் என்று பொருள் கூறப்பெறுகின்றது.[52] அது சரியான பொருள். இந்தப் புத்தூர்களும் பழங்குடிகள் வாழ்ந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கோவன் புத்தூர், கவையன் புத்தூர் போன்றவை பூலுவர் பகுதியில் உருவானவை.[53] கண்ணாடிப் புத்தூர், கண்ணாடி வேட்டுவர் பெயரில் உருவான ஊர். வெங்கம்பூர் வெங்கச்சி வேட்டுவர் பெயரில் ஏற்பட்டது. ஊர்ப்பெயரும்,

நாட்டுப் பெயரும் பழங்குடிப் பெயரால் ஏற்பட்டது மட்டுமின்றி பழங்குடித் தொல் வாழ்விடங்களில் தான் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சான்றுகளைக் கொண்டு பழங்குடி இணைப்பு கொங்குச் சோழர் காலத்தில் முழு மூச்சுடன் செயல்படுத்தப் பெற்றது என்று உறுதியாகக் கூறலாம். இந்தப் பழங்குடி இணைப்பும் முழுமையாக நடந்துவிட்டது என்று கூற முடியாது. சமூகத்தில் (ஒவ்வொரு குடியிலும்) உயர்ந்து நின்ற வேளிர்களும் அவர்களுடைய சுற்றத்தினரும் நாகரிகக் குடிகளுடன் இணைக்கப்பெற்றனர். காட்டிலும், மலைமுழஞ்சுகளிலும் வாழ்ந்தவர்கள் பழங்குடி வாழ்க்கையைக் கைவிடவில்லை. பண்டைய வேட்டுவ வாழ்க்கையைத் தொடர்ந்து மேற்கொண்டனர். அந்தப் பண்பாட்டினை மரபுவழிக் கதைகளில் காணலாம்.[54]

பழங்குடி வாழ்க்கையைப் பற்றிப் பிற்காலப் பட்டயங்கள், மரபுவழிக் கதைகள் மிகுதியாகப் பேசுகின்றன. அவற்றில் அண்ணன்மார் சுவாமி கதை சிறந்த சான்று. அந்நூலில் கிடைக்கும் வேட்டுவர்கள் பற்றிய செய்திகள் குறிப்பிடத்தக்கவை. கிடைக்கின்ற பொருள்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வர். 'வெட்டவெட்டத்தழைக்கும் வேட்டுவர் படை' என்று அண்ணன்மார் கூறுவர்.[55] முதலில் கூறப்பெறும் செய்தி பழங்குடி வாழ்க்கையில் நிலைபெற்றிருந்த கூட்டுடைமையைக் காட்டுகின்றது. மேலும் இயற்கையில் கிடைக்கின்ற பொருள்கள் அனைத்தும் மனிதனுக்குச் சொந்தம் என்ற கருத்தும் பொதிந்து கிடக்கின்றது. அதனால்தான் வேட்டுவர்கள் காக்கைபோல் கரைந்துண்ணுபவர்கள் என்று கூறப் பெறுகின்றது.

வெட்டவெட்டத் தழைக்கும் வேட்டுவர் படை என்று கூறுவதும் பழங்குடித் தன்மையை வலியுறுத்துகின்றது. பழங்குடி வாழ்க்கையில் படையென்று ஒரு தனி அமைப்பு கிடையாது. பழங்குடியே படையாகச் செயல்படும்.[56] அதனால் ஒரு குழுவினர் வந்து போரில் மாண்டவுடன் அடுத்த குழுவினர் போருக்கு ஆயத்தமாவர். போர் செய்யும் வலிமையுள்ள அனைவரும் (இளையவர்) போருக்குச் செல்வர். அதனால்தான் அவர்களை அழிக்க முடியாது என்று கூறப்படுகின்றது. இந்த நிலை பழங்குடிகள் அனைவருக்கும் அமைந்திருந்தது. வட இந்தியாவில் வாழ்ந்த லிச்சவி, சாக்கியர், ஆபிரர் போன்ற பழங்குடிகளும் இது போன்ற வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர்.[57]

நவகண்டம்

கொங்கு நாட்டுச் சிவன் கோயில்களில் நவகண்டம் பற்றிய சிற்பங்கள் காணப்பெறுகின்றன. நவகண்டம் பற்றி மணிமேகலையில் காலத்தால் முற்பட்ட குறிப்புக்கள் கிடைக்கின்றன. சிலப்பதிகார வேட்டுவவரியில் நவகண்டம் பற்றிய குறிப்புக்கள் உண்டு. ஆகையால் நவகண்டம் வேட்டுவரிடையில் நிலை பெற்றிருந்த பழக்கமாகும் எனலாம். வேட்டுவர்கள் குலம் தழைக்கவும் பெருவழி வளம் பெறுகவும் தங்கள் தலையை அரிந்து கொற்றவைக்கு அளிப்பர். அவ்வாறு அளிப்பதற்குக் காரணம் தாம் நினைத்த காரியம் நிறைவேறியமையே யாகும்.[58] அந்தக் காரணம் மட்டுமின்றி வேறுகாரணமும் உண்டு. இரத்தம் சிந்தினால் அந்த இனம் பெருகும் என்ற நம்பிக்கையே அது.[59] கொங்கு நாட்டில் வாழ்ந்த வேட்டுவரிடையில் இந்த நம்பிக்கை நிலை பெற்றிருந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே தலைவெட்டிப் பலியிடும் சடங்கு நடைபெற்றது. இச்சடங்கு நடைபெற்ற இடத்திலேயே சிவன் கோயில் உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். சிவன் கோயில் உருவாக்கப் பெற்ற பின்பும் தலையளிக்கும் பழக்கம் தொடர்ந்து நிலைபெற்றது.[60] அதனாலேயே சிவன் கோயில்களில் நவகண்ட சிற்பங்கள் வைக்கப்பெற்றன. சைவம் பழங்குடிகளின் பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் தன்னுடன் இணைத்துக் கொண்டமைக்கு நவகண்டமே சிறந்த சான்று.

தாய்த் தெய்வம்

கொங்கு நாட்டில் அயிரை, கொங்கச் செல்வி, கன்னி போன்றவை வழிபடப்பெற்றன. கொங்கச் செல்வி கொங்கில் வழிபடப்பெற்ற வேட்டுவ தெய்வம். இத்தெய்வம் மீகொங்கிலும் கீழ்க்கொங்கிலும் சிறப்புற்றதற்கான சான்றுகள் மிகுதியும் கிடைக்கின்றன. கொற்றவைக்குப் பலியிட்டு வந்தனர். கொற்றவைச் சிற்பங்கள் நீலம்பூர், பெரியசேமூர், அகிலாண்டபுரம், திருமுருகன் பூண்டி, சேவூர், அன்னூர், அவினாசி, பெருந்தலையூர், பிரமியம் போன்ற ஊர்களில் உள்ளன.[61] இவை சோழர் காலத்தைச் சேர்ந்தவை. இச்சிற்பங்களுக்குப் பலியிட்டு வழிபாடு செய்யும் பழக்கம் கொங்கில் இருந்துள்ளது.

பதியெழல் அறியாப் பழங்குடிகள்

சமூக வாழ்வில் இணைக்கப்பெற்ற பழங்குடிகள் தங்களுக்குரிய பகுதிகளிலேயே குடியமர்த்தப்பெற்றனர். பூலுவர்கள் வடபரிசார நாட்டிலும், வாயறைக்கா நாட்டிலும், காவடிக்கா நாட்டிலும் நிலையான குடியிருப்பினை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தனர். வேட்டுவர்கள் வடகரைநாடு, வெங்காலநாடு, காஞ்சிக் கூவல்நாடு, பூவானிநாடு, அரையநாடு ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். மேலும் காவிரிக்கு இரு மருங்கிலும் வாழ்ந்தனர். கொங்குச் சோழர் காலத்திலும் தொடர்ந்து அந்தந்த நாடுகளிலேயே வாழ்ந்தனர். வேட்டுவர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் பவானிக் கரையிலும், காவிரிக் கரையிலும் மிகுதியும் கிடைக்கின்றன. குறும்பர்கள் குறும்புநாடு என்றழைக்கப் பெறும் மையக் கொங்குப் பகுதியில் வாழ்ந்திருக்க வேண்டும். கொங்குச் சோழர் காலத்திலும் குறும்பர்கள் சமூக நீரோட்டத்தில் கலக்காமல் தனித்திருந்து வாழும் பழங்குடிகளாகவே இருந்துவிட்டனர். ஆனால் போசளர் காலத்தில் வடகரை நாட்டில் காணியுடைய குறும்பர்களாகக் கல்வெட்டில் கூறப்பெறுகின்றனர்.[62] ஆகையால் கொங்குச் சோழர் காலத்திறுதியிலோ அல்லது பாண்டியர் காலத்திலோ குறும்பர்கள் சமூக நீரோட்டத்தில் கலந்திருக்க வேண்டும். விஜயமங்கலம் கல்வெட்டில் படைத்தலை வெள்ளாளர் என்றொரு வெள்ளாளர் கூறப் பெறுகின்றனர்.[63] இக்குடியினர் குறும்பர்களின் கிளையினரோ என்பது புலப்படவில்லை. குறும்பு நாட்டில் வெள்ளாளர், வாணிகர், பிறநாட்டு வாணிகர் கூறப் பெறுகின்றனரேயன்றி குறும்பர்கள் கூறப் பெறாதது வியப்புக்குரிய ஒன்று. பூந்துறை நாட்டில் குறும்பில்லார் என்ற பழங்குடி கூறப்பெறுகின்றது.[64] இக்குடியினர் குறும்பரின் கிளைக்குடியினராக இருந்திருக்க வேண்டும். காங்கய நாட்டில் 'காவலர்' என்ற பழங்குடி பற்றிக் கூறப்பெறுகின்றது. இக்குடியினர் பற்றி விளக்கம் ஏதும் தெரியவில்லை.

முடிவுரை

கொங்குச் சோழர் ஆட்சியில் கொங்கு நாட்டுப் பழங்குடிகள் பல இணைக்கப் பெற்றன. இந்தப் பழங்குடி இணைப்பிற்குச் சோழர்களின் முயற்சியும் ஒரு காரணம் ஆகும். சோழர்கள் தங்கள்

ஆதிக்கத்தில் கொண்டு வந்த பகுதிகளில் வாழ்ந்த பழங்குடிகளை வேளாண்மையில் ஈடுபடுத்தினர். அதனால் அந்தந்தப் பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளைச் சமூக நீரோட்டத்தில் கொண்டு வந்தனர். அவர்கள் வேளாண்மையில் ஈடுபடுத்தப்பட்டதால் நிலையான ஓரிடத்தில் தங்கினர். அவ்வாறு தங்கியதால் பழங்குடிகள் வேளாண்மையில் ஈடுபட்டனர். இந்த வேளாண்மை ஈடுபாடும், நிலையான வாழ்க்கையும் பழங்குடி வாழ்க்கையிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தன. குழுவாக நிலைபெற்றிருந்த பழங்குடிகளிடையில் 'குடித்தலைவர்கள்' (வேளான்) உருவாகி ஒவ்வொரு ஊரிலும் ஊர்த்தலைவர்களாக நியமிக்கப் பெற்றார்கள். கொங்கு நாட்டுப் பழங்குடிகள் கால்நடை வளர்ப்பிலும், வேட்டையாடுதலிலும் ஈடுபட்டு வந்தனர். சோழர்கள் கொங்கு நாட்டைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வருவதற்கு முன்பு அரசு அதிகாரம் பழங்குடிகளைப் பெரிதாக பாதித்து விடவில்லை. ஆனால் சோழர் காலத்தில் பழங்குடிமக்களிடையில் கொண்டு வந்த மாற்றங்கள் அவர்கள் வாழ்க்கையில் சமூக, சமய, பண்பாட்டு மாற்றங்கள் கொண்டு வருவதற்குக் காரணமாய் அமைந்தன. கால்நடை வளர்ப்பிலிருந்தும், வேட்டைத் தொழிலிலிருந்தும் விடுபட்டு வேளாண்மையில் பழங்குடிகள் ஈடுபட்டமையால் ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டனர்.

பழங்குடிகள் அந்தந்தப் பகுதியிலேயே வாழ அனுமதிக்கப் பெற்றனர். வேட்டுவர்கள் வாணியாற்றின் வடகரையிலும், காவிரியின் இருமருங்கிலும் வாழ்ந்தனர். பூலுவர்கள் தங்கள் பகுதியான (வடபரிசார நாடு, வாயறைக்காநாடு, காவடிக்காநாடு போன்ற நாடுகளை உள்ளடக்கிய) மீகொங்குப் பகுதியிலிருந்து குடிபெயரவில்லை. காவலர்கள் பூந்துறை நாட்டிலும், அரையர்கள் அரைய நாட்டிலும் வாழ்ந்தனர். தங்கள் தொல்பதிகளிலிருந்து குடிபெயரவில்லை. இது அர்த்தசாத்திரத்தின் கோட்பாட்டிற்கு மாறாக உள்ளது. அர்த்தசாத்திரக் கோட்பாட்டின்படி வென்றடக்கப் பெற்ற பழங்குடிகள் 100 கல் தொலைவுக் கப்பால் கொண்டு சென்று குடியமர்த்தப்படவேண்டும். ஆனால் சோழர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட கொங்குக் குடிகளை அந்தந்தப் பகுதியிலேயே வைத்துப் போற்றினார்கள். பிற பகுதிகளுக்குக் கொண்டு சென்று குடியேற்றவில்லை. மேலும் ஒவ்வொரு குடியையும் அக்குடியில் தலைவனைக் கொண்டோ, குடியின் நாட்டுச் சபையைக் கொண்டோ நிருவாகம் செய்தனர். பழங்குடிச் சட்டங்கள், நம்பிக்கைகள்

பெருந்தெய்வ சமயத்திற்குள் இணைக்கப்பெற்றன. அதற்குச் சான்றாக நவகண்டம் கொடுத்தல், தாய்வழிபாட்டினை இணைத்தல் போன்றவற்றைக் காட்டலாம்.

அடிக்குறிப்பு

1. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம், கோவை மா்வட்டம் கொழுமம் ஆகிய ஊர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.
2. Burton Stein, Peasant State and Society in Medival South India, p.76
3. புவியியல் அளவில் குறிப்பிட்ட பழங்குடி குறிப்பிட்ட பகுதியில் மட்டுமுள்ள கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றனர். ஆனால் வெள்ளாளர், வணிகர், பிராமணர் போன்றவர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குக் குடிபெயர்ந்தமை பற்றிக் கூறுகின்ற கல்வெட்டுக்கள் மிகுதி. இராஜராஜபுரத்து வெள்ளாளன், காங்கய நாட்டு வெள்ளாளன் முறையே வடபரிசார நாட்டிற்கும், குறும்பு நாட்டிற்கும் குடிபெயர்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஆனால் வேட்டுவர்கள் வடகரை நாட்டிலிருந்தோ, பூவாணி நாட்டிலிருந்தோ அல்லது அவர்களுடைய தொல்வாழ்விடப் பகுதிகளிலிருந்தோ குடிபெயர்ந்ததற்கான சான்று இல்லை. அதுபோல பூலுவர்கள் வடபரிசார நாட்டிலிருந்தோ வாயறைக்கா நாட்டிலிருந்தோ குடி பெயர்ந்ததற்கான சான்று இல்லை. இது பழங்குடிகளின் பதியெழல் அறியாத் தன்மையைக் காட்டுகின்றது.
4. சிறுபாணாற்றுப்படை, வரிகள் 86 – 87.
   நாகசாமி. ஆர், கரூர்–வஞ்சி, ப. இல்லை.
5. பூங்குன்றன், ஆர்., செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல் (எம்.பில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம்) 1989, ப. 114.
6. அகநானூறு, செய்யுள், 135.
7. பதிற்றுப் பத்து, எட்டாம் பத்து, செய்யுள் 71

8. அகநானூறு, செய்யுள், 135

9. அளக்குடி ஆறுமுகம் சீத்தாராமன், 11. உமாநகர். கோ.ஆப்.காலனி, தஞ்சை–7

10. நிருவாகம் பற்றிய இயலில் இது விரிவாகப் பேசப் பெறுகின்றது.

11. விசாலாட்சி, அவினாசிக் கோயில் கல்வெட்டுக்கள் (எம்.பில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம் 1984) பின்னிணைப்பு (கல்வெட்டுக்கள்) ப. 25

12. செங்கம் நடுகற்கள், எண். 1971, 57.

13. மதுரைக் காஞ்சி, வரி, 286

14. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, ப. 70

15. Epigraphia Carnataka Vol. IV. p. 508.

16. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 84, அடிக்குறிப்பு எண். 17. Lalitha. R. Prabhoo, Place Nasalising bridge attributes and the northern regional area limits of South India, in Perspectives in place name Studies p. 186.

18. Discussion with Ramesh. K.V. Director of Epigraphy, Mysore-5.

19. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை) உரையாடல்.

20. செங்கம் நடுகற்கள், இந்நூலில் நடுகல் என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில் பழமங்கலம் நடுகல் செய்தி உள்ளது. கன்னிவாடி நடுகல் (தினமணி, 10.1.91) செலக்கெறிச்சல் நடுகல், தொல்லியல் துறை கோவை.

21. Debiprasad Chattopadyaya, Lokayata; A study in Ancient Indian Materialism, p. 545.

22. பூங்குன்றன், ஆர்., முன்.கு.நூ. ப. 39

23. மேலது.

24. மேலது.

25. மேலது.

26. பெருங்கதை (உ.வே.சா. பதிப்பு) 1: 55: 60

27. பல்லவர் செப்பேடுகள் முப்பது ப. 393

28. மேலது ப. 389

29. மேலது ப. 385

30. கொங்கு தேச ராஜாக்கள், ப. 10

31. Romila Thapar, From Lineage to State, p.48, FN 135.

32. இராசு, செ., கலைமகள் கலைக்கூடம், பக். 144; 146

33. மேலது ப. 146

34. இராசு, செ., கொங்கு நாட்டுச் சமுதாயவாழ்வில் வேட்டுவர் நிலை, தமிழ்நாட்டு வலாற்றுக் கருத்தரங்கு ப. 36

35. Kandasamy, S.P., The History of the Kongu Vellalas (Ph.D thises Univercity of Madras 1995).

36. நாச்சிமுத்து, கி., சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டு ஊர்கள், ப. 41.

37. இராசு, செ., முன்.கு.நூ. (தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு) ப. 36.

38. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம்

39. R.Nagasamy, The Art of Tamilnadu plate

40. கருணானந்தம். இரா.ப., காப்பாட்சியர், கோவை–9 கூறிய செய்தி. நாள். 15.02.90

41. ஆய்வாளர் நேரில் சென்று கண்டறிந்த செய்தி.

42. இவ்வூர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

43. Vasanthakalyani, R., Irrigation Coimbatore District in South Indian Studies Vol. I, pp. 101-02.

44. சோழன் பூர்வ பட்டயம்,

45. Vasantha Kalyani, R., op.cit. pp. 101-02

46. நாச்சிமுத்து, கி., முன்.கு.நூ. ப. 36

47. இவ்வூர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

48. Karunanandam, R.P., A Possible interpretation Ericcil, in Plans Bulletin No.48. July 1990, p.4.

49. Tamil Lexicon, Vol. I, p. 547.

50. S.I.T.I Vol III, Part II, Glossory

51. Kandasamy, S.P., op. cit. p. 130.

52. நாச்சிமுத்து, கி., தமிழில் இடப்பெயராய்வு ப. 149

53. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 97

54. Kandasamy, S.P., op. cit. p. 69

55. அண்ணன்மார் சுவாமி கதை ப. 122

56. Kosambi, D.D., Ancient Kosala and Magadha, JBBRAS XXVII, p.188.

57. Debiprasad Chattopadyaya, op., cit. p. 172 (Artasastra Quatation)

58. மணிமேகலை, சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை வரிகள் 50–53

59. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 123

60. மேலது. ப. 124

61. செல்வராசு, ஆர்., தொல்பொருள் அலுவலர், கோவை – 9 கூறிய செய்தி. நாள் 15.02.90.

62. இராசு, செ., முன்.கு.நூ. (கலைமகள் கலைக்கூடம்) பக். 192 – 93

63. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

64. இராசு, செ., முன்.கு.நூ. (கலைமகள் கலைக்கூடம்) பக். 189 –90.

சமுதாய வாழ்க்கை

கொங்குச்சோழர் காலத்தில் கொங்குச்சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி பழங்குடிஇணைப்பு என்ற இயலில் பேசப்பெற்றது. இவ்வியலில் இணைக்கப் பெற்ற பழங்குடிகளும் நாகரிகக் குடிகளும் இணக்கத்துடன் வாழ்ந்த வாழ்க்கை பற்றி ஆய்வு செய்யப்பெறுகின்றது. கொங்குச்சோழர்கள் தஞ்சைச் சோழர்களின் பிரதிநிதிகளாகக் கொங்கு நாட்டை ஆண்டனர் என்பதை முன்பே கண்டோம். ஆகையால் சமுதாய வாழ்க்கை தஞ்சைச் சோழர்கள் வகுத்தளித்த முறையில் அமைந்திருக்க வேண்டும் என்று கருதக்கூடும். ஆனால் சோழர்காலக் கொங்குச் சமுதாய வாழ்க்கை கொங்கு மண்ணிற்கேயுரிய இயல்புகளைப் பெற்று விளங்கியது. சோழ நாட்டுச் சமுதாய அமைப்பின் சில இயல்புகளைப் பெற்று விளங்கியது என்பது மறுக்க முடியாத உண்மை. அந்நிலையிலும் சோழ நாட்டுச் சமுதாய வாழ்க்கையின் வடிவங்களை எடுத்துக் கொண்டு உள்ளடக்கத்தைக் கொங்கு மண்ணிலிருந்து எடுத்துக் கொண்டது. இந்தத் தனித்தன்மையான இயல்பு பற்றி இவ்வியலில் பேசப்பெறும்.

சோழர்கள் தென்னிந்தியா முழுவதும் சமூக அமைப்பில் மாற்றம் கொண்டுவர பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்த பழங்குடிகளைச் சமூக நீரோட்டத்திற்குள் இணைத்தனர். பள்ளிகள், மலையமான், நத்தமான் (சேலம் தெ.ஆர்க்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களின் மலைகளில் வாழ்ந்தவர்கள்) சமூகத்தில் இணைக்கப் பெற்றனர். அதற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[1] பிற்கால சோழர் காலத்தில் (கி.பி.13ஆம் நூ) பொறிக்கப்பெற்ற செங்கம் கல்வெட்டு ஒன்று பல்வேறு மலைசாதியார் பற்றிக் கூறுகின்றது.[2] இந்தப் பழங்குடி இணைப்பினால் இடங்கை–வலங்கைப் பிரிவு ஏற்பட்டது என்று பர்ட்டன்ஸ்டீன் கூறுவார்.[3] அதற்கு அவர் தென்னார்க்காடு மாவட்டம் வரஞ்சுரம் கல்வெட்டுக்களைச் சான்று காட்டியுள்ளார். வரஞ்சுரத்தில் கி.பி.1112–ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் பள்ளி, நத்தமான் ஆகிய பிரிவுகளை இடங்கை சாதி என்று கூறுகின்றன.[4] சோழர்கள் பழங்குடிகளைச் சமூக நீரோட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று உறுதியாகச் செயல்பட்டனர். இந்த உறுதிப்பாடு கொங்கு நாட்டில் செயல்படுத்தப் பெற்றது.

கொங்குச் சோழர் காலத்துச் சமூகத்தில் வெள்ளாளர், சிவப்பிரமாணர், வாணிகர், சாலியர், கவறை வளஞ்சியர், ஐந்நூற்றுவர், நாட்டுச் செட்டிகள், பாரசிவர், பறையர், வண்ணார், குயவர், அம்பட்டன் கம்மாளர், பொற்கொல்லர் (தட்டார்) தச்சர் போன்ற குடிகள் சுட்டப் பெறுகின்றனர். வேட்டுவர், பூலுவ வேட்டுவர், படைத்தலை வெள்ளாளர், குறும்பர், மலையாளர், புள்ளி வெள்ளாளர் போன்ற பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றனர்.[5] கன்னடிகர், தெலுங்கர் போன்ற பிறமொழி பேசும் குடிகளும் கொங்குச்சோழர் காலத்தில் குடியேறிவிட்டனர்.[6] ஆரியர் என்றொரு பிரிவினர் கூறப்பெறுகின்றனர்.[7]

பழங்குடிகள்

கொங்குச்சோழர் காலத்துப் பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்றனர். வேட்டுவர், பூலுவர், குறும்பர், குறும்பில்லார், காவலர், படைத்தலை, பள்ளி ஆகிய குடிகள் சமூகநீரோட்டத்தில் இணைக்கப் பெற்றனர்.[8] இணைக்கப் பெற்ற பின், வேளான்களாகவும், மன்றாடிகளாகவும், ஊராளிகளாகவும் உயர்வு பெற்றனர். வேட்டுவர்கள் வாழ்ந்த பகுதியில் வேளான்களும், ஊராளிகளும் பூலுவர்கள் வாழ்ந்த பகுதியில் மன்றாடிகளும், ஊராளிகளும் மிகுந்து காணப்பெறுகின்றனர். வேட்டுவர்களிடையில் நாட்டுச்சபை இல்லை. மன்றாடி இல்லை. பூலுவர்களில் வடபரிசார நாட்டுப் பூலுவர்களுக்கு மட்டும் பூலுவநாடு என்றொரு நாட்டுச்சபை உண்டு. பொங்கலூர்க்கா நாட்டுப் பகுதியில் பூலுவ நாடு இருந்தமை பற்றி ஒரே ஒரு கல்வெட்டு கிடைத்துள்ளது. தென்கொங்கில் பூலுவர் நாடு கிடையாது. பூலுவ மன்றாடி, பூலுவ ஊராளி ஆகியோர் இருந்துள்ளனர்.[9] ஆகையால் வடபரிசார நாடு சமுதாயப் போக்கில் ஈரொட்டான நிலையிலிருந்தது எனலாம். வேட்டுவர்களிலும், பூலுவர்களிலும் உயர்ந்தோர் மட்டுமே கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றனர்.

வேட்டுவர்கள்

கொங்குச் சோழர் காலத்தில் கொங்கில் வேட்டுவர்கள் காணியாட்சி பெற்றிருந்தனர். வடபரிசார நாட்டுக் 'கோசனம் காணியாளர் முன்னை வேட்டுவர்' என்றும், சாந்தப் படை வேட்டுவர், கரைய வேட்டுவர், பூந்துறை நாட்டு அறச்சலூர்க் காணியாளர் என்றும்,

சிற்றூர் படலோடு குறிச்சி, அஞ்நூற்று மங்கலம், மழபாடி வடகரை நாட்டு இருப்புலி, தென்னிலை ஆகிய ஊர்களில் வெங்கச்சி வேட்டுவர் காணியாளர் என்றும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[10] வேட்டுவர் கூறப்பெறுகின்றனர். அவர்கள் வேளான்களாகச் சில வேட்டுவர் கூறப்பெறுகின்றனர். அவர்கள் கொடுக்கிமங்கலம், ஆப்பகூடல், வேம்பத்தி கரூர் போன்ற ஊர்களில் இருந்துள்ளனர்.[11]

வேட்டுவர்கள் பல சிவன் கோயில்களுக்குத் திருநிலைக்கால், மண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளனர். அறச்சலூர் சிவன் கோயிலுக்குத் திருநிலைக்காலும், மண்டபமும் உருவாக்கியுள்ளனர்.[12] வெங்கம்பூர் சிவன் கோயிலுக்குப் புல்லை வேட்டுவன் வெங்கம் பூரைத் தானமாக அளித்தான். கொடிவேரி முன்னை ஆளுடையார் கோயிலுக்குச் சந்தி விளக்கு வைத்தான் சிறுத்தலை வேட்டுவரில் இருங்கோளன் மகன்.[14]

குறும்பர்

குறும்பர்கள் குறும்பு நாட்டில் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கொங்குச்சோழர் ஆட்சித் தொடக்கத்தில் சமூக நீரோட்டத்தில் கலந்துவிடவில்லை. போசள மன்னன் வீரவல்லாளக் காலத்துக் கல்வெட்டு ஒன்று வடகரை நாட்டு 'காணியுடைய குறும்பர்கள்' என்று கூறுகின்றது.[15] அதனால் குறும்பு நாட்டில் வாழ்ந்த குறும்பர்கள் வடகரை நாட்டிற்குக் குடிபெயர்ந்து சென்று விட்டனரோ என்று கருத வேண்டியுள்ளது. குறும்பர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தமையால் மேய்ச்சல் வேண்டிக்குறும்பு நாட்டிற்கு அடுத்துள்ள வடகரை நாட்டிற்குக் குடிபெயர்ந்திருக்கலாம். குறும்பர்கள் கொங்குச்சோழர்காலத்திறுதியில் சமூகநீரோட்டத்தில் இணைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

ஈங்கூர்க் கல்வெட்டில் காவலன் குறும்பில்லார் என்ற பழங்குடி சுட்டப் பெறுகின்றது.[16] அகிலாண்டபுரம் கல்வெட்டிலும் காவலர் கூறப் பெறுகின்றனர்.[17] பட்டாலியிலும் காவலர் இருந்தமை பற்றிக் கூறுகின்றது. ஈங்கூர்க் கல்வெட்டு சிறப்புடையது.[18] அக்கல்வெட்டு பின்வருமாறு அமைந்துள்ளது.

“ஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்குத்

திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு ஏழாவது மேல்கரைப்

பூந்துறை நாட்டு ஈங்கையூரிலிருந்து காவலன் குறும்பில்லாரில் போத்தன்

செய்யானான குலோத்துங்க பல்லவரையனேன் அய்யநாரை எழுந்த ருளுவித்த தன்மம்”[19]

அய்யனார் வழிபாடு காவலர்களிடையில் சிறப்புற்றிருந்தது. பூந்துறை நாடு, காங்கய நாடு ஆகிய இருநாடுகளிடையிலும் காவலர் வாழ்ந்துள்ளனர்.[20] இவ்விரு நாடுகளிலும் காலத்தால் முற்பட்ட அய்யனார் சிற்பங்கள் மிகுதியும் கிடைக்கின்றன.

பிறசாதியினர்

அரையர், புலப்பர் போன்ற பிரிவினர் வெஞ்சமாங்கூடல் கல்வெட்டில் கூறப்பெறுகின்றனர்.[21] அரையர் கோநாட்டில் உருவாகி வாழ்ந்திருந்த அரசியல் சமூகப்பிரிவினர். இவர்கள் பற்றி நிருவாகம் பற்றிய இயலில் விரிவாகக் கூறப்பெற்றது. புலப்பர் என்பார் யார் என்று விளங்கவில்லை. எண்வகையர், ‘ஆண்டார்’ ஆகியோர் பற்றிய குறிப்புக்கள் ஒரேயொரு கல்வெட்டில் சுட்டப்பெறுகின்றது.[22] ‘வடுகநாட்டார்’ என்பது சேவூர்க் கல்வெட்டு ஒன்றில் பயின்று வரும் சொல்.[23] இது வடுகவேட்டுவர் வைத்திருந்த சமுதாயச் சபையா அல்லது தெலுங்கர் வைத்திருந்த சபையா என்பது புலப்படவில்லை. கள்ளர் பற்றிக் கடத்தூரில் ஒரு கல்வெட்டு கிடைக்கின்றது.[24] இவர்கள் பெரும்பாலும் மறவர்கள் ஆகலாம்.

வெள்ளாளர்

கொங்குநாட்டுக் குடிகளில் வேளாளர் என்றும் வெள்ளாளர் என்றும் கூறப்பெறுகின்றவர்கள் மிகுதியும் வாழ்கின்றனர். இவர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் கி.பி.11ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன.[25] கி.பி. 9 ஆம் நூற்றாண்டு நடுகல் ஒன்றில் ‘கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடைச்சிற்றன்’ என்பவன் குறிக்கப்பெறுகிறான். கொங்கு வெள்ளாளரில் எழுமாத்தூர்காடை என்றொரு பிரிவினர்

கூறப்பெறுகின்றனர். ஆனால் செங்கம் நடுகல்லில் சாகாடைச் சிற்றன் 'வெள்ளாளன்' என்று குறிப்பிடவில்லை.[26] அதனால் அவன் வெள்ளாளன் இல்லை என்று கொள்ளலாம். இக்கல்வெட்டுக்குப் பின் கொங்குச்சோழர் காலத்தில் தான் கொங்குநாட்டு வெள்ளாளர் பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. அதற்கு முன் கிடைக்கவில்லை.

பழங்குடிவெள்ளாளர்

விஜயமங்கலம் கல்வெட்டில் 'படைத்தலை வெள்ளாளர்' பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.[27] இவர்கள் படைத்தலை என்ற பழங்குடியிலிருந்து உருவாகியிருக்க வேண்டும். இது போலவே சமுத்தூர் ஈஸ்வரன் கோயிலில் 'புள்ளி வெள்ளாளர்' என்றொரு பிரிவினர் பற்றிய கல்வெட்டு கிடைக்கின்றது.[28] இவர்களும் கால்நடை மேய்க்கும் பழங்குடியிலிருந்து உருவாகியிருக்க வேண்டும்.

வெள்ளாளர்கள் சோழநாட்டிலிருந்தும், தொண்டை நாட்டிலிருந்தும் குடிபெயர்ந்தவர்கள் என்று கருதப்படுகின்றனர். செ.இராசு, எஸ்.பி.கந்தசாமி ஆகியோர் இக்கருத்தினை வலியுறுத்துகின்றனர்.[29] குழந்தை போன்றவர்கள் கொங்கு வெள்ளாளர் கொங்குநாட்டுக் குடிகளே என்று உறுதியாகக் கூறுகின்றனர்.[30] இருகோட்பாடுடையார்களும் அவரவர் கோட்பாட்டிற்குகந்த சான்றுகளைத் தந்துள்ளனர். வெள்ளாளர் குடிபெயர்ந்தோரே என்று வாதிடுபவர்கள் மரபுவழிப்பட்டயங்கள், நாடோடிக் கதைகள், ஒப்புமை நிகழ்வுகள் போன்றவற்றைக் காட்டுகின்றனர்.[31] கொங்கு வெள்ளாளர் உள்ளூர்க் குடிகளே என்பதற்குத் தனிச்சிறப்பான சடங்குகளையும், குடிப்பெயர் கூறுவதையும் சான்றாகக் காட்டுகின்றனர்.[32] முன்னர் கூறிய கோட்பாட்டிற்குக் (குடிபெயர்ந்தோர்) கூறும் சான்றுகளைக் காட்டிலும் பின்னதற்குக் கூறும் சான்றுகள் உண்மை நிலையோடு ஒத்து வருகின்றது.[33] ஆகையால் கொங்கு வெள்ளாளர் கொங்கு நாட்டுப் பழங்குடிகளிலிருந்து உருவானவர்களே அன்றி வெளியிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் அல்லர்.

கூட்டப்பெயர்கள்

கூட்டப் பெயர்கள் கொங்கு வெள்ளாளர், வேட்டுவர், பூலுவர் ஆகியோரிடையில் பயின்று வருகின்றன. இந்தக் கூட்டப் பெயர்

வேட்டுவர்களிடமிருந்தும், பிற பழங்குடிகளிடமிருந்தும் கொங்கு வெள்ளாளர்கள் பெற்றிருக்கவேண்டும் என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.[34] மற்றொரு சாரார் வேட்டுவர் போன்ற பழங்குடியினரிடையிலிருந்து வெள்ளாளர்கள் உருவானவர்கள். ஆகையால் கூட்டப் பெயர்கள் வெள்ளாளர்களுக்கும், வேட்டுவர்களுக்கும் பொதுவானவை என்று கருதப் பெறுகின்றன.[35] அந்துவன், கீரை, காடை, மணியன், பனையன், பாண்டியன், பூச்சந்தை, வேளையன், காரி, மூலன் முதலிய பெயர்களில் வேட்டுவர் வேளாளர் இரு சாரார்க்கும் குடிப் பிரிவுகள் இருக்கின்றன.[36] இவை வியப்புக்குரியதன்று. காரணம் வேட்டுவரும், வெள்ளாளரும் ஒரு குடியினரே. சோழர் காலத்து ஏற்பட்ட செய்தொழில் வேற்றுமையான் வெவ்வேறாயினர். மேலும் சோழர் காலத்தில் வேட்டுவ வெள்ளாளர் பூசல் புரிந்தனர் என்பதற்குச் சான்று ஏதும் கிடைக்கவில்லை. அண்ணன்மார்சுவாமி கதையில் பயின்று வரும் வேட்டுவ வெள்ளாளப் போர் நாயக்கர் காலத்து நிகழ்ச்சிகளே ஆகும்.[37]

கொங்குச் சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் ஆந்தை, கண்ணந்தை, பொருளந்தை, காடை, கீரன், பண்ணன், மலையர், தோடர், பயிரர், சாத்தந்தை, கருந்தொழி, பில்லர், ஈஞ்சன், செவ்வாயர், கொற்றந்தை, பனையன், செம்போத்து, நாரை, பதறி, உவணன், ஒதாளன், குண்டெலி, ஆதி, அந்துவன், மணியன், வண்ணக்கன் போன்ற பெயர்கள் கூறப்பெறுகின்றன. இக்கூட்டங்களில் 95 விழுக்காடு வட கொங்கு, கொங்குச்சோழர் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன.[38] இக்கூட்டங்களில் பல, சங்க காலத்திலேயே வழக்கத்தில் இருந்தவை.[39]

வேட்டுவர்களிடையிலும் கூட்டமுறை கூறப்பெற்றுள்ளது. அந்துவ வேட்டுவன், கரடி வேட்டுவன், அல்லாள வேட்டுவன், கரைய வேட்டுவன், கண்ணாடி வேட்டுவன், காரி வேட்டுவன், கிழங்க வேட்டுவன், குறுங்காடை வேட்டுவன், கொல்லி வேட்டுவன், சிறுத்தலை வேட்டுவன், சுண்டை வேட்டுவன், நஞ்சை வேட்டுவன், பதரை வேட்டுவன், பனைய வேட்டுவன், புல்லை வேட்டுவன், பூச்சந்தை வேட்டுவன், பூலுவ வேட்டுவன், பூவாணி வேட்டுவன், மணிய வேட்டுவன், மலைய வேட்டுவன், முன்னை வேட்டுவன், வடுக வேட்டுவன், வராக வேட்டுவன், வன்னி வேட்டுவன், வெங்கச்சி வேட்டுவன் போன்ற வேட்டுவக் குடிப் பெயர்கள் பயின்று வருகின்றன.[40]

ஊர்ப் பெயர்களும், நாட்டுப் பெயர்களும், கோயில் பெயர்களும் வேட்டுவக் குடிப் பெயர்களால் உருவாகியுள்ளன. வெங்கம்பூர் வெங்கச்சி வேட்டுவர் குடிப்பெயரிலும், கிழங்கநாடு கிழங்க வேட்டுவர் குடிப்பெயரிலும், முன்னை ஆளுடையார் (கொடுவேரி) முன்னை வேட்டுவர் குடிப்பெயரிலும் ஏற்பட்டன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[41]

குலச்சின்னங்கள்

கொங்குநாட்டு மக்கள் குடிப்பெயர்களில் பெரும்பாலானவை குலச்சின்னங்களின் (Totem) பெயர்களே. குலச்சின்னங்களைப் பற்றி மார்கன் என்பார் எழுதியுள்ளார். அவர் செவ்விந்தியர் குலச்சின்னங்களைப் பற்றி விவரித்தார்.[42] ஜே.பிரேசர் அவர்கள் உலகம் பூராவும் வாழும் பழங்குடிகளை ஆய்வு செய்து குலச்சின்ன மரபு பற்றி ஒரு தனி நூலே எழுதியுள்ளார். அதற்கு Totemism and exogamy என்று பெயர். பிரேசர் வழிநின்று கொங்கு வெள்ளாளர் குலங்களைப் பற்றி ஆய்வுசெய்தவர் க.கிருட்டிணசாமி அவர்கள்.[43] கிருட்டிணசாமியைப் பின்பற்றி எஸ்.பி.கந்தசாமி அவர்கள் குலச்சின்னங்கள் பற்றி ஆய்வு செய்துள்ளார்.[44] குலச் சின்னங்கள் ஏற்பட வேண்டிய இன்றியமையாமை என்ன என்று கேட்கப்படுகின்றது. குலச் சின்னங்களைச் சம்பந்தப்பட்ட குலத்தினர் பயன்படுத்தக் கூடாது என்று தடை விதிக்கப்பெற்றுள்ளது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இவ்விரு கேள்விகளுக்கும் விடை அளிக்க முயன்றுள்ளனர் மானிடவியலார். செல்லப் பெயர் வைத்தல், இயற்கைப் பொருள் வணக்கம், உயிரை உடலிற்கு வெளியே வேறு பொருளில் வைத்திருத்தல், தனி மனிதனைப் பாதுகாக்க ஆவி, பண்டமாற்று, மாயமந்திரம், கருக்கோட்பாடு இப்படிப் பலகோட்பாடுகள் கூறப்பெறுகின்றன.[45] இவற்றில் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் கொங்கு நாட்டுக் குலச்சின்னம் ஏற்பட்டது என்று புலப்படவில்லை.

நாடாண்டநாயகர்கள்

கொங்குச்சோழர் காலத்துக் கல்வெட்டுக்களில் பழங்குடிகள் வேளான்களாகவும், காமிண்டன்களாகவும், மன்றாடிகளாகவும் கூறப்பெறுகின்றனர்.[46] ஒரு சாரார் ஊராளிகளாகவும் கூறப்பெறுகின்றனர்.[47] கொங்கில் நாட்டார் சபை கி.பி. 12 ஆம்

நூற்றாண்டிலிருந்து கூறப்பெறுகின்றது. 'பூந்துறை நாட்டு நாட்டார்', 'அரைய நாட்டு நாட்டார்', 'காங்கய நாட்டு நாட்டார்', 'பொங்கலூர்க்கா நாட்டு நாட்டார்' என்று கூறப்பெறுகின்றது.[48] இது பெரும்பாலும் குறிப்பிட்ட நாட்டில் (Micro Region) உள்ள மக்களின் (பெரும்பாலும் வெள்ளாளர்) சபை என்று கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் வடபரிசார நாட்டில் வெள்ளாநாடு, பூலுவநாடு என்று நாட்டுப்பிரிவுகள் கூறப்பெறுகின்றன. இவை 'அரசியல்புவியியல்' (Political Geography) பிரிவுகள் அல்ல,[49] சமுதாயச் சபைகள். அதேபோல் பூலுவனூரார், வெள்ளானூரார் என்று இரண்டு ஊர்ச்சபைகள் கூறப்பெறுகின்றன. காங்கய நாட்டில் வெள்ளானூர் இருந்தமை பற்றி பிரமியம் கல்வெட்டு கூறுகின்றது.[50] பொங்கலூர்க்கா நாட்டிலும் வெள்ளாநாடு, பூலுவநாடு என இரண்டு சமுதாயசபைகள் இருந்துள்ளன.[51] வெள்ளாநாடு எபன்து வெள்ளாளர்கள் வைத்திருந்த சபையையும், பூலுவநாடு பூலுவர்கள் வைத்திருந்த சபையையும் குறிக்கும்.[52] வடபரிசார நாட்டில் நில உரிமைமாற்றம், வரிமாற்றம், வரிக்கொடை போன்றவற்றைப் பற்றிய ஆணைகளைப் பூலுவ நாட்டாரும், வெள்ளாநாட்டாரும், ஒப்புக்கொண்டு கையொப்பமிட்டுள்ளனர். சேவூர்க் கல்வெட்டு இதற்குச் சிறந்த சான்று.

> " வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன்கிழானடி நல்லூர் நாயனார் அழகப் பெருமாள் சுந்தர பாண்டிய விண்ணகர எம்பெருமாள் கோயில் நம்பிமார்க்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் இன்னாட்டு வெள்ளா நாட்டோமும் பூலுவ நாட்டோமும் பிடிபாடு குடுத்த பரிசாவது''[53]

இந்தக் கல்வெட்டில் வடபரிசார நாட்டு வெள்ளாநாடு, பூலுவநாடு என்ற இரண்டு சமுதாய நாட்டுச் சபைகள் இருந்துள்ளமை புலப்படுகின்றது.

மன்றாடி

பூலுவர்களிடையில் மன்றாடிகள் உருவானார்கள். மன்றாட்டு, மன்றாடி ஆகியவை கொங்குச் சோழர்கள் காலக் கல்வெட்டில் கூறப் பெறுகின்றன. இந்தச் சொற்கள் தென்கொங்கு கல்வெட்டுக்களிலும் பயின்று வரக்காண்கிறோம். வடகொங்கில் வடபரிசார நாட்டில்

கிடைக்கும் கல்வெட்டுக்களில் மட்டும் இச்சொற்கள் பயின்று வருகின்றன. வடபரிசார நாடு தென்கொங்கிற்கும், வடகொங்கிற்கும் இடையில் நிலைபெற்றிருந்த தனிநாடு. காலப்போக்கில் வடகொங்கில் இணைக்கப்பெற்றிருந்தாலும் தென்கொங்கிற்குரிய இயல்புகள் சிலவற்றைப் பெற்று விளங்குகின்றது. இந்த இயல்புகளில் மன்றாட்டு அமைப்பும், மன்றாடி ஆட்சியும் அடங்கும். மன்றாட்டு என்பது தேவதான ஊர்களில் பிரிக்கப் பெற்ற பங்குகளுக்குப் பெயர். ஒவ்வொரு ஊரின் பெருமை சிறுமைகளுக்கேற்ப பங்கின் எண்ணிக்கை கூடும்; குறையும். தேவதான ஊர்களில் மன்றாட்டுக்களாகப் பிரிக்கப் பெற்று ஒவ்வொரு மன்றாட்டிற்கும் ஒரு மன்றாடி நியமிக்கப் பெறுவான். மன்றாட்டு பற்றி விளங்கிக் கொள்வதற்குத் திருமுருகன்பூண்டிக் கல்வெட்டே சிறந்த சான்று. பின் வருமாறு

"நம்மைந்தன் ஆழ்வான் அண்ணாமலையானுக்கு நாம் ஒலை குடுத்த படியாவது உடையார் உடையார் திருமுருகன் பூண்டி யாளுடைய நாயனார்கோயிற் தானத்தாருடன் இக்கோயிலுங் கேட்டுஊர் மன்றாட்டும்

ஆள்வதாக இவனுக்கு நா(ம்) மன்றாட்டுக் குடுக்கையில் இவன் இக்கோயிற் திருப்பணிக் குறை தீரப் பல திருப்பணிக்கும் இவ்வூற் குளப் பாட்டில் தேவர் கோயிற் திருப்பணி.... இவன் இப்பொன் இருந்நூறும் இவன் அடைப்பிக்கிற அழியா விரதங்கொண்டான் குளம் நீங்கலாக இடுகையில் இவனுக்கு நாங்குடுத்த

தானத்தார் மன்றாட்டு ஒன்று இம்மன்றாட்டு ஒன்றும் முன்பு நடந்து போதும் தானத்தார் மன்றாட்டு ஐஞ்சும் ஆகத் தானத்தார் மன்றாாடடு ஆறு இம்மன்றாட்டு ஆறுங்கூட நடந்து கோயிலுங் கேட்டு ஊருங்கால்பாடு மன்றாட்டும் ஆண்டு ஊருங் கால்பாடும் நாற்பாற்கெல்லைக்குட்பட்

நன்செய் புன்செய் மேனோக்கின மாங் கீனோக்கின கிணறு (எழுவ)ன முளைப்பன மற்றும் எப்பேற்பட்ட ஸர்வ பிராப்திகளும் ஆறு மன்றாட்டிலே

வகையிட்டு ஆறிலொன்று இவன் மக்கள் கொள்வதாக நம் ஓலை குடுத்தோம்.'' [54]

மேலே கூறப்பட்ட கல்வெட்டு மன்றாட்டு என்பது என்ன என்ற கேள்விக்குப்பதில் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. கல்வெட்டின் இறுதிப்பகுதி (அடிக்கோடிட்டபகுதி) மன்றாட்டின் இயல்பினைத் தெளிவுறுத்துகின்றது. அதன்படி தேவதானமாக அளிக்கப் பெற்ற ஊரை ஆறு பங்குகளாகப் பிரித்து ஆறு மன்றாட்டுகளாகஅளிக்கப்படுகின்றன. ஆறு பங்கு என்பது ஊரின் ஆறு பங்கு நிலப்பகுதியைக் குறிப்பதல்ல. ஊரில் கிடைக்கின்ற வருமானத்தில் ஆறுபங்கு. கல்வெட்டில் பல்வேறு வகையான வருவாய்கள் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருவாயிலும் ஆறுபங்கு பிரிக்கப்பட்டுத்தரப்படும். சான்றுக்கு காட்டிலிருந்து வருவாயை எடுத்துக்கொள்வோம். இவ்வருவாய் அறுநூறு காசு என்றால் ஒவ்வொரு பங்கிற்கும் நூறு காசு பகிர்ந்தளிக்கப்படும். இது தான் மன்றாட்டு. மேலும் மன்றாட்டு காசு கொடுத்தும் வாங்கப்பட்டது என்பதற்கும் இக்கல்வெட்டே சான்றாகும்.

வணிகர்

கொங்குச் சோழர் காலத்தில் வாணிகம் தழைத்தோங்கியது. இவர்கள் காலத்தில் ஐந்நூற்றுவர், வளஞ்சியர், நகரத்தார், நாட்டுச்செட்டிகள், மணிக் கிராமத்தார், சாலியர், வாணியர் (செக்கார்), அக்க சாலையார், ஐம்பொழில் போன்ற பிரிவினர் வாழ்ந்துள்ளனர்.[55] இவர்களில் பலர் வேற்று மண்டலத்திலிருந்து வந்தவர்கள், கொங்கு மண்டலத்திலேயே ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் குடிபெயர்ந்தவர்கள் என்று இரு பெரும்பிரிவு வணிகர்களே மிகுதி.[56] இவர்கள் சுற்றித் திரியும் வணிகர்கள். பேரூர், சேவூர், இடிகரை போன்ற ஊர்களில் பாண்டிமண்டலத்து மாத்தூர், சுந்தரபாண்டியபுரம் போன்ற ஊர்களிலிருந்து வந்து வாணிகம் செய்துள்ளனர்.[57] சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு பாண்டி மண்டலத்து பல வணிகர்கள் பற்றிக் கூறுகின்றது. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டிலும், அன்னூர் கல்வெட்டிலும் மலை மண்டலத்து வணிகர்கள் பற்றிக் கூறப்படுகின்றது.[58] வேளாளர்க்கும் வணிகர்க்குமிடையில் நெருங்கிய உறவு இருந்துள்ளது. அந்த உறவின் அடிப்படையிலேயே சித்திரமேழிப்

பெரிய நாடு உருவாகியது.[59] வெள்ளாள வணிக உறவின் நெருக்கத்தை வலியுறுத்தப் பல மரபு வழிக்கதைகள் உள்ளன. அந்தக் கதைகளைப் பிருந்தாபெக் திரட்டி ஆய்வு செய்துள்ளார். அந்தக் கதைகளில் வெள்ளாளர்கள் வணிகர்களுக்குப் பெண் கொடுத்துள்ளனர் என்று கூறப் பெறுகின்றது. [60] சித்திரமேழிப் பெரியநாடு வெள்ளாள–வணிக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள அரசிற்கு எதிராக அமைக்கப்பெற்ற கூட்டமைப்பு என்று ஓர் அமெரிக்க ஆய்வாளர் கருதுகின்றார்.[61]

கருமகாரர்

கைவினைத் தொழில் செய்யும் சாதியார்கள் கொங்கு நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்துள்ளனர். கம்மாளர், தச்சர், தட்டார், ஈழச்சான்றார் போன்றவர்கள் பற்றிக் கூறப்பெறுகின்றது. இவர்களில் கம்மாளர் குறிப்பிட்ட ஊரில் இருந்ததற்கான சான்று ஏதும் கிடைக்கவில்லை. அவர்கள் கோயிலுக்குத் தானமளித்த செய்தி கல்வெட்டில் கிடைக்கவில்லை.

தச்சாச்சாரிய காணி, தட்டார்காணி போன்ற குறிப்புக்கள் கல்வெட்டில் கிடைக்கின்றன.[62] ஆனால் கம்மாளர் காணி என்று கொங்குக் கல்வெட்டில் யாண்டும் கூறப்பெறவில்லை. கம்மாளர்க்கு உரிமை கொடுத்தமை பற்றி ஐந்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கம்மாளர் காணி என்று நிலத்தையோ அல்லது தொழில் உரிமையையோ குறிக்கவில்லை.

வேட்கோவர்

குலாலர் பற்றி பெருந்தலையூர் கல்வெட்டும், அன்னூர்க் கல்வெட்டும் கூறுகின்றன. மதுக்கரை பட்டயத்தில் குலாலர் பாண்டி நாட்டிலிருந்து வெள்ளாளர்களால் கொங்கு நாட்டிற்குக் கொண்டு வரப் பெற்றவர்கள் என்று கூறப்பெறுகின்றது.[63] இதற்குக் கல்வெட்டுச் சான்று ஏதுமில்லை. வேட்டுவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் (Micro - region) மட்பாண்டத் தொழில் செய்வதற்கெனக் காணியாட்சி தரப்பட்டுள்ளது. இது பற்றிக்கூறும் பெருந்தலையூர்க் கல்வெட்டு எடுத்துக் காட்டத்தக்கது.

"பூந்துறை நாட்டுப் பூந்துறையில் இருக்கும் வேட்கோவரில் முன்னால் எங்கள் பாட்டன் காஞ்சிக் கூவல் நாட்டிலும் வடகரை நாட்டிலும் சீதனம் பெற்றுடையகாணிகளில் இந்நாட்டுக் காணிகளில் பெருந்தலையூர் வேட்கோவரில்'' [64]

என்று கூறும் கல்வெட்டு கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கொங்குச் சோழராட்சியின் இறுதியிலும், பாண்டியர் ஆட்சியின் தொடக்கத்திலும் குலாலர்கள் பற்றிக்கூறும் கல்வெட்டுக்கள் மிகுதியும் உண்டு. அன்னூரில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று குலாலர்களைப் பற்றிக் கூறுகின்றது. கொங்கு நாட்டுப் பட்டயங்களிலும், கல்வெட்டுக்களிலும் குலாலர், வேட்கோவர் என்று கூறப்பெறுகின்றனர். இது சங்க இலக்கியச் சொல்லினைத் (வேட்கோ) தொடர்ந்து பயன்படுத்தும் போக்கு.

வேட்கோவர்க்குக் குடிப்பெயர் (காடை, ஆந்தை என்பது போல) கிடையாது. அவர்களுடைய மண உறவு, நாடு அளவில் உள்ளது. வேற்றுக்குடி மணவினை உறவு என்றில்லாமல் வேறு நாட்டு (Micro region) மணவினை என்ற நிலையிலேயே உள்ளது.[65] காங்கயநாடு, பூந்துறைநாடு என இருபத்திநான்கு நாட்டுப்பெயரிலும் குடிகள் உள்ளன. காங்கய நாட்டுப் பெண் காங்கய நாட்டு ஆணை மணந்து கொள்ள மாட்டாள். அவள் தன்னாட்டைத் (காங்கய நாடு) தவிர்த்து இருபத்து நான்கு நாடுகளில் வேறு ஒரு நாட்டு ஆணைத்தான் மணக்க வேண்டும். இது சோழர் காலத்திலும் இருந்தது என்பதற்குப் பெருந்தலையூர்க் கல்வெட்டே சிறந்த சான்று. பூந்துறை நாட்டு வேட்கோவன் காஞ்சிக் கூவல் நாட்டில் சீதனமாகக் காணியாட்சி பெற்றுள்ளான். அதனால் காஞ்சிக் கூவல் நாட்டுப் பெண்ணை மணந்தான் எனலாம்.

சிறுசாதியார்

சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு வண்ணான்மாற்று பற்றிக் கூறுகின்றது.[66] ஆகையால் வண்ணார் கொங்குச் சமூக வாழ்வில் கொங்குச்சோழர் காலத்திலேயே நிலை பெற்றிருந்தனர் என்று கருத வேண்டியுள்ளது. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டு பறையர் பற்றிக் கூறுகின்றது.[67] நாவிதன் பற்றிக் கூறும் கல்வெட்டு ஏதும் கிடைக்கவில்லை.

உவச்சர் காணி என்று பல கல்வெட்டுக்கள் கூறும்.[68] உவச்சர் கிராம தேவதை கோயில்களில் பூசை செய்யும் பண்டாரங்களே. அவர்கள் இன்றும் கொங்குநாடு முழுவதும் வாழ்கின்றனர். இவர்கள் கொங்குச்சோழர் காலத்து உவச்சர்கள் ஆகலாம்.

கொங்குபஞ்சசாதி அமைப்பு

கொங்குக் குலாலர், கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், கொங்குப் பறையர் போன்றவர்களிடையில் குடிப்பெயர்கள் இல்லை. மாறாக நாட்டுப் பெயர்களே குடிப் பெயர்களாக நிலைத்துள்ளன.[69] ஆகையால் இவர்கள் வேற்றுக்குடி மணவினை உறவு செயற்கையாக உருவாக்கப் பெற்றிருந்தது என்று கருத வேண்டியுள்ளது. இந்தச் சாதியாரிடையிலும் நாவிதன், வேட்டுவ நாவிதன், வெள்ளாள நாவிதன் என்று இரு பிரிவுகள் உள்ளன.[70] ஆகையால் கொங்கு நாட்டில் இருபெரும் (மக்கள்) பிரிவினர்கள் தங்களுக்கென கொங்குச் சாதியாரை உருவாக்கிக் கொண்டனர் என்று கருதலாம்.

கொங்கு பஞ்சசாதி அமைப்பு இருந்தது என்று மு.ஆரோக்கிய சுவாமி கூறுவார்.[71] அது பற்றி அவர் விரிவாக ஆய்வு செய்துள்ளார். இந்தப் பஞ்சசாதி அமைப்பு மிகப் பழங்காலத்திலேயே தோன்றியது என்று கூறுவார்.[72] அதாவது கொங்குச் சோழர் காலத்திலேயே தோன்றியதாம். அதற்கான சான்றாதாரம் எதையும் கூறவில்லை. கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களிலும் பஞ்சசாதி பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. கொங்குச் சோழர்காலக் கல்வெட்டுக்களிலும் கிடைக்கவில்லை. ஆகையால் கொங்கு 'பஞ்சசாதி' என்பது நாயக்கர் காலத்திற்குப் பின் உருவான அமைப்போ என்று கருத வேண்டியுள்ளது. பிற்காலப்பட்டயங்களிலும் மரபு வழிக்கதைகளிலும் கூறப் பெறுகின்ற அமைப்பு இது.[73] ஆகையால் ஆரோக்கியசுவாமி கூற்று நம்பும் படியாக இல்லை.

பிராமணர்

கொங்குச் சோழர் காலத்தில் கோயில் பூசைக்கென சிவப் பிராமணர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 'காணியுடைய சிவப்பிராமணர்' என்றும், 'குடங்கொண்டு கோயில் புகுவார்' என்றும்,

'குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவார்' என்றும் கல்வெட்டுக்கள் கூறும்.[74] சிவப் பிராமணர்களைக் குறிப்பிடும் போது கல்வெட்டுக்கள் கோத்திரப் பெயருடன் குறிப்பிடும். காஸ்யபக் கோத்திரம், ஆபஸ்தம்ப கோத்திரம், சாலங்காயனக் கோத்திரம் என்று கோத்திரப் பெயர்கள் கூறப்பெறுகின்றன. இவர்களுக்கென்று சபை ஏதுமில்லை. ஆனால் கொங்கு நாட்டில் ஆற்றங்கரை ஓரத்தில் சில சதுர்வேதிமங்கலம் இருந்தமை பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. வீரசோழ வளநாட்டில் ஒரு சதுர்வேதிமங்கலமும், பேரூர் நாட்டில் மூன்றுசதுர்வேதிமங்கலங்களும், கூரைவழி நாட்டில் ஐந்து சதுர்வேதிமங்கலங்களும், வெங்கால நாட்டில் ஒரு சதுர்வேதிமங்கலமும், தென்கரை நாட்டில் ஒரு சதுர்வேதிமங்கலமும் இருந்துள்ளன.[75] இந்தச் சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்தவர்கள் வேதம் படித்த விற்பன்னர்கள். சிவப்பிராமணர்கள் அல்லர். சில காலங்களில் கோயில் நிலங்கள் பிரம்மதேய சபையார் வசம் ஒப்படைக்கப் பெற்றுள்ளன. அதற்கு விஜயமங்கலம் கல்வெட்டு சிறந்த சான்று.[76] கொங்குச்சோழர் ஆட்சியின் தொடக்கத்தில் மழநாட்டுப் பிராமணர் குடிபெயர்ந்து வந்துள்ளனர்.[77]

பாரசிவர்

அன்னூர் மன்னியாண்டார் கோயில் கல்வெட்டு இரண்டும், கடத்தூர் அம்மன் கோயில் கல்வெட்டு ஒன்றும் பாரசிவ மரபினைச் சேர்ந்த இருவரைப் பற்றிக் கூறுகின்றன.[78] அன்னூரில் கிடைக்கும் இரண்டு கல்வெட்டுக்களில் ஒன்று வீரராசேந்திரனின் பதினான்காம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டதாகும். மற்றொரு கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் என்று தொடங்குகின்றது. இவ்விரு கல்வெட்டுக்களிலும் முறையே பாரசிவன் பெரியான்கத்தி என்றும், பாரசிவன் புண்டரிகன் என்றும் கூறப்பெறுகின்றனர். கடத்தூர்க் கல்வெட்டு அவினாசியைச் சேர்ந்த பாரசிவன் ஒருவனைப் பற்றிக் கூறுகின்றது.[79]

சோழர்காலக் கல்வெட்டுக்களில் தமிழகம் முழுவதும் பாரசிவர் பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. சோழர் காலத்திற்கு முன் பாரசிவர் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. வடநாட்டில் பாரசிவ நாகர் என்ற மரபினர் குஷானர் காலத்துக் கல்வெட்டுக்களிலும்,

இலக்கியங்களிலும் கூறப்பெறுகின்றனர்.[80] இவர்கள் கி.பி.முதல் நூற்றாண்டில் சிற்றரசினைத் தோற்றுவித்து ஆண்டு வந்தனர். இவர்கள் வெளியிட்ட காசுகள் சில கிடைத்துள்ளன. இவர்கள் தலையில் இலிங்கத்தைத் தரித்திருப்பவர்கள். வடநாட்டுப் பாரசிவ நாகர்களுக்கும், தென்னாட்டுப் பாரசிவர்களுக்குமிடையில் உள்ள உறவு என்ன என்பது புலப்படவில்லை.

கொங்கு நாட்டில் பிற மொழி பேசும் மக்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு வாழ்கின்றனர். சேவூர்க் கல்வெட்டுகளில் கன்னடிகர், தெலுங்கர் போன்ற பிறமொழியாளர்கள் கொங்குச்சோழர் காலத்திலேயே கூறப்பெறுகின்றனர்.[81] சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தெலுங்கு நாட்டிலிருந்து வந்த கவறை, வளஞ்சியர் பற்றிக் கூறுகின்றது.

ஒட்டர், சவளக்கார குடி, யாதவர் போன்றவர்கள் ஒவ்வொரு கல்வெட்டில் கூறப்பெறுகின்றனர்.[82] ஒட்டர், கல் உடைக்கும் தொழிலைச் செய்த தெலுங்கக்குடிகள். யாதவர், தமிழ் பேசும் இடையர்களிலும் வேறுபட்ட கால்நடை மேய்ப்பவர்கள் ஆகலாம்.

குடிப்பெயர்ச்சி

கொங்குநாட்டிற்குள் தொழில் செய்ய வேண்டி மக்கள் குடிபெயர்ந்துள்ளனர். குடிபெயர்ந்தவர்களில் வேளாளர்களும், வணிகர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். காங்கய நாட்டிலிருந்தும், பொங்கலூர்க்கா நாட்டிலிருந்தும் வேளாளர்கள் வடபரிசார நாட்டிற்கும் குறும்பு நாட்டிற்கும் குடிபெயர்ந்துள்ளனர். வாணிகத்திற்குக் குடிபெயர்ந்தவர்கள் பாண்டிமண்டலம், மலைமண்டலம், தொண்டைமண்டலம், சோழமண்டலம் ஆகிய மண்டலங்களிலிருந்து குடிபெயர்ந்து வந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கைக்கோளர், சாலியர் போன்றவர்கள் பொங்கலூர்க்கா நாட்டிலிருந்தும், கீழ்க்கரை அரைய நாட்டிலிருந்தும், வடபரிசார நாட்டிற்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் என்று பேரூர்க் கல்வெட்டு கூறும். கோவன்புத்தூரிலிருந்தும் முட்டத்திலிருந்தும் வடபரிசார நாட்டு அவினாசிக்கும் திருமுருகன் பூண்டிக்கும் குடிபெயர்ந்து சென்றுள்ளனர்.[84]

குடிப்பெயர்ச்சியற்ற நிலையே இடைக்காலத்திலிருந்து பிரித்தானியர் ஆட்சி தொடங்கிய காலம் வரை நிலை பெற்றிருந்தது என்று பிரித்தானியர் ஆட்சியாளர் எழுதினர். இது உண்மையில் மாயை

என்றே கருதவேண்டும்.[85] மேலே குறிப்பிடப் பெற்ற கல்வெட்டுச் சான்றுகளால் இடைக்காலத்திலேயே மக்கள் குடிபெயர்ந்த தன்மையை அறியலாம். பல்வேறு காரணங்களால் மக்கள் குடிபெயர்ந்துள்ளனர். வாணிகத்தின் பொருட்டும் தலயாத்திரையின் பொருட்டும், அரசியல் நிருவாகம் காரணமாகவும், படையெடுப்புக் காரணமாகவும் குடிப்பெயர்ச்சி நடைபெற்றுள்ளது.[86] இவற்றில் வாணிகத்தின் பொருட்டு மிகுதியும் குடிபெயர்ந்துள்ளனர் மக்கள். புத்தூர்களை உருவாக்கவும் காடு கெடுத்து நாடாக்கவும் குடிபெயர்ந்துள்ளனர்.[87] ஆகையால் இடைக்காலத்தில் மக்கள் ஊக்கமின்றி ஓரிடத்தில் தங்கியிருந்தார்கள் என்று கொள்ளமுடியாது.

கொங்கு நாட்டில் கொங்குச்சோழர் காலத்தில் அமைக்கப் பெற்றிருந்த வலைப்பின்னல் போன்ற பெருவழிகளும், தாவளங்களும் (தங்குமிடம்) பாதுகாப்பிற்குப் பெருவழிவீரர் (எறிவீரர்) களும் இருந்தமையால் கொங்கு மக்கள் ஒரு பகுதியிலிருந்து பிறபகுதிக்குக் குடிபெயர்ந்தனர்.[88] அந்தக் குடிப்பெயர்ச்சியும் அரசியல் பொருளியல் தொடர்புடையது. நகரத்திற்குக் குடிபெயர்ந்தமைக்கும், நாட்டுப் புறத்திற்குக் குடிபெயர்ந்தமைக்கும் சான்றுகள் உண்டு.[89] இடைக்காலக் கொங்கு மக்கள் குடிப் பெயர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். அதற்கு ஆட்சியாளர்களும் ஆதரவு காட்டினர்.

இடங்கை, வலங்கை

சோழர்காலச் சமூகத்தில் இடங்கை, வலங்கை என்ற இருபெரும் பிரிவுகள் ஏற்பட்டன. வலங்கைப்படை, இடங்கைப்படை என்று இரண்டு படைப்பிரிவுகளும் இருந்துள்ளன. வலங்கைப்பிரிவு வேளாளரும் அவர்களுடைய சார் சாதியாரும் உருவாக்கிய பிரிவு என்றும், இடங்கைப்பிரிவு வணிகரும் அவர்தம் சார்சாதியாரும் உருவாக்கிய பிரிவு என்றும் கருதப்பெறுகின்றது. வலங்கைப்படை பிரிவு பற்றி முதலாம் இராஜராஜன் கல்வெட்டிலும், இடங்கைப் பிரிவு பற்றி முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டிலும் கூறப்பெறுகின்றது.[90] கொங்கு நாட்டில் விஜயமங்கலம் கல்வெட்டில் 'இடங்கை தொண்ணூற்றெட்டு சாதிகள்' என்று கூறப்பெறுகின்றது.[91] ஆகையால் கொங்கில் இடங்கை சாதியார் செல்வாக்கு மிகுந்திருந்தது என்று கருதலாம். மேலும்

திருமுருகன்பூண்டி, அன்னூர், பேரூர் போன்ற ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் இடங்கை நாயகீசுவரமுடையார் கோயில் என்றும் இடங்கை நாயகம் செய்வார் என்றும் கூறப் பெறுகின்றன.[92] இடங்கை நாயகீசுவரமுடையார் கோயிலை இடங்கைப் படைப் பிரிவினர் கட்டியிருக்க வேண்டும். இடங்கை நாயகர் என்று கூறப்பெறுபவர்கள் இடங்கைப் படைப்பிரிவினர் தலைவர்களாக இருக்கவேண்டும். கொங்கு நாட்டில் வலங்கைப் பிரிவு பற்றிய செய்தி ஏதும் கிடைக்கவில்லை. அதனால் இடங்கைப் பிரிவினரே செல்வாக்குப் பெற்று விளங்கினர் என்று கருத வேண்டியுள்ளது. இவர்கள் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் வாணிக வளர்ச்சியே ஆகும்.

முடிவுரை

கொங்குச் சோழர் ஆட்சியில் கொங்குச் சமுதாய வாழ்க்கை பல்வேறு குழுக்கள் இணைந்து நின்ற வாழ்க்கையாகவே விளங்கியது. பழங்குடிகள் சாதியாக மாறிய பின்னும் தனிக்குழுக்களாகவும், பொதுவாழ்வில் பிற குழுக்களோடு இணைந்தும் செயல்பட்டன. கொங்குச் சோழர் ஆட்சியின் பின்பகுதியில் (கி.பி.12ஆம் நூற்றாண்டிலிருந்து) பல பழங்குடிகள் கல்வெட்டுக்களில் சுட்டப்பெறுகின்றனர். அதற்கு முன்பு அக்குடிகள் கல்வெட்டில் சுட்டப் பெறாமையால் கி.பி.12ஆம் நூற்றாண்டின் முன் பின் காலங்களில் நாடோடிகளாகத் திரிந்தனர் என்ற கருத்தினை உறுதிப்படுத்துகின்றது. வேட்டுவர், குறும்பர், பூலுவர், காவலர், பள்ளி, படைத்தலை போன்றவர்கள் சமூகநீரோட்டத்தில் கலக்க, கொங்குச்சோழர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி மரபுவழிப்பட்டயங்கள் மூலம் தெரியவருகின்றது. பழங்குடி இணைப்பிற்குப் பின் அரசியல் நிருவாகத்தில் உயர்ந்து நின்ற வேளான், ஊராளி, மன்றாடி போன்றவர்கள் கல்வெட்டில் குறிக்கப்பெறும் சிறப்பினைப் பெற்றனர். கொங்குச்சோழர் காலக்கல்வெட்டுக்களில் புலப்பர், எண்வகையர், ஆண்டார் போன்ற சமூகப் பிரிவினர் கூறப்பெறுகின்றனர். சமூக நீரோட்டத்தில் இணைக்கப் பெற்ற பழங்குடிகள்; அவர்கள் காலங்காலமாக வாழ்ந்த நிலப்பகுதியிலேயே நிலை பெற்றனர். பிற பகுதிகளுக்குக் குடிபெயரவில்லை. பூலுவர்கள் வடபரிசாரநாடு, பேரூர்நாடு ஆகியவற்றிலும், வேட்டுவர்கள் வடகரைநாடு, பூவாணிநாடு,

அரையநாடு ஆகியவற்றிலும் உள்ள கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றனரே ஒழிய, பிறபகுதி கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறவில்லை.

கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்து வெள்ளாளர்கள் குறிக்கப் பெறுகின்றனர். வடகொங்கில் உள்ள இருபது நாடுகளிலும் வெள்ளாளர்கள் குறிக்கப் பெறுகின்றனர். தென்கொங்கில் சில ஊர்களில் மட்டும் (கி.பி.13ஆம் நூற்றாண்டில்) கூறப் பெறுகின்றனர். ஆகையால் பழங்குடிகளிலிருந்து எழுச்சி பெற்ற வெள்ளாளர்கள் கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்து உருவாகத் தொடங்கினார்கள் எனலாம். வேட்டுவ வாழ்க்கையிலிருந்தும் கால்நடை வளர்ப்பு நாடோடி வாழ்க்கையிலிருந்தும் இருந்து வாழும் வேளாண் வாழ்க்கைக்கு மாறியது பற்றிக் கல்வெட்டுக்கள் ஏதும் கூறவில்லை. கல்வெட்டுக்கள் கோயில் கொடையைப் பற்றி மட்டும் கூறுவதால் கொடுத்தவர்பெயர், குலம், சாதி ஊர், நாடு ஆகியவற்றை மட்டும் கூறுகின்றனவே ஒழிய அந்தந்த ஆட்கள் முன்னமிருந்த நிலையையும் பின்னை மாறிய நிலையையும் கூறவேண்டிய தேவை இல்லை. அதனால் பழங்குடிகள் வேளாண் குடிகளாக மாறியமை பற்றிக் கல்வெட்டு கூறவாய்ப்பில்லை. படைத்தலை வெள்ளாளர், புள்ளி வெள்ளாளர் போன்ற சாதிப் பெயர்கள் பழங்குடி வாழ்க்கையிலிருந்து வேளாண் வாழ்க்கைக்கு மாறிய தன்மையைச் சுட்டுகின்றன என்று உறுதியாகக் கூறலாம்.

வெள்ளாளர்கள் குடிபெயர்ந்தவர் என்ற கோட்பாடு பின்னாளைய (நூறு, நூற்றைம்பது ஆண்டுகள் காலத்திற்குட்பட்ட)பட்டயங்கள் கூறும். குடிப்பெயர்ச்சி கதைகள் பல்வேறு துறைச்செய்திகளுடன் ஒப்பிட்டாய்ந்த பின்பே வரலாறாக ஏற்றுக் கொள்ளமுடியும். அதுவரையில் கொங்கு நாட்டு வெள்ளாளர்கள் கொங்குப் பழங்குடிகளிலிருந்து உருவானவர்கள் என்று தான் கொள்ள முடியும். கொங்கு நாட்டு வேளாளர் குடிப்பெயர்களும் கொங்குப் பழங்குடிகளின் (வேட்டுவர், பூலுவர், குறும்பர்) குடிப்பெயர்களும் ஒன்று போலவே உள்ளன. இதுவும் வேளாளர்கள் இந்நாட்டுப் பழங்குடிகளிலிருந்து உருவானவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது. குடிப்பெயர்கள் பெரும்பாலானவை குலச்சின்னங்களின் (Totem) அடியாக உருவானவை. குலச்சின்ன மரபு ஆக்கம் உலகம் முழுவதும்

காணப்பெறுகின்றது. மானிடவியல் அறிஞர்கள் இதற்குப் பலகாரணங்களைக் கூறுகின்றனர். அவற்றில் சில கொங்கு நாட்டுக் குலச்சின்ன மரபிற்குக் காரணமாகியிருக்கலாம். தான் உற்பத்தி செய்யும் பொருட்களை அல்லது தன் பகுதியில் உற்பத்தி ஆகும் பொருட்களை பிறகுடியினருக்குக் கொடுக்க வேண்டும் என்ற பழங்குடி மரபினரின் பண்பாட்டுக் கூறினால் எழுச்சி பெற்றது ஆகலாம்.

பழங்குடி இணைப்பிற்குப் பின் அரசியல் நிருவாகம் பலவகையில் கொண்டு செலுத்தப் பெற்றது. வேட்டுவர்கள் வேளான் (குடித்தலைவர்)ஆட்சியிலும், பூலுவர், வேளாளர் நாட்டுச்சபை என்ற அமைப்பின் ஆட்சியிலும் வாழ்ந்துள்ளனர். கொங்கு மக்களிடையில் காணப்பெற்ற பண்பாட்டுப்படி நிலைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அரசியல் நிருவாகத்தைச் செயல் படுத்தினர் என்பது உறுதிப்படுகின்றது.

கொங்குச்சோழர் ஆட்சியின் இறுதி நாட்களில் வணிகர் பல்கிப் பெருகினர். தொண்டைநாடு, பாண்டிநாடு, கோநாடு, மலைநாடு, தக்கணம் போன்ற பகுதிகளிலிருந்து வந்த நானாதேசி, ஐந்நூற்றுவர், வளஞ்சியர், மணிக்கிராமத்தார், அஞ்சுவண்ணத்தார் போன்ற வணிகக் குழுவினர் இங்கு வந்து வாணிகம் செய்துள்ளனர். அவர்களுடன் கொங்கு நாட்டு வேளாளர்களிடையில் உருவான வாணிகர்களும் (நாட்டுச் செட்டிகள்) வாணிகம் செய்தனர். .இவ்விரு மரபினரும் சேர்ந்து உருவாக்கிய குழுதான் 'சித்திரமேழி பெரியநாடு' என்ற குழு. இந்த அமைப்பு தேசவரம்பற்று நின்றது.

சார் சாதியார்கள் (குயவர், கம்மாளர், பறையர், வண்ணார்) என்பவர்கள் கொங்குச் சோழர் கல்வெட்டுக்களில் இடைப்பிறவரலாகச் சுட்டப் பெறுகின்றனர். பின்னாளில் கூறப்பெறும் கொங்குப் பஞ்சசாதி என்ற அமைப்பு கொங்குச் சோழர் கல்வெட்டுக்களில் யாண்டும் கூறப்பெறவில்லை. அதனால் இது பிற்காலத்து ஆக்கம் என்று தான் கொள்ள வேண்டியுள்ளது.

கொங்கு நாட்டில் சிவப்பிராமணர்கள் வெளியிலிருந்து கொண்டு வரப் பெற்றவர்கள். அவர்கள் கொங்கு நாடு முழுவதுமுள்ள சிவன் கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகளாகச் செயல்பட்டனர்.

அன்னூர், கொழுமம், கடத்தூர் போன்ற ஊர்க் கல்வெட்டுக்களில் பாரசிவர் பற்றிய கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவர்கள் வடநாட்டுப் பாரசிவ நாகர்களுடன் தொடர்புடையவர்களாகக் கொள்ளலாம்.

கொங்கு நாட்டிற்குப் பிறநாட்டுப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் அரசியல் பணி தொடர்பானவர்கள். ஆனால் கொங்கு நாட்டில் ஓர் உள்நாட்டிலிருந்து (சான்றுக்குக் காங்கய நாடு) பிறநாடுகளுக்குக் குடிப்பெயர்ச்சி மிகுதியும் நிகழ்ந்துள்ளது. இக்குடிப்பெயர்ச்சியில் வேளாளர்கள், வணிகர்கள், பிராமணர்கள், குயவர்கள் போன்றவர்கள் ஈடுபட்டிருந்தனர். இதனை உள்நாட்டுக் குடிப் பெயர்ச்சி (Internal Migration) என்று கொள்ளலாம். உள்நாட்டுக் குடிப்பெயர்ச்சி பொருளியல் சார்புடையது. சில படை தொடர்புடையது.

சோழர் காலத்தில் எழுச்சி பெற்ற இடங்கை, வலங்கை என்ற இரட்டை சமூகப் பிரிவு கொங்கு நாட்டில் சில கல்வெட்டுக்களில் கூறப் பெறுகின்றது. இருபிரிவுகளும் கொங்குச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெறவில்லை. பெயரளவில் மட்டும் சுட்டப் பெறுகின்றனர். வலங்கைப் பிரிவு பற்றி ஒரேஒரு கல்வெட்டு கூறுகின்றது. இடங்கை தொண்ணூற்றெட்டு சாதி பற்றி விஜயமங்கலம் கல்வெட்டு கூறுகின்றது. மேலும் அன்னூர், திருமுருகன்பூண்டி, பேரூர் போன்ற ஊர்களில் இடங்கைப்படை, இடங்கைமீகாமன், இடங்கை நாயகீஸ்வரமுடையார் கோயில் போன்ற பெயர்கள் இடங்கைப் பிரிவினருடன் தொடர்புபடுத்தும் தன்மையில் அமைந்துள்ளன. இந்தப் பெயர்களும் இடைக்கால (சோழர்)க் கொங்கு நகரங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் மட்டும் காணப்பெறுகின்றன. அக்கால நாட்டுப் புறங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் காணப் பெறவில்லை.

கொங்குச் சோழர்காலச் சமுதாய வாழ்க்கை முன் எப்போதைக் காட்டிலும் வேறுபட்டு நின்றது. சிறு சிறு கூட்டங்களாய்த் திரிந்து கொண்டிருந்த பழங்குடிகள் ஒரு சமுதாய அமைப்பிற்குள் கொண்டுவரப் பெற்றனர். சமூக அமைப்பிற்குள் கொண்டுவரப்பெற்றாலும் தனித்தனிக்குழுக்களாகவே செயல்பட்டனர். ஆனால் முற்காலங்களில்

இக்குழுக்களுக்கிடையில் நிலை பெற்றிருந்த முரண்பாடும், பூசலும் குறையத் தொடங்கின. இது கொங்குச் சோழர் முயற்சியின் வெற்றியே ஆகும்.

அடிக்குறிப்புகள்

1. ARE 184 of 1940-41
2. Nagaswamy, R., Studies inTamil Law and society, p. 81
3. Burton Stein, Peasant state and Society in Madieval South India, p.192.
4. ARE 184 of 1940 - 41
5. அவினாசி, விஜயமங்கலம், எண்ணமங்கலம், சமத்தூர் ஆகிய ஊர் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ
6. சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.
7. மேலது.
8. Kandasamy, S.P., The History of the Kongu Vellalar (Unpublished Ph.D. Thesis, University of Madras) 1985. pp 63 -64.
9. கோவை மாவட்டம், பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ. ஆ.கோ.
10. இராசு, செ., கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் வேட்டுவர் நிலை, தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, பக். 32 – 33
11. சேலம் மாவட்டம், கொக்கராயன் பேட்டை கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.
12. இராசு, செ., முன்.கு.நூ.ப. 36
13. மேலது

14. பெரியார் மாவட்டம், கொடிவேரிக் கல்வெட்டுக்கள்,
தொ.பொ.ஆ.கோ.

15. இராசு, செ., கலைமகள் கலைக்கூடம், பக். 192 – 93

16. மேலது பக். 189 –90

17. ARE 267 of 1920.

18. S.I.T.I. Vol I, No.314.

19. இராசு, செ., முன்.கு. நூ. பக். 189 – 90

20. புலவர் செ. இராசு (ஈரோடு) அவர்களுடன் உரையாடல்.

21. வெஞ்சமாங்கூடல் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

22. கோவை மாவட்டம், சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

23. மேலது.

24. கோவை மாவட்டம், கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

25. Epigraphia Indica Vol. XXX, p. 106

26. செங்கம் நடுகற்கள், எண் 1971/57

27. பெரியார் மாவட்டம், விஜயமங்கலம் கல்வெட்டுக்கள்,
தொ.பொ.ஆ.கோ.

28. கோவை மாவட்டம், சமத்தூர்க் கல்வெட்டுக்கள் , தொ.பொ.ஆ.கோ.

29. இராசு, செ., கொங்கு (திங்களிதழ்), இதழ்–3 (1973). பக் 76 – 80

30. குழந்தை, வேளாளர், கொங்கு (திங்களிதழ்) இதழ் –3, 1973,
பக். 73 – 76

31. Kandasamy, S.P., op. cit. 6 Origin (Fouth Chapter)
pp 87 - 91.

32. குழந்தை, முன்.கு.நூ. ப. 73

33. பல்வேறு காரணங்களால் கொங்கு நாட்டுப் பழங்குடிகள் பற்றியும், கூட்டமுறை பற்றியும், ஆய்வுகள் தொடக்க நிலையிலேயே உள்ளன.

34. Kandasamy, S.P., op. cit. p. 82.

35. குழந்தை, முன்.கு.நூ. ப. 73

36. இராசு, செ., முன்.கு.நூ. (தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு) ப.39.

37. இராமமூர்த்தி. வி, காலக்கணிப்பு, அண்ணன்மார் சுவாமி கதை ப.31

38. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை) உரையாடல்.

39. பழனியப்பன்.மு, ஆபாவாணன், கொங்கு வெள்ளாளர் குடிப்பெயர்கள், மார்க்சீய ஒளி, இதழ்– 5, செப்டம்பர் 1975, பக். 65 – 80

40. இராசு, செ., முன்.கு.நூ. (தமிழ் நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு), ப. 39.

41. ஆர்.பூங்குன்றன்(காப்பாட்சியர்) அவர்களுடன் உரையாடல்.

42. Lewis. H. Morgan, The Ancient Society, pp -100 - 101.

43. கிருட்டிணசாமி. க, கூட்டமும் திருமணமும், 1983, மக்கள் வெளியீடு அடுத்த பதிப்பு கூட்டச் சின்னவியல் என்ற பெயரில் வெளியாயிற்று.

44. Kandasamy, S.P., Totemic influence on place name, in Place name society of India, Vol. VI pp 67 - 68.

45. கிருட்டிணசாமி. க, முன்.கு.நூ.பக். 18 – 19

46. இந்நூலில் பழங்குடி இணைப்பு என்ற இயல்

47. Kandasamy, S.P., op. cit. p. 71. (Ph. D. Thesis)

48. இராசு, செ., ஊராட்சி, ஆய்வுத்தேன்

49. இந்நூலில் நிருவாகம் என்ற இயல்

50. Epigraphia Indica Vol. XXX, p. 106.

51. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 21,

52. மேலது ப. 72

53. கோவை மாவட்டம் சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

54. கோவை மாவட்டம், திருமுருகன்பூண்டிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

55. Malathi, K.O., Trade and Urbanization in Medieval Kongu, (M. Phil, Diss Bharathiyar University, 1990) p. 68.

56. Ibid p. 82.

57. பேரூர், சேவூர், இடிகரைக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

58. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 104.

59. Brenda, Beck. E.F., Peasant Society in Kongu, pp. 37 - 38.

60. Kandasamy, S.P., op. cit., p 199

61. Hall. Kennath. R Trade and State Craft in the age of Colas, pp 203-04

62. கோவை மாவட்டம் அவினாசி, பெரியார் மாவட்டம் கணக்கம்பாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

63. மதுக்கரை பட்டயம் ப. 2

64. பெரியார் மாவட்டம், பெருந்தலையூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

65. சண்முகம்.ச. கொடுமுடி நிருவாகப்பொறியாளர் பெருவழித்துறை விழுப்புரம் அவர்களுடன் உரையாடல்.

66. பெரியார் மாவட்டம், சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

67. S.I.I. Vol. V, No. 245.

68. கோவை மாவட்டம், கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

69. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், உதகை. (உரையாடல்)

70. மேலவர்.

71. Arokiaswami, M, The Kongu Country, p. 267.

72. Ibid

73. Kandasamy, S.P., op. cit. pp. 196-97 (Ph.D. Thesis)

74. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 76

75. பெரியார் மாவட்டம், விஜயமங்கலம் கல்வெட்டுக்கள், கோவை மாவட்டம் பேரூர்க் கல்வெட்டுக்கள், திருச்சி மாவட்டம் கரூர்க் கல்வெட்டுக்கள், பெரியார் மாவட்டம் பிரமதேசம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

76. பெரியார் மாவட்டம் விஜயமங்கலம், கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

77. Epigraphia Indica Vol. XXX, p. 103

78. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 77.

79. Manonmani, T, Kadathur inscriptions A Study (M.Phil DIssert, Centre for Historical studies, M.K. University Madurai) Appendix.

80. Munshi, K.M., The History and Culture of the Indian People:: The Age of Imperial Unity, p. 169.

81. கோவை மாவட்டம், சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

82. மேலது

83. கோவை மாவட்டம் இடிகரை, சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

84. S.I.I. Vol. XXVI. Nos 137 & 190.

85. Noboru Karashima, Studies in South Indian History and Society, pp 31- 32.

86. Appadurai, A, Economic conditions in Southern India Vol. I, pp 302 - 03.

87. Kandasamy, S.P., op. cit. pp 88-89

88. Malathi, K.O., op. cit. pp 59-61

89. கோவை மாவட்டம் இடிகரை, சேவூர், போளுவாம்பட்டி ஆகிய ஊர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

90. S.I.I. Vol.II, Intorduction, p.10
ARE 1936 - 7, Para, 27.

91. ARE 564 of 1905.

92. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 35.

பெருவழிகளும் நகரங்களும்

கொங்குச் சோழர்கால நகர வளர்ச்சியைப் பற்றி இந்த இயலில் ஆய்வு செய்யப்படுகின்றது. கொங்குச் சோழர்களுக்கு முன்பே நகர வளர்ச்சியின் கூறுகள் சில எழுச்சி பெற்றன. அவற்றைப் பண்டைக்கால நகர நாகரிகத்தின் கூறுகளாகவே கருதலாம். கொங்குச் சோழர்காலத்து நகர வளர்ச்சி நாட்டுப்புற (Rural) வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து நின்றது. பழைய கூறுகளுடன் புதிய கூறுகள் பல சேர்ந்து புதுவகை நகரங்கள் உருவாகின. சமூகத்தின் முக்கியத் தொழில்களில் பல திறப்பட்ட சாதிப்பிரிவினர் பங்கேற்றது போல வாணிகத்திலும் பல திறப்பட்ட மக்கள் பங்கேற்றனர். இது பண்டைய நகர வளர்ச்சியிலிருந்து வேறுபட்ட நிலையைக் காட்டுகின்றது. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு ‘கொங்கில் ஒன்பது மாநகரங்கள்’ என்று கூறக் காண்கிறோம்.[1] அந்த ஒன்பது மாநகரங்கள் எவை என்பது கண்டறியப்பட வேண்டும். மாநகரங்களுக்கும், நகரங்களுக்கும், நாட்டுப்புறத்திற்குமிடையிலான தொடர்பு அறியப்பட வேண்டும். அண்மைக் காலத்தில் கொங்கு வாணிகம், நகர வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வியலில் அவற்றின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது.

கொங்குச்சோழர்க்குமுன்

கி.பி.9–ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்த வணிகர்களைப் பற்றியும் வாணிகத்தைப் பற்றியும் மிகுந்த செய்திகள் கிடைத்து வருகின்றன. அவற்றில் நல்லூர் அருகில் உள்ள அத்திகோசம் கல்வெட்டு காலத்தால் முற்பட்டது.[2] கி.பி.10–ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் வேள்புரம் (சாளுக்கிய நகரம்) என்ற ஊரிலிருந்து வந்து வெள்ளலூர் கோயிலுக்குத்தானம் அளித்த செய்தியைக் கூறுகின்றன.[3] ஆனைமலை, ஐவர்மலை போன்ற ஊர்களில் கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் வணிகர்கள் பற்றிய குறிப்புக்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.[4]

கி.பி.10 ஆம் நூற்றாண்டிலிருந்து வணிக வளர்ச்சி சிறப்பு நிலையை அடைந்தது. நானாதேசி, ஐந்நூற்றுவர், வளஞ்சியர், கவரைச் செட்டி, நாட்டுச் செட்டி, நகரத்தார் போன்ற வணிகப் பிரிவினர்கள்

கொங்கில் வாணிகம் செய்தனர். பல்வேறு நாடுகளையும், மண்டலங்களையும் சேர்ந்தவர்கள் இங்கு வந்து வாணிகம் செய்தனர். வாணியர், சாலியர், வியாபாரிகள் போன்றவர்கள் குறிக்கப் பெறுகின்றனர். நீலம்பூர், சர்க்கார் பெரியபாளையம், பழமங்கலம், கடத்தூர், பாச்சில், கருவூர் போன்ற ஊர்களிலிருந்து கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் வணிகர்களைப் பற்றிக் கூறுகின்றன.

சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு 'கொங்கில் ஒன்பது மாநகரங்கள்' என்று கூறும். பிரான்மலைக் கல்வெட்டு கொங்கிலிருந்த ஆறு நகரங்களைப் பற்றிக் கூறுகின்றது. கருவூர், தட்டையூர், கண்ணபுரம், பட்டாலி, கீரனூர், இராஜராஜபுரம் போன்ற ஆறு ஊர்களிலிருந்து வந்த நகரத்தார் பற்றிக் கூறும்.[5] முகுந்தனூர், திருமுருகன் பூண்டி, மன்னியூர், இராஜராஜபுரம், கரூர், விஜயமங்கலம், ஆகிய ஊர்கள் ஒன்பது மாநகரங்கள் என்று கூறலாம்.[6] ஒன்பது மாநகரங்கள் மட்டுமன்றி நகரங்களும் இருந்துள்ளன. முட்டம், பேரூர், கொழுமம், பழமங்கலம், நீலம்பூர், கடத்தூர், மாவண்டூர், அவினாசி, சேவூர், சீனாபுரம், திங்களூர், துறவலூர், வெஞ்சமாங்கூடல், நீர்மணி போன்ற ஊர்களை நகரங்களாகக் கொள்ளலாம்.[7] மேலும் சிறு சிறு கிராமங்களிலும் வணிகர்கள் தங்கி வாணிகம் செய்துள்ளனர். ஆகையால் நகரங்கள் நாட்டுப்புறத்துடன் இணைந்து வளர்ந்தன என்று உறுதியாகக் கொள்ளலாம். மாநகரம்–நகரம்–ஊர் (கிராமம்) ஆகிய இணைப்பு சமூக அரசியல் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது. மேலே கூறப்பெற்ற ஒன்பது மாநகரங்களுள் கடத்தூர் தவிர பிற மாநகரங்கள் வடகொங்கில் அமைந்துள்ளன.

இடைக்காலக் கொங்கின் நகர வளர்ச்சியை தென்னிந்தியா முழுவதும் எழுச்சி பெற்ற வாணிக வளர்ச்சியின் பின்னணியில் வைத்துப் பார்க்க வேண்டும். தென்னிந்தியாவில் சோழர்கள் ஆட்சி பரந்து விரிந்து நின்றபோது வேளாண்மை வளர்ச்சி மேம்பாடுற்றது. பாழாகிக் கிடந்த காடுகள் அழிக்கப் பெற்று வளம்மிக்க வேளாண் நிலமாக மாற்றப் பெற்றது. அதற்குச் சோழநாட்டுக் கல்வெட்டுக்களில் வயக்கல், வசக்கல், மசக்கல் என்று கூறப்பெறும்.[8] கொங்கு நாட்டில் மன்னறை என்று அழைக்கப்பெறும்.[9] இந்த வேளாண் வளர்ச்சி காலஅடைவில் வாணிகம் வளர்வதற்குத் துணையாக நின்றது. சித்திரமேழிப் பெரியநாடு, நகரங்கள் போன்றவை வளர்வதற்கு உற்ற துணையாக நின்றது.

நகரம்காட்டும்விகுதி

நகரங்களையும் வாணிகத் தலங்களையும் குறிப்பதற்கு மாநகரம், நகரம், புரம், தெரு, பெருந்தெரு, தாவளம், பட்டணம் ஆகிய சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. கி.பி. 9 ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களில் 'மாநகர்' என்பது கொங்கில் மூன்று ஊர்களுக்குக் கூறப்பெறுகின்றது. அவை கருவூர், வெஞ்சமாங்கூடல், திருமுருகன் பூண்டி ஆகியன.[10] ஆனால் கல்வெட்டுக்களில் கருவூர் மட்டும் 'மாநகர்' என்று கூறப்பெறுகின்றது.[11] மற்றிரு ஊர்களும் அவ்வாறு கூறப்படவில்லை. நகரம் என்ற அடைமொழியுடன் ஓர் ஊர் மட்டும் கூறப்பெறுகின்றது. அதுவே கோவியநகரம்.[12] புரம் என்ற அடைமொழியுடன் பத்துக்கும் மேற்பட்ட ஊர்கள் கூறப்பெறுகின்றன. கருவூரை முடிவழங்கு சோழபுரம்,[13] என்று கல்வெட்டுக்கள் கூறும். மேலும் கல்லாபுரம்,[14] இராஜராஜபுரம்,[15] பராந்தகபுரம்[16], கண்ணபுரம்[17] மாவண்டூரான வீரராஜேந்திரபுரம்,[18] வீர சோழபுரம்,[19] பொதுக்கயமான சோழபாண்டியபுரம்.[20] சீனாபுரம்[21] போன்ற ஊர்கள் கொங்குச் சோழர் கல்வெட்டுக்களில் கூறப் பெறுகின்றன. புரம் என்பது கோட்டை, அரண், படை ஆகியவற்றுடன் கூடிய ஊர்கள்.[22]

நியமம் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது. இப்பெயர் சங்க இலக்கயங்களிலும், சங்க காலச் சாசனங்களிலும் கூறப்பெறுகின்றது. கொடுமணல் பானை ஒட்டுச் சாசனங்களில் 'நிகம' என்று பொறிக்கப்பெற்றுள்ளது.[23] இது இலக்கியங்களில் 'நியமம்' என்று கூறப்பெறுகின்றது.[24] நிகமம் என்பதன் திரிபே தமிழில் நியமம் என்றாகிறது. வடமொழியில் நிகமம் என்பது வாணிகத்தலத்தையும் வாணிகக் குழுவையும் குறிக்கும் என்பர்.[25] சங்க காலத்துப் பொருள் தொடர்ந்து இடைக்காலக் கொங்கிலும் நிலைபெற்றிருக்க வாய்ப்பு உண்டு. மேலும் இடைக் காலத்து நியமம் என்ற பெயர் நவீன காலத்தில் 'நெகமம்' என்று வழங்கி வருகின்றது. கொங்கு நாட்டில் மூன்றுக்கும் மேற்பட்ட நிகமங்கள் உள்ளன.[26] இவை கொங்குச் சோழர்கால நியமங்களாக (நெகமம்) இருந்திருக்க வேண்டும்.

தாவளம்

பேரூர்க்கல்வெட்டில் 'கொற்றமங்கலமான மஞ்சிபுளித்தாவளம்' என்று கூறப்படுகின்றது.[27] சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு

'அறுபத்தி நான்கு கடிகைத் தாவளமும் தாவளத்திலிருந்து தன்மை வளர்க்கும் செட்டியும் செட்டிவீர புத்திரர்களும்' என்றுகூறும். பிரான் மலைக் கல்வெட்டும் இந்த வாசகத்தை அப்படியே தருகின்றது. இதனால் தென்னிந்தியா முழுவதும் அறுபத்தி நான்கு கடிகைத் தாவளம் இருந்ததாகக் கருதலாம். தருமபுரி மாவட்டத்தில் கிடைத்த இரண்டு மைல்கற்களும், வடார்க்காடு மாவட்டத்தில் கிடைத்த ஒரு மைல் கல்லும் 'நாவல் தாவளம்' என்றொரு தாவளத்தைக் குறிப்பிடுகின்றன.[28] தாவளம் பற்றி வேறு சில கல்வெட்டுக்களிலும் கூறப்படுகின்றது. இன்றும் கொங்கு நாட்டில் வேம்படிதாளம் (வேம்படிதாவளம்), தாளக்கரை என்ற ஊர்ப்பெயர்கள் உள்ளன. தமிழக எல்லைப் புறத்தை ஒட்டிக் கேரள மாநிலத்தில் சில தாவளங்கள் உள்ளன. வேலந்தாவளம், தாவளம், வண்டித்தாவளம் போன்ற ஊர்கள் உள்ளன.[29] ஆகையால் தாவளம் என்ற இடப்பெயர் இடைக் கால வாணிகத்தின் சிறப்பினைக் காட்டுகின்றது.

பழந்தமிழில் 'தாவளம்' என்பதற்குத் தங்குமிடம் என்று பொருள் கூறப்படுகின்றது.[30] இது கி.பி.10-ஆம் நூற்றாண்டிலிருந்து வழக்கத்திலிருக்கும் சொல். இச்சொல் பெரும்பாலும் மரப்பெயருடன் சேர்த்துக் கூறப்பெறுகின்றது. அவ்வாறு கூறுவதன் உண்மைக் காரணத்தைக் கூறுவது கடினமாக உள்ளது. தாவளம் என்பதற்கு இடம் நோக்கிப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொள்ளும் போது குறிப்பிட்ட கால இடைவெளிக்கிடையில் நடைபெறும் சந்தையாகக் கொள்ளலாம். அது வாரச்சந்தையாகவோ, மாதச்சந்தையாகவோ, மூன்று மாதத்திற்கொரு முறை முறையாக நடைபெறும் சந்தையாகவோ கருதலாம். மேலும் வணிகர்கள் பொருள்களுடன் வந்து விற்றுவிட்டுப் பொருள்களை வாங்கிச் செல்லுமிடமாகவோ இருக்கலாம். இதனை ஆங்கிலத்தில் Exchange Place என்று கூறுவர்.[31] தாவளத்தில் 'செட்டியும் வீரபுத்திரர்களும்' என்று கூறுவது வணிகர்களுடன் பாதுகாவலுக்கு வீரர்களும் இருந்தனர் என்பது உறுதிப் படுகின்றது.

நகரம்-கிராமம் வேறுபாடு

இடைக்காலச் சமூகத்தில் நகரத்தார் நாட்டார் போன்ற இரு பிரிவுக்கிடையில் வேறுபாடு ஏதுமில்லை. அதுபோலவே நகரம், நாடு (கிராமம்) ஆகியவற்றிற்கிடையில் வேறுபாடு இல்லை. இடைக்காலக்

கருநாடகத்தில் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாட்டினைத் தெளிவாகக் கூறுவது கடினம் என்பர்.[32] (சமூக வாழ்க்கையின் பல கூறுகள் நகரத்திற்கும் கிராமத்திற்குமிடையில் வேறுபாடின்றிக் காட்சி அளிக்கின்றன. தொழில் கூடங்கள், வங்கி (பண்டாரம்) செயல்பாடு, சந்தை, குழுமம், சங்கம் போன்றவற்றில் மட்டுமின்றி நம்பிக்கைகளிலும் அவ்வாறே வேற்றுமையின்றிக் காட்சியளிக்கின்றன.) வேறுபாடு என்பது சிறிது அளவுதானே தவிர இயல்பு தொடர்பான வேறுபாடு அல்ல. கிராமங்களில் நாட்டுப் புறத்தன்மையும், வேளாண்மையும் இயல்புகளாக வெளிப்பட்டுள்ளன. ஆனால் நகரங்களுக்குரிய நாகரிகமும் தொழில் மயத்தன்மையும் வாணிக வளமும் தெளிவாக அமைந்திருக்கவில்லை. (இடைக்காலக் கொங்கு நகரங்களில் நகரத்தன்மையோ, (தொழில்மயத்தன்மையோ இருந்ததற்கான சான்றுகள் தெளிவாக இல்லை.)

இடைக்கால நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையில் வேறுபாடு இல்லாதிருந்ததற்குக் காரணம் உண்டு. வாணிகப் பண்டங்கள் அனைத்தும் கிராமப் பகுதியிலிருந்து சென்றன. மேலும் நகரங்களில் கிராமப்புறங்களிலிருந்து வந்த வேளாளர்களே மிகுந்து வாழ்ந்தனர். அதனாலும் நகரத்தில் கிராமக் கூறுகளே மிகுந்திருந்தன. (வாணிக மையங்கள் நகரம் அல்லது கடைவீதி, வாரச்சந்தை என்பவற்றில் எதுவாக இருப்பினும் இயல்பு ஒரு தன்மைத்தாகவே இருந்தது. அதாவது பண்டங்கள் குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்லப்படுவதும் அவை கைம்மாறி வெவ்வேறிடங்களுக்குச் செல்வதும் அந்நாளைய பொருளியல் வாழ்க்கையில் சிறப்புக்கூறாக விளங்கியது.) அதனால் இடைக்கால நகரங்கள் என்பன பெரிய கிராமங்களின் அமைப்பேயன்றி வேறொன்றுமில்லையென்று கருதலாம்.

நகரவளர்ச்சியின் பின்னணி

இடைக்கால நகரங்கள் உருவாகி வளர்ந்தமைக்குப் பல காரணங்கள் கூறப்பெறுகின்றன. இடைக்கால இந்திய நகர வளர்ச்சியினைப் பற்றி ஆய்ந்தெழுதிய பி.டி.சட்டோபாத்யாயா குறிப்பிடும் காரணங்கள் பின் வருவன. (1) வாரச்சந்தை (அ) மாதச்சந்தை நடைபெற்ற இடம் காலகதியில் நகரமாக வளர்ந்தது. (2) பெருங்கோயில்

இருக்குமிடம் நகரமாக வளர்ந்தது. (3) துறைமுகங்கள் அருகில் நகரம் வளர்ந்தது. (4) சிற்றூர் , வாணிகத்தால் நகரமாகியது. (5) அரசு முயற்சியால் நகரம் உருவாகியது.[33] இவ்வைந்து காரணங்களில் மூன்றாவது காரணம் கொங்கு நாட்டிற்கு ஏற்புடைத்தன்று. காரணம் இங்கு கடற்கரை இல்லை. மேலும் பேராசிரியர் செண்பகலட்சுமி கூறும் காரணங்கள் எடுத்துக் காட்டத்தக்கவை. அவர் கூறும் காரணங்கள்;[34] (1) குறிப்பிட்ட பெருவழிகள் சந்திக்கும் இடத்திலிருந்த ஊர்கள் நகரமாகின. (2) வாணிகம் குறிப்பிடத்தக்க காரணமாக இல்லாவிட்டாலும் நகரம் உருவாக முதல் காரணமாக ஆகிவிடுகின்றது. (3) அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள் நகரமாக வளர்ச்சியடைந்தன. (4) சமயத்தலங்களும் நகரமாகின.

மேலே கூறப்பெற்ற காரணங்களில் வாணிகம், பெருவழி, அரசியல் செல்வாக்கு போன்ற மூன்று காரணங்கள் இடைக்காலக் கொங்கு நகரங்கள்உருவாவதற்குக் காரணங்களாக அமைந்தன. பெருங்கோயில்களின் பங்கு குறைந்த அளவே இருந்தது. காஞ்சிபுரம், குடந்தை, திருவிடை மருதூர், தில்லை போன்ற பெரிய கோயில் நகரங்கள் கொங்கில் இல்லை. அடிக்கீழ்த்தளம், எறிவீரபட்டணம் போன்ற படைவீடுகள் கொங்கு நகர ஆக்கத்திற்குக் காரணமாயின. எறிவீரபட்டணங்கள் கொங்கு நாட்டின் எல்லைப்புறத்தில் இருந்த பாடி வீடுகள்.

அரசியல் ஊக்கத்தால் நகரமாகிய ஊர்கள் சில. கடத்தூர், ஆனைமலை (நன்னனூர்), மன்னியூர் (அன்னூர்), முகுந்தனூர், கொழுமம், முட்டம், மாவண்டூர் போன்ற ஊர்கள் அவை. இவ்வூர்கள் கொங்கின் எல்லைப்புறத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள்.[35] இவ்வூர்கள் வேறுபட்ட சுற்றுப் (திணை) புறங்கள் (Ecological Zones) சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளன. அத்தகைய இடங்களே சிறந்த வாணிகத் தலங்களாகத் திகழ வாய்ப்புண்டு. அதற்குக் காரணம் வேறுபட்ட (திணை) நிலத்தில் விளையும் பொருட்கள் கைம்மாறும் இடமாக இவ்வூர்கள் இருந்துள்ளன.

பெருவழிகளும்–நகர வளர்ச்சியும்

பெருவழிகள் சந்திக்கும் இடமே நகரமாக உருவானதற்குக் கருவூரே சிறந்த சான்று. கரூர் வழியாகக் கங்கைக் கரையிலிருந்து

கன்னியாகுமரி வரை சென்ற பெருவழியும் (இன்றும் தேசிய நெடுஞ்சாலை) கோவை நாகப்பட்டினம் பெருவழியும் சந்திக்கும் இடத்தில் கரூர் உள்ளது.[36] மேலும் கொழுமம், இராஜராஜபுரம், கடத்தூர், ஆனைமலை, பேரூர், விஜயமங்கலம், சர்க்கார் பெரியபாளையம் (முகுந்தனூர்) திங்களூர், மங்கலப்பட்டி (தோட்ட மங்கலம் என்று கல்வெட்டுக் கூறும்) பழமங்கலம், அவினாசி, சேவூர், அன்னூர், திருமுருகன்பூண்டி போன்ற இடைக்கால வாணிகத் தலங்கள் பெருவழி சந்திப்பினால் உருவானவை.[37] இவற்றில் இராஜராஜபுரம், கடத்தூர், அவினாசி, சேவூர், அன்னூர், திருமுருகன்பூண்டி, முகுந்தனூர் போன்றவை கொங்கு நாட்டு உள்நாட்டு பெருவழிகளில் அமைந்த நகரமாகிய வாணிகத் தலங்கள்.[38]

கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இராஜராஜபுரம், வெள்ளலூர், துறவலூர், சோழமாதேவி, இடிகரை போன்றவை அரசியல் முக்கியத்துவத்தால் (கொங்குச் சோழரின் நிருவாக மையங்கள்) நகரங்களாக உருவாயின.[39] முட்டம், மாவண்டூர், கல்லாபுரம், மங்கலப்பட்டி மலை மக்களும், சமவெளி மக்களும் தங்களுடைய பொருட்கைளைப் பண்டமாக மாற்றிக் கொள்ளும் சந்தைகளாக உருவாகிப் பின்னர் நகரங்களாக உருவாயின என்பதில் ஐயமில்லை.

பெருவழிகள்

கொங்குநாட்டில் பல பெருவழிகள் நிலைபெற்றிருந்ததற்கான சான்றுகள் கிடைத்த வண்ணமுள்ளன. இந்தியாவிலேயே மிகப் பழமையான இராஜகேசரிப் பெருவழி சோழர் ஆட்சியின் தொடக்க காலத்தில் போடப் பெற்றது. அழகிய பாடல் வடிவில் அமைந்த இக்கல்வெட்டு இந்தப் பெருவழிக்கு மரநிழல் அமைத்ததைப் பற்றிக் கூறுகின்றது. [40]

"திருநிழலு மன்னுயிருஞ் சிறந்தமைப்ப
ஒரு நிழல் வெண்டிங்கள் போலோங்கி – ஒரு நிழல் போல்
வாழியர் கோச்சோழன் வளங்காவிரி நாடன்
கோழியர் கோக்கண்டன் குலவு"

மேலும் சோழர் காலத்தில் அமைக்கப் பெற்ற இப்பெருவழி

அப்படியே நிலைபெற்றுள்ளது. முப்பதடி அகலம் கொண்டது இப்பெருவழி. கொங்குச்சோழர் கல்வெட்டுக்களில் சேரனை மேற்கொண்ட சோழப்பெருவழி, அசுரர் மலைப்பெருவழி, சோழமாதேவிப் பெருவழி, கொழுமத்திற்குப் போகிற பெருவழி, காரித்துறைப் பெருவழி, பன்றி மலைக்குப் பெருவழி, பாலைப் பெருவழி, வீரநாராயணப் பெருவழி, நாட்டுப் பெருவழி போன்ற பெருவழிகள் கூறப்பெறுகின்றன.[41] வலைப்பின்னல் போன்ற பெருவழிகள் நிறைந்திருந்தமையால் வாணிகமும் போக்குவரத்தும் மிகுந்து காணப்பெற்றன.

மைல்கல்

கொங்கு நாட்டில் பண்டைய 'மைல்கல்' என்று கூறும் வகையில் ஏதும் கல் கிடைக்கவில்லை. ஆனால் கொங்கு நாட்டிற்கருகில் உள்ள தகடூர் நாட்டில் இரண்டு மைல்கற்கள் கிடைத்துள்ளன. ஒரு மைல்கல்லில் 'அதியமான் பெருவழி நாவல் தாவளத்திற்குக் காதம் 29' என்று கூறுகின்றது.[42] மற்றொரு மைல்கல்லில் 'அதியமான் பெருவழி நாவல் தாவளத்திற்குக் காதம் 27' என்று கூறப்பெறுகின்றது. அதனால் காதத்தின் அளவினை அறுதியிட்டுக் கூறலாம்.[43] இரண்டு மைல் கற்களுக்கிடையில் எட்டு கிலோ மீட்டர்கள் உள்ளன. ஆகையால்ஒரு காதம் என்பது நான்கு கிலோமீட்டர் என்று உறுதியாகக் கூறலாம்.

மைல்கல்லில் கூறப்பெறும் தொலைவினை கற்றறிந்தோர் மட்டுமின்றிக் கல்லாதவர்களும் அறிந்து கொள்ள வகை செய்யப் பெற்றுள்ளது. இருபத்தொன்பது காதம் என்று எழுதப் பெற்றுள்ள கல்லில் இரண்டு பெரிய வட்டங்களும் ஒன்பது சிறிய வட்டங்களும் உள்ளன. பெரிய வட்டம் பத்துக் காதம் என்ற அளவினையும் சிறிய வட்டம் ஒரு காதத்தினையும் குறிக்கும்.

கொங்குச்சோழர் கால வாணிகவளர்ச்சி

இடைக்காலக் கொங்கின் வாணிக வளர்ச்சி முறையாக ஆய்வு செய்யப்படாத பொருளாகவே உள்ளது. கி.பி.9-10ஆம் நூற்றாண்டு முதல் கோயில் கொடைகளில் காசுகளே மிகுதியாக உள்ளன. வெள்ளலூர், ஈரோடு, பொன்னிவாடி, பிரமியம், ஐவர்மலை, சேவூர், ஆலத்தூர், நெரூர், ஆனைமலை, நல்லூர் ஆகிய ஊர்க்கல்வெட்டுக்களில்

காசுக் கொடையைப் பற்றிய செய்திகளே மிகுதியாக உள்ளன.[44] காசுகள் மிகுதியாக அளிக்கப் படுவது வாணிகத்தின் செல்வாக்கினைக் காட்டுகின்றது. மேலும் அத்திகோசத்தார் (யானை வணிகர்), வீரகோசத்தார் (குதிரை வணிகர்), நானாதேசி போன்ற வணிகக் குழுவினர் சமூகத்திலும், அரசியலிலும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.[45] கி.பி.9–11ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் கொடையளித்தோர் கொங்கு நாட்டிற்கு வெளியிலிருந்து வந்தவர்கள். அதிலும் வணிகர்களே மிகுதி. உள்ளூர்க் குடிகள் அளித்த கொடைகள் குறைவே.

கி.பி.12–13ஆம் நூற்றாண்டில் வாணிகம் பேரளவில் வளர்ந்தது. அந்த வளர்ச்சியினை விளங்கிக் கொள்வதற்குச் சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டே சிறந்த சான்று.[46] அக்கல்வெட்டு சுந்தர பாண்டியனின் காலத்தினைச் சேர்ந்ததாக இருந்தாலும் கொங்குச் சோழர் காலத்து வாணிக வளர்ச்சியினைப் பிரதிபலிப்பதாகவே கொள்ளலாம். கொங்குச் சோழர்களில் இறுதி அரசனாகிய மூன்றாம் விக்கிரமசோழனின் உறவினனே இந்த சுந்தரபாண்டியன். சர்க்கார் பெரியபாளையத்தில் கிடைக்கும் பாண்டியர் கல்வெட்டுக்களில் கொங்குச் சோழர் ஆட்சி பற்றிய குறிப்பும் உண்டு. ஆகையால் சுந்தர பாண்டியன் காலத்து வணிகர் கல்வெட்டைக் கொண்டு கொங்குச்சோழர் கால வாணிகம் பற்றி ஆய்வு செய்யலாம்.

நகரக்கோயில்கள்

நகரங்கள் கோயில் வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பதற்குக் கொழுமம், கடத்தூர், அவினாசி, திருமுருகன் பூண்டி, சேவூர் போன்ற ஊர்களே சிறந்த சான்று. இவ்வூர்களில் பல்வேறு வகைப்பட்ட தொழில் குழுவினர் வாழ்ந்துள்ளனர். கடத்தூரிலும், விஜயமங்கலத்திலும், சேவூரிலும் தொழிற் குழுவினர் கட்டிய கோயில்கள் உள்ளன. கடத்தூர் சித்திரமேழி ஈஸ்வரம்,[47] விஜயமங்கலம் சித்திரமேழி விண்ணகரம்.[48] சேவூரில் அக்கசாலீஸ்வரம்,[49] ஆனைமலையில் ஆனைக்கீஸ்வரம்,[50] போன்ற கோயில்கள் கட்டப்பெற்றன. மாவண்டூரில் (வெள்ளியங்காடு) பதினெண் ஈஸ்வரமுடையார் கோயில் என்ற கோயிலும்[51] குறிப்பிடத்தக்கது. அந்தந்த ஊரில் அந்தந்தத்தொழில் குழுக்கள் நிலை பெற்றிருந்தன என்று கருத வாய்ப்புண்டு.

படைவீடு – நகரம்

கொங்குச் சோழராட்சியின் இறுதியில் கொங்குநாடு முழுவதும் படைவீடுகளும், படை வீரர்களும் நிறுத்திவைக்கப் பெற்றனர். அதனால் குறிப்பிட்ட இடத்தில் மக்கள் தொகை மிகுதியாகியது. அந்த மக்கள் தொகை, மிகுதியான நகரம் உருவாவதற்குக் காரணமாயிற்று. அந்த நகரங்களே அடிக்கீழ்த்தளம், எறிவீரபட்டணம் ஆகியன. கொங்கு நாட்டில் மூன்றுக்கும் மேற்பட்ட அடிக்கீழ்த்தளங்களும், ஐந்துக்கும் மேற்பட்ட எறிவீரபட்டணங்களும் இருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.[52]

அடிக்கீழ்த்தளம்

அன்னூர் (மன்னியூர்), திருமுருகன்பூண்டி, இராஜராஜபுரம் ஆகிய ஊர்களில் அடிக்கீழ்த்தளம் செயல்பட்டது. அடிக்கீழ்த்தளம் என்பதன் பொருள் அறிந்து கொள்வது கடினமாக உள்ளது. இது பெரும்பாலும் வணிகர்கள் வைத்திருந்த படைகள் தங்கியிருந்த படைவீடு ஆகலாம். அன்னூர்க் கல்வெட்டு இதற்குச் சிறந்த சான்று.

> ஸ்வஸ்தஸ்ரீ கோவிராசகேசரி பண்மரான திரிபுவனச்
> சக்கரவர்த்திகள் சிரிவீரராசேந்திர தேவர்க்கு யாண்டு
> இருபத்தொன்பதாவதுக்கெதிர் ஆறாவது அற்பிகைத் திங்கள்
> முதலாக வடபாரிசார நாட்டில் சாலியநகரத்தோமும், வாணிக
> மடிகையொமும் ....யோம்
>
> அக்கசாலை களோமும் மெத்தலை தஞ்சாவூரான மந்நியூர்
> அடிக்கீழ்த்தளத்தில் மூத்த சமக்கட்டான அமட்டமாகண்டன்
> தெரிந்த கைக்கோளரோமும் சாமந்தன் சேனாபதிகளோமும் ......[53]

இக்கல்வெட்டில் அடிக்கீழ்த்தளத்துப் படையைப் பற்றியும் படைசேனாபதிகளைப் பற்றியும் குறிப்புக்கள் கிடைக்கின்றன. ஆகையால் அடிக்கீழ்த்தளம் என்பது வணிகர்களோடு தொடர்புடைய படைகள் என்று கொள்வதே சிறப்பு. அடிக்கீழ்த்தளங்கள் அரசியலிலும் சிறப்பிடம் பெற்றிருந்தன.

எறிவீரப்பட்டணம்

எறிவீரப்பட்டணம் என்பது பெருவழி வீரர்கள் உருவாக்கிய வீரப்பட்டணம் என்று கூறுவர். கொங்கு நாட்டில் ஐந்திற்கும் மேற்பட்ட எறிவீரப் பட்டணங்கள் இருந்துள்ளன.[54] நீலம்பூரில் ஏற்படுத்தப் பெற்ற எறிவீரப் பட்டணத்தில் யார்யார் பங்கேற்றார்கள் என்பது பற்றிய குறிப்புக்களும் உள்ளன. அக்கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

> "ஸ்வஸ்தஸ்ரீ தென்கரை நாட்டு நீலம் போர்னானா தேசி திசைமடி எறியும் எறிவீர பட்டனத்து வீரபட்டனக்கல் அஞ்சுகரை நாடும் அடிக்கீழ் தளமும் நகரமிரண்டும் பதிணெண் விஷயமும் எம்மிலிசைந்த படித்தளத்தில்நாலு வாசலில் பட்டாயர் வசம் நாலு காலும் சிங்காதனமும் உடையாராக"[55]

பெரியார் மாவட்டம் பவானி வட்டம், வேம்பத்தி என்ற ஊரில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்றும் 'எறிவீரப் பட்டணம்' பற்றிக் கூறுகின்றது.[56] இக்கல்வெட்டில் தொண்டை நாடு, பாண்டி நாடு போன்ற நாடுகளிலிருந்து வந்த நானாதேசி கவறை, வளஞ்சியர் போன்ற வணிக வீரர்கள் உருவாக்கிய எறிவீரப் பட்டணம் என்று கூறுகின்றது. கொங்கு நாட்டில் பருத்திப் பள்ளி, அரையம் போன்ற வாணிகத் தலங்கள் கூறப்பெறுகின்றன. இக்கல்வெட்டு எறிவீரப்பட்டணம் அமைக்கப்படும் தன்மை பற்றியும் அதில் பங்கேற்பவர்கள் பற்றியும் கூறுகின்றது. அண்மையில் பெரியார்மாவட்டம் மங்கலப்பட்டி என்ற ஊரில் ஒரு எறிவீரப் பட்டணம் இருந்தமை பற்றிய குறிப்புக்கள் கொண்ட கல்வெட்டு கண்டு பிடிக்கப் பெற்றுள்ளது.[57] (அது தோட்டமங்கலம் என்ற ஊரைச் சேர்ந்த எறிவீரபட்டணம். கொங்கு நாட்டு நகர வளர்ச்சியில் எறிவீரப்பட்டணம் முக்கிய வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கின்றது என்று கூறலாம்.)

கொங்கு நாட்டு வளர்ச்சி

நகரநம்பியர்

சர்க்கார் பெரிய பாளையம் கல்வெட்டு நகரங்களில் வாழ்ந்த வாணிகக் குடிமக்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது.

> "செட்டியுஞ் செட்டி வீரபுத்திரர்களும் மலை மண்டலத்து பல நகரங்களும் நான்று திசைப்பதிநெண் விஷயத்தோமும்
> பதிநெண்விஷயப்

பெருநீரவியாரோமும் திசையாயிரத்தைந் நூற்றுவரோமும் திசையாயிரத்தைந்
நூற்றுப்பெருநீரவியாரோமும் ஐந்நூற்றுவன் பெருநீரவியாரோமும் எங்குள்ள நாட்டுச் செட்டி தளங்களும் நம்மக்கள் அறுபத்து நான்கு முனையும் முனைவீரக் கொடியாரோமும்.''[58]

என்று வணிகர்களையும், வணிக வீரர்களையும் பற்றிக் கூறும் கல்வெட்டு வாசகம் குறிப்பிடத்தக்கது. இங்கு செட்டி, பதினெண் விஷயத்தார், திசையாயிரத்தைந்நூற்றுவர், நாட்டுச்செட்டிகள் போன்றவர் குறிப்பிடப்படுகின்றனர். கையொப்பமிட்டவர்களில் மணிக்கிராமத்தார். கவறை வளஞ்சியர் போன்ற வணிகப் பிரிவினர் கூறப்பெறுகின்றனர். சேவூர், குண்டடம், பேரூர், அன்னூர், கவையன் புத்தூர் போன்ற ஊர்களில் செக்கார் (வாணிக மடிகை) கூறப்பெறுகின்றனர்.[59]

கொங்குநாட்டு நகரங்களில் பல்வேறு வகைப்பட்ட வணிகர்கள், கம்மாளர், தச்சர், பொற்கொல்லர், குலாலர் போன்றவர்கள் வாழ்ந்தனர். அதுமட்டுமில்லாமல் நிமிந்தகாரர், மன்றாடி, தேவரடியார், தேவகன்மிகள், வெள்ளாளர் போன்றவர்களும் வாழ்ந்துள்ளனர். கற்சிற்பம் செய்யும் கல்தச்சன், சிற்பாசிரியன், செப்புத்திருமேனிகளைச் செய்யும் சிற்பாசிரியன், பட்டு நெசவு செய்யும் சாலியர், கைக்கோளர் போன்றவர்களும் வாழ்ந்துள்ளனர்.[60] மாலை கட்டும் பண்டாரம் போன்ற குடியினரும், இசை வல்லுநரும் வாழ்ந்துள்ளனர். ஆனால் பர்ட்டன்ஸ்டீன் கூறுவது போல் பெருங்கோயிலால் வளர்ந்த நகரங்கள் அல்ல கொங்கு நாட்டு நகரங்கள்.[61] மேலும் இங்கு முழுமையும் வாணிக வளர்ச்சியினால் உருவான நகரங்கள்.

கொங்கு நாடு பல மண்டலங்களைத் தொட்டு நிற்பதால் பல வாணிகர்களும் வந்து தங்கி வணிகம் செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும் வடுக நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்குமிடையில் பெருவழித் தொடர்புகள் கஜலட்டி–காவேரிபுரம் கணவாய் வழியாக ஏற்பட்டன.[62] பெருவழிகளில் பெருவழிப்படைகள் இருந்தமையால் வாணிகம் தழைத்தது. இடைக்காலக் கொங்கு நகரங்களில் படைப்பிரிவு மிகுந்திருந்தமைக்குப் பலகாரணங்கள் உண்டு. அவற்றில் பழங்குடிகள் இந்நாட்டுப் பகுதியில் நிறைந்திருந்ததும் ஒரு காரணம் ஆகலாம்.

இடைக்காலக் கொங்கு நாட்டில் நகரங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இடையில் வேறுபாடு இருந்ததற்கான சான்றுகள் மிகக்குறைவே. நகரங்களிலும் சிற்றூர்களிலும் வாழ்ந்தவர்களில் வேளாண்குடிகள் மிகுந்து காணப் பெற்றனர். அதனால் வேறுபாடு கண்டறிவது கடினமாக உள்ளது. மேலும் நகரங்களுக்குப் 'புரம்' என்ற விகுதி பயன்படுத்தப் பெறுகின்றது. இது பெரும்பாலும் வணிக மையத்தினைக் குறித்து வந்தது. மாநகரம் என்பது இடப்பெயர்களில் ஒருவகை மாதிரி என்றே கொள்ளலாம். இந்த வகையில் கொங்கு நாடே இடைக்கால வரலாற்றில் மிகுந்த மாநகரங்களைக் கொண்டு விளங்கியது. நகரங்களையும், பெருவழிகளையும் பாதுகாக்க வீரர்களும், படைவீடுகளும் விளங்கியிருந்தனர். அவற்றில் இடங்கைப் படையினரும், இடங்கைச் சாதியினரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். நகரங்களும், மாநகரங்களும் உருவாவதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் கொங்கு நாட்டு நகரங்கள் உருவாவதற்கு வாணிகமும், பெருவழி வளர்ச்சியும் காரணங்கள் எனலாம். இந்த வளர்ச்சியில் அந்நாளைய மன்னர்களும் பெரும்பங்காற்றியுள்ளனர்.

அடிக்குறிப்புகள்

1. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ.
2. இராசேந்திரன், அ., (ப.ஆ) தொல்லியல் கருத்தரங்கு, பக். 74 – 75
3. கல்வெட்டு (காலாண்டிதழ்) 21, ப. 35
4. ஆனைமலையில் அத்திகோசத்தார் கல்வெட்டு கிடைத்துள்ளது. ஐவர்மலை.
5. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், உதகை, அவர்கள் கூறிய செய்தி.
6. Malathi, K.O., Trade and Urbanization in medieval Kongu (M.Phil Diss Bharathiyar University, Coimbatore 1991) p. 104.
7. Ibid.

8. Krishnan, K.G., Chitrameliperiyanadu, p. 4.

9. கொழுமம் கல்வெட்டுக்கள் , தொ.பொ.ஆ.கோ.

10. சுந்தரர் தேவாரம், வெஞ்சமாங்கூடல், திருமுருகன்பூண்டி பதிகங்கள்.

11. ARE 335 of 1927-28

12. Vaidyanathan, K.S., The Ancient Geogrphy of the Kongu Country, p. 75.

13. ARE 166 of 1936 - 37

14. கொழுமம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

15. ARE 213 of 1920

16. Ibid 139 of 1920

17. S.I.I. Vol. VIII, No. 442.

18. கோவை மாவட்டம் வெள்ளியங்காட்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப் பெற்ற இடைக்கால நகரம் ஒன்றில் சோழர்காலக் கோயில் ஒன்று கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. அதில் உள்ள கல்வெட்டுக்களில் ஒன்றில் மாவண்டூரான வீரராசேந்திரபுரம் என்று கூறப்பெறுகின்றது. செய்தி கூறியவர் ஊட்டி கல்வெட்டாய்வாளர் பூங்குன்றன் . ஆர்.

19. Vaidyanathan, K.S., op. cit. p.160

20. Ibid.

21. ARE 590 of 1905

22. Tamil Lexicon Vol. V. 2770

23. சுப்பராயலு. ஒய் (கல்வெட்டியல்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர் – 5) கூறிய செய்தி. நாள்: 10.05. 90

24. பதிற்றுப் பத்து, செய்யுள் 75,

25. Sircar, D.C., Indian Epigraphical Glossory, p. 217.

26. பெரியார் மாவட்டம் சக்தி வட்டம், இக்கரை நெகமம், அக்கரை நெகமம், கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் நெகமம் ஆகிய ஊர்கள் குறிப்பிடத்தக்கவை.

27. பூங்குன்றன், ஆர்., பேரூர், ப. இல்லை.

28. Malathi, K.O., op.cit. p. 75

29. கந்தசாமி, எஸ்.பி., பேராசிரியர் வரலாற்றுத்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி கூறிய செய்தி, நாள். 05.12.90.

30. Tamil Lexicon Vol. III, p. 1851.

31. Chattopadhyaya, B.D., Urban Centres in Early Medieval India An overview, in Situating Indian History, (Ed by Romila Thapar et. al), p. 19.

32. Kuppusamy, G,R., Economic conditions in Karnataka AD. 973 - AD 1336, p. 95.

33. Chattopadhyaya, B.D., op. cit. p. 21

34. Chenpagalakshmi, R., Growth of urban Centres in South India, Kudemukku Palaiyarai the Twin - city of the Colas. Studies in History Vol. I, No.1 (1979), p. 26.

35. பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர் ஊட்டி (உரையாடல்) நாள் 10.2.90.

36. A Historical Atlas of South Asia pp. 24 and 178.

37. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை) கூறிய செய்தி. நாள், 25.06.90

38. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, பக். 24 – 25

39. இராஜசேகரதங்கமணி. ம, (வரலாற்றுத்துறை பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, கரூர்) கூறிய செய்தி, நாள். 30.6.90

40. பூங்குன்றன், ஆர். கல்வெட்டாய்வாளர் முன்.கு.நூ,ப, இல்லை.

41. Vaidyanathan. K.S., op. cit. pp. 69 - 72

42. Malathi. K.O., op. cit: p. 58

43. Ibid

44. பூங்குன்றன். ஆர், திருமுருகன் பூண்டி கோயிற் கொடைகள், திருமுருகன்பூண்டி அருள்மிகு மங்களாம்பிகை உடனமர் மாதவனேசுவரர் கோயில் திருக்குடமுழுக்காட்டு விழாமலர், ப. 65.,

45. இராசேந்திரன், ஆ. (ப. ஆ) முன். கு. நூ. ப .75

46. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ. இக்கல்வெட்டில் கொங்கில் ஒன்பது மாநகரங்கள், தாவளங்கள், வளர்புரங்கள், பட்டணங்கள், இருந்தமை பற்றிய விரிவான செய்திகள் கிடைக்கின்றன.

47. கடத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

48. ARE 565 of 1905

49. சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

50. புவனேசுவரி, க.அ. முன்.கு.நூ.ப. 99

51. வெள்ளியங்காடு கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

52. புவனேசுவரி, க.அ. முன்.கு.நூ.ப. 36.

53. மேலது, பக். 82 – 88.

54. Malathi. K.O., op. cit. p.61

55. பொன்னிவாடிக் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

56. இராசு, செ., கலைமகள் கலைக்கூடம், பக். 187 - 88

57. அமெரிக்காவில் உள்ள வெஸ்ட் மிஷிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆலன் ஜெகரில் அவர்கள் ஆய்வின் போது கண்டுபிடித்தவை. கோவை அகழ்வைப்பகத்தில் 1.12.1992. அன்று ஆற்றிய உரையில் குறிப்பிட்ட செய்தி.

58. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு தொ.பொ.ஆ.கோ.

59. Malathi, K.O., op.cit. p. 89.

60. Ibid

61. Burton Stien, Peasant State and Society in Medieval South India, p. 248

62. Malathi, K.O., op. cit. p. 52.

63. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

64. அவினாசிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

65. S.I.I. Vol. V.No. 228.

67. அவினாசிக் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

68. அவினாசிக் கல்வெட்டுக்கள் சர்க்கார்பெரியபாளையம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

69. போளுவாம்பட்டி அகழ்வில் செங்கல் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் நொய்யலாற்றங்கரையில் ஒரு ‘செங்கல்’ கட்டடப்பகுதி கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

70. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

பொருளியல் வாழ்க்கை

கொங்குச் சோழர் காலத்துப் பொருளியல் வாழ்க்கை இவ்வியலில் பேசப்படுகின்றது. சோழர்கள் தென்னிந்தியா முழுவதும் நாடுவளம் படுத்து நயும் குடி ஓம்பிப் பெருமை பெற்றார்கள். இடைக் காலத்தில் வேளாண் வளர்ச்சியும் நாட்டுப்புற வாழ்க்கையும் குறிப்பிடத்தக்க நிலைக்கு உயர்ந்து நின்றன. வேளாண்நிலத்தின் பரப்பு மிகுதி ஆக்கப்பெற்றது. அர்த்தசாத்திரம் கூறுவது போல அரசன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதி வருவாயின்றி வீணாகி நிற்கக்கூடாது என்ற கருத்தே மேலோங்கி நின்றது. அந்த முயற்சியில் புதுப்புதுக் குடியேற்றங்களை உருவாக்க வேண்டும் என்று கௌடில்யர் கூறுவார்.[1] இந்தக் கோட்பாட்டினை வலியுறுத்தும் வகையில் சோழர் ஆட்சிமுறை இருந்தது. சோழர்கள் தாங்கள் வென்றடக்கிய பகுதியில் சமுதாய மாற்றத்தினையும், பொருளியல் மாற்றத்தினையும் கொண்டு வருவதில் முனைப்புடன் நின்றனர். அதில் வெற்றியும் கண்டனர்.

வேளாண்வளர்ச்சி

தம் ஆட்சியின் கீழிருக்கும் மக்களை வேளாண்மையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தில் வரி நீக்கம் அல்லது வரி குறைப்பு செய்து ஊக்கப்படுத்தினர். இதற்குக் கருநாடக மாநிலம் கோலார் மாவட்டம் முல்பாகல் வட்டம், ஆவனியில் கிடைக்கும் கல்வெட்டே சிறந்த சான்று.[2] கொங்குநாட்டில் இதுபோன்ற கல்வெட்டுக்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் மரபுவழிப்பட்டயங்கள், கதைகள் வரிச்சலுகை பற்றி கூறுகின்றன.[3] சோழப்பேரரசு கொடுத்த ஊக்கத்தால் பழங்குடிகளும், பிறபகுதியிலிருந்து குடிபெயர்ந்த சில வேளாளர்களும் வேளாண்மையில் ஈடுபட்டனர்.

காடு கொன்று நாடாக்கியது

கொங்குச் சோழர் காலத்தில் காட்டுப் பகுதிகள் அழிக்கப்பெற்று வேளாண்நிலமாக மாற்றப்பெற்றன. அதற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. குன்றத்தூர்க் கல்வெட்டு வெள்ளிரவழிப் பகுதியில் காடு கெடுத்து வேளாண் நிலமாக்கியமை பற்றிக் கூறுகின்றது.[4] புதிதாகத் தேவதானம் உருவாக்கும் போது காடு

கொன்று வேளாண் நிலமாக மாற்றியுள்ளனர். அன்னூர்க் கல்வெட்டில் இது பற்றிப் பேசப்படுகின்றது.[5] பேரூர்க் கல்வெட்டுக்களும் காடு கொன்று நாடாக்கியமை பற்றிப் பேசுகின்றன.[6] சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுகள் அனாதி பாழாய்க் கிடந்த ஊர்கள் தேவதானமாக அளிக்கப்பெற்றன என்பதைப் பற்றியே பேசுகின்றன.[7] இதுவும் வேளாண்மை வளர்ச்சியில் கொங்குச் சோழர்களும், கொங்குப் பாண்டியர்களும் காட்டிய ஈடுபாட்டினைச் சுட்டுகின்றது எனலாம்.

பிரமதேயங்கள் கொங்கில் குறைவு. மேலும் அவை ஆற்றங்கரை ஓரத்தில் உருவாக்கப் பெற்றன. கொங்குப் பிரமதேயங்கள் பொருளியல் சிறப்புடையவை அல்ல. பெயரளவுக்குப் பிரமதேயங்கள். புதுப்புது ஊர்கள் உருவாக்கப் பெற்றவை பற்றி ஏற்கனவே எழுதப் பெற்றுள்ளது. புத்தூர்கள் வேளாண் வளர்ச்சிக்கும், மக்கள் பெருக்கத்திற்கும் காரணமாயின. மக்கள் பெருக்கம் காடுகொன்று வேளாண் நிலமாக மாற்றக் காரணமாயிற்று. வேளாண் நிலங்களில் புஞ்சை வேளாண்மையும், காட்டு வேளாண்மையும், தோட்ட வேளாண்மையும் சிறப்புற்றன. கரைவழி வேளாண்மை ஆற்றங்கரை ஓரத்தில் சிறப்புற்றது. மிகக்குறைந்த அளவே கரைவழி வேளாண்மை நடைபெற்றது.

மன்னறை

மன்னறை என்ற பெயர் கரூர், கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், சோழமாதேவி, கண்ணாடிபுத்தூர், போளுவாம்பட்டி, பேரூர், கோயம்புத்தூர் ஆகிய ஊர்க்கல்வெட்டுக்களில் பேசப்படுகின்றன.[8] கோயிலுக்குத் தானம் அளிக்கும் போதும் குறிப்பிட்ட மன்னறையிலிருந்து நிலம் அளிப்பதாகக் கூறப்பெறுகின்றது. மன்னறை பெரும்பாலும் அரசர்கள் பெயராலும், அரசிகள் பெயராலும் வழங்கப்பெறுகின்றன. சோழநாட்டிலும், வசக்கல், மயக்கல், மசக்கல் போன்ற பெயர்களும் அரசன், அரசி ஆகிய பெயர்களில் வழங்கப் பெற்றதைப் பற்றிக் கல்வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன.[9] மசக்கலும், மன்னறையும் ஒரு பொருள் நுதலிய சொற்களா என்பது புலப்படவில்லை. மன்னறையில் குறிப்பிட்ட பகுதியை விலைக்கு வாங்கிக் கோயிலுக்கு அளிக்கப் பெற்றதைப் பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[10] ஆகையால் மன்னறை என்பது அரசனே காடழித்து நிலத்தை வேளாண்நிலமாக

மாற்றியமைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன என்று கருதலாம். அல்லது ஊர் மன்றுகள் (மேய்ச்சல் நிலம்) வேளாண்நிலமாக மாற்றப் பெற்றதாகலாம்.[11] பெரும்பாலும் இரண்டாவதாகக் கூறப்பெற்றதே சிறப்புடையதாகலாம். காரணம் தேவதான ஊர்களில் மன்றாட்டு என்றொரு பிரிவு கூறப்பெறுகின்றது. இப்பிரிவும் மன்று என்ற சொல்லின் அடியாக உருவானது என்று கருதப்பெறுகின்றது.[12] மன்னறை, மன்று, மன்றாட்டு, மன்றாடி ஆகியவை ஒன்றற்கொன்று தொடர்புடைய சொற்களாகக் காட்சியளிக்கின்றன.

வெள்ளாண்வகை

கொங்குச்சோழர் ஆட்சியில் வெள்ளாண் வகை நிலம் குறிக்கப் பெறவில்லை. வெள்ளாண் வகை என்பது நிலவுடைமையாளர்க்குரிய ஊர்கள் அல்லது நிலம்[13] என்று கொள்ளலாம். கொங்கு நாட்டில் நிலவுடைமை தனியார்க்கு இருந்தமை பற்றிய கல்வெட்டுச் செய்தி ஏதும் கிடைக்கவில்லை. அப்படியே இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கொங்குச் சோழரின் நானூறு ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஐந்து அல்லது ஆறு இடங்களில் நிலத்தில் தனிவுடைமை பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.[14] பெரும்பாலும் நிலம் கோயிலுக்கு அல்லது ஊர்ச்சபைக்கு அல்லது சாமந்தர்களுக்கு உரியதாக இருந்துள்ளதே ஒழிய உழுபவர்க்குச் சொந்தமாக இருக்கவில்லை. ஊராண்மைக்காணி, மன்றாட்டுக் காணி, தச்சாச்சாரியக் காணி போன்றவை தொழிலுக்கு அளிக்கப் பெற்ற நிலமாகத் தெரிகின்றதே ஒழிய சோழ நாட்டிலிருந்தது போன்ற தனியுடமை இருந்தமைக்கான சான்று கிடைக்கவில்லை. அதனால் தான் கொங்கில் வெள்ளாண் வகை நிலம் குறிக்கப் பெறவில்லை. கரூர்க் கல்வெட்டில் மட்டும் ஒரு வெள்ளாண் வகை குறிக்கப் பெறுகின்றது.[15] கரூர்ப் பகுதி தஞ்சைச் சோழர்களின் நேரடி ஆட்சியிலிருந்தது. அதனால் நிலவுடைமையும் பிறவும் தஞ்சைச்சோழர் அரசியலைப் பின்பற்றி அமைந்தன. அதனால் வெள்ளாண் வகை கரூர்க் கல்வெட்டில் கூறப்பெறுகின்றது. பிற பகுதிகளில் வெள்ளாண் வகை நிலம் கூறப்பெறவில்லை.

கொங்குச் சோழர் காலத்தில் பத்துக்கும் குறைவான குறிப்புக்களே நிலத்தில் தனி உடைமை பற்றிப் பேசுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுக்கள் நில உரிமை பற்றிக் கூறவில்லை.

கோயிலுக்கும் ஊர்ச்சபைக்கும் மட்டுமின்றி அரசனுக்கும் நிலம் சொந்தமாக இருந்தது. அரசுப்பணியாளர்களுக்குச் சீவிதமாக அளிக்கப் பெற்ற நிலம் தனிவுடைமையாக இருந்துள்ளது.[16] பிற நிலங்கள் உழுதுண்பதற்கு மட்டும் உரியது. உரிய கடமையைச் செலுத்தி விட்டு உழுதுண்டு வாழ்ந்துள்ளனர்.

உழுவித்துண்போர் என்ற நிலையில் யாரும் இல்லை. சாமந்தர்களுக்கு நிறைய நிலம் இருந்தமையால் அவர்கள் மட்டும் உழுவித்துண்பவர்களாக இருந்திருக்கலாம். மேலும் சில பிரிவினர் (சிவபிராமணர், மூவேந்த வேளான், வேளான்) உழுவித்துண்பவர்களாக இருந்திருக்கலாம். உழுதுண்பவர்களாகவே இருந்துள்ளனர். அதற்குக் காரணம் உண்டு. உழுதவர்கள் அனைவரும் ஒருகுடியைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரு ஊரில் இரண்டு அல்லது மூன்று குடியினர் இருந்ததால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் குறிப்பிட்ட குடியினர் மட்டும் உழுது வாழ்ந்தனர். இந்தப் பகுதிக்கும், வாழ்விடத்திற்கும் 'வளவு' என்று பெயர் கூறப்படுகின்றது.[17] ஆகையால் கொங்கில் நிலம் ஒரு கூட்டம் பொதுவாய் அனுபவிக்கிற நிலையில் இருந்தது என்று கருத வேண்டியுள்ளது. நில விற்பனைகூட மன்றத்தில் நடைபெறுகின்றது. மன்றம் பழங்காலத்தில் ஊர்மக்கள் அனைவரும் கூடும் இடமாக இருந்தது. மேலும் ஒரு குறிப்பிட்ட குடியினர் (இரத்த உறவு உள்ளவர்) கூடினார்கள். ஆகையால் குடி முழுவதும் ஒற்றுமையாகச் செயல்பட்டனர். நில உரிமையிலும் பொதுவாக வைத்து அனுபவித்தனர்.

தஞ்சைச்சோழர்களின் ஆட்சியின் தொடக்கத்தில் நிலவுடைமை பெரும்பாலும் பொதுவாக வைத்து அனுபவிக்கப் பெற்றது என்று கருதப்பெறுகின்றது.[18] பொதுவாக அனுபவிக்கின்ற நிலத்தை ஆண்டாண்டுதோறும் கூறிட்டுப் பயிரிடுவர். நிலத்தைக் கூறிடுவதால் ஓராண்டில் கிடைத்த நிலப்பகுதி அடுத்த ஆண்டில் வேறொருவர் கைக்கு மாறிடலாம். காரணம் கூறு செய்யும்போது திருவுளச் சீட்டு (Lot) பயன்படுத்தப் பெற்றது. அதனால் திருவுளச் சீட்டு குறிப்பிட்ட நிலப்பகுதி யாருக்குச் செல்வதாக விழுகின்றதோ அவருக்கு அந்தப்பகுதி அந்த ஆண்டிற்கு உரிமையுடையதாகும். அடுத்த ஆண்டிற்கு அந்த நிலம் வேறொருவருக்கும் மாறலாம். இவ்வாறு ஆண்டாண்டு தோறும் பிரித்துக் கொள்வதற்குக் 'கரையீடு' என்று கல்வெட்டுக்கள் பேசுகின்றன.[19]

கரையீடு கரையோலை போட்டு எடுத்தனர்.[20] ஆனால் கொங்கில் நிலம் குடியினர் அனைவருக்கும் சொந்தம். அதனால் கரையீடு செய்யப் பெறவில்லை என்று கருதலாம்.

நீர்ப்பாசனம்

கொங்கில் வேளாண்மை சிறப்புறுவதற்கு முதன்மைக் காரணம் நீர்ப்பாசனம். ஆற்றங்கரை ஓரத்தில் கால்வாய்வெட்டி மருத வேளாண்மை சிறப்புறச்செய்தனர். கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், சோழ மாதேவி போன்ற ஊர்க்கல்வெட்டுக்களில் வாய்க்கால்கள் வெட்டி மருத வேளாண்மை வளரவழி செய்தனர் என்று பேசப்படுகின்றது.[21] வாய்க்கால்களின் பெயர்களில் அரசர் பெயர்களும், அரசி பெயர்களும் இடம் பெற்றுள்ளன.[22] அதனால் இக்கால்வாய்களின் அரசர்கள் பொருள் உதவி செய்தனர் எனலாம். மேலும் அரசு அதிகாரிக்கும், நீர்ப்பாசன வளத்தினைப் பெருக்கினர். பெருக்கவும் நீர் நிருவாகம் விரிவானது. அணைகட்டுதல், கால்வாய் வெட்டுதல், நீர்ப்பாசன முறையை உருவாக்குதல் போன்றவற்றை நெறிப்படுத்தும் அதிகாரம் அரசனிடம் வைத்துக் கொள்ளப் பெற்றன.[23] கால அடைவில் நீர்ப்பாசனம் ஊர்ச்சபையிடமும், பிரமதேய சபையிடமும் விடப்பெற்றது. நீர்ப்பாசனம் மக்கள் பொருளியல் வாழ்க்கையை மாற்றியமைக்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்றது. அதனால் குளங்களில் படியும் பாசிக்குப்பாட்டம், மீன்படுக்கும் உரிமை (மீன் பாட்டம்) ஆகியவை மூலம் வருவாய் வந்தது. புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலமாகின.

வேளாண்பயிர்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் மா, கமுகு, தென்னை, மஞ்சள், இஞ்சி, நெல், கம்பு, கரும்பு போன்றவை உற்பத்தி செய்யப்பெற்றன.[24] இவற்றில் பல பயிர்கள் பணப்பயிர்கள் என்பது புலப்படும். செங்கழுநீர் என்ற செடி மருத்துவப் பயன்பாட்டிற்காகச் செய்யப்பெற்றது.[25] கமுகு, தென்னை, நெல் போன்றவை ஆற்றங்கரை ஓரத்தில் பயிர் செய்யப்பெற்றன.

வேளாண்மையில் ஈடுபட்ட வேளாளர்கள் வரி செலுத்தியுள்ளனர். அதற்குக் கடமை என்று பெயர். மேலும் 'இறை' என்றொரு பெயரும் வேளாண் வரிக்கு உண்டு. கடமை என்பது கடன்

(கடம்) என்பதினடியாக வந்தது. மேலும் அரசனுக்கும், (அ) தலைவனுக்கும் அளிக்கப்பெறும் காணிக்கையாக இருந்திருக்கலாம்.[26] இப்பகுதியில் கிராமங்களிலிருந்து வேளாளர்கள் செலுத்திய வரியே கடமை என்று கூறலாம். 'இறை' என்பது அரசனுக்கு அளிக்கப்பெற்ற வரியாகலாம்.[27] வள்ளுவர் கூட 'இறைவற்கிறை யொருங்கு நேர்வது நாடு' என்று கூறுகிறார்.[28]

வாணிகம்

வேளாண்மை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி போன்றவை வாணிக வளர்ச்சி உருவாவதற்குத் துணை புரிந்தன. பெருவழிகளும் வாணிக வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. கொங்கு பண்டைக்காலம் முதல் பெருவழியால் பெருமை பெற்ற நாடு. இடைக்காலத்திலும் பெருவழிகள் பெருகின. வலைப்பின்னல் போன்ற பெருவழிகள் உருவாயின. பல்வேறு ஊர்களையும் தொட்டுச் சென்ற பெருவழிகள் வாணிகம் பெருமைபெறக் காரணமாயிற்று.[29] பொதுவாகத் தமிழகம் முழுவதும் ஏற்பட்ட வேளாண்மை வளர்ச்சி இடைக்கால வாணிகம் பெருமை பெறுவதற்குக் காரணமாயிற்று. இடைக்கால வாணிகத்தில் வேளாண் பொருள்களே மிகுதி.[30] வேளாண் பொருள்களை விற்பதற்கு வேளாளர்களில் ஒரு பகுதியினர் வணிகர்கள் ஆயினர். அவர்களே நாட்டுச்செட்டிகள். தென்னிந்தியா முழுவதும் சுற்றித் திரிந்த வணிகர்களும் இருந்தனர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் நாணா தேசிகள், (திசையாயிரத்து) ஐந்நூற்றுவர், மணிக் கிராமத்தார் போன்றவர்கள்.[31]

தவிராச் சுங்கம்

தஞ்சைச் சோழர்களில் முதலாம் குலோத்துங்கன் சுங்கம் தவிர்த்த சோழன் என்று கூறப்பெறுகிறான். ஆனால் கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் சுங்கம், சாரிகை, மகமை, தட்டொலி, அணியிடுவார் பணம் போன்ற வரிகள் வாங்கியதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. மிளகு, எக்கு பொதி ஒன்றுக்குப் பணம் இரண்டு மாவும், பாக்குப் பொதி ஒன்றுக்குப் பணம் அரை மாவும், தான்யங்களுக்குப் பணம் காணமும், ஆனைக்குப் பணம் ஒன்றும், குதிரைக்குப் பணம் அரையும், சந்தனக் கட்டுக்குப் பணங்காலும், விடுபுடவை கட்டுகளுக்குப் பணம்காலும்,

சேக்கள் (எருது) கிடாக்கள் (எருமை) ஆகியவற்றிற்குப் பணம் ஒரு மா என்று வரி வாங்கியுள்ளனர் என்பது பற்றிச் சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு கூறுகின்றது. வாணிக வளர்ச்சி முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பெருமை பெற்றமையால் வாணிகத்தின் மூலம் அரசு வருவாய் மிகுதியாயிற்று. கொங்குப் பொருளியல் துறையில் வாணிகம் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கியது.

உள்நாட்டு வாணிகம்

கொங்கு நாட்டிற்குள்ளேயே வாணிகம் விரிவடைந்தது. குறுக்கும் நெடுக்குமாகப் போடப் பெற்ற பெருவழிகள் வணிகர்கள் போக்குவரத்திற்கு எளிமையாக இருந்தன. அதனால் வாணிகர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வது எளிதாயிற்று. ஒவ்வொரு நாட்டிற்கும் (Micro Region) ஒரு நகரம் வாணிக மையமாக இருந்தது என்பர்.[32] ஆனால் கொங்கில் சிறப்பு வாய்ந்த (Strategic) பகுதிகளில் மட்டும் (பகுதிக்கு ஒன்றாக) வாணிக நகரங்கள் உருவாகி வளர்ந்தன. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டில் கொங்கில் ஒன்பது மாநகரங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. இந்த மாநகரங்களில் பிறமண்டலத்து வணிகர்கள் வந்து சேருவர்.[33] தாங்கள் கொண்டு வந்த பண்டங்களை விற்றுவிட்டுக் கொங்கு நாட்டுப் பண்டங்களை வாங்கிச் செல்வர். மேலும் தங்கள் பகுதியில் கிடைக்காத பிறமண்டலத்துப் பொருள்களையும் வாங்கிச்செல்வர். சான்றுக்கு வடுகநாட்டு (ஆந்திரா) வணிகர்கள் மலை மண்டலத்துப் பொருள்களை வாங்கிச் செல்வதைக் கூறலாம். மாநகரங்களில் புலம்பெயர் மக்கள் வாணிகம் செய்தனர்.

மாநகரங்களிலிருந்து கொங்கு நகரங்களுக்கு (இவை நகரம், தாவளம், அடிக்கீழ்த்தளம் போன்றவை) வணிகர்கள் வந்து வணிகப் பொருட்களை வாங்கிச் செல்வர். இந்த நகரங்களில் ஐந்நூற்றுவர், நாட்டுச்செட்டி, நகரத்தார் போன்றவர்கள் வந்து செல்வர்.[34] இவை பெருவழிகள் உருவாகிச் சிறப்புற்ற நகரங்கள். இந்த நகரங்களுக்கு அருகில் உள்ள சிற்றூர்களி (கிராமம்)லிருந்து வாணிகப் பண்டங்கள் (பெரும்பாலும் வேளாண் பொருட்கள்) மிகுதியாக வரும்.

மேலே கூறிய நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் இடையில் தொடர்பு இருந்தது. நகரங்களிலிருந்த வணிகர்கள் (பெரும்பாலும் நாட்டுச்செட்டிகள்) சிற்றூர்களுக்குச் சென்று வேளாண் பொருட்களை நகரங்களுக்குக் கொண்டு செல்வர்.[35] இவர்களில் நாட்டுச் செட்டிகள் சிற்றூர்களில் வாழும் வேளாளர்களிடமிருந்து உருவானவர்கள். சிற்றூர்களுக்கும் ஒரோருகால் பிறமண்டலத்து வணிகர்கள் வந்து செல்வதும் உண்டு.

மேலே கூறியவற்றால் வாணிகத்தில் மூன்றடுக்குகளைக் கொண்ட வணிக மையங்கள் இருந்துள்ளன எனலாம். பிறமண்டலத் தொடர்புகளுக்கு மாநகரங்களும், பட்டணங்களும், உள்நாட்டு வாணிகத் தொடர்பிற்கு நகரங்கள், தாவளங்கள், அடிக்கீழ்த்தளங்கள், புரங்கள் ஆகிய மையங்களும், பெருவணிகர்கள் செல்ல முடியாத சிற்றூர்களுக்கும் இரண்டாவதாகக் கூறப்பெற்ற நகரங்கள் முதலிய மையங்களுக்கும் இடையில் இருந்தன.[36]

அஞ்சினான் புகலிடம்

சோழர்காலக் கல்வெட்டுக்களில் 'அஞ்சினான் புகலிடம்' என்று கூறப்பெறும் இடப்பெயர்கள் பயின்று வருகின்றன. இதனைச் சமணர்கள் உருவாக்கினார்கள் என்று கருதுவர். சமணர்களிடையில் வழக்கத்திலிருந்த பல்வேறு தானங்களில் அபயதானமும் ஒன்று என்றும், பிறர் தாக்குதலிலிருந்து அஞ்சி வந்தவர்களுக்கு அபயமளிக்கும் இடங்களாக இருந்தமையால் இதற்கு 'அஞ்சினான் புகலிடம்' என்றும் பெயர்வந்தது என்றும் கருதப்பெறுகின்றது. மேலும் ஒரு சாரார் அஞ்சினான் புகலிடங்களைக் கைக்கோளர்கள் தங்கியிருந்த பாடிவீடுகள் என்றும் கருதுவர்.[37] அண்மையில் ஓர் ஆய்வாளர் அஞ்சினான் புகலிடம் என்பது போர்க்காலச் சூழ்நிலைகளில் படைகளின் தாக்குதலுக்கு அஞ்சிய மக்கள் குடியேற்றம் செய்யப்பட்ட பாதுகாப்புள்ள இடங்கள் என்று கூறியுள்ளார்.[38] இங்கு பொதுமக்கள் என்பதை விட 'வணிகர்களைக் குடியமர்த்த' என்று கொள்வதே சிறப்புடையது. அஞ்சினான் புகலிடங்களில் வணிகர்களே (நெசவாளர், வாணிகர், செக்கார், சோளியர், சாலியர், கோயில் அங்காடிகள்) குடியேற்றப்பெற்றனர்.[39] இவர்கள் காசாயக் குடிகள் எனப் பெறுகின்றனர்[40] பெருமன்னர்களுக்கிடையிலான போர்களினால்

வாணிகம் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் அஞ்சினான் புகலிடம் உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். அஞ்சினான் புகலிடத்தில் உள்ளவர்கள்மேல் தாக்குதல் நடத்தக் கூடாது என்ற அடிப்படையில் அஞ்சினான் புகலிடம் உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும். அஞ்சினான் புகலிடத்தில் உள்ளவர்கள்மேல் தாக்குதல் நடத்தக் கூடாது என்ற மரபு தமிழ் மன்னர்களிடம் உருவாகி பின்பற்றப் பெற்றிருக்கலாம். அதனால் அஞ்சினான் புகலிடம் என்பது அரசியல் போராட்டங்களுக்கு அப்பால் நின்றது எனலாம்.

கொங்கு நாட்டிலும் அஞ்சினான் புகலிடங்கள் இருந்துள்ளன. நஞ்சராயர் காலத்தில் ஒன்று கூறப் பெறுகின்றது.[41] அது பொள்ளாச்சி வட்டம் பட்டணத்தில் இருந்தது. மற்றொன்று பழமங்கலத்திலிருந்தது. அது பற்றிக் கல்வெட்டுச் சான்றும் கிடைத்துள்ளது.

ஸ்வஸ்தஸ்ரீ திசை
யாயிரத் தைஞ்னூ
ற்றுவ நாநா தேசிய
டைக் கலம் கிழங்க
நாட்டு நித்த விநோத
த்திருந்து வாழும் வெ
ள்ளாளன் வெண்டுவ
ன் திருக்குறையான்
எடுப்பிச்ச மாநகரம்'' [42]

கிழங்க நாடு என்பது காவிரிக்குத் தென்கரையில் வெங்கால நாட்டிற்கு (கரூர்ப் பகுதி) வடக்கில் உள்ளது. கிழங்க நாட்டைச் சேர்ந்த நித்த வினோதம் என்ற ஊரிலிருந்து வந்த வேளாண் வணிகன் பூந்துறை நாட்டுப் பழமங்கலத்தில் அஞ்சினான் புகலிடம் உருவாக்கியுள்ளான். இது வணிகர்களின் குடிப் பெயர்ச்சித் தன்மையைக் காட்டுகின்றது. 'நானாதேசி அடைக்கலம்' என்பது பிற பகுதி வணிகர்களுக்கு அஞ்சினான் புகலிடம் உருவாக்கப் பெற்றதையே காட்டுகின்றது.

பிறமண்டல வணிகர்

நானாதேசி, திசை ஆயிரத்தைந் நூற்றுவர் பற்றிக் கொங்குக் கல்வெட்டுக்கள் கூறுவதால் பிறமண்டல வணிகர் வந்து குடியேறினர்

என்று கொள்ளலாம். இது பற்றி முன்பே ஆய்வு செய்யப் பெற்றுள்ளது.[43] பிற மண்டல வணிகர்களில் சோழ மண்டலத்து வணிகர்கள் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. அதற்குரிய காரணமும் விளங்கவில்லை. கன்னடம், களிதெலுங்கு, கவின்மிகு மலையாளம், சீனம் போன்ற மொழி பல பெருகிய பழிதீர் தேயங்களிலிருந்து வந்த வணிகர்கள் கொங்கில் தங்கி வாணிகம் செய்தனர். பாண்டி மண்டலத்து வணிகர்கள் கொங்கில் தங்கி வாணிகம் செய்ததற்கான சான்றுகள் மிகுதியும் கிடைக்கின்றன.[44] அதனால் பாண்டி மண்டலத்திற்கும் கொங்கு மண்டலத்திற்குமிடையில் வாணிகம் பல்கிப் பெருகியது எனலாம். பாண்டி நாட்டுப் பிரான்மலைக் கல்வெட்டிலும் கொங்கின் ஆறு நகரங்களிலிருந்து சென்ற வணிகர்கள் பேசப்பெறுகின்றனர். பட்டாலி, தலையூர், இராஜராஜபுரம், கருவூர், கண்ணபுரம், கீரனூர் ஆகியவை அந்த நகரங்கள்.[45] இந்தச் சான்றுகளால் பிறமண்டலத்து வணிகர்கள் கொங்கிற்கும், கொங்கு வணிகர்கள் பிறமண்டலத்திற்கும் சென்று வாணிகம் செய்தனர் என்பது புலப்படும்.

வெளிநாட்டு வாணிகம்

பண்டைய கொங்கில் வெளிநாட்டு (யவன) வாணிகம் சிறப்புற்றது. ஆனால் இடைக்காலக் கொங்கில் வெளிநாட்டு வாணிகம் குறைவாகவே இருந்துள்ளது. வாணிகத்தின் மூலம் பல்வேறு வரிகள் அரசுக்கும் கிடைத்துள்ளன. சுங்கம் பற்றி முன்பே கூறப்பெற்றது. மகமை, கொங்கு நாட்டில் இடைக்கால சீனக்காசுகள் சில கிடைக்கின்றன. (இவை அகழ்வில் கிடைத்தவை அல்ல)[46] இக்காசுகள் கி.பி.13ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. அவினாசிக் கல்வெட்டு ஒன்று சீனக்குடை பிடித்துக் கொள்ள உரிமை அளிக்கப் பெற்றமை பற்றி பேசுகின்றது.[47] சீனக்குடை பட்டுக்குடை என்று கொள்ளலாம். கொங்குச் சோழர் காலத்தில் சீனத்துப் பட்டு இங்கு விலை போனது எனலாம். மேலும் விஜயமங்கலம் அருகில் உள்ள சீனாபுரம், ஜீனாபுரம் என்பதன் திரிபு என்று கொள்கின்றனர்.[48] விஜயமங்கலத்தில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று சீனர்புரம் என்று கூறுகின்றது. (கல்வெட்டில் சீனாபுரம் என்று எழுதப் பெற்றுள்ளது) னகர உயிர்மெய்க்கு அடுத்துள்ள எழுத்தினை நெடிலுக்குரிய (னாகாரம்) காலாக எடுக்கின்றனர். அது தவறு; அது ரகர மெய் என்றே கொள்ள

வேண்டும். சீனர்புரம் என்றபெயர் சீனர்கள் வாழ்ந்தமையால் உருவான பெயர். ஆகையால் கொங்கிற்குச் சீனர்களும் வந்து வாணிகம் செய்துள்ளனர் எனலாம். பிற வெளிநாட்டார் பற்றிக் குறிப்பில்லை.

தொழில்கள்

இடைக்காலக் கொங்கில் நெசவு, இரும்பு உருக்கு, அணிகலன்கள் செய்தல், பொன்தொழில், அழகுமணிகள் செய்தல், கட்டடத் தொழில் போன்ற தொழில்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. துறவலூர், (டணாய்க்கன் கோட்டை) முகுந்தனூர், (சர்க்கார் பெரியபாளையம்) வடபரிசாரநாடு, அரையநாடு போன்ற ஊர்களிலும், நாடுகளிலும் தறிநெய்வோரும், சாலியரும் மிகுந்து வாழ்ந்துள்ளனர்.[49] அதனால் பருத்தி நெசவும், பட்டு நெசவும் மிகுந்து காணப்பெற்றது என்று கூறலாம். மேலும் கல்வெட்டுக்களில் 'தறியிறை' என்றொரு இறை கூறப்பெறுகின்றது.[50] இது நெசவுத் தொடர்பான வரி என்று கூறலாம். சாலியர் தங்களுக்குள் ஒரு குழு (Guild) வினை உருவாக்கி வாழ்ந்தனர். அதற்குச் 'சாலிய நகரத்தார்' என்று பெயர்.[51] ஆகையால் நெசவுத் தொழில் மிகுந்திருந்தது என்று உறுதியாகக் கூறலாம். மேலும் சுற்றுச் சூழலும் (Ecology) நெசவுத் தொழிலுக்கு உகந்ததாகவே இருந்திருக்க வேண்டும். ஈரப்பசையுள்ள காற்று நூலினை உருவாவதற்கும் அறாமலிருப்பதற்கும் காரணமாயிருந்தமையால் நெசவு சிறப்புற்றது.

இரும்பு உருக்குதல்

கொங்கு நாட்டில் கி.மு.நூற்றாண்டுகளிலேயே இரும்பு உருக்கும் தொழில் மேம்பாடடைந்திருந்தது. கொடுமணலில் சங்ககால உருக்குலையைக் கண்டுபிடித்துள்ளார்கள்.[52] முன் இடைக்காலக் கொங்கிலும் இரும்பு உருக்கும் தொழில் மேம்பாடுற்றமைக்குச் சிறந்த சான்றுகள் போளுவாம்பட்டி அகழ்வில் கிடைத்த இரும்புக் கருவிகளே ஆகும்.[53] கொங்குச் சோழர் காலத்தில் இரும்பு உருக்குத் தொழில்கள் மிகுந்திருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் மிகுதியும் கிடைக்கின்றன. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு சந்தைக்கு இரும்பும் (எஃகு) வந்துள்ளதை உறுதிப் படுத்துகின்றது.[54] கம்மாளர்க்கு உரிமை அளிக்கப் பெற்றமையால் இரும்புத் தொழில் பெற்றிருந்த சிறப்பு

பெறப்பெறுகின்றது.[55] வணிகர் சங்கக் கல்வெட்டின் பின்புறத்தில் வடிக்கப் பெற்றுள்ள சிற்பங்களில் கத்தி, குறுவாள், அரிவாள், அம்பு போன்ற இரும்புக் கருவிகளும் வடிக்கப் பெற்றுள்ளன.[56] இதுவும் இரும்புத் தொழிலின் சிறப்பினை வலியுறுத்துகின்றது.

பொன் செய்கொல்லர்

கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்களில் தட்டார்க் காணி, தட்டார்ப் பாட்டம் போன்றவை சுட்டப் பெறுகின்றன.[57] இவ்வரி (தட்டார் பாட்டம்) பொற்கொல்லர்கள் செலுத்திய வரிகள் ஆகலாம். தட்டார்க்காணி என்பது அரசு பொற்கொல்லர்களுக்கு அளிக்கப் பெற்ற நிலமானியம். இந்த அணிகலன்களும் பொற்கொல்லர் இருந்தமையைச் சுட்டுகின்றன. அது மட்டுமில்லாமல் கொங்கு நாடு பொன்னிற்குப் பெயர் பெற்ற நாடு. நம்பியாண்டார்நம்பி, கொங்கின் கனகமணிந்த ஆதிக்கத்தின் குலமுதலோன் என்று கூறுவார்.[58] அது கொண்டு கொங்கு நாட்டில் பொன் எடுக்கும் தொழில் நடைபெற்றது என்றும், அதனால் பொன்வேலை சிறப்புற்றது என்றும் கருத வேண்டியுள்ளது.

அணியிடுவார்

சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டில் அணியிடுவார் வரி என்றொரு வரி கூறப்பெறுகின்றது.[59] இந்த வரி பெரும்பாலும் முத்தங்கிகளைச் செய்பவர்களும், மணிகளைச் செய்பவர்களும், செலுத்திய வரியாகலாம். 'முருகன் பூண்டிக் கல்வெட்டில்' மான்படுகாடும், தேன்படுவரையும், மீன்படுசுனையும், பொன்படுகுட்டமும், தேவதானமாக அளிக்கப் பெற்ற ஊரிலிருந்ததாகவும், அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் கோயிலுக்குரியவை என்றும் கூறப்பெறுகின்றது.[60] இங்குப் 'பொன்படு குட்டம்' என்பது மணிக்கற்கள் வெட்டியெடுக்கப் பெறும் குழிகள் ஆகலாம். கல்வெட்டுக் கூறும்பகுதியும் (பல்லடம், காங்கயம் பகுதி) பெரில் என்ற கடல் நீலப்பச்சைக்கல் தோண்டியெடுக்கப் பெற்ற பகுதி.[61] சங்ககாலம் முதல் பிரித்தானியர் காலம் வரையிலான 1800 ஆண்டுகளாக இந்த மணிக்கற்கள் தோண்டியெடுக்கப் பெற்றன. இந்த மணிக்கற்களைக் கொண்டு அழகுமணிகள் செய்யப்பெற்றன.[62] அதனால் பொன்வேலை மிகுதியாயிற்று, மேலும் பிறபகுதியிலிருந்தும்

மணிக்கற்கள் கொங்கு நாட்டிற்குக் கொண்டு வரப்பெற்று அழகுமணிகளாக வடிக்கப்பெற்றன. அழகுமணிக் கற்கள் செய்த கருமகாரர் பலர் கொங்கில் இருந்துள்ளனர். மேலும் பல கருமகாரர்கள் கொங்கில் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன.

காசுகள்

கொங்குச் சோழர் காலக் கல்வெட்டுக்களில் (பொன்) கழஞ்சு, கானம் அச்சு, ஆனை அச்சு, சலாகை, புதுச்சலாகை, பழஞ்சலாகை, ஸ்ரீயக்கி போன்ற காசு வகைகள் கூறப்பெறுகின்றன. பணம், வராகன் போன்ற காசுகள் கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதியில் பழக்கத்தில் வந்த காசுகள். இவற்றில் கழஞ்சு கானத்தை விடக் குறைவான எடை உள்ளது என்று நாகசாமி கூறுகிறார்.[63] கோவைகிழார் ஒரு கழஞ்சு எட்டு வராகன் என்று கூறுகின்றார். கழஞ்சு கொங்குச் சோழர் காலத்துத் தொடக்க காலக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றது. பிற்காலத்தில் கழஞ்சு பயன்பாடு குறைந்து விடுகின்றது.

அச்சு

கொங்குச் சோழர் காலத்தில் அச்சு, ஆனைஅச்சு, பழஞ்சலாகைஅச்சு, புதுச்சலாகைஅச்சு, இடைச்சலாகைஅச்சு என்று பலவகை அச்சுகள் கூறப்பெறுகின்றன.[64] கி.பி.12ஆம் நூற்றாண்டிலிருந்து அச்சுவகைக் காசுகள் கூறப்பெறுகின்றன. அதற்கு முன்பு அச்சுகள் கூறப்பெறவில்லை. ஆகையால் வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பகுதிகள் ஒரு குடையின் கீழ்வந்த பின் கேரளர்கள் ஆட்சியிலிருந்த தென்கொங்கில் புழக்கத்திலிருந்த 'அச்சு' என்ற காசு வடகொங்கிலும் புழக்கத்திற்கு வந்தது எனலாம்.[65] காசுகளில் சலாகைஅச்சு, அச்சு ஆகியவற்றிற்கிடையில் வேறுபாடு உண்டு.[66] ஆனைஅச்சு கங்கர்கள் வெளியிட்ட காசுகள் ஆகலாம் என்பர்.[67] மேலும் ஆனைஅச்சு கங்கர்களால் கொங்கில் அறிமுகப்படுத்தப் பெற்று கேரளத்திற்குச் சென்றிருக்க வேண்டும் என்றும் கருதப் பெறுகின்றது.[68]

தென்கொங்கில் ஆட்சி செய்த வீரகேரளர்கள் வெளியிட்ட வெள்ளிக் காசுகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது. ஒருபுறம் 'வீர கேரளஸ்ய' என்றும், மறுபுறம்

'ஸ்ரீ கண்டராங்குஸ்ய' என்றும் எழுதப் பெற்றுள்ளது.[69] வீரகோளன் என்ற பெயர் கொண்ட அரசர்கள் கொங்கு நாட்டில் ஆட்சி செய்துள்ளனர். முதலாம் இராஜாதிராஜன் கல்வெட்டில் (கி.பி. 1046) வீரகோளன் கூறப்பெறுகிறான். இந்தக் காசில் குறிக்கப் பெறும் மன்னன் கொங்குச் சேரமன்னன் என்றும், அவன் களப்பிர மரபினைச் சேர்ந்தவன் என்றும் நாகசாமி கருதுகிறார்.[70] ஆனால் வீரகோளன் என்ற பெயர் கோளத்திலிருந்து வந்த சிற்றரசர்களில் சிலரைக் குறிப்பது என்று கே.வி.சுப்ரமணியஅய்யர் கருதுகிறார்.[71] களப்பிரர் என்று கருதப் பெறும் கல்வெட்டு கி.பி.10ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது. ஆனால் வீரகோளன் என்று கூறப்பெறும் மன்னன் கி.பி.11–12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவன் என்று கருதலாம்.[72] இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்தவன் செங்கற்பட்டு காசு கூறும் வீரகோளன். அவை கி.பி.12ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பெற்ற காசுகள் ஆகலாம்.

ஸ்ரீயக்கி காசு சமணசமயத்தின் செல்வாக்கு நிலைபெற்றிருந்த கொங்குநாட்டில் வெளியிடப் பெற்ற காசுகள் ஆகலாம்.[73]

அச்சு, கழஞ்சு ஆகியவை ஒரே மதிப்புடையவை என்று கருதப் பெறுகின்றது.[74] பொன்னால் செய்யப் பெற்ற அச்சுக் காசுகள் சில கிடைத்துள்ளன. பொன்னாலாகிய கழஞ்சும், பொன்னால் ஆகிய அச்சும் ஒத்தமதிப்புடையவை என்று கருதுவது தவறில்லை.

பணம், வராகன், புள்ளிக்குளிகை போன்ற காசுகள் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன.[75] இவை கி.பி.13ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த காசுகள்.

கொங்கு நாட்டில் கிடைக்கின்ற கோயிற் கொடைகளில் சில அறுபது விழுக்காடுகளுக்கு மேல் காசுக் கொடைகளே.[76] அது கொண்டு வாணிகமும், வாணிகஞ்சார்ந்த தொழில்களும் மிகுதியாகச் செய்யப் பெற்றன என்று கருதலாம். வாணிகத்தின் வழியாகக் கிடைத்த காசுகள் கொடையாக அளிக்கப் பெற்று அவற்றின் வழி கிடைக்கும் வட்டியின்வாயிலாக அறம் செய்துள்ளனர். காசுகளுக்குரிய வட்டி கணக்கிடப்படுகின்றது. அச்சுக்குப் பத்து சதம் வட்டியாகக் கருதப்படுகின்றது.[77]

கொங்குச்சோழர்கள் தொடக்க நாட்களில் சோழ நாட்டில் வழக்கிலிருந்த கழஞ்சு என்ற காசினைக் கொங்கில் (வடகொங்கில்) பயன்படுத்தினர். ஆனால் பிற்காலங்களில் கழஞ்சுடன் அச்சு வர்க்கங்கள் பயன்பாடு மேலோங்கிக் கழஞ்சின் பயன்பாடு குறைந்து விட்டன எனலாம்.

அளவுகள்

நிலத்தின் அளவு பெரும்பாலும் விதைப்பாட்டின் அளவிலேயே குறிப்பிடப்படுகின்றது. சான்றுக்குப் பேரூர்க் கல்வெட்டினைத் தரலாம். அக்கல்வெட்டு, "வீரநாராயணன் மன்னறையில் விதை இருபத்தெழு கழனே இருதூணிக்குப் பெருநான்கெல்லை யாவது''[78] இங்கு இருபத்தேழுகலனே தூணி முகத்தலளவை அன்று; நில அளவே ஆகும். சோழன் பூர்வ பட்டயத்திலும் இந்த மரபு தரப்பெறுகின்றது. அது மட்டுமில்லாமல் மா, செய், கழனி, கரை ஆகிய நில அளவுகள் கூறப்பெறுகின்றன. மா, செய் என்பன முன்னரே (சங்க கலம் முதல்) வழக்கிலிருந்த அளவுகள்.[79] கழனி, கரை என்பது கொங்குப் பழங்குடிகளிடம் வழக்கிலிருந்து சமூக வாழ்வில் இணைக்கப் பெற்றமையால் அரசியல் நிருவாகத்திற்குக் கொண்டுவரப்பெற்றவை என்று கருதலாம்.[80]

கரூர்வட்டம் நெரூர்க் கல்வெட்டில் 'நம்பாட்டனார் வீர சோழன் காலடியால் அடிக்கோல்' என்று கூறுகின்றது. இது கொங்குச் சோழரின் முதல் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டு. அரசனுடைய காலடியே அடிக்கோல் அளவுக்கு ஒப்பிடப்படுகின்றது.

முகத்தல்அளவு

கொங்குச் சோழர் கல்வெட்டுக்களில் நாழி, உரி என அளவு கூறப்பெறுகின்றது. குறுப்புநாழி குறுப்பு நாட்டு அளவு எனலாம்.[81] இதுபோல ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வகையான நாழி அளவு இருந்ததோ என்று கருத வேண்டியுள்ளது. மேலும் கொங்குக்கால் என்றொரு முகத்தலளவு கூறப்பெறுகின்றது.[82] இதுவும் கொங்கு நாட்டிற்கேயுரிய அளவு ஆகலாம். சோழர் காலத்தில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையான அளவு இருந்தமையால் அந்தந்தப்பகுதிப் பெயரால் அளவுகள் கூறப் பெறுகின்றன. அந்த வகையில் கொங்கு நாட்டு அளவுப் பெயர்களும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன.

நில அளவுகளில் கலம், தூணி என்று கூறுவது பழங்குடி வேளாண்மையில் உருவானதாகலாம். எந்த வகையான நில அளவும் இல்லா நிலையில் விதைத்து நடுகின்ற நாற்றிற்கு விதைக்கப் பெறும் நெல் அளவைக் கொண்டு நில அளவு கூறுவது பழங்குடிப் பழக்கத்தின்பாற்பட்டது. பழங்குடிகள் விதைக்கின்ற போது 'கலன்' போன்ற அளவுகளைக் குறிப்பிட்டார்கள் என்று கொள்ள முடியாது. ஆனால் காடுகளை அழித்து அழித்த பகுதியில் விதைத்து நாற்றெடுத்து நட்டிருக்க வேண்டும். அல்லது புஞ்சைத் தானியங்களை விதைத்துத் தானியம் பயிர் செய்திருக்க வேண்டும். அந்தப் பயிர் செய்வதற்குரிய நில அளவிற்குரிய விதைப்பாடு நிலம் பயிரேறும் நிலத்திற்கு அளவாகக் கூறப் பெறுகின்றது.

முடிவுரை

கொங்குச்சோழர் காலத்தில் பொருளியல் நாட்டுப்புறத்தை மையமாகக் கொண்டு விளங்கியது. சோழப் பேரரசு உறுதியாகக் கடைப்பிடித்த கோட்பாடுகளுள் ஒன்று வேளாண் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது. அந்த வகையில் சோழர்களின் பிரதிநிதியாக ஆட்சி செய்த கொங்குச்சோழர்கள் வேளாண் வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினர். கொங்குச்சோழரில் முதலாம் விக்கிரம சோழன் 'நாடு வளம்படுத்து நையும் குடி ஓம்பி' ஆட்சி செய்தான் என்பது அவனுடைய மெய்க்கீர்த்தியால் விளங்கும். கொங்குச்சோழர் காலத்தில் வேளாண் வளர்ச்சி முன்னெப்போதைக் காட்டிலும் மிகுந்து காணப்பெற்றது. நிலம் சீவிதக்காணியாக அளிக்கப் பெற்றது. அவ்வாறு அளிக்கப்பெற்ற 'சீவிதக்காணி' நிலத்தில் தனிவுடைமை உருவாக வழி கோலியது. மன்றாட்டுக்காணி, ஊராண்மைக்காணி, தட்டார்க்காணி, தச்சாச்சாரியக்காணி போன்றவை சீவிதக்காணிகள். மேலும் சாமந்தர்களுக்கும், சேனாபதிகளுக்கும் பல ஊர்களில் நிலம் அளிக்கப் பெற்றது. அந்த நிலம் கூட பின்னால் தனிஉடைமை நிலமாகியது. வேளாண்மை சிறப்படைய நீர்ப்பாசனம் விரிவாக்கப் பெற்றது. ஏரிகள், ஆற்றுக்கால்வாய்கள் ஆகியவை வெட்டப்பெற்றன. மேலும் நீரினைத் தேக்கி வைக்க அணைகளும் கட்டப்பெற்றன. அதனால் முன்பிருந்ததைக் காட்டிலும் நஞ்செய்நிலம் பரப்பில் மிகுதியாயிற்று. பழங்குடிகள் இருந்து வாழும் வாழ்க்கையை மேற்கொண்டு வேளாண்மையை மேற்கொண்டனர்.

வேளாண் பயிர்கள் பல வகையாயின. முன்னாளில் கம்பு, தினை போன்ற புஞ்சைத் தானியங்கள் மட்டும் பயிர் செய்யப்பெற்றன. ஆனால் நீர்ப்பாசனம் விரிவடைந்த போது பணப்பயிரும், நஞ்செய் விளைச்சலும் மிகுதியாயின. ஆகையால் கொங்குச்சோழர் காலத்திறுதியில் வாணிகம் பெருவளர்ச்சி அடைந்தது. வாணிகத்தில் வேளாண் விளைபொருட்கள் மிகுதியாயின. ஆகையால் வேளாளர்களும் வாணிகத்தில் ஈடுபட்டனர். அவர்களே நாட்டுச்செட்டிகள். நானாதேசிகளும், நாட்டுச்செட்டிகளும் இணைந்து உள்நாட்டு வாணிகத்தையும், வெளிநாட்டு வாணிகத்தையும் இணைத்தார்கள். நானாதேசிகள் தமிழகத்தின் பெருநகரங்களிலிருந்து தமிழகத்துப் பெருநகரங்களுக்கும், தமிழகத்திற்கப்பாலுள்ள பெருநகரங்களுக்கும் சென்று வாணிகம் செய்தனர். ஆனால் நாட்டுச் செட்டிகள் நாட்டுப் புறத்திற்கும், பெருநகரங்களுக்குமிடையில் இணைப்புப் பாலமாக இருந்து வாணிகம் செய்தனர்.

பிற மண்டலத்து வணிகர்களும், பிற நாட்டு வணிகர்களும் கொங்கு நாட்டிற்கு வந்து வாணிகம் செய்துள்ளனர். கருநாடகம், ஆந்திரம் போன்ற பகுதிகளிலிருந்து வந்த வணிகர்கள் இங்கு வணிகம் செய்துள்ளனர். சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு இதற்குச் சான்று. அக்கல்வெட்டில் மலைமண்டலம், பாண்டிமண்டலம், தொண்டைமண்டலம், வடுகதேயம் (கருநாடகம், ஆந்திரம்) ஆகிய பகுதிகளிலிருந்து வந்த வணிகர்கள் பற்றி அக்கல்வெட்டு பேசுகின்றது. அதனால் கொங்குச்சோழர் ஆட்சி முடிவில் கொங்கு நாடு பரந்துபட்ட நிலப்பரப்பில் வாணிகத் தொடர்பு வைத்திருந்தது என்று உறுதியாகக் கூறலாம். சீனர் கொங்கில் வாணிகம் செய்த வெளிநாட்டினர். வாணிக வளர்ச்சியின் காரணமாகக் கம்மத்தொழிலும், நெசவுத்தொழிலும் வளர்ச்சியடைந்தன. இரும்புஉருக்கு, பொன்வேலை, நெசவு (பருத்தி, பட்டு) போன்றவை மிகுதியாயின. அதனால் இத்தொழில்களில் ஈடுபட்டோர் சமூகத்தில் பேரும் புகழும் பெற்றனர். அரசனிடம் உரிமைகளைப் பெறும் தகுதி பெற்றனர். கம்மாளர், பொற்கொல்லர், சாலிய நகரத்தார் போன்றவர்கள் சமூக வாழ்வில் புகழ் பெற்றனர்.

வாணிக வளர்ச்சி காசுகள் மிகுதியாகப் புழங்குவதற்குக் காரணமாயிற்று. சேரர்காசு, கங்கர்காசு, பாண்டியர்காசு

போன்றவற்றுடன் கொங்குக்காசுகளும் மிகுதியாக வெளியிடப்பெற்றன. காசுகள் மிகுதியாகப் புழக்கத்திலிருந்த போதிலும், அரசு ஊழியர்களுக்கு நிலம் சீவிதக் காணியாக அளிக்கப்பெற்றது. காசு ஊதியமாக அளிக்கப்பெறவில்லை. பல்வேறு வகையான காசுகள் கொங்குக் கல்வெட்டுக்களில் கூறப்பெறுகின்றன. நிலஅளவை, முகத்தலளவை, நிறுத்தலளவை போன்றவை சோழநாட்டு முறையைப் பின்பற்றியதற்கான சான்றுகள் குறைவாகவே கிடைக்கின்றன. அதுவும் கொங்குச் சோழரின் தொடக்க நாட்களில் சோழநாட்டு மரபு பயன்படுத்தப் பெற்றது. பின்னாளில் கொங்கு மரபே மேலோங்கியது.

மக்களின் பொருளியல் வாழ்க்கை முன்னைக் காட்டிலும் வளம் பெற்றது. உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றில் கொங்கு மக்கள் மேன்மை பெற்றனர்.

அடிக்குறிப்புகள்

1. Sircar, D.C., Landlordism and Tenancy in Ancient and Medieval India as by Epigraphical records. p.5.
2. E.C. Vol. X. pp 86-7 (Translation)
3. சோழன்பூர்வ பட்டயம், வேட்டுவர் பூர்வ பட்டயம், திருமுருகன்பூண்டி பட்டயம்.
4. குன்றத்தூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.
5. அன்னூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.
6. பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ,.ஆ.கோ.
7. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ,ஆ,கோ.
8. இவ்வூர்களிலிருந்து கிடைக்கும் கல்வெட்டுக்கள்,தொ.பொ,ஆ,கோ.
9. S.I.I. Vol. V, No. 242.
10. Poongundran, R., The Term Manrattu, Paper Presented in the XII the Congress, (Epigraphical society of India) Feb. 1991.

11. Ibid

12. Subbarayalu, Y., Political Geography of the Chola country, p.36

13. நாகராஜன், எஸ்., சேவூர்க் கோயில்கள் – ஓர் ஆய்வு (எம். ஃபில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், 1986) பின்னிணைப்பு ப. 11.

14. சாமந்தப்பேறு, ஊராண்மைக் காணி போன்றவற்றைக் கூறலாம்.

15. Kandasamy, S.P., The History of the Kongu Vellalas (Ph.D. Thesis, University of Madras, 1985), .p., 155.

16. Noboru Karashima, Studies in South Indian History and Society, pp. 20-21

17. பூங்குன்றன், ஆர்., கரையோலை, வரலாற்றில் புதுவெள்ளம், ப. 173

18. மேலது. ப. 170

19. S.I.I. Vol. XXVI, Nos. 143 and 144

20. Ibid, Nos 149/ 169/ 178.

21. பூங்குன்றன், ஆர்., பேரூர், ப. இல்லை

22. S.I.I. Vol. XXVI, No. Vol. V, No. 240.

23. Meenakshi, C., Administration and Social life under the Pallavas

24. Burton Stein, Peasant state and Society in Midieval South India, p. 259.

25. Tamil Lexicon vol I, p. 365.

26. திருக்குறள், செய்யுள், 733.

27. இந்நூல்

28. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டில் கூறப்பெறும் பொருள்களில் வேளாண்பொருட்களுடன் பிறபொருட்கள் சமமான அளவில் பேசப்படுகின்றன. ஆனால் குன்னி செட்டிபாளையம் கல்வெட்டில் மிகுதியாகப் பேசப்படுகின்றது.

29. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

30. Kenneth, R., Hall, Trade and State Craft the Age of Colas, p.3

31. Ibid. pp. 129 - 30

32. Ibid. p. 130

33. Ibid. p. 129.

34. Ibid.

35. Sethuraman, N., The Imperial Pandyas, p. 238.

36. தங்கவேலு, கோ., தியாகராசன். ல., சம்புவராயர் வரலாறு, பக். 45-6.

37. மேலது, ப,. 57. அ.கு. 25

38. மேலது.

39. S.I.I. Vol. XXVI, No. 222

40. இராசு, செ., கலைமகள் கலைக்கூடம், ப. 189.

41. S.I.I. Vol. XXVI, No. 222

42. மேலது

43. S.I.I. Vol. VIII, No. 442.

44. இராமசாமி, ஐ., (இக்கரை போளுவாம்பட்டி, கோவை வட்டம், கோவை மாவட்டம்) அவர்கள் சேகரித்தவை.

45. அவினாசிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

46. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, ப. 73

47. ARE of 1910,

சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

48. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 73

49. கொடுமணல் அகழாய்வு (துண்டுப் பிரசுரம்) தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை–5.

50. கோவை, தமிழக அரசு, தொல்பொருள் ஆய்வுத் துறை அகழ்வைப்பகத்தில் வைக்கப்பெற்றுள்ள இரும்புக் கருவிகள்.

51. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

52. கம்மாளர்க்கு உரிமை அளித்தமை பற்றி கொங்கு நாடு முழுவதும் பத்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் பேசுகின்றன.

53. அவினாசிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

54. திருத்தொண்டர் திருவந்தாதி, செய்யுள் எண். 6

55. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

56. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

57. கோவைகிழார், கொங்குநாட்டு வரலாறு, ப. 53

58. மேலது.

59. Nagasamy, R., Tamil Coin - A study, p. 17.

60. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. ப. 93.

61. இராமசாமி, ஐ., (இக்கரை போளுவாம்பட்டி, கோவை வட்டம், கோவை மாவட்டம்) அவர்களுடன் உரையாடல். நாள் 15.08.90.

62. Nagaswamy, R, op.cit. p. 20

63. Ibid p.20

64. Ibid. p.20

65. Ibid p. 16

66. Ibid p. 15

67. Subrahmaniya Aiyer, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol. II, p. 58

68. Ibid

69. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. ப. 93

70. இராமச்சந்திரஞ்செட்டியார் கோ.ம., அன்னியூர் சிலாசாசன ஆராய்ச்சி, அன்னூர் ஸ்ரீ மன்னீஸ்வரர் ஸ்ரீ கரிவரதராஜர் கோயில் கும்பாபிஷேக மலர்., ப. 12

71. சர்க்கார் பெரியபாளையம் கல்வெட்டுக்கள், தொ.பொ. ஆ. கோ.

72. பூங்குன்றன், ஆர்., கொங்குநாட்டுப் பழந்தொழில்கள், செய்திமடல் இதழ்

73. Nagaswamy, R., op. cit. p 19

74. S.I.I. Vol. V, No. 240

75. புறநானூறு, செய்யுள், 184

76. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை – 2) அவர்களுடன் உரையாடல். 20.08.90.

77. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

78. S.I.I. Vol. XXVI

79. பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

80. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், உதகை - 2) அவர்களுடன் உரையாடல்.

81. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள், தொ.போ.ஆ.கோ

82. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள், தொ.போ.ஆ.கோ

சமயமும், கலைகளும்

சோழர் கால சமூக வாழ்க்கையில் சமயக் கோட்பாடு பிரிக்க முடியாத ஒன்றாகி விட்டது. சமயக் குரவர்களும் அருளாளர்களும் ஆற்றிய தொண்டின் பயனாக சோழர்காலம் சிவன்பால் நேசம் வைத்த செல்வர்கள் நிறைந்த காலமாக விளங்கியது. சமூக வாழ்க்கையில் அனைத்துத் துறைகளையும் சமயம் ஆட்கொண்டு விளங்கியது. மக்கட் பெயர்களில் எழுபது விழுக்காடு சமயஞ்சார்ந்த பெயர்களாகவே அமைந்தன. அரசர்களில் இராஜராஜன் போன்றவர்கள் தம்மை சிவபாதசேகரன் என்று கூறிக்கொண்டனர்.[1] மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற அடிப்படையில் மக்களும் சைவசமயத்தைப் பின்பற்றினர். அதற்கடுத்த நிலையில் வைணவம் போற்றப்பெற்றது. சமணமும், பௌத்தமும் ஓரளவு செல்வாக்குப்பெற்று விளங்கின. பல சிறு தெய்வங்கள் பெருந்தெய்வ வழிபாட்டுடன் இணைந்து நின்றன. சோழர்கள் பல்வேறு படி நிலையிலிருந்த மக்களை சமூக வாழ்க்கையில் இணைத்தமையால் அவரவர்கள் சிறு தெய்வம் போற்றுதற்குரியதாயிற்று. ஒவ்வொரு காலத்தில் ஒரு தெய்வம் மேலோங்கியது. அதுபோலவே ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட தெய்வம் சிறப்புற்றது. கொங்கு நாட்டில் கொற்றவை, காளி, ஐயனார், நடுகல் தெய்வங்கள் போன்றவை சிறப்புற்றன.

கொங்குச்சோழருக்குமுன்

கொங்குச்சோழர் வருகைக்கு முன் கொங்கில் நிலைபெற்றிருந்த சமய வாழ்க்கையைச் சுருக்கமாகக் கூறுவது வேண்டற்பாலது. இப்பகுதியில் காலத்தால் முற்பட்ட சமயம் சமணம் என்று கூறலாம். ஆர்நாட்டார்மலை, அறச்சலூர்மலை, திருமூர்த்திமலை, ஐவர்மலை, ஆழியாற்றுமலை போன்ற மலைகளில் கி.பி.9ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சமணப் பள்ளிகள் இருந்துள்ளன.[2] விஜயமங்கலம் கொங்குச் சோழர் வருவதற்கு முன்பே சமணத் தலமாகத் திகழ்ந்தது.

பெரியாழ்வார் 'கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் மற்றெங்குந் திரிந்து விளையாடும் என் மகன்' என்று கூறுவதிலிருந்து திருமால் சமயம் கொங்கு நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த தன்மை புலப்படும்.[3]

மேலும் கொங்கு நாட்டில் கி.பி.8 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த திருமால் கற்சிலைகள், செப்புத் திருமேனிகள் மிகுதியும் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. நாமக்கல் அதியேந்திர விஷ்ணு கிரகம், சிங்கநல்லூர் திருவிக்ரம செப்புத் திருமேனி, கோவை திருமால், தேவியர் செப்புத் திருமேனிகள், கொழுமம் திருமால் செப்புத் திருமேனி, பழனி செப்புத் திருமேனி, திருச்செங்கோட்டுத் திருமால் கற்சிலை, நீலம்பூர் அருகில் உள்ள கற்சிலை (திருமால்) போன்ற திருமால் உருவங்கள் கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.[4] ஈரோட்டில் பள்ளி கொண்ட பெருமாள் கோயில் உள்ளது. பேரூரில் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையன் திருமாலுக்குக் கோயில் எடுத்துள்ளான்.[5]

தீவிரவாதம்

இலகுலீச பாசுபதம் கி.பி. 7,8 ஆம் நூற்றாண்டுகளில் கொங்கில் செல்வாக்குப் பெற்றிருந்ததற்குப் பேரூர் இலகுலீசர் சிற்பமே சிறந்த சான்று.[6] காளாமுக சைவமும் பெருமை பெற்றிருந்த தன்மை ஊர்ப்பெயர்களைக் கொண்டு விளக்கலாம். இராசிபுரம் என்ற பெயர் வித்யாராசி, நாகராசி போன்ற காளாமுக முனிவர் பெயரால் உருவாயிற்று என்பர்.[7]

காளாமுகமும், இலகுலீச பாசுபதமும் சமண, பௌத்த சமயங்களைப் போல பள்ளிகளைப் (மடங்கள்) போன்ற நிறுவனங்களைப் பெற்று விளங்கின. இச்சமயங்கள் கோயில் சொத்துக்களைப் பராமரித்து வந்தன. சில நேரங்களில் கல்வி நிறுவனங்களாகவும் செயல்பட்டன.[8]

பௌத்தம் சிறப்புற்றிருந்த தன்மை போளுவாம்பட்டி, சுடுமண் பொம்மைகளால் விளங்கும். அங்கு மைத்ரேயர், இயக்கி, புத்தர் ஆகிய உருவங்கள் கிடைத்துள்ளன.[9] இவை கி.பி. 5 – 7 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. சைவசமயம் சிறப்புற்றதற்குத் தேவாரப்பதிகங்களே சிறந்த சான்று. கொங்கேழ் சிவாலயங்கள் பற்றிய பதிகங்களும், வைப்புத் தலப்பாடல்களும் கொங்கு நாட்டில் சைவம் சிறப்புற்றிருந்த தன்மையை வலியுறுத்தும். சைவத்தின் உட்பிரிவுகள் பற்றிய குறிப்பு எதும் கிடைக்கவில்லை. இந்தச் சமயங்கள் அனைத்தும் கொங்கு நாட்டு நகர வாழ்க்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தனவே ஒழிய நாட்டுப் புறத்தில்

பரவவில்லை. அங்கு சிறு தெய்வங்களே பெருமை பெற்றிருந்தன. அங்கு இயற்கைவழிபாடு, நீர்வழிபாடு, சந்திவழிபாடு, மலைவழிபாடு, வளமைவழிபாடு போன்ற வழிபாடுகள் சிறப்புற்றிருந்தன.[10] புத்தேள் உலகம் வேண்டிப் புண்ணியதவம் இயற்றுவது வாழ்க்கை முறையாக அங்கில்லை. இகலோக வாழ்க்கையின் இன்பங்களே வேண்டப் பெற்றன. இவற்றின் பல கூறுகள் கொங்குச்சோழர் காலப் பெருந்தெய்வ வழிபாட்டில் இணைந்தன. சிலகூறுகள் தனித்தே இயங்கின.

சமயப்பொறை

சமயம் மனித வாழ்க்கையின் அங்கமாகையால் மன்னர்கள் சமயத்தைப் போற்றினர். மன்னர் சமயங்களுக்குத் தேவையான அளவு தானத்தை வழங்கினார்கள். கோயிலுக்குக் கொடைப் பொருள் வழங்கும்போது ஒரு மனிதனுடைய புகழ் ஓங்குகின்றது. அதன் விளைவாகப் பல்வேறு சமயங்களையும் ஆதரிக்கின்ற மனப்பக்குவம் வருகின்றது. தென்னகத்து மன்னர்களிடையில் சமயப்பொறை முதன்மை சான்றாக விளங்கியது. தான் சார்ந்திருக்கும் சமயம் எதுவாக இருந்த போதிலும் பிற சமயங்களுக்குக் கொடை அளித்துப் போற்றினர். அதற்குச் சான்றாக முதலாம் இராஜராஜனை எடுத்துக்காட்டலாம். அவன் தன்னை சிவபாதசேகரன் என்று கூறிக்கொண்டான்.[11] ஆனால் நாகபட்டினத்துச் சூளாமணி விகாரத்திற்கு ஆனைமங்கலம் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்தான்.[12] மேலும் சமணசமயத்திற்கு மிகுதியான கொடையை அளித்துள்ளான். அவனைப் பின்பற்றிக் கொங்குச் சோழர்களும் பல்வேறு சமயங்களுக்குக் கொடை அளித்துப் போற்றினர்.

கொங்குச் சோழர்கள், சோழர்களின் கீழ் சிற்றரசர்களாக ஆட்சி செய்தமையால் சமயத்துறையில் சோழர்களுடைய கொள்கைகளைப் பின்பற்றினர். அனைத்துச் சமயங்களையும் ஆதரிக்கின்ற தாய்போல அரசன் விளங்கினான். தான் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும் பிறசமயங்களையும் ஆதரித்தான். இம்மரபினைச் சோழர்களும், அவர் கீழாண்ட குறுநில மன்னர்களும் பின்பற்றினர். சான்றுக்கு ஒன்றை எடுத்துக்காட்டலாம். கொங்குச்சோழர்களில் முதல் மூன்று மன்னர்களுக்கு உத்தர மந்திரியாய்

விளங்கிய வீரசங்காத சூற்றியதேவன், வீரசங்காதப் பெரும் பள்ளி என்ற பெயரில் இரண்டு பள்ளிகளை உருவாக்கினான்; அவனே வேதம் வல்ல பிராமணர்களுக்குச் சதுர்வேதி மங்கலத்தையும் கொடுத்துப் போற்றியுள்ளான்.[13] மேலும் பல சமணப் பள்ளிகள் கொங்குச்சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கின.

சைவம்

கொங்குச் சோழர்கள் காடுகொன்று நாடாக்கும் பணியைச் செய்து முடிக்கக் கொங்கில் கோலோச்சினார்கள். காடழிக்கும் போதே அங்கு சிவாலயத்தையும், திருமால் ஆலயத்தையும் கட்டியெழுப்பினர். அக்கோயில்கள் உள்ளூர் வழிபாட்டிடத்திலேயே கட்டி முடிக்கப்பெற்றன. கொங்கில் பல கோயில்கள் 'தான் தோன்றீசுவரமாக' அமைந்துள்ள தன்மை எடுத்துக்காட்டத்தக்கது. பேரூர், கடத்தூர், அன்னூர், பிரமியம், பாரியூர். பெருந்தலையூர், கரூர், சேவூர், அவினாசி, திருமுருகன் பூண்டி, பழங்கரை, சர்க்கார் பெரியபாளையம், திங்களூர் முதலிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களில் சுயம்பு மூர்த்திகளே உள்ளன என்பர். (இந்து அறநிலையத் துறை ஆட்சியில் உள்ள கோவை பெரியார் மாவட்ட கோயில் பட்டியல்). இவை பெரும்பாலும் கொங்கு நாட்டுப் பழங்குடிகள் வழிபட்ட 'கலிகெழு கடவுள் உறைந்த கந்தங்களாகவே' கருதப்பட வேண்டும். இவை மட்டும் அல்லாமல் புதிதாக இலிங்கம் பிரதிட்டை செய்யப்பெற்று அரசர்கள் பெயரில் கோயில்கள் கட்டியெழுப்பப் பெற்றன. வீரசோழீசுவரமுடையார், உத்தமசோழீசுவரமுடையார், குலோத்துங்கசோழீசுவரமுடையார், வீரராசேந்திராஈசுவரமுடையார், விக்ரமசோழீசுவரமுடையார் போன்ற கோயில் பெயர்கள் இதற்குச் சிறந்த சான்று.[14]

மன்னரே கடவுள்

தென்கிழக்காசியாவில் 'தேவராஜா' வழிபாடு சிறப்புற்றிருந்தது.[15] அப்பகுதியில் அரசன் தான் இறக்கும் முன்பே தனக்கு ஒரு கோயிலைக் கட்டி இறந்தபின் அக்கோயில் கருவறையில் அடக்கம் செய்ய வகை செய்வான். இது கி.பி.9ஆம் நூற்றாண்டிலேயே அப்பகுதியில் நிலை பெற்றிருந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோயில் இராஜராஜேசுவரம் அத்தகைய மரபில் கட்டப்பட்டதாகும் என்று

அறிஞர்கள் கூறுவர்.[16] இது போல அரசர்களின் பெயர்களுடன் சேர்ந்து வரும் கோயில்கள் 'தேவராஜ' வழிபாட்டின் எச்சங்கள் ஆகலாம். அரசர்களின் பெயரில் கோயில்களைக் கட்டியெழுப்பும் மரபு பல்லவர்கள் காலத்திலேயே உருவாகி விட்டது.[17]

திருவிழாக்கள்

சோழர்காலத்தரசர்கள் கோயில்களைக் கட்டியதோடமையாமல் அவற்றின் வழிபாடு குறைவின்றி நடைபெறுவதற்கு நிலக்கொடையையும், காசக்கொடையையும் அளித்தனர்.[18] சிவராத்திரி, கார்த்திகை, தைப்பூசம், பங்குனி உத்தரம், திருமஞ்சனம் போன்ற விழாக்கள் நன்கு நடைபெற நிலக்கொடை அளித்துள்ளனர்.[19] தங்களுடைய பிறந்தநாள் வழிபாடு (சந்தி) நடைபெறுவதற்கும் பல அரசர்கள் நிவந்தமளித்துள்ளனர். கோயில்களில் விளக்கு வைப்பது தனிப்பெருஞ் சமயத் தொண்டாக விளங்கியது. கொடைகளில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு விளக்குக் கொடைதான். ஒளியைப் பற்றி ஞானசம்பந்தர் கூறிய கொள்கைகளைப் பின்பற்றி விளக்குக்கொடை அளித்துஉள்ளனர்.[20] திருவிளக்கு, சந்திவிளக்கு, நொந்தாவிளக்கு என விளக்குப் பெயர்கள் கூறப்பெறுகின்றன.[21] பல்வேறு குடிகளும், வேட்டுவர், பூலுவர், குயவர், வணிகர், படைவீரர், சேனாபதி, சிவப்பிராமணர், மனைப்பெரும் பெண்டிர் போன்றவர்கள் விளக்கு வைப்பதில் பேரார்வம் காட்டியுள்ளனர்.[22]

கோயில்கொடை

விழாக்காலங்களிலும் சிறப்பு வழிபாட்டின் போதும் அடியார்களுக்கும், தபசிகளுக்கும் உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். அன்னூர், கொழுமம் போன்ற ஊர்களில் அன்னதானம் செய்தமை பற்றிக் கூறப்பெறுகின்றது. தானம் செய்வதிலும் இல்வாழ்க்கை காரணங்கள் உள்ளன. மகன் உடல்நலம் பெற வேண்டி சுந்தரரையும், பரவைநாச்சியாரையும் எழுந்தருளப் பண்ணின செய்தியும், மகன் நன்மைக்கு வெள்ளாளன் மனைவி விளக்கு வைத்த செய்தியும், வீரவல்லாளன் முகமதியருடன் செய்த போரில் வெற்றி பெற குறுப்பு நாட்டு மக்களே தானம் அளித்த செய்தியும் இங்கு எடுத்துக் காட்டத்தக்கன.[23] சமயக்குரவர்கள் சமூகத்தில் அனைத்து மக்களும் சிவ

வழிபாட்டில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தில் பல்வேறு எளிய வழிபாட்டு முறையினை எடுத்துக்கூறினர். அவர்கள் கூறிய அனைத்து முறைகளையும் மக்கள் தங்கள் தங்கள் இயல்பிற்கேற்பப் பின்பற்றினர்.

செப்புத்திருமேனி, கற்சிற்பம் போன்றவற்றைச் செய்தளிப்பதன் மூலம் தங்கள் இறையன்பினை வெளிப்படுத்தியுள்ளனர். கொடுமுடியில் ஆடவல்ல பெருமானை அரசனே செய்தளித்தான்.[24] விஜயமங்கலத்தில் பூவாணிநாட்டைச் சேர்ந்த வெள்ளாளப் பெண் ஒருத்தி பெரிய நாயகியைச் செய்தளித்தாள்.[25] சேவூரில் சோமஸ்கந்தர் உருவத்தையும், வள்ளி தெய்வானையுடன் அமர்ந்த செவ்வேளையும் செய்து வைத்தனர்.[26]

பக்திநெறி

பக்தி இயக்கத்தின் பயனாகக் கொங்கு நாட்டில் கோயில் வழிபாடு சிறப்புற்றது. முற்காலப் பல்லவர் காலத்தில் யாகங்கள் (வேள்வி) செய்வதில் சமய வாழ்க்கை நிலை பெற்றிருந்தது.[27] ஆனால் பக்தி இயக்கம் செல்வாக்குப் பெற்ற பின் கோயில் வழிபாடும் படிம வழிபாடும் சிறப்புற்றது. அந்த வகையில் கொங்கு நாட்டில் கோயில்கள் மிகுதியும் கட்டப்பெற்றன. பழங்குடிகள் சிவவழிபாட்டில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவை அமைந்தன. சிந்தையும், மனமும் செல்லாவிடத்திலும் (தேவலோகம்) மக்கள் மனம் செல்லும் வகையில் கோயில்கள் கவர்ச்சி மையங்களாக விளங்கின. வேட்டுவ மரபினைச் சேர்ந்த கண்ணப்பநாயனார் உருவங்கள் கொங்குநாட்டுக் கோயில்களில் போற்றப்பெற்றன.[28]

காபாலிகம்

கொங்கு நாட்டில் காபாலிகசைவம் பரவியிருந்ததற்குக் கோயில் பெயர்களே சான்றுகளாய் உள்ளன. சேவூர் காபாலீசுரம், மடவிளாகம் ஆருத்திர காபாலீசுரம், ஈரோடு ஆருத்திர காபாலீசுரம் போன்ற பெயர்கள் சிவன் கோயில்களுக்கு வைத்துப் போற்றப்பெற்றுள்ளன.[29] இது கொண்டு காபாலிகள் இப்பகுதியில் செல்வாக்குப் பெற்று விளங்கிய தன்மையை எடுத்துக்காட்டலாம். காபாலிகள் கபாலமாலையை அணிந்தவர்கள். கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாக வைத்திருப்பவர்கள். சுடலையில் உள்ள சாம்பலினைத்

தங்கள் உடல் முழுவதும் பூசிக் கொள்பவர்கள்.[30] கொங்கு நாட்டில் தீவிரவாத சமயங்கள் பரவியிருந்த போதிலும் அதன் செல்வாக்கு மிகவும் குறைந்து காணப்படுகின்றது. கொங்கு நாட்டு நகரங்களில் இச்சமயம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. சமண சமயத்தினுடைய தாக்குதலைச் சமாளிக்க இத்தகைய தீவிரவாத சமயங்கள் தேவைப்பட்டன என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது.[31] இது கொங்கு நாட்டைப் பொறுத்த வரையில் உண்மையே. இங்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரை சமணம் செல்வாக்குப் பெற்றிருந்தது.

தேவாரமும் கல்வெட்டுக்களும்

அருளாளர்கள் பரப்பிய பக்தி இயக்கம் கொங்கு நாட்டிலும் பரவியமைக்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. தேவாரச் சொற்றொடர்களும் பெயர்களும் கல்வெட்டில் மிகுதியும் பயின்று வருகின்றன. திருமுருகன்பூண்டிப் பதிகத்தில் இறைவனை விளிக்கும் போது 'முயங்குபூண் முலையாளொடு எத்துக்கிருந்தீர்' என்று கூறுவதைக் காண்கிறோம். கல்வெட்டில் அம்மனுக்கு 'முயங்குபூண் முலை அம்மன்' என்று பெயர் கூறப்பெறுகின்றது.[32] பேரூரில் 'பிறவா நெறியானே' என்று சுந்தரர் பாடுவார்.[33] இதே பெயரில் நிலம் அளிக்கப் பெற்ற செய்தியை அறியலாம். 'பிறவாநெறிக்காணி' என்று இதற்குப் பெயர்.[34]

கொங்கு நாட்டில் சுந்தரர் செல்வாக்கு பலவகையிலும் பயின்று வருகின்றது. அவர் அவினாசிப் பதிகத்தில் 'முதலைவாய்ப்பிள்ளையைப் பற்றிப் பாடுவார்.[35] அவினாசியில் 'முதலைவாய்ப்பிள்ளைக் காணி' என்ற பெயரில் கொடை அளிக்கப் பெற்றமை பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் உண்டு.[36] சிவன்கோயிலுக்கு நிலக்கொடை அளிக்கும் போது அந்நிலத்தில் நடப்பட்டுள்ள சூலக்கல்லில் சூலத்துடன் முதலைவாய்ப்பிள்ளை உருவமும் வடிக்கப்பெற்றுள்ளது.[37] ஆகையால் இக்கதை கொங்கு நாட்டுச் சமய வாழ்க்கையில் செல்வாக்குப் பெற்று விளங்கிய தன்மை புலப்படும்.

முதலை வாய்ப்பிள்ளை

தேவாரம் பாடிய மூவர் வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகத் தேவாரப் பாடல்களும் பெரியபுராணமும் சுட்டுகின்றன..

அவற்றில் குறிப்பிடத் தக்கவை பூம்பாவையை எழுப்பியது,[39] இவைபோன்ற பல கதைகள் தேவாரத்தில் பல இடங்களில் பயின்று வரக் காணலாம்.

தேவாரத்தில் தொன்மம்

பூம்பாவை கதை சிலப்பதிகாரத்திலும், நீற்றறையிலிட்ட வரலாறு பிரகலாதன் கதையிலும் பயின்று வரக்காணலாம்.[40] இங்கு பூம்பாவை கதைகூறும் சிலப்பதிகாரம் ஞானசம்பந்தர்க்குப் பின் வந்தது என்று கொள்ள முடியுமா? அல்லது பிரகலாதன் கதையிலிருந்து நீற்றறையிலிட்ட வரலாற்றைப் பெரிய புராண ஆசிரியர் எடுத்தார் என்று கூற முடியுமா? இக்கதைகள் தமிழ்நாட்டில் காலந்தோறும் வழங்கி வந்த கதைகள் என்று தான் கொள்ள முடியுமே தவிர ஒன்றிலிருந்து ஒன்று வந்தது என்று கொள்ளமுடியாது. இந்தப் பின்னணியில் சுந்தரர் வாழ்க்கையில் நடந்த முதலை வாய்ப்பிள்ளை கதையை நோக்க வேண்டும். சுந்தரர் தேவாரத்தைப் பற்றி ஆய்வு செய்த துரை அரங்கசாமி முதலை வாய்ப்பிள்ளை கதைக்குச் சுந்தரர் பாடலில் அகச்சான்று எதுவும் இல்லை என்று கூறுவார்.[41] சுந்தரர் கூறும் முதலைவாய்ப்பிள்ளை வரலாறு காலந்தோறும் வழங்கி வந்த நாடோடிக்கதை எனலாம். இதே வரலாறு அத்வைதம் தந்த சங்கரர் வாழ்க்கையிலும் சுட்டப்படுகின்றது. இவ்வரலாறு எப்படியிருப்பினும் கொங்கு நாட்டவர்கள் புராணக்கதை நிகழ்ச்சிகளை சிற்பங்களிலும் இலக்கியங்களிலும் வடித்துச் சிறப்பித்தனர். அவினாசியில் முதலைவாய்ப்பிள்ளை செப்புத்திருமேனி ஒன்றுள்ளது. அன்னூரில் மகாமண்டபத்திற்கும், அர்த்த மண்டபத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் முதலை வாய்ப்பிள்ளை உருவம் கொடுங்கையில் வடிக்கப்பட்டுள்ளது.

அரன் அடியார்

கல்வெட்டில் பயின்று வரும் ஆட்பெயர்கள் சைவசமயத்தின் செல்வாக்கினை வலியுறுத்துகின்றன. இப்பெயர்களில் சுந்தரர் பெயரே முதலிடம் வகிக்கின்றது. சேரமான்தோழன் என்ற பெயரால் அவர் அழைக்கப்பெறுகிறார். இப்பெயர்களில் சைவம் சார்ந்த பெயர்களே அறுபது விழுக்காடு பயின்று வருகின்றது. மேலும் திருஞானசம்பந்தன், திருநாவுக்கரசர், திருத்தொண்டத்தொகையான், சிறுத்தொண்டன்,

மாணிக்கவாசகன், தழுவக்குழைந்தான், அவினாசியன், நித்தம்நின்றாடுவான், திருநீலகண்டன், சிவபாதசேகரன், கண்ணப்பன், திருவாரூரான், சாங்கியன் போன்ற பெயர்களைக் கூறலாம்.[42] இப்பெயர்கள் சைவசமயத்தின் செல்வாக்கினை வலியுறுத்துகின்றதல்லவா? பெண்களில் பரவைநாச்சியார் பெயர் மிகுதியும் பயின்று வருகின்றது.

அறம் முப்பத்திரண்டு

திருமுருகன்பூண்டிக் கோயில் அம்மனுக்கு முப்பத்திரண்டு அறம் நடைபெறுவதற்குக் கொடை அளிக்கப்பெற்றுள்ளது. முப்பத்திரண்டு அறமாவன: ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குண்டி, பசுவிற்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச் சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், கா, ஆவுறுஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம் முதலியன. அந்த முப்பதிரண்டு அறங்களும் பல்வேறு சமய இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ளன.[43]

மடங்கள்:

கொங்குச்சோழர் காலத்தில் இங்கு மூன்று மடங்கள் இருந்தமை பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. அவையாவன: திருத்தொண்டத் தொகையான்மடம், திருஞானசம்பந்தர் மடம், மாணிக்கவாசகர் மடம் போன்றவை.[44] இம்மடங்களில் தேசாந்திரிகளுக்கும், தபசியர்க்கும் உணவளிக்கும் பணி பெருமை பெற்றிருந்தது. கோயில் எல்லையில் இம்மடங்கள் செயல்பட்டிருக்க வேண்டும். மடவளாகத்திலிருந்த படைவீரர்கள் பற்றிய குறிப்புக்கள் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கின்றன. அதனால் மடங்களில் படை இருந்திருக்குமோ என்று கருதவேண்டியுள்ளது. மடங்களின் தோற்றம் பக்தி இயக்க வளர்ச்சியின் ஒரு கூறாகக் கருதப்படவேண்டும். இறைவனுக்குத் தொண்டு செய்பவர்கள் மடத்தில் உள்ள

அதிட்டானத்திற்குத் தம்முடைய சக்தி அனைத்தையும் செலவிடுவர். மேலும் அதனைப் பரமர்க்குச் செய்யும் தொண்டாகவே கருதுகின்றனர். மடங்களுக்கு நிறைய பொருட்கொடையை அளித்தனர்.[45] சமண பௌத்தப் பள்ளிகளைப் போல ஒழுங்கு மிகுந்த நிறுவனமாக மடங்கள் உருவாக்கப் பெற்றன. இம்மடங்களில் ஆகமங்கள் சைவசித்தாந்தம் போன்ற சமயக்கல்வி புகட்டப்பெற்றன.[46] மடங்கள் பக்தி இயக்கத்தின் எழுச்சியால் உருப்பெற்றன. தன்னேரில்லாத் தலைவன்பால் அப்பழுக்கற்ற அன்பினைச் செலுத்த வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மடங்கள் செயல்பட்டன. காளாமுகர்களும் பாசுபதர்களும் மடங்களை உருவாக்கித் தலைமையேற்று நடத்துவதில் முன்னின்றனர். கொங்கு நாட்டில் இலகுலீசபாசுபதம் சிறப்புற்றிருந்தமைக்குப் பேரூர் சிற்ப (இலுகுலீச)மே சிறந்த சான்று. கொங்குநாட்டை அடுத்துள்ள கருநாடக மாநிலத்தில் காளாமுகம் செல்வாக்குப் பெற்று விளங்கியது. அதன் தாக்கத்தாலும் கொங்கில் மடங்கள் செல்வாக்குப் பெற்று விளங்கின. அதிகமான்கள் சிறப்புற்ற தருமபுரியில் காளாமுகம் பெருமை பெற்றதற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.[47] அதுவும் கொங்கு மடங்களுக்கு முன்னோடியாக இருந்திருக்கும். மடங்களைச் சேர்ந்த மாகேஸ்வரர் கோயில்நிருவாகத்தில் பெருமை பெற்றிருந்தனர்.[48]

வைணவம்

சைவத்தைப் போலவே வைணவமும் செல்வாக்குப் பெற்ற சமயமாக விளங்கியிருந்தது. கொழுமம், குமரலிங்கம், கோவை, சேவூர், தாராபுரம், விஜயமங்கலம், கடத்தூர், கண்ணாடிப்புத்தூர், திங்களூர், பட்டாலி, அகிலாண்டபுரம், ஆனைமலை போன்ற ஊர்களில் திருமால் கோயில்கள் உள்ளன.[49] கொங்குச்சோழர் காலத்தில் கொங்கு நாட்டில் வைகாநசப்பிரிவு விஜயமங்கலத்தில் பெருமை பெற்றிருந்தது.[50] வைகாநச சூத்திர நம்பிகள் என்றே கல்வெட்டுக்கள் கூறும். வைகாநசம் பற்றிப் பிற ஊர்க்கல்வெட்டுக்களில் கூறப்படவில்லை.

வைகாநசம்

வைகாநசம் என்பது பகுப்பு ஆகும். இந்த வைகாநச ஸூத்ரம் வேதங்கள் நான்கு பிரிவாகப் பிரிவுபடுமுன் சூத்திரமானவை. விகனஸர் செய்த சூத்திரத்தையனுட்டிப்போர் வைகாநஸர். இந்த இரிஷியின்

சீடர்கள் நால்வரான மரீசி, அத்ரி, பிருகு, காசியபர் ஆகியோர். இந்த நால்வரும் சேர்ந்து நான்கு லட்சக் கிரந்தங்கள் செய்தனர். இவைகளுக்கும் வைகாநஸம் என்று பெயர். இந்த விகனஸசூத்திரம் பதினொரு பிரச்சனமும் மந்திரம் எட்டுப் பிரச்சனமுமாம். இவையன்றி கிரஹ்ஹிதம், முப்பத்திரண்டு பிரச்சனமும் இயற்றினர். விகநஸரின் சாகையஜீஸ். இந்தச் சூத்திரம் பதினொரு பிரச்சனத்தில் கிருஹ்யபாகங்கள் பகுவாயும் விவரமாகவும், தெய்வீக பாகம் சுருக்கமாகவும் கூறியிருக்கின்றது.[51]

கல்வெட்டுக்களில் 'ஸ்ரீவைஷ்ணவர்ரக்ஷை' என்று கூறப்படுவதால் கோயில் நிருவாகத்தில் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்று கருதலாம். மேலும் வைணவ செப்புத் திருமேனிகளைச் செய்தளித்தமை பற்றிக் கல்வெட்டுக்கள் கூறும். சேவூர், கொழுமம், குமரலிங்கம் போன்ற ஊர்களில் செப்புத் திருமேனிகள் செய்தளித்தமை பற்றிக் கல்வெட்டுக்கள் கூறும்.[52] பாண்டிநாட்டு வைணவத் தலங்களுக்கும், கொங்குநாட்டு வைணவத்தலங்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. அதற்கான கல்வெட்டுச் சான்றுகள் குமரலிங்கம் விஜயமங்கலம் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன.[53]

விஜயமங்கலத்தில் சித்திரமேழி விண்ணகரம் என்ற பெயரில் ஒரு திருமால் கோயில் உள்ளது. இக்கோயில் சித்திரமேழி பெரியநாட்டார் என்ற வணிகவேளாள சங்கத்தினரால் கட்டப்பெற்றது.[54] இதுபோன்றதொரு கோயில் சேலம் மாவட்டம் பருத்திப்பள்ளி என்ற ஊரில் உள்ளது.[55] விஜயமங்கலத்தில் உள்ள கோயிலில் இடங்கை தொண்ணூற்றெட்டு சாதியாரும் இத்தருமத்தைக் காப்பாராக என்று கூறுவதால் வைணவத்தில் இடங்கைப் பிரிவினர் மிகுந்திருந்தனரோ என்று கருத வேண்டியுள்ளது.சைவமடங்களைப் போல வைணவ மடங்கள் ஏதுமிருந்ததாகத் தெரியவில்லை. மேலும் வைணவப் பெரியார் இராமாநுசர் சமயப் போராட்டம் நடைபெற்ற போது கொங்குநாட்டு வழியாக மைசூர் பகுதிக்குச் சென்றார் என்றும் கொங்கு பிராட்டியார் என்ற பெண்மணி அவரை ஆதரித்தார் என்றும் கூறப்படுகின்றது.[56]

அனந்தசாயி

சேவூர், அன்னூர் போன்ற ஊர்களில் சிவன் கோயிலில் அனந்தசாயி உருவம் பொறிக்கப் பெற்றிருக்கின்றது. இதனைப் பள்ளி கொண்ட பெருமாள் என்று அழைக்கின்றனர். ஈரோட்டுப் பள்ளி கொண்ட பெருமாள் கோயில் காலத்தால் முற்பட்டது. கொங்குநாட்டின் தனிப்பெரும் கலைப் படைப்பாக விளங்கும் 'நாமக்கல் அதியேந்திர விஷ்ணு கிரகத்தில்' பள்ளி கொண்ட பெருமாளின் உருவம் வடிக்கப் பெற்றுள்ளது. அச்சிற்பம் பற்றிய படிமக்கலைக் கோட்பாட்டை வலியுறுத்தும் வடமொழிக் கல்வெட்டு ஒன்று உள்ளது. "மதுகைடபர்களை அழித்த திருமால் பள்ளி கொண்ட கோயிலில் அப்பெருமானைப் போற்றும் மார்க்கண்டேயர், மகரிஷிபர்ணன், வருணன், பிரம்மன், ஈசன், தஷன், சசி, சூரியன், தும்புரு, நாரதன், பிருகு, சாரங்கி, கௌமோதகி, சக்கரம், நந்தகன், பாஞ்சசன்யன் முதலியோர் இக்கோயிலைச் செய்தவருக்கு நன்மையை நல்கட்டும்"[57] என்ற கல்வெட்டு எடுத்துக்காட்டத் தக்கது. பள்ளி கொண்ட பெருமாள் கொங்கு நாட்டில் சிறப்புற்றிருந்ததற்குக் காரணம் இருந்திருக்க வேண்டும்.

சமணம்

கொங்கு நாட்டில் சமணம் கி.பி. முதல் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை செல்வாக்குப் பெற்றிருந்தது. கொங்குச்சோழர் காலத்திலும் திங்களூர், விஜயமங்கலம், சீனாபுரம், அரசண்ணாமலை, அவல்பூந்துறை, வெள்ளோடு, தாராபுரம், ஐவர்மலை, திருமூர்த்திமலை, ஆழியாறு அணை, பொங்கலூர், பொள்ளாச்சி, கோயில்பாளையம் போன்ற ஊர்களில் சமணம் செல்வாக்குப் பெற்றிருந்தது.[58] சேலம் மாவட்டத்தில் பருத்திப்பள்ளி, பூதியூர் (கரூர் அருகில்) சமணத் தீர்த்தங்கரர் உருவம் வழிபாட்டில் உள்ளது.[59] மேலும் அவினாசி வட்டம் ஆலத்தூரிலும் பாழடைந்த சமணக் கோயில் உள்ளது.[60] இது கொங்குச்சோழ மன்னன் வீரசோழன் காலத்தில் கட்டப்பெற்றது.

கொங்குநாட்டில் வாழ்ந்த சமணப் பெரியோர்கள் தமிழ் இலக்கியத்திற்கு நிறையச் சேவை செய்துள்ளனர். நன்னூலையாத்த

பவணந்தி முனிவர் கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்.[61] கொங்குச்சோழர் காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படும் குணவீரபண்டிதர் வச்சநந்திமாலை என்ற நூலை யாத்தவர்.[62]

கொங்கு நாட்டில் இயக்கி வழிபாடு சிறப்புற்றிருந்ததற்குச் சான்றுகள் மிகுதியும் கிடைத்துள்ளன. விஜயமங்கலம், திங்களூர் போன்ற ஊர்களில் இயக்கி உருவங்கள் செய்தளிக்கப் பெற்றுள்ளன. கொங்கு நாட்டு இயக்கி பெரும்பாலும் இப்பகுதியில் நிலைபெற்றிருந்த பெண்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியே என்று கொள்ளலாம். அணங்குடைப் பெருவழிகளும், கொடுமுடிகளும் கொங்கு நாட்டில் மிகுதியும் இருந்துள்ளன. இந்த அணங்கே பின்னாளில் இயக்கியாக உருவாயிற்று.[63] ஆதாழி அம்மன் கோயில் இதற்குச் சிறந்த சான்று.

விஜயமங்கலத்தில் அம்பிகாயக்கி உருவம் வழிபாட்டில் உள்ளது. கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள் தீர்த்தங்கரரை 'அணியாத அழகியார்' என்று கூறுகின்றன.[64] விஜயமங்கலத்திலும், ஆலத்தூரிலும் வீரசங்காதப் பெரும்பள்ளி என்ற பெயரில் பள்ளிகள் இருந்தன.[65] இவை கொங்குச்சோழர் ஆட்சிக்குப் பின் செல்வாக்கு இழந்தன. சமணசமயம் சிறப்புற்றிருந்த விஜயமங்கலத்தில் கொங்குச்சோழர் காலத்தில் வரையப் பெற்ற ஓவியங்கள் உள்ளன.

விஜயமங்கலம் சந்திரபிரபாகோயில் முகமண்டபவிதானத்தில் அருகதேவன் வாழ்க்கை வரலாறு சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. அவர் தாயார் கனவில் யானையைக் காண்பது முதல் அருகதேவன் கேவலஞானம் பெறுவது வரையிலான வாழ்க்கை வடிக்கப் பெற்றுள்ளது. சிற்ப வடிவங்கள் கொங்குச் சோழரின் காலத்திறுதியைச் சேர்ந்தது என்று கருதலாம். சமண புராண மரபில் கூறப்பெறும் ஆதிநாதர் (அருக தேவன்) வரலாற்றுடன் சிற்பச் செய்திகளை ஒப்பிட்டுப் பார்ப்பது பலவகையிலும் சிறப்புடையது.

பௌத்தம்

கொங்கு நாட்டில் சேலம், போளுவாம்பட்டி ஆகிய ஊர்களில் பௌத்த சமயம் செல்வாக்குப் பெற்றிருந்த தன்மையை வலியுறுத்துகின்ற தொல்பொருட் சின்னங்கள் கிடைத்துள்ளன. சேலத்தில் கற்சிற்பமும், போளுவாம்பட்டியில் சுடுமண் பொம்மைகளும்

கிடைக்கின்றன.[66] இவற்றில் (சுடுமண் பொம்மை) சில கொங்குச் சோழர் காலத்தைச் சேர்ந்தவை.[67] இவை தவிர பௌத்த சின்னங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

சமண பௌத்த சமயங்கள் கொங்கு நாட்டு வாணிகத்தலங்களில் மட்டும் செல்வாக்குப் பெற்றிருந்தன. விஜயமங்கலம், சீனாபுரம், திங்களூர் (சந்திராபுரம்) பொங்கலூர், கோயில்பாளையம் (கவையன்புத்தூர்), போளுவாம்பட்டி (முட்டம்) போன்ற ஊர்கள் வணிகத் தலங்களாகவும் பெருவழி ஊர்களாகவும் விளங்கின.[68] ஐவர்மலைக்கு சோழர்காலத்துப் பெயர் அயிரைமலை என்பது.[69] இப்பெயருடன் ஒரு பெருவழி கொழுமம் பழனி பெருவழியாகச் சென்றது. அது அப்போதே அசுரர் மலைப் பெருவழி (அயிரை–அசிரை–அசுரர்) என்று பெயர் பெற்றது.[70]

ஆழியாற்றின் அருகில் ஒரு சமணப்பள்ளி இருந்தது. அங்கு கொங்குச் சோழர்காலத்து (சிதைந்த) தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. இது தற்போது ஆதாழி அம்மன் என்ற பெயரில் வழங்கப்பெறுகின்றது. இதற்கு உயிர்ப்பலியும் தரப்பெறுகின்றது. சமணம் இதனை இணைத்துக் கொண்டிருக்க வேண்டும். சமணம் செல்வாக்கிழந்த பின்பும் இன்று வரை இவ்வம்மன் வழிபடப்பட்டு வருகின்றது. இது வடமேற்குத் தக்கணத்தில் கார்லே என்ற மலை உள்ள பௌத்த விகாரத்துக் கந்திற்பாவை வழிபாட்டை நினைவுறுத்துகின்றது.[71] ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வடிக்கப்பெற்ற இப்பாவை அப்பகுதியில் பௌத்தம் அழிந்த பின்னும் இன்று வரை நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள பம்பாய் மீனவர்களால் உயிர்ப்பலி இட்டு வழிபடப்பட்டு வருகின்றது.[72] இது தொல் தெய்வமாக இருந்து பௌத்தர்களால் தங்கள் சமயத்தில் இணைக்கப்பெற்று பௌத்தம் அழிந்த பின்னும் தொடர்ந்து பழங்குடிகளால் வழிபடப் பெற்று வருகின்ற தெய்வம். கார்லே வடமேற்குத் தக்காணத்திலிருந்து மேற்குக் கடற்கரைக்குச் சென்ற பண்டைய பெருவழியில் உள்ளது. ஆகையால் கார்லே விகாரத்துக் கந்திற்பாவையைப் போலவே ஆதாழி அம்மனும் பழங்குடிகள் வழிபட்ட பெருவழி தெய்வமாகலாம்.

சிறுதெய்வம்

கொங்கு நாட்டில் சிறு தெய்வ வழிபாடே மேலோங்கி நின்றது. இரண்டாயிரம் வருடங்களாகச் சிறு தெய்வ வழிபாட்டின் செல்வாக்கைக் காண முடியும். அயிரைத் தெய்வம் சேரர்களுடைய குலதெய்வம் என்பதும் அது பழனிமலைக்கு அருகிலிருந்த ஐவர்மலையில் வழிபடப்பெற்றது என்பதும் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகள்.[73] சிலப்பதிகார வேட்டுவ வரியில் கண்ணகியை நோக்கிச் சாலினி கூறும் சொற்கள் குறிப்பிடத்தக்கவை. "இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி'' என்று சாலினி கூறுவாள்.[74] ஆகையால் பத்தினிக் கடவுள் வழிபாடும் மேலோங்கி நின்ற தன்மை புலப்படும்.

பத்தினிக் கடவுள் பௌத்த சமயத்தில் சிறப்புற்ற சிறு தெய்வம். இத்தெய்வம் சமண சமயத்தினராலும் ஆசீவக சமயத்தினராலும் போற்றப்பெற்றது. இவ்விரு சமயங்களும் பத்தினிக் கடவுளைக் கொங்கு நாட்டில் வழிபடச் செய்திருக்க வேண்டும். மேலும் பத்தினிக் கடவுள் சிறப்புற கொங்கு நாட்டுச் சமூக வாழ்க்கையும் காரணமாயிற்று. கால்நடை வளர்ப்பும் மாடுபிடி சண்டையும் மேலோங்கி இருந்தமையால் மரணம் மனிதர்களை (ஆண்களை) விரைவில் தழுவியது. அவ்வாறு இறந்துபட்ட ஆண்களின் மனைவிமார் தீப்பாய்ந்து கணவருடன் மாய்ந்தனர். அவர்களுக்குக் கோயில் கட்டி வழிபாடும் செய்யப்பட்டது. வழிபாட்டிற்கு நிவந்தமும் அளிக்கப்பெற்றது. அதற்குத் 'தீபாஞ்சம்மன் காணி' என்று கல்வெட்டுக்கள் கூறும்.[76] இந்தப் பின்னணியில் கொங்கு நாட்டில் பத்தினி வழிபாட்டினை நோக்க வேண்டும்.

கொங்கு நாட்டுச் சிறுதெய்வங்களில் தாய்த் தெய்வங்களே மிகுந்து காணப்படுகின்றன. வஞ்சியம்மன், செல்லியம்மன், கொங்காயி போன்ற தெய்வங்கள் இங்கு செல்வாக்குப் பெற்ற தெய்வங்கள். ஆனால் இத்தெய்வங்கள் கொங்குச்சோழர் கல்வெட்டுக்களில் யாண்டும் காணப்பெறவில்லை. ஆனால் நீலகண்டி, அயிரைபிடாரி, பிடாரி, நங்கைநீலி என்ற பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.[77] இவைமட்டுமல்லாமல் பேரூர்களில் திருக்காமக்கோட்டநாச்சியார் கோயில் என்று அம்மன் கோயில்கள் மிகுதியும் கட்டப்பெற்றன. இவை பண்டைய தாய்த் தெய்வத்தின் பிராமணிய வடிவங்கள். இக்கோயில்களில் இன்று நடைபெறும் சில சடங்குகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

'அயிரை பிடாரி' என்ற தெய்வம் இன்றைய ஐவர்மலை (அயிரை மலை)யில் உறைந்த தெய்வம். இது பண்டை நாளில் வழிபடப் பெற்ற அயிரைத் தெய்வமே. விஜயமங்கலத்தில் நிலைபெற்றிருந்த 'நங்கை நீலி' ஆலயம் குறிப்பிடத்தக்கது. இது பழையனூர் நீலிக் கதையை நினைவுறுத்துகின்றது. 'நீலி வழிபாடு' தமிழகம் முழுவதும் பரவி நின்றது. அவ்வழிபாடு கொங்கு நாட்டிலும் பரவி நின்றமைக்குச் சிறந்த சான்று [78] விஜயமங்கலம் கல்வெட்டே ஆகும். இவை மட்டுமின்றி தாய்மார் எழுவர் வழிபாடும் இங்கு சிறப்புற்றது.[79] நீலம்பூர், கொழுமம், பேரூர்போன்ற ஊர்களில் தாய்மார் வழிபாடு சிறப்புற்றிருந்த தன்மையை அறியும் வகையில் சிற்பங்கள் உள்ளன.[80]

ஐயனார்

கொங்குச்சோழர் காலத்தில் ஐயனார், வழிபாடு போற்றப்பெற்றது. அகிலாண்டபுரம், கொழுமம், கோயில்பாளையம், பெருந்தலையூர், அவல்பூந்துறை, பிடாரியூர், திங்களூர் போன்ற ஊர்களில் கொங்குச்சோழர் காலத்து ஐயனார் உருவங்கள் உள்ளன. ஈங்கூரிலிருந்து ஈரோட்டுக் கலைமகள் கல்வி நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பெற்ற ஐயனார் உருவம் குறிப்பிடத்தக்க சிறப்புடையது. ஐயனாரை செய்து வைத்தமை பற்றிய கல்வெட்டும் உள்ளது.[81] அது மட்டுமில்லாமல் ஐயனார் உருவ அமைதி பிற ஐயனாரிலிருந்து வேறுபட்டது. ஐயனார் யோகபட்டம் அணிந்து அமர்ந்துள்ளார். அருகில் வீரர்கள், குதிரை, நாய் ஆகிய உருவங்கள் வடிக்கப் பெற்றுள்ளன. ஒரு மனிதன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கிடக்கிறான்.[82] இவ்வுருவம் வணங்குவதாகவும் கொள்ளலாம்; பலியிடுவதற்காகவும் கிடத்தப் பட்டிருக்கலாம். ஐயனார் வழிபாட்டின் முழுவடிவத்தையும் இங்குபார்க்கிறோம்.

நடுகல்

கொங்குச்சோழர் காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்புற்றிருந்தது.[83] காவிரிக்கரை ஓரத்தில் எழுத்துடை நடுகல் மிகுதியும் கிடைக்கின்றது. வடிவுள்ள மங்கலம், அந்தியூர், கரூர், கொக்கராயன்பேட்டை, கூளிபட்டி, வாழவந்தி போன்ற ஊர்களில் சோழர்கால எழுத்துடை நடுகற்கள் மிகுதி. கொல்லிமலையிலும்

இத்தகைய நடுகற்கள் மிகுதியாக உள்ளன. ஆனால் கொங்கு நாட்டில் உள் பகுதியில் எழுத்தில்லா நடுகற்களே மிகுதி. கொங்குச்சோழர் காலத்தைச் சேர்ந்த எழுத்தில்லா நடுகற்கள் கொழுமம், போளுவாம்பட்டி, கணியூர், அவினாசி, வெள்ளலூர், களந்தை, துக்காச்சி, பெருந்தலையூர், நல்லூர், அன்னூர், சேவூர், நம்பியூர் போன்ற ஊர்களில் உள்ளன. இது மாடுபிடி சண்டையில் இறந்துபட்ட வீரர்களுக்காக நடப்பெற்ற நடுகற்கள்.

நவகண்டம்

கொங்கு நாட்டுச் சிவன் கோயில்கள் அனைத்திலும் நவகண்டச் சிற்பங்கள் வடிக்கப்பட்டிருந்ததைக் காணலாம். இவற்றில் சில கொங்குச் சோழர் காலத்தைச் சேர்ந்தவை. கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் மிகுந்திருந்தமையால் தங்கள் குடிவளம் பெருகவும், நாடுவளம் பெருகவும் தங்களைப் பலியிட்டுக் கொண்டனர். சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்கள் நவகண்டம் கொடுப்பது பற்றிக் கூறப்பெறுகின்றது.[84] மணிமேகலையிலும் நவகண்டம் கொடுப்பது பற்றிக் கூறப்பெறுகின்றது.[85] நவகண்டம் கொடுக்கும் வீரர்கள் தலையை அரிந்து காடமர் செல்விக்கு அளித்தனர். ஆனால் கொங்கு நாட்டுச் சிவன் கோயில்களுக்கு முன் நவகண்ட சிற்பங்கள் உள்ளன. ஆகையால் அவை சிவ வழிபாட்டுடன் கலந்த தன்மையை வலியுறுத்துகின்றது எனலாம்.

சமயஞ்சார்ந்த கலைகள்

கொங்கு நாட்டுக் கலைகளும், கட்டடக்கலைகளும் சமயம் சார்ந்ததாகவே இருந்தன. சமயஞ்சாராக் கலைப் பொருள்களோ, கட்டடமோ இதுவரையில் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் அகழ்வில் கிடைக்கலாம். முன்இடைக்காலத்திலும், இடைக்காலத்திலும் கொங்கு மக்கள் வாழ்க்கையில் சமயமே உயிர் மூச்சாக இருந்தமையால் கலைகளும், கட்டடங்களும் சமயத்தை மையமாக வைத்தே உருவாயின. கொங்குச்சோழர்க்கு முன் கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.[86] ஆனால் சான்றுகள் மூலம் அறியப்பெறும் கோயில்கள் இன்று எதுவும் நிலைத்ததில்லை. கொங்குச்சோழர்க்கு

முன் செய்யப்பெற்ற கலைச் செல்வங்களே நிலைத்துள்ளன. கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள், செப்புத் திருமேனிகள் அவை.

கொங்கு நாட்டில் கலைச் செல்வங்கள் மிகுதியாக இருப்பினும், 'கொங்கு கலைப்பாணி' என்ற தனித் தன்மையான பாணி எதுவுமில்லை.[87] பிறநாட்டுக் கலைப்பாணிகள் கலந்து கொங்கிற்கேயுரிய கலைப்பாணி சிறிது சேர்ந்து உருவானதே கொங்கு நாட்டுக் கலைச் செல்வங்கள். சோழர், பாண்டியர், சேரர், கோநாட்டரசர், போசளர், கங்கர் ஆகியோர் கலைப்பாணிகள் வெவ்வேறு காலங்களில் நிலைபெற்றிருந்தன. சுடுமண் பொம்மைகளிலும் தென்னிந்தியா முழுவதும் நகர நாகரிகத்தில் நிலைபெற்ற கலைப்பாணியே நிலைபெற்றிருந்தது.[88] கொங்கிற்குரிய கலைப்பாணி இல்லை.

கட்டடக்கலை

அன்னூர், அவினாசி, திருமுருகன்பூண்டி, பிரமியம், விஜயமங்கலம், பெரியசேமூர், பொன்னிவாடி, கொடுவாய், நெரூர், ஆலத்தூர், ஈரோடு, வெள்ளியெறிச்சல் போன்ற ஊர்களில் கி.பி.10–11ஆம் நூற்றாண்டுக் கோயில்கள் இருந்துள்ளன.[89] பிரமியம், அன்னூர், ஆகிய ஊர்களில் உள்ள கோயில்கள் கொங்குச் சோழர்களின் மூத்த மூன்றரசர்கள் காலத்தில் கட்டப்பெற்றவை என்று உறுதியாகக் கூறலாம். கருவறை அமைப்பும் சுவரின் உறுப்புக்களும் குமுதத்திற்கும், கண்டத்திற்குமிடையில் யாளவரியமைப்பும் கோநாட்டுக் கட்டடக் கலையையும், நார்த்தாமலை விசயாலய சோளீச்சுர அமைப்பையும் நினைவு படுத்துகின்றன.[90] தொடக்க நாட்களில் கருவறையும், அர்த்த மண்டபமும் மட்டுமே கட்டப்பட்டிருக்க வேண்டும். தொடக்க காலக் கோயில்களில் இவ்விரண்டு உறுப்புக்கள் மட்டுமே உள்ளன. திருமுருகன் பூண்டி, அவினாசி, விஜயமங்கலம் ஆகிய ஊர்களிலும் கோநாட்டுக் கட்டடக்கலை மரபின் தாக்கத்தினைக் காணலாம். தொடக்க காலக் கோயில்கள் சில சிதைந்து விட்டமையாலும், சிலவற்றின் மீது புதிய விமானங்களைக் கட்டி விட்டமையாலும் அவற்றின் உண்மை வடிவத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் மகாமண்டபம், முகமண்டபம், போன்றவை கி.பி.12–13ஆம் நூற்றாண்டுகளில் புதிதாகச் சேர்ந்த கட்டடஉறுப்புக்கள்.

தொடக்க காலக் கோயில்களில் பரிவார தேவதைகளுக்கான தேவகோட்டங்கள் தெளிவாக அமைக்கப்பெறவில்லை. ஆகையால் பரிவார தேவதைகளுக்குத் தனிக் கோயில்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும். பிரமியம், அன்னூர் போன்ற ஊர்களில் பரிவார தேவதை உருவங்கள் உள்ளனவே ஒழிய தேவகோட்டங்கள் இல்லை. ஆகையால் நார்த்தாமலையிலிருப்பது போலவே பரிவார தேவதை கோயில்கள் தனியாகவே இருந்திருக்க வேண்டும்.[91]

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சில கோயில்கள் கட்டப்பெற்றன. திருமுருகன்பூண்டி, விசயமங்கலம், திங்களூர், பரஞ்சேர்பள்ளி, வெள்ளியங்காடு ஆகிய ஊர்களிலும் 11ஆம் நூற்றாண்டுக் கோயில்கள் உள்ளன. கட்டடக்கலை அமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதுமில்லை. இந்நூற்றாண்டில் குமுதத்திற்கும் பட்டிக்குமிடையிலிருந்த யாளிவரி காணப்பெறவில்லை.

காலத்தில்கட்டடக்கலைமாற்றம்

கி.பி.12–13ஆம் நூற்றாண்டில் தென்கொங்கும், கொங்குச்சோழர் ஆட்சியிலிருந்தமையால் பெரும்பரப்பில் கொங்குச்சோழர்களால் கோயில் கட்டடங்கள் கட்டப்பெற்றன. தாராபுரம், அகிலாண்டபுரம், பட்டாலி, வெள்ளக்கோயில், அலங்கியம், கீரனூர், கொங்கூர், கொழுமம், கோனாபுரம், குமரலிங்கம், குண்டடம், ஆரத்தொழு, பேரூர், சேவூர், மூடுதுறை, இரும்பறை, கருவலூர், பழங்கரை, சர்க்கார் பெரியபாளையம், ஆனைமலை, குள்ளிசெட்டிபாளையம், போளுவாம்பட்டி, பெருந்தலையூர், பாரியூர், ஆதியூர் ஆகிய ஊர்களில் கட்டப்பெற்ற கோயில்கள் குலோத்துங்கசோழன், வீரசோழன், வீரராசேந்திரன், இரண்டாம் விக்கிரமசோழன், மூன்றாம் விக்கிரமசோழன் ஆகிய மன்னர்கள் காலத்தில் கட்டப்பெற்றிருக்க வேண்டும்.[92]

சூரியகிரகணம்

கொழுமம் வீரசோழீசுவரர் கோயில், மூன்றாம் வீரசோழனின் பிறந்தநாளும், சூரிய கிரகணமும் ஒரே நாளில் வந்தமையால் ஏற்பட்ட பிரம்மகத்தி தோசத்தினைப் போக்கக் கட்டப்பெற்றது.[93] இதற்குக்

கல்வெட்டுச் சான்றுகள் உண்டு. அதே ஊரில் 'நித்த நின்றாடுவார்' கோயில் வீரராசேந்திரனால் கட்டப் பெற்றது.[94] அரசர்களால் கட்டப்பெற்ற கோயில்களில் தூண்களை அமைத்துக் கொடுத்தவர்கள் மக்கள் அல்லது சமூகத்தில் உயர்நிலையிலிருந்தவர்கள்.

கட்டட உறுப்புகள்

மக்களே கட்டிய கோயிலுக்குச் சிறந்த சான்று ஆதியூர் ஆதிபுரீசுவரர் கோயில்.[95] இக்கோயிலில் தூண்கள், வாயில்கள், கபோதம், கதுவாய், அகவாய் (உள் மண்டப வாயில்), புறவாய் (வெளிமண்டப வாயில்), மண்டபக் கூரை போன்றவற்றைப் பதினைந்துக்கும் அதிகமானோர் கட்டியுள்ளனர்.[96] கொங்குச்சோழர் காலத்துக் கோயில்களின் உறுப்புக்களின் பெயர்கள், கட்டடப்பகுதிகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு ஆதியூர்க் கல்வெட்டுக்களும், கோயில்களும் சிறந்த சான்றாக விளங்கி நிற்கின்றன. தொழிற்குழுக்கள் (Guild) கட்டிய கோயில்கள் பற்றி முன்னரே கூறப்பெற்றுள்ளது.[97]

மூன்றாம் காலகட்டத்தில் (கி.பி.12–13ஆம் நூற்றாண்டு) கட்டப்பெற்ற கோயில்கள் அனைத்தும் ஒரே அமைப்பிலிருந்தன. கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகிய அமைப்புக்களுடன் கோயில்கள் விளங்கின. விமானம் கட்டப் பெறவில்லை. கொங்கு நாட்டுக் கோயில்களின் மேல் கட்டப்பெற்றுள்ள விமானங்கள் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்நூற்றாண்டிலும் கட்டப்பெற்றன. அதற்கு முன்பு விமானமின்றியே கோயில்கள் கட்டப்பெற்றிருக்க வேண்டும். கட்டட உறுப்புக்களும் ஜெகதி, குமுதம், கண்டம், பட்டி, வித்தி, கொடுங்கை, தளம் ஆகிய உறுப்புக்களைப் பெற்றிருந்தன. தேவகோட்டங்கள் இருந்தன. ஆனால் பரிவார தேவதைகள் அவற்றில் வைக்கப் பெறவில்லை. கொடுங்கையில் உள்ள சிற்பங்கள் மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலித்தன.

கருவறை

கருவறை சதுர வடிவில் கட்டப்பெற்றிருந்தது. ஜெகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டி, பித்தி, கொடுங்கை ஆகிய உறுப்புக்களும் முன்பக்க சுவர்களில் மூன்று தேவ கோட்டங்களும் இருக்கின்றன. பித்தியில் (சுவரில்) அரைத் தூண்கள் உள்ளன. அவை

எளிய அமைப்பில் இருக்கின்றன. கருவறைக்கும், அர்த்த மண்டபத்திற்கும் இடையில் அந்தராளம் இருக்கின்றது. போரூவாம்பட்டியில் உள்ள கோயில் அந்தராளத்தில் மகாகும்பம் வடிக்கப்பெற்றுள்ளது.

அர்த்தமண்டபம்

கருவறைக்கும் அர்த்தமண்டபத்திற்குமிடையில் அந்தராளம் (இடைக் கட்டு) என்ற அமைப்பு ஏதுமில்லை. அர்த்த மண்டபம் கருவறையைப் போல ஜெகதி, குமுதம், யாளிவரி, கண்டம், பட்டி, பித்தி கொடுங்கை ஆகிய உறுப்புக்களைப் பெற்று நிற்கிறது. அர்த்த மண்டபத்திலும் திருப்பணி செய்தபோது கற்கள் மாற்றி வைத்துக் கட்டப்பட்டுள்ளன. கட்டடக்கலையில் மாற்ற மேதுமில்லை. தேவ கோட்டங்கள் உள்ளன.

மகாமண்டபம்

மகாமண்டபம் கி.பி.12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட கற்களிலும் வேறுபட்ட கற்களை மகாமண்டபத்திற்குப் பயன்படுத்தியுள்ளனர். அதனால் இரண்டிற்குமிடையில் காலம் மாறுபட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. ஆனால் அவை கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றைச் சேர்ந்தவை. திருப்பணியின் போது மாற்றிக் கட்டப்பட்டிருக்க வேண்டும். மகாமண்டபத்திலும் சுவர், ஜெகதி, குமுதம், பட்டி (அதிட்டான வர்க்கம்), பித்தி ஆகிய உறுப்புக்களைப் பெற்று விளங்குகிறது. கட்டட அமைப்பில் வேறுபாடு ஏதுமில்லை. உள்ளே நான்கு தூண்கள் உள்ளன. அவை கீழ்ப்பகுதி நாற்பட்டையாகவும், நடுப்பகுதி எண்பட்டையாகவும் உள்ள அமைப்பினைக் கொண்டு விளங்குகிறது. இரண்டு தூண்களில் சிற்பங்கள் உள்ளன. ஒன்று விநாயகர், மற்றொன்று சுப்ரமணியர். தூணின் சுபோதங்கள் வேலைப்பாடின்றி எளிமையாக அமைந்துள்ளன.

முக மண்டபம்

இம்மண்டபம் தூண்களால் மட்டும் கட்டப்பட்டிருக்கும் மண்டபம். வரிசைக்கு எட்டு வீதம் நான்கு வரிசைகளில் முப்பத்திரண்டு (அல்லது பதினாறு) தூண்கள் அமைந்துள்ளன.

சிற்பங்கள்

கொங்குச்சோழர் காலத்தில் வடிக்கப்பெற்ற சிற்பங்கள் கோவை, பெரியார் மாவட்டத்திலும், பழனி பகுதியிலும் கிடைக்கின்றன. கொழுமம், குமரலிங்கம், கல்லாபுரம், அவினாசி, சேவூர், பிரமியம், கரையூர், பொன்னிவாடி, விஜயமங்கலம், சீனாபுரம், திங்களூர், மாவண்டூர், அகிலாண்டபுரம், பரஞ்சேர்பள்ளி, திருமுருகன்பூண்டி, சர்க்கார் பெரியபாளையம், ஆனைமலை, அலங்கியம், கொங்கூர், தாராபுரம், வெள்ளோடு, பெருந்தலையூர் போன்ற ஊர்களில் வடிக்கப்பெற்றுள்ள கற்சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. திருமுருகன்பூண்டி காளி (நீலகண்டி) கோயில் காளி உருவமும், துவாரபாலகி உருவமும் கி.பி.10–11ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பெற்றவை. கரையூர், பொன்னிவாடி, பிரமியம் ஆகிய ஊர்களில் தாய்மார் எழுவர், நந்தி, சண்டீசர், ஐயனார், விநாயகர் போன்றவை கோநாட்டார் கலைப்பாணியிலமைந்தவை. கி.பி.10ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை.

அவினாசி, திருமுருகன் பூண்டி, சேவூர், கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், அன்னூர், சோழமாதேவி ஆகிய ஊர்களில் உள்ள கண்ணப்பர், ஐயனார், பூப்பலகை, (கொழுமம்), திருமால், திருமகள், பூமகள் ஆகிய உருவங்கள் கி.பி.12–13ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. திருமால் தேவியர் உருவங்கள் கருவலூர், விஜயமங்கலம் ஆகிய ஊர்களிலும் வடிக்கப்பெற்றுள்ளன. களந்தை ஆதித்தேசுரத்தில் கருவறையில் நந்திமேல் அமர்ந்திருக்கும் உமை தமிழகத்தில் வேறெங்கும் இல்லாதது.[98] கொங்குச் சோழர் காலத்தில் கொங்கில் ஐயனார் வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்குப் பல சிற்பங்கள் சான்றாக அமைந்துள்ளன.

செப்புத்திருமேனிகள்

கொழுமத்தில் 'நித்தம் நின்றாடுவார்' செப்புத் திருமேனியைச் செய்து வைத்தமை பற்றிக் கல்வெட்டுக்கள் கூறும். இன்றும் அங்கு அந்தச் செப்புத் திருமேனி வழிபாட்டில் உள்ளது. சேவூரில் திருமால் உருவத்தையும், தேவியரையும் செப்புத் திருமேனிகளாகக் கொடுத்தமை பற்றி அங்குள்ள பெருமாள் கோயில் கல்வெட்டுக்கள் கூறும்.[99] இன்றும் அச்செப்புத் திருமேனி வழிபாட்டில் உள்ளது. மேலும் கல்வெட்டில்

குறிக்கப் பெறாத செப்புத் திருமேனிகள் பல கொங்கு நாடு முழுவதுமுள்ள கோயில்களில் வழிபாடு செய்யப்பெற்று வருகின்றன. அவையும் கொங்குச் சோழர் காலத்தினைச் சேர்ந்தவை.[100] போளுவாம்பட்டிக் கல்வெட்டில் சுந்தரரையும் பரவைநாச்சியாரையும் செய்தளித்த செய்தி கூறப் பெறுகின்றது. ஆனால் அவை இன்றில்லை. கொடுமுடியில் உலகம் போற்றும் செப்புத் திருமேனிகள் உள்ளன. அவை கி.பி.10 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை.[101] கோநாட்டார் கலைமரபில் செய்யப்பெற்றவை.

ஓவியம்

கொங்குச்சோழர் காலத்து ஓவியம் விஜயமங்கலத்தில் மட்டும் உள்ளது.[102] அதில் பெரும்பான்மை சிதைந்துவிட்டது.

சைவ அடியார்கள்

கொங்கு நாடு முழுவதும் சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோர் சிற்பங்கள் யானைமீதும், குதிரைமீதும் செல்லும் காட்சிகள் கொடுங்கைச் சிற்பங்களாக வடிக்கப்பெற்றுள்ளன.[103] சுந்தரர் தேவாரத்தில் கூறப்பெறும் ஆறலைக்கும் காட்சிகள் கொடுங்கைச் சிற்பங்களாக உள்ளன. முதலைவாய்ப் பிள்ளைக் காட்சியும், அவினாசி, திருமுருகன்பூண்டி, சேவூர், அன்னூர் ஆகிய ஊர்களில் வடிக்கப்பெற்றுள்ளன.[104] முதலைவாய்ப்பிள்ளை பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பெற்றுள்ளது. அவினாசி கருணாம்பிகை அம்மன் கோயிலில் சிறுத்தொண்டர் வரலாறு சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது.[105] இது கி.பி.10–13 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது.

மக்கள் சிற்பம்

கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்ற கொடுங்கைச் சிற்பங்களில் மக்கள் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சிற்பங்கள் மிகுதியும் உள்ளன. வேட்டைக்காட்சி, பாம்பாட்டி (குடத்திலிருந்து பாம்பு வருவது, அவினாசி சேவூர்) கழைக் கூத்து (போளுவாம்பட்டி) குறிசொல்லும் காட்சி (அவினாசி)[106] போன்றவற்றைச் சான்றுக்குக் கூறலாம்.

முடிவுரை

கொங்குச்சோழர் காலத்தில் கொங்கில் சமய வளர்ச்சி முற்காலங்களை விட மிகுந்து காணப்பெற்றது. 'சமணம், பௌத்தம்' ஆகிய அவைதீக சமயங்கள் கொங்குச் சோழர்க்கு முன் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் முன்பு நிலைபெற்றிருந்த ஊர்களில் மட்டும் தொடர்ந்து நிலைபெற்றது. இந்தச் சமயங்கள் வணிகர்கள், நகர மாந்தர் ஆகியோர் ஆதரவில் நிலை பெற்றிருந்தன. நாட்டுப் புறங்களிலும், காட்டுப்புறங்களிலும் வாழ்ந்த பழங்குடிகளிடையில் செல்வாக்குப் பெறவில்லை. பெருவழிகளின் அருகிலிருந்த தாவளத்துப் பழங்குடிகளிடையில் அவை செல்வாக்குப் பெற்றன என்பது உண்மையே. ஆனால் பரந்துபட்ட கொங்கு நாட்டின் உள்பகுதியிலும், தூரப்பகுதியிலும் வாழ்ந்த பழங்குடிகளிடையில் அவை செல்வாக்குப் பெறவில்லை. மாறாக சைவ சமயம் கொங்குநாட்டுப் பழங்குடிகளான வேட்டுவர், குறும்பர், குறும்பில்லார், காவலர், படைத்தலை, பூலுவர் போன்ற பழங்குடிகளிடையில் செல்வாக்குப் பெற்றது. பழங்குடிகளைச் சைவ சமயத்திற்குக் கொண்டுவர அரசே முயற்சி எடுத்துக்கொண்ட தன்மை சோழன் பூர்வ பட்டயத்தால் உறுதிபெறுகின்றது. அப்பட்டயத்தில் கரிகாலன் என்ற சோழமன்னன் ஒவ்வொரு ஊரிலும் காடழித்து கோயில் கட்டினான் என்றும், அங்கு நிலைபெற்றிருந்த பழங்குடித் தெய்வங்களான காளிக்கும், கொற்றவைக்கும் கோயில் கட்டினான் என்றும் கூறப்பெறுகின்றது. இதனால் சோழர்களோ அல்லது கொங்குச்சோழர்களோ பழங்குடிகளைச் சைவ சமயத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்தனர் என்பது விளங்கும்.

கொங்குச் சோழர் காலத்துச் சிவன் கோயில்கள் பலவும் பழங்குடி வழிபாட்டிடங்களில் கட்டப் பெற்றன. தான்தோன்றீஸ்வரர், மருதீஸ்வரர், மகுடேஸ்வரர், மகிழேஸ்வரர், ஆனிலையப்பர் போன்ற பெயர்கள் பழங்குடிகளின் கந்து வழிபாட்டினையும், குலச்சின்ன வழிபாட்டினையும் நினைவுறுத்துகின்றன. சிவவழிபாடு பல திறப்பட்ட மக்களையும் இணைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தமையால் பிரிந்து கிடந்த கொங்குநாட்டுப் பழங்குடிகளையும் ஒரே சமயத்தில்இணைத்துச் சிறப்படைந்தது. இதற்குக் கொங்குச்சோழர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

கொங்குச்சோழர் காலத்தில் சைவத்தின் தீவிரவாதப் பிரிவுகளான காபாலிகம், காளாமுகம் ஆகியவை நகரங்களில் மட்டும் சிறப்படைந்தன. கொங்குச்சோழர்கள் கோநாட்டு இருக்குவேளிர் மரபினராக இருந்த போதிலும் அங்கு சிறப்புற்ற காளாமுகத்தினைக் கொங்கு மக்கள் மீது வலிந்து திணிக்கவில்லை. இது அவர்களுடைய சமயப் பொறையைக் காட்டுகின்றது. சமணசமயம் நிலை பெறவும், சிறப்படையவும் அவர்கள் வழிவகுத்தமைக்கு அவர்கள் காலத்துச் சமணப்பள்ளிகளே சிறந்த சான்று. கொங்குச்சோழர் காலத்தில் மூன்று மடங்கள் கொங்குநாட்டில் இருந்துள்ளன. சமணசமயத்தில் பள்ளிகளைப் போல உருவாக்கப்பெற்றவை. மடத்தில் சைவ சித்தாந்தம், ஆகமம் போன்றவை கற்றுத்தரப்பெற்றன. மடவளாகத்தில் பெண்களும் இருந்துள்ளனர். இது கொழுமம் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது.

கொங்கில் சைவத்திற்குச் சரிநிகராக வைணவமும் எழுச்சி பெற்றது. வைணவம் கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டிலேயே சிறப்படைந்ததற்கான தொல்லியல் சான்றுகள் (சிற்பங்கள் செப்புத் திருமேனிகள், பாண்டியர் செப்பேடு போன்றவை) கிடைத்துள்ளன. ஆனால் திருமால் கோயில்கள் கொங்குச் சோழர் காலத்தைச் சேர்ந்தவையாகவே உள்ளன. கி.பி.11–12ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்த திருமால் கோயில்கள் இன்னும் நிலை பெற்றுள்ளன. கொங்கில் வைகாநசம், வைணவத்தில் சிறப்புற்றிருந்தமைக்கு விஜயமங்கலத்துக் கரிவரதராஜப்பெருமாள் கோயிலுக்குக் கொடை அளித்துள்ளனர். அவிநாசி, பெருமாநல்லூர், வெள்ளலூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவன் கோயில்களுக்கும் சோழ மண்டலத்து சான்றோர்கள் கொடை அளித்த செய்தி இங்கு நினைவுகூரத்தக்கது. கொங்குநாடு சமய வாழ்க்கையில் பிறபகுதி மக்களுடன் கலந்து நின்றதையே இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பழங்குடிகள் சைவத்திற்குள்ளும் வைணவத்திற்குள்ளும் இணைந்த போதிலும் அவர்கள் செய்து வந்த வழிபாடுகள், சடங்குகள், வழிபட்ட சிறு தெய்வங்கள் போன்றவை கொங்குச்சோழர் காலத்திலும் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றன என்பது கொங்குச்சோழர் காலத்து நடுகற்களால் உறுதிப்படுகின்றது. கண்ணப்பநாயனார் சிற்பம்,

நவகண்டசிற்பம் போன்றவை அக்காலப் பழங்குடிகளின் சமய நம்பிக்கைகளைக் காட்டுவன.

கொங்குச்சோழர் காலத்தில் கட்டடக்கலைகளும் பிற கலைகளும் சமயஞ்சார்ந்தவைகளாகவே அமைந்துள்ளன. கோயில் கட்டடங்கள் தொடக்கத்தில் சோநாட்டுப் பாணியிலும், பின்னாளில் பொதுவான பாணியிலும் கட்டப்பெற்றன. சோநாட்டுப் பாணியில் கட்டப்பெற்ற கோயில்கள் பெரும்பாலானவை சோநாட்டில் பயன்படுத்தப் பெற்ற இளங் காளிக்கல்லால் உருவாக்கப்பெற்றன. பின்னாளில் கொங்குநாட்டில் அந்தந்தப் பகுதியில் கிடைத்த கற்கள் பயன்படுத்தப் பெற்றன. கோயில் கட்டட அமைப்பு எளிமையானது. பழங்குடி வழிபாடு நடத்துவதற்கு ஊர்மன்றங்களில் கட்டப்பெற்ற மாடங்களை நினைவுபடுத்தும் வகையில் கருவறைக்கு மேல் விமானமின்றியும் அதிக அலங்கார வேலைப்பாடு இன்றியும் கட்டப்பெற்றுள்ளன. கொடுங்கையில் தமிழ்நாட்டுக் கோயில்களில் காணப்பெறும் பூதகணங்கள். கொங்குநாட்டுக் கோயில் கொடுங்கையில் காணப்பெறவில்லை.

கொங்குச்சோழர் காலத்துச் செப்புத் திருமேனிகளும் கல்சிற்பங்களும் பல பாணிகளின் கலப்பினால் உருவாக்கப்பெற்றவை. சோநாட்டுப் பாணி, சோழநாட்டுப் பாணி, சேரநாட்டுப் பாணி ஆகிய பலவகைப் பாணிகள் கொங்குநாட்டுச் செப்புத் திருமேனிகளில் கலந்துள்ளன. பல்லவர்கள் மரபும் கலந்துள்ளது. ஒருக்கால் கொங்குநாட்டு எல்லைப்புறங்களில் அந்தந்த எல்லையிலிருந்த பிறநாட்டுக் கலைப்பாணி செல்வாக்குப் பெற்றிருக்கலாம். அல்லது அந்தந்த நாட்டுச் சிற்பிகள் இங்கு வந்து கலைப்பொருட்களை உருவாக்கியிருக்கலாம்.

கொங்குச் சோழர்கள் கொங்குநாட்டுப் பழங்குடிகளைச் சமூக நீரோட்டத்தில் கொண்டு வந்து வேளாண் குடிகளாக மாற்றுவதற்குச் சமயக் கோட்பாடுகளையும், வழிபாட்டினையும் கருவிகளாகக் கொண்டு வெற்றியும் கண்டனர்.

அடிக்குறிப்புகள்

1. நாகசாமி, இரா., இராஜராஜன். ப. 3
2. நாகசாமி, இரா., முதலியோர் கல்வெட்டியல், பக். 66,75 பூங்குன்றன், ஆர்., தொன்மை மிகு நன்னூர். ப. 19
3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
4. செய்தி பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், ஊட்டி) கூறியது நாள் 20.08.90.
5. பூங்குன்றன், ஆர்., பேரூர், ப. இல்லை
6. Nagaraja Rao, M.S., (Editor) Madhu Resent Reseanches in India Archaeology and Art History, p. 221.
7. பூங்குன்றன், ஆர்., சேலம் ப. இல்லை.
8. Nandhi, R.N., Origin and development saivitemonasticism in the case of Kalamukhas, in Indian society historical Probings., pp. 192 - 193.
9. உதயணன், இ., முட்டத்து நாகேச்சுரம் (எம். ஃபில். ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை – 1986)., ப. 45
10. செய்தி பூங்குன்றன், ஆர்., கல்வெட்டாய்வாளர், ஊட்டி – 2. நாள் 20.08.90.
11. S.I.I. Vol. II.No. 7
12. கல்வெட்டு ஓர் அறிமுகம்
13. E.I.Vol.p. 104 Vaidyanathan. K.S., The Ancient Geography of the Kongu Country, p. 127
14. கொழுமம், அகிலாண்டபுரம், முத்தூர், காணூர் புதூர், விஜயமங்கலம் ஆகிய ஊர்களிலிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

15. Balasubramaniyam, S.R., Early Cola Art, p.19

16. Ibid, p. 20

17. நாகசாமி, ஆர்., மாமல்லை, ப. 112

18. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் எண்கள் 4, 11

19. புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு ப. 135

20. திருஞானசம்பந்தர் தேவாரம், மைலாப்பூர் பதிகம். செய்யுள். 3.

21. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 144

22. கொடிவேரி, அன்னூர், பெருந்தலையூர், இடிகரை, வெள்ளலூர், அவினாசி, கடத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள்.

23. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

24. S.I.I. Vol. XXVI. No. 144.

25. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள் தொ.பொ.ஆ.கோ.

26. சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

27. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பல்லவர் வரலாற்றுச் சுருக்கம்.

28. பெருந்தலையூர், அவினாசி, கொடுமுடி ஆகிய ஊர்களில் கண்ணப்பநாயனார் சிற்பங்கள்.

29. சேவூர் கல்வெட்டுக்கள்; மடவிளாகம்; ஈரோடு கோயில் பெயர்கள் இந்து அறநிலைத்துறை பட்டியல்.

30. கைலாசபதி.க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 119

31. மேலது.

32. திருமுருகன்பூண்டிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

33. சுந்தரர் தேவாரம் – கோயில்பதிகம்

34. பேரூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

35. சுந்தரர் தேவாரம், அவினாசிபதிகம்.

36. அவினாசிக் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

37. கொடுமணலில் அகழ்வு செய்யும் நத்தக் காட்டில் இத்தகைய மூலக்கற்கள் உள்ளன.

38. திருஞானசம்பந்தர் தேவாரம், மைலாப்பூர் பதிகம் பாட்டுகள் 1–10

39. திருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, திருவாரூர்ப்பதிகம் பாட்டு. 2

40. கம்பராமாயணம், யுத்த காண்டம், இரணியன் வதைப்படலம்.

41. Durai Rangaswami, Religion and Philosophy of Tevaram, Vol. I, pp. 104 - 105

42. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. பக். 94 – 95, பூங்குன்றன். ஆர்., முன்.கு. நூ.ப. இல்லை.

43. அபிதான சிந்தாமணி, ப. 108

44. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.பக். 152

45. மேலது ப. 153.

46. Nandhi, R.N. Origin and Development of Saivite Monasticsm in Indian Society Historical probings (Ed by Sharma R.S. & Vivehanandha), pp. 191 - 192.

47. பூங்குன்றன், ஆர்., சேலம், ப.இல்லை.

48. சிவன் கோயில் கல்வெட்டுக்களின் இறுதியில் பின் மாகேஸ்வரார்ரஷை என்று கூறப்படுகின்றது.

49. இவ்வூர்களில் உள்ள விஷ்ணு கோயில் கல்வெட்டுக்கள்.

50. விஜயமங்கலம் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

51. அபிதான சிந்தாமணி ப. 1520

52. சேவூர், கொழுமம், குமாலிங்கம் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

53. குமாலிங்கம், விஜயமங்கலம் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

54. ARE 605 of 1905

55. Burton Stein, Peasant State and Society in Medical South India, p. 235

56. பூங்குன்றன், ஆர்., கோவை மாவட்டத்துச் சமயங்கள், கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, 1976.

57. நாகசாமி, இரா., நாமக்கல் குகைத்தளி, கொங்கு திங்களிதழ் எண்.5, 1971, ப. 101.

58. பூங்குன்றன், ஆர்., கோவை மாவட்டத்துச் சமயங்கள், கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, 1976.

59. மேலது.

60. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ.ப. 23

61. கொங்கு வேளாளக் கவுண்டர் மாநில மாநாட்டு மலர், 1984, கோவை ப. இல்லை.

62. இராசு, செ.,(இணைப் பேராசிரியர், கல்வெட்டியல் துறை)., அவர்களுடன் உரையாடல்.

63. வேதாசலம், வெ., இயக்கி வழிபாடு ப. 21

64. ஆலத்தூர்க் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

65. மேலது

66. செல்வராஜ், ஆர்., முன்.கு. கட்டுரை.

67. மேலது

68. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், ஊட்டி) அவர்களுடன் உரையாடல், நாள்; 20.08.90.

69. Subrahmaniya Aiyer, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol. II., p. 43.

70. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர், ஊட்டி) கூறிய செய்தி. நாள். 20.08.90.

71. Kosambi, D.D., Myth and reality p. 92

72. Ibid

73. Subrahmaniya Aiyer, K.V., op. cit. p 43

74. சிலப்பதிகாரம், வேட்டுவ வரி, சாலினி தெய்வமுற்று உரைத்தது.

75. Poongundran, R., Trantric Buddhism in ancient Tamil Nadu Tamil Civilization, Vol 4, No 1, p. 85

76. கொழுமம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

77. கீரனூர், ஐவர்மலை, பிடாரியூர், விஜயமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

78. விஜயமங்கலம் கல்வெட்டு, தொ.பொ.ஆ.கோ.

79. கொங்குநாட்டில் இன்றும் சப்தகன்னி என்ற பெயரிட்டு வழிபடப்படுகின்ற போக்கைக் காணலாம்.

80. நீலம்பூர் கோவை அகழ்வைப்பகத்தில் உள்ளது. பேரூர் சப்தமாதர் பற்றி மாலைமலரில் குறிப்பு வந்துள்ளது.

81. இராசு, செ., கலைமகள் கலைக்கூடம், பக். 189 - 90

82. மேலது ப. 166.

83. இராசசேகர தங்கமணி., கொங்குநாட்டு நடுகற்கள், தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, வெள்ளி விழாக் கருத்தரங்கில் வாசிக்கப் பட்ட ஆய்வுரை.

84. மேலது.

85. மணிமேகலை., சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை, வரிகள் 6:50.53

86. பாண்டியர் செப்பேடுகள் பத்து. ப. 26.

87. பூங்குன்றன், ஆர்., (கல்வெட்டாய்வாளர் உதகை) 20.08.90 ம் நாள் உரையாடல்.

88. செல்வராசு, ஆர்., (தொல்பொருள் அலுவலர், கோவை - 9) உரையாடல். 20.08.90 ம் நாள்.

89. இவ்வூர்களில் கொங்குச் சோழர்களில் முதல் மூன்றரசர்கள் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அது மட்டுமின்றி பிரமியம், ஆலத்தூர், ஈரோடு, கொடுவாய் ஆகிய ஊர்களில் கி.பி.10ஆம் நூற்றாண்டுக் கோயில்களும் உள்ளன.

90. நார்த்தமலை சோழீசுரம் கோயில் முழுமையும் கற்றளி. ஆனால் கொங்கில் விமானமின்றியே கோயில்கள் கட்டப்பெற்றன. இருப்பினும் நார்த்தமலை கோயிலின் அமைப்பு இவற்றில் அமைந்துள்ளது. மேலும் நார்த்தமலை கோயில் எந்த வகையான கல்லில் கட்டப்பெற்றுள்ளதோ அதே வகையான கல்லில் இக்கோயில்கள் கட்டப்பெற்றுள்ளன. (நார்த்தமலை கோயில் பற்றி எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எழுதியுள்ளார். பார்க்க). Early Chola Art, 48 - 49.

91. Ibid.

92. இவ்வூர்க் கோயில்களில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் குலோத்துங்கன் காலத்திற்கு முற்பட்டவை அல்ல.

93. Subrahmaniya Aiyer, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol. II, p. 74.

94. Ibid

95. ஆதியூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

96. மேலது.

97. சேவூர்க் கல்வெட்டுக்கள், தொ.பொ.ஆ.கோ.

98. அவினாசி திருவாதிரை அம்மன், சேவூர் சந்திர சேகரர், சர்க்கார் பெரியபாளையம் நடராசர் ஆகிய செப்புத் திருமேனிகளைக் கூறலாம்.

99. புவனேசுவரி, க.அ., முன்.கு.நூ. ப. 118.

100. மேலது ப. 119.

101. மலர்விழி, கோ. தி., அவினாசிச் சிற்பங்கள், (எம். ஃபில் ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை, 1986) ப. 70.

102. மேலது. ப. 83.

103. புவனேசுவரி, க.அ., முன். கு. நூ. ப. 118.

104. மேலது

105. மலர்விழி, கோ.தி., முன்.கு. நூ. ப. 170

முடிவுரை

கொங்குச்சோழர் காலத்துச் சமயம், சமுதாயம், கலை ஆகியவற்றைப் பற்றி இந்நூலில் கண்ட முடிவுகளைத் தொகுத்துக் கூறுவது இவ்வியலில் இடம் பெறுகின்றது. கொங்குச்சோழர்கள் கி.பி.942 முதல் கி.பி.1305 வரை ஆட்சி செய்தனர். இவர்கள் ஆட்சி கொங்குநாடு முழுவதும் பரவியிருந்த நிலை கி.பி.1196 முதல் என்று கூறலாம். குறிப்பிட்ட வட்டாரத்தில் சிற்றரசர் என்ற வகையில் இந்த வட்டாரத்தின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர்கள் கொங்குச்சோழர்களே. அவர்கள் விட்டுச் சென்ற அரசியல் நிருவாகம், சமூக அமைப்பு, சமய வாழ்க்கை போன்றவை இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை தொடர்ந்து வருகின்றன. கொங்குநாட்டு வரலாற்றுப் போக்கினைத் திசை மாற்றியவர்கள் கொங்குச்சோழர்களே.

கொங்குச்சோழர்கள் பற்றியும் அவர் காலத்துச் சமூகம், சமயம், கலை போன்றவற்றைப் பற்றியும் ஆய்வு செய்வதற்கு முதன்மைச் சான்றுகளாகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் 60 விழுக்காடு கொங்குச்சோழர் காலத்தினைச் சேர்ந்தவை. அவற்றில் பல கல்வெட்டுக்கள் தமிழ் மொழியிலும், வட்டெழுத்து, தமிழ் எழுத்து ஆகிய எழுத்துக்களிலும் அமைந்தவை. சமஸ்கிருதப் பாடல் (மெய்க்கீர்த்தி)களும், சில சொற்களும் கிரந்த எழுத்தில் எழுதப்பெற்றுள்ளன. தொடக்க காலத்தில் வட்டெழுத்தே பயன்படுத்தப் பெற்றுள்ளன. அதனால் கோநாட்டினர் தங்கள் நாட்டு எழுத்தை (தமிழ்) கொங்கில் பயன்படுத்தாமல் வட்டெழுத்தில் எழுதினார்கள். கி.பி.11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் எழுத்தைப் பயன்படுத்தினர். அது சோழர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினால் ஆகும். சோழர்கள் தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான எழுத்தை அறிமுகப்படுத்தினர். கல்வெட்டுக்கள் மட்டுமின்றிச் சிலசெப்பேடுகளும், வெளியிடப் பெற்றுள்ளன. அவை பற்றி கோவைகிழார் தெரிந்து எழுதியுள்ளார். செப்பேட்டு வாசகங்கள் அண்மையில் கிடைத்துள்ளன.

கல்வெட்டுக்கள் மட்டுமின்றி அகழ்வுச் சான்றுகள், காசுகள், பிற்கால இலக்கியங்கள், சமுதாயப்பட்டயங்கள் போன்றவை கொங்குச்சோழர் காலத்துச் சமூகநிலையை அறிந்து கொள்ள

உதவுவன. செவிவழிச் செய்திகளாக அந்த இலக்கியங்களிலும், பட்டயங்களிலும் கிடைக்கும் தரவுகள் குறிப்பிடத்தக்கவை. அண்மையில் கொங்குநாட்டு இலக்கியங்களும், பட்டயங்களும் மிகுதியும் கிடைக்கின்றன; பதிப்பாகியுள்ளன. கொங்குச் சோழர்களின் அரசியல் பின்னணி குறிப்பிடத்தக்கது. அவர்கள் சோழர்களின் கீழ் குறுநில மன்னர்களாக ஆண்டனர். சுயாட்சி பெற்ற அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருந்தமையால் கொங்கில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருவது எளிதாக விளங்கியது. கி.பி.1196 ஆம் ஆண்டு வரை வடகொங்கினையும் அந்த ஆண்டிலிருந்து இறுதிவரை (கி.பி. 1305) இரு கொங்கினை (வடகொங்கு, தென்கொங்கு)யும் ஆண்டனர். தொடக்க கால மன்னர்களின் கல்வெட்டுக்கள் சில ஊர்களில் (அவை வடகொங்கிலிருந்தவை) மட்டும் கிடைக்கின்றன. அவ்வூர்கள் அந்நாளைய பெருவழியில் அமைந்திருந்தன. நெரூர், பிரமியம், வெள்ளியெறிச்சல், கொடுவாய், ஆலத்தூர், திங்களூர், போன்ற ஊர்களில் மட்டும் வீரசோழன், வீரசோழக்கலிமூர்க்கன், கலிமூர்க்கவிக்கிரமசோழன்[1] ஆகியோர் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இவர்களுக்குப் பின்வந்த மன்னர்கள் (அபிமானசோழன், இராஜாதிராஜன், உத்தமசோழன், வீரசோழன்[2] வீரநாராயணன், குலோத்துங்கன் போன்றவர்கள்) கல்வெட்டுக்கள் கூட வடகொங்கில் மட்டும் கிடைக்கின்றன. இம்மன்னர்கள் கல்வெட்டும் வாணிக முக்கியத்துவம் வாய்ந்த ஊர்களில் (ஊர் எண்ணிக்கையும் குறைவு) கிடைக்கின்றன. ஆனால் மூன்றாம் வீரசோழன் காலத்திலிருந்து வேளாண்வளர்ச்சி பெருகியது. அதனால் பல புத்தூர்கள் உருவாகி வேளாண்மையின் கீழ் கொண்டு வரப்பெற்றன. மேலும் தென்கொங்கு கொங்குச் சோழர் ஆட்சியில் இணைக்கப் பெற்றது.

தென்கொங்கிலும் பல ஊர்கள் வேளாண்மைக்கென உருவாக்கப்பெற்றன. அவ்வூர்களில் கோயில் கட்டப்பெற்றுக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றன. இவனுக்குப் பின் வந்த இரண்டாம்குலோத்துங்கன் வடகொங்கில் ஆண்டான். குலோத்துங்கனுக்குப் பின் மூன்றாம்வீரசோழனின் மகன் வீரராசேந்திரதேவன் ஆட்சிக்கு வந்தான். இவன் ஐம்பதாண்டு ஆண்டான். இரு கொங்கும் ஒன்றாக ஆண்டான். இவன்

கல்வெட்டுக்கள் 250க்கும் மேல் கொங்கில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன. பல ஊர்கள் புதிதாக உருவாக்கப் பெற்று வேளாண் நிலமாக மாற்றப்பெற்றன. இவனுக்குப் பின் ஆண்ட இரண்டாம்விக்கிரமன், மூன்றாம்விக்கிரமன் போன்றவர்கள் காலத்தில் சிறுகுறும்பும், உட்பகையும் எழுச்சி பெற்றன. இருப்பினும் பாண்டியர் உதவியால் ஆட்சியைக் கொண்டு செலுத்தினார்கள். இறுதியில் குறிப்பிடப்பெற்ற இரண்டு மன்னர்களுக்கிடையில் ஒரு இராஜகேசரி ஆண்டான் என்று கூறுவர். ஆனால் அதற்கான சான்று இல்லை. மூன்றாம் விக்கிரம சோழனுக்குப் பின் கொங்குநாடு பாண்டியர் ஆட்சிக்குட்பட்டது. கொங்குச் சோழர்களுக்கு வாரிசு இல்லாமையாலும், பாண்டியர்கள் ஏற்கனவே கொங்குச்சோழர்களுடன் மணவினை உறவு வைத்திருந்தமையாலும் கொங்குச்சோழர் அரசியல் காலந்தோறும் விரிவடைந்து வந்த தன்மையை அறிகிறோம்.

கொங்குச்சோழர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி பொதுவான தமிழ் இலக்கிய வளர்ச்சியின் பிரதியாகவே நிலைபெற்றிருந்தது. மெய்க்கீர்த்தியும் பண்டைய தமிழ் இலக்கியத்தைப் பின்பற்றி நின்றது. இவர்களுடைய ஆட்சியில் கருவூர்த்தேவர் பக்திப் பாவினங்களைப் பாடிச் சென்றார்.

கொங்குச்சோழர்களின் அரசியல் புவியியல் அவர்களுடைய ஆட்சியின் பிற்பகுதியில் தெளிவாக உருவாகி நின்றது. வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பெரும் பிரிவுகள் உருவாக்கப்பெற்றன. இவை வேளாண் பருவநிலையை (Agroclimatic) அடிப்படையாக வைத்து உருவாக்கப்பெற்றவை. 'கொங்கான வீரசோழ மண்டலம்' என்ற பிரிவு சேலம்-கரூர்ப் பகுதியை உள்ளடக்கி நின்றது. சோழர்களின் நேரடி ஆட்சியிலிருந்தது. வடகொங்கு, தென்கொங்கு ஆகிய பெரும் பிரிவுகள் இருவேறு ஆட்சியிலிருந்தன. வடகொங்கு கொங்குச்சோழரின் ஆட்சியின் தொடக்க முதலே நிலை பெற்றிருந்தது. தென்கொங்கு கி.பி. 1196 வரை வீரகேரளர் ஆட்சியிலும், அதன் பிறகு கொங்குச்சோழர் ஆட்சியிலும் நிலைபெற்றிருந்தது.

கொங்குச்சோழர்கள் இரு கொங்குகளையும் ஆண்ட போதிலும் அந்தந்தப் பகுதியில் நிலைபெற்றிருந்த அரசியல்புவியியலைப் (Political Geography) போற்றினர். வடகொங்கில் இருபது நாட்டுப்

பிரிவுகள் (Micro Regiones) உருவாகியிருந்தன என்பது திரிபுவனவீரதேவன் (வீரசோழன் 3) கல்வெட்டால் உறுதிப்படுகின்றது. நாட்டுப் பிரிவுகள் காலந்தோறும் புதிது புதிதாக உருவாக்கப்பெற்றன. காரணம் வேளாண்மை விரிவாக்கம் பெற்றமையே ஆகும். புதிதாக நாட்டுப் பிரிவுகள் உருவானமைக்கு வடபரிசாரநாடு, தென் பொங்கலூர்க்காநாடு, ஒடுவங்கநாடு ஆகிய நாட்டுப் பிரிவுகளே சான்று. இப்பிரிவுகள் வீரசோழன் காலத்தில் உருவாக்கப்பெற்றன. அதற்கு முன்பு அப்பகுதி ஊர்கள் மட்டுமே கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருந்தன. நாட்டுப் பிரிவு இல்லை.

கொங்கிற்கே உரிய வெள்ளாநாடு, பூலுவநாடு போன்றவை சமுதாயசபைப் பிரிவுகளே தவிர அரசியல்புவியியல் (Political Geography) அல்ல. இந்த இரு பிரிவுகளைக் கொண்டு கொங்குநாடு முழுவதும் சமுதாயப் பிரிவுகளே நாட்டுப் பிரிவுகளாகச் செயல்பட்டனவே தவிர நாட்டுப் பிரிவுகள் ஏதும் இல்லை என்பார் கூற்று வரலாற்றுப் போக்கிற்கு முரண்பட்டது. (நாட்டு அரசியல் பிரிவுகள் (Political Geography) என்று கூறும் வகையில் முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் கல்வெட்டில் கூறப்பெறுகின்றன.) இவற்றைப் போலவே திருவாய்பாடி என்பது ஆயர்களின் சமுதாயப் பிரிவே அன்றி அரசியல்புவியியல் பிரிவு அல்ல. இது தமிழகம் முழுவதும் செயல்பட்ட சமுதாயப்பிரிவு. தமிழகம் முழுவதும் திருவாய்பாடிநாடு பேசப்பெறுகின்றது.

நாட்டுப் பிரிவுகளின் பெயர்களும் குறிப்பிடத்தக்கவை. பல நாடுகள் ஊரை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பெற்றவை. அது மட்டுமின்றி கால்நாடு, கரைவழிநாடு, கரைநாடு போன்றவை கொங்குச் சோழர் காலத்தில் மிகுதியாகக் கிடைக்கின்றன. கால்நாடு என்பது காடுகள் நிறைந்த நாடு என்ற பொருளில் வழங்கியது. கரைவழி நாடு என்பது மருதவளஞ்சான்ற ஆற்றுப் பகுதியில் உருவாக்கப்பெற்றது.

கொங்குச்சோழர் காலத்தில் ஊர்ப்பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் பல பெயர்கள் தொழில் அடிப்படையில் உருவானவை. கூவல் (காஞ்சிக்கூவல்), தொழு (பெருந்தொழு, காரத்தொழு), பதி (துடுப்பதி), பள்ளி (நரியம்பள்ளி) போன்றவை கால்நடை வளர்ப்பினால் உருவான பெயர்கள். தாவளம், அடிக்கீழ்த்தளம் வணிகத்தின் பெயரால் உருவானவை.

கொங்குச்சோழர் நிருவாகம் தஞ்சைச் சோழர்களின் நிருவாகத்தைப் பின்பற்றிய போதிலும் கொங்கிற்கேயுரிய சில இயல்புகளைக் கொண்டு விளங்கின. அரசன், சிற்றரசன் என்ற நிலையிலிருந்த போதிலும் பேரரசனுக்குரிய நிருவாக அமைப்பினைப் பெற்று விளங்கினான். உத்தர மந்திரி, சாமந்தர், கன்மிகள், அரையர் போன்ற அரசவை உறுப்பினர்கள் கொங்குச்சோழர்கள் ஆட்சியில் நிலைபெற்றிருந்தனர். கொங்குச்சோழர் ஆட்சியின் பிற்பகுதியில் நாட்டுச்சபை, ஊர்ச்சபை போன்ற மக்கள் சபைகள் ஆட்சியின் தலைமை சான்ற நிருவாக அமைப்புகளாக உருவாகின. மேலும் வேளான், காமிண்டன் போன்ற அரசியல் தலைவர்களும் உருவாகிய நிலையைக் காண்கிறோம். வேளான் என்ற ஊர்த் தலைவன் வேட்டுவர் பகுதியில் எழுச்சி பெற்றான். வேட்டுவரில் உருவான வேளான்கள் வேட்டுவர் குடியில் காலாகாலமாக உருவாகி நிலைபெற்ற குடித்தலைவர்கள் ஆகலாம். குடித்தலைவர்களே கொங்குச்சோழர் காலத்தில் ஊர்த் தலைவர்களாயினர். நாட்டுச்சபை கொங்குச்சோழர் ஆட்சியின் பிற்பகுதியில், பெரும்பாலும் இறுதி ஒரு நூற்றாண்டில் உருவாகியது. அது வேளாண் குடிகளின் சபையாக மட்டுமின்றி அந்நாட்டில் நிலைபெற்ற பிற குடிகளின் சபையாகவும் விளங்கியது. நாட்டுச்சபை இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை செல்வாக்குப் பெற்று விளங்கியது. ஊர்ச்சபையும் சில நேரங்களில் நிருவாகத்தில் பங்கேற்றுள்ளது.

ஊராளிகள் மன்றாடிகள் போன்றவர்கள் கல்வெட்டில் கூறப்பெறுகின்றனர். இவர்களில் ஊராளிகள் நிலக்கொடை ஆவணத்திலும். மன்றாடிகள் கோயில் தேவதான நிருவாகத்திலும் பங்கேற்றனர்.

சித்திரமேழி பெரியநாடு பற்றிக் கொங்குக் கல்வெட்டுக்கள் விரிவாகப் பேசுகின்றன. இந்த அமைப்பு தென்னிந்தியா முழுவதும் செயல்பட்டது. இந்த அமைப்பின் முழுச் செல்வாக்கு கொங்குச் சோழராட்சியின் இறுதியிலும், பாண்டியர் ஆட்சியிலும் தெளிவாக உருவாயிற்று. கொங்குச் சோழர்கள் இறுதிநாட்களில் நாடு, ஊர், சித்திரமேழி பெரியநாடு ஆகிய சபை அமைப்புகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து நிருவாகத்தைப் பரவலாக்கினர். அரசர்கள் போர், பிறநாட்டு உறவு ஆகியவற்றில் முழுக்கவனம் செலுத்தினர்.

நாட்டுச் சபைகளில் கரைநாடு குறிப்பிடத்தக்கது. கரைநாடு என்பதும் சமுதாயப் பிரிவு. இங்கு 'கரை' என்பது குடும்பு, பங்கு, பிரிவு ஆகிய பொருளில் உருவாயிற்று. கே.எஸ். வைத்தியநாதன் கருதுவது போல ஆறு என்ற பொருளுடன் கரை நாடு உருவாகவில்லை. இது மட்டுமில்லாமல் கொங்கில் வாழ்ந்த பல சாதியார்கள் தங்களுக்கென சபைப் பிரிவுகளை வைத்திருந்தனர். இந்தச் சமுதாயப் பிரிவுகள் அந்தந்த சமுதாயத்திற்கு வேண்டிய உரிமைகளைப் பெற்றுத்தந்தன. மேலும் தங்களுக்குள் ஏற்படும் பூசல்கள், சமூகப் பிரச்சனைகள் போன்றவற்றைப் பேசித் தீர்த்துக் கொண்டன.

கொங்குச்சோழர் கொங்குநாடு முழுவதும் (வடகொங்கு, தென்கொங்கு) படைப்பிரிவுகளை வைத்திருந்தனர். பெரும்பாலான வணிக நகரங்களில் அந்தப் படைப்பிரிவுகள் செயல்பட்டதற்கான சான்றுகள் மிகுதியும் கிடைத்துள்ளன. படைகளில் இளைய சமக்கட்டு, மூத்த சமக்கட்டு ஆகிய இருபெரும் பிரிவுகள் இருந்தன. இடங்கைப் படைப்பிரிவு பற்றிப் பல கல்வெட்டுக்களில் கூறப்பெறுவதால் இடங்கைப் படைப்பிரிவு செல்வாக்குப் பெற்று விளங்கியதோ என்று கருத வேண்டியுள்ளது. படைக்குத் தலைவன் இருந்துள்ளான். அவனுக்குப் படைப் பற்றும் அளிக்கப்பெற்றுள்ளது. வணிகர்களும் படை வைத்திருந்தனர். ஆனால் அரசுக்கு எதிராகச் செயல்படவில்லை.

கோயில் நிருவாகம் தன்னாட்சி மிக்கதாக விளங்கியது. தேவையான நேரங்களில் மட்டும் அரசன் தலையிட்டுள்ளான்.

மூவேந்த வேளான் என்ற அதிகாரிகள் வீரசோழன் காலம் முதல் கூறப்பெறுகின்றனர். மூவேந்த வேளான் நில ஆவணங்களில் குறிப்பாக கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நிலக்கொடை பெற்ற ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளனர்.

கொங்குச்சோழர்கள் கொங்குப் பழங்குடிகளைச் சமூக நீரோட்டத்தில் இணைப்பதில் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். அந்த முயற்சி குறிப்பிடத்தக்க சமூக மாற்றங்களை விளைவித்தது. அந்த மாற்றங்கள் பழங்குடி வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றியது. பூலுவர், வேட்டுவர், படைத்தலை, குறும்பர், காவலர், மாவலர் போன்ற பழங்குடிகள் சமூக நீரோட்டத்தில் கலந்தனர். பூலுவர், வேட்டுவர்,

காவலர், மாவலர் போன்றவர்கள் வேட்டுவர்கள் என்று பஞ்சவர்ண காவியம் குறிப்பிடுகின்றது. அதற்குச் சான்றாக அவினாசியில் உள்ள கல்வெட்டு ஒன்று 'பூலுவ வேட்டுவன்' என்று கூறுவதைக் காணலாம். பழங்குடிகள் வேளாண் குடிகளாக மாற்றமடைய வேண்டும் என்பதில் குறிக்கோள் உடையவர்களாக விளங்கினர் கொங்குச்சோழர். இது சோழப் பேரரசின் கோட்பாடு. பழங்குடி இணைப்பினால் பல பழங்குடிப் பண்பாட்டுக் கூறுகள் சமூகத்திலும், சமயத்திலும் இணைந்தன.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்ட பழங்குடிகள் மாடுபிடி சண்டையில் ஈடுபட்டார்கள். அவ்வாறு மாடுபிடி சண்டையில் ஈடுபட்டவர்கள் மாண்டவர்களுக்கு நடுகல்லும் வைத்தனர். பலநடுகற்களில் கல்வெட்டு இல்லை. சில நடுகற்களில் கல்வெட்டுகள் உள்ளன. அவையும் வேட்டுவர்களைப் பற்றியவை. அவை சோழர் ஆட்சியின் நேரடிப் பார்வையிலிருந்த பகுதியில் கிடைக்கும் நடுகற்கள், நவகண்டச் சிற்பங்கள், பழங்குடி வழக்கங்களை நினைவுபடுத்துகின்றன. பழங்குடிகளிலிருந்து வேளாளராக மாறிய பின்னும் பழங்குடிப் பழக்க வழக்கங்கள் கைக்கொள்ளப்பெற்றன.

கொங்குச் சோழர் காலத்துச் சமூகம் பல்வேறு பழங்குடிச் சாதிகள், வெள்ளாளர், வணிக கருமகாரர், சமயஞ்சார்ந்த சாதியார் எனப் பலபிரிவுகளைப் பெற்று விளங்கியது. வேட்டுவர், பூலுவர், காவலர், குறும்பர், படைத்தலை போன்றவர்கள் கொங்குச்சோழர் காலத்தில் சமூகத்தில் இணைக்கப் பெற்ற பழங்குடிகள். இக்குடிகள் சாதிகள் என்ற நிலைக்கு உயர்ந்தன. சாதிகள் என்ற நிலைக்கு உயர்ந்த போதிலும் தனித்தனி அமைப்பாகவே செயல்பட்டன. ஒவ்வொரு சாதியும் தனக்கென அமைப்பினை உருவாக்கிக் கொண்டு செயல்பட்டன. அவை ஒரு வகையில் கூறாக்க நிலை சமூகங்களாகச் (Segmentary Social Organization) செயல்பட்டன. எல்லாச் சாதியாரிடையிலும் குலப்பெயர் (Clan name) சொல்லும் முறை இருந்தது. இன்றும் அந்தப் பழக்கம் உள்ளது. குலப்பெயர்கள் பல குலச்சின்னங்களின் அடிப்படையில் உருவான பெயர்களே. குலச்சின்னத்தடை (taboo) இருந்தது; இன்றும் உள்ளது. இந்தக் குலச் சின்ன மரபு கொங்கு மண்டலத்தில் மிகுதியும் காணப்பெறுகின்றது. பிற மண்டலங்களில் குறைவு.

கொங்கு நாட்டில் வேட்டுவர், வெள்ளாளர் என்ற இருபெரும் பிரிவுகளைப் பின்பற்றி வாழ்ந்த சார் சாதியார்கள் இன்றும் உள்ளனர். வேட்டுவ நாவிதன், வெள்ளாள நாவிதன் ஆகிய பெயர்கள் இரு பெரும் பிரிவு அடிப்படையில் சார்சாதிகள் உருவாகிய தன்மையைப் புலப்படுத்தும். கொங்கு பஞ்ச சாதிகள் என்ற மரபும் பட்டயங்களில் கூறப்பெறுகின்றன. இவை கொங்குச் சோழர்காலக் கல்வெட்டுக்களில் யாண்டும் கூறப்பெறவில்லை. சோழர் காலத்து இரு பெரும் பிரிவுகளான இடங்கை, வலங்கை ஆகிய பெரும் பிரிவுகள் கொங்கில் இடைப் பிறவரலாகவே கூறப்பெறுகின்றன. சோழ மண்டலத்திலும், நடுமண்டலத்திலும் நிலைபெற்றிருந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்ற அமைப்புகளாக அமையவில்லை. இடங்கை சாதியாரைப் பற்றி ஒரே ஒரு கல்வெட்டு பயின்று வருகின்றது. இடங்கை நாயகம், இடங்கை நாயகீஸ்வரமுடையார் போன்ற பெயர்களும், இடங்கைமீகாமன் (இடங்கை படைத்தலைவன்) போன்ற பெயரும் இடங்கைப் பிரிவின் செல்வாக்கினை வலியுறுத்தும். பிராமணர்கள், பிறமொழி பேசுவோர் ஆகியோர் கல்வெட்டில் கூறப்பெறுகின்றனர். அரசனிடம் அப்போதைக்கப்போது சமூக உரிமைகளைப் பெற்றுச் சிறப்படைந்தனர். பாரசிவர் என்ற பிரிவினர் சமயப்பணியில் மிகுதியும் ஈடுபாடு காட்டியுள்ளனர்.

கொங்குநாட்டில் குடிப்பெயர்ச்சி சமூக இயக்கமாகவே நடந்துள்ளது. கொங்குச் சோழர்கள் குடிப்பெயர்ச்சியினை ஊக்குவித்தனர். வேளாண்மை, வணிகம், படையெடுப்பு, அரசுப்பணி ஆகிய காரணங்களுக்காகக் குடிப்பெயர்ச்சி நிகழ்ந்துள்ளன. இருப்பினும் குடிப்பெயர்ச்சி குறிப்பிட்ட நாட்டிற்குள்ளேயே நிகழ்ந்துள்ளது. பழங்குடி இணைந்த பின்பும் அவர்களிடையில் காலாகாலமாக வழக்கத்திலிருந்து வந்த பண்டைய நிருவாக அமைப்புகளான மன்றாட்டு, வேள் ஆட்சி (வேளான்) ஆகியவை தொடர்ந்து நிலைபெற்றன. பல்வேறு வகைப்பட்ட சாதிகளை இணைக்கும் மேலாண்மை நிறுவனமாக பெருந்தேவ சமயங்கள் செயல்பட்டன.

கொங்குச்சோழர் காலத்து வாணிக வளர்ச்சி அவர்கள் ஆட்சியில் பெருவழிகளும், நகரங்களும் பெருக வழிகோலியது.

கொங்குச்சோழர் ஆட்சியில் நகரவளர்ச்சியை அறிந்து கொள்ள கொங்குப் பாண்டியர்கள் கல்வெட்டுக்களில் கிடைக்கும் செய்திகளே குறிப்பிடத்தக்கவை. சர்க்கார் பெரியபாளையம் சித்திரமேழி பெரியநாடு பற்றிய கல்வெட்டு கொங்கில் ஒன்பது மாநகரங்கள் இருந்த தன்மையைச் சுட்டும். இந்த மாநகரங்கள் கொங்குச்சோழர் ஆட்சியில் தொடங்கி பாண்டியர் காலத்தில் முழுமை பெற்றிருக்க வேண்டும். இடைக்காலத் தமிழகத்தில் நகர எழுச்சிக்கு நான்கு காரணங்களைக் கூறுவர். அவற்றில் மூன்று காரணங்களே கொங்குநகர வளர்ச்சிக்குக் காரணமாயின. அவை வாணிகம், பெருவழி, அரசியல் ஆகியவை. பெருங்கோயில்கள் இடைக்காலக் கொங்கு நகர வளர்ச்சிக்குக் காரணமாகவில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டும். நகரங்களுக்கும் இடைக்காலக் கிராமங்களுக்கும் மிகுந்த வேறுபாடு காண முடியாத நிலையே இருந்தது.

நகரங்கள் உருவாவதற்குப் பெருவழிகள் பல்கிப் பெருகியமையும் காரணமாகும். கொங்குநாட்டில் வலைப்பின்னல் போன்ற பெருவழிகள் இருந்துள்ளன. அந்தப் பெருவழிகளில் எறிவீரப்பட்டணம், தாவளம், அடிக்கீழ்த்தளம் போன்ற படைவீடுகளும் மக்கள் போக்குவரத்திற்குப் பாதுகாப்பாய் விளங்கின. இந்தியத் தீபகற்பம் (தென்னிந்தியா) கிழக்கிந்தியத் தீவுகள், சீனா, ஈழம் போன்ற பகுதி வணிகர்கள் வந்து தங்கிச் செல்லும் நகரங்கள் உருவாவதற்கு இந்தப் பாடிவீடுகளே காரணம். பல்வேறு வணிகப் பிரிவினர் சித்திரமேழி பெரியநாடு குழு ஆகியவை கொங்குச்சோழர் நகரங்கள் தென்னிந்தியாவின் பிற நகரங்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை உருவாக்கின.

கொங்குச்சோழர் ஆட்சியில் பொருளியல் வாழ்க்கையில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்தன. சோழர்கள் முயற்சியில் உருவாகி வளர்ந்த வேளாண் வளர்ச்சி கொங்கில் முன்னெப்போதைக் காட்டிலும் வீறு கொண்டு வளர்ந்தது. வேளாண்மையில் வயிற்றுக்குச் சோறிடும் பண்டங்களும், வணிக பண்டங்களும் உற்பத்தியாயின. வேளாண்மைக்கென காடுகெடுத்துப் புதிதாக நாடு ஆக்கப்பெற்றது. அவை பல்வேறு பெயர்களில் அழைக்கப்பெற்றன. மன்னறை என்ற நிலப்பகுதி அரசர் பெயர்களுடன், மேட்டுக்குடித் தலைவர்கள்

பெயர்களுடன் இணைந்தே சுட்டப்பெறுகின்றது. அவை சோழ நாட்டு வைக்கல், மயக்கல் என்ற பெயர்களுடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளன. இது பெரும்பாலும் மன்னனோ அல்லது பொருள் வளம் மிக்கவர்களோ பாழ்நிலத்தைத் திருத்திக் கோயிலுக்கு அளித்த கொடையைச் சுட்டுவதாகலாம்.

நிலத்தில் தனி உடைமை என்பது கொங்குச் சோழர்காலத்தை அடுத்துப் பாண்டியர் காலத்தில் கல்வெட்டுக்களில் சுட்டப்பெறுகின்றது. தேவதானம், படைப்பற்று, சாமந்தபேறு, கன்மிப்பேறு, முன்றாட்டுக்காணி, ஊராண்மைக்காணி, சேனாபதிகாணி போன்ற நிலஉரிமை சுட்டப்பெறுகின்றது. இவை ஜீவிதக்காணி. இவற்றை அரசன் அனுமதியுடன் கோயிலுக்கு அளிக்கும் உரிமையைப்பெற்றிருந்தனர். இந்தச் சான்றுகள் அடிப்படையில் நிலம் முழுவதும் கொங்குச்சோழ மன்னர்களுக்கு உரிமையாய் இருந்தது எனலாம். உரிமை மாற்றம் அளிக்கும் அதிகாரம் அரசனிடமே இருந்துள்ளது. அரசன் கோயில் (சைவம், வைணவம்) பள்ளி ஆகியவற்றிற்கு ஓர் ஊரையோ, ஊரின் ஒரு பகுதியையோ அளித்துள்ளான். நீர்ப்பாசனத்தை முறைப்படுத்தும் அதிகாரமும் அரசனிடமே இருந்துள்ளது. வேளாண்மை வளர்ச்சியிலும், நெறிப்படுத்துவதிலும் அரசன் பெரும்பங்கு ஆற்றியுள்ளான். கொங்குச்சோழர் காலத்திறுதியில் பொருள்வளம் பெற்றவர்கள் நிலத்தை வாங்கிக் கொடை அளித்தனர்.

நில அளவும் கொங்குச்சோழர் காலத்தில் கொங்குநாடு முழுவதும் ஒரு தன்மைத்தாயில்லை. ஒரு பகுதியில் விதைப்பாட்டளவு கொண்டு நிலஅளவு சுட்டப்பெற்றது. ஒரு பகுதியில் காணி முந்திரிகை சுட்டப்பெற்றது. சில பகுதியில் கழனி ஓர் அளவாகப் பேசப்பெறுகின்றது. செய் என்பது மற்றொரு பகுதியில் கூறப்பெறுகின்றது. இவ்வாறு ஒரு மண்டலத்திலேயே அளவு வேறுபட்டு நிற்பதற்குக் காரணம் பல்வேறுபட்ட பழங்குடிகள் வாழ்ந்தமை என்று கொள்ளலாம்.

கொங்குச்சோழர் காலத்துப் பிற்பகுதியில் வாணிக வளர்ச்சி தெளிவாகவே புலப்பட்டது. சில கல்வெட்டுக்கள் வணிகமையங்களைப் பற்றி நேரடியாகவே கூறுகின்றன. கல்வெட்டுகளில் குறிப்பிட்ட ஊரில்

சுங்கம், சாரிகை போன்றவை கூறப்பெறுவதைக் கொண்டு அங்கு வாணிகம் நடந்தது என்று கொள்ளலாம். கொங்கில் பன்னாட்டு வணிகர்கள் வந்து வாணிகம் செய்துள்ளனர். பட்டணம், நகரம், புரம், அஞ்சினான்புகலிடம் போன்றவை வணிகத் தொடர்புடையன. அஞ்சினான் புகலிடம் என்பது சமணர்கள் கோட்பாடுகளில் ஒன்றான 'அபயதனம்' என்பதனால் உருவான பாதுகாப்பிடங்கள் என்ற கருத்து நிலவிவந்தது. ஆனால் அண்மைக் கால ஆய்வுகள் போர்க்காலங்களில் மக்கள், வணிகர்கள் ஆகியோர் பாதுகாப்பாகத் தங்கி இருந்ததற்கு உருவானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

கொங்கில் வடுகதேயம் (கருநாடகம், ஆந்திரம்) மலை மண்டலம் போன்ற பகுதிகளிலிருந்து வந்த வணிகர்களும், தமிழகத்துப் பிறபகுதி வணிகர்களும் வந்து வாணிகம் செய்துள்ளனர். சீனர்புரம், சீனக்குடை ஆகிய பெயர்கள் சீன வணிகர்கள் வந்து சென்றதற்கான சான்றுகள் என்று கொள்ளலாம்.

கொங்குச்சோழர் ஆட்சியில் கைவினைத் தொழில்களும், பிறதொழில்களும் சிறப்படைந்தன. தறியிறை, சாலிய நகரத்தார் போன்ற பெயர்கள் நெசவுத் தொழில் வளர்ச்சியையும், தட்டார்க்காணி என்ற சொல்லாட்சி பொன்செய் கொல்லர் தொழில் சிறப்புற்றதையும் உறுதிப்படுத்துகின்றது. கொங்குநாடு சங்க காலத்திற்கு முன்பிருந்தே பொன் கொழிக்கும் நாடாக விளங்கியமையால் பொன்செய் கொல்லர் தொடர்ந்து சிறப்படைந்தனர். அது போலவே கண்மாளர் பெருமை பெற்றனர். சங்கம் (Guild) பற்றிய கல்வெட்டுகளில் இரும்புக் கருவிகள் மிகுதியும் வரையப் பெற்றுள்ளன. இதனால் இரும்புத் தொழில் மிகுந்திருந்த தன்மை புலப்படும். மேலும் கம்மாளர்க்கு உரிமை கொடுத்தது பற்றிப் பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவற்றில் இரும்புத் தொழில் மிகுந்த வளர்ச்சி பெற்றிருந்தது எனலாம்.கொங்குச் சோழர் காலத்து வாணிகம் விரிவடைந்தமையால் காசுகளின் புழக்கம் மிகுதியாயிற்று. கழஞ்சு, ஆனை அச்சு, பழஞ்சலாகை அச்சு, இடைச்சலாகை அச்சு. புதுச்சலாகை அச்சு, சிரியக்கி , பணம், வராகன் போன்றவை வழக்கத்திலிருந்தன. இவற்றில் கழஞ்சு தொடக்கத்தில் மிகுதியாக வழக்கத்திலிருந்தது. கழஞ்சு சோழர்கள் அறிமுகப்படுத்திய தாகலாம். ஆனை அச்சு கங்கர்கள் வெளியிட்டதா அல்லது கேரளர்கள்

வெளியிட்டதா என்பதை உறுதிப்படுத்த சான்றுகள் கிடைக்கவில்லை. சிரியக்கி சமண சமய செல்வாக்கால் வெளியிடப் பெற்ற காசு. இந்தக் காசுகளில் ஆனை அச்சு தென்கொங்கில் மிகுதியும் கிடைக்கின்றது. கொங்கில் முதல் இராஜராஜன் காசுகள் கிடைத்த போதிலும் கல்வெட்டுக்களில் அவை (ஈழக்காசு) கூறப்பெறவில்லை.

கொங்குச்சோழர் காலத்து அளவுகளில் விகற்பங்கள் உள்ளன. நிலஅளவு ஒவ்வொரு பகுதியிலும் ஒருவிதமாக இருந்துள்ளது. கரூர்ப் பகுதியில் காணி, முந்திரிகை போன்ற அளவுகளும், தென்கொங்குக் கரைவழி நாட்டில் விதைப்பாட்டளவே நில அளவாகக் கொள்ளும் அளவுகளும், வடகொங்கில் கழனி என்ற அளவும், பழனிப் பகுதியில் கரை என்ற அளவும் சுட்டப்பெறுகின்றது. முகத்தலளவையைப் பொறுத்த வரை ஒவ்வொரு நாட்டுப் பிரிவுக்கும் ஒரு வகை முகத்தல் அளவு கூறப்பெறுகின்றது. குறுப்புநாழி என்பது குறும்ப நாட்டில் மட்டும் சுட்டப்பெறுகின்றது. இது போலவே ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டிற்கேயுரிய முகத்தலளவை இருந்துள்ளது.

கொங்குச்சோழர் ஆட்சியில் கொங்குநாடு பொருள் வளம் கொழிக்கும் நாடாக மாறியது.

கொங்குச்சோழர்கள் சமய வளர்ச்சியில் பெரும்பங்காற்றியுள்ளனர். கொங்குச்சோழர் ஆட்சிக்கு முன்பே சமணம், பௌத்தம் போன்றவை பெருமை பெற்றிருந்தன.

சைவம், வைணவம் போன்ற அவைதீக சமயங்களும் பெருமை பெற்றிருந்தன. ஆனால் சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் மக்கள் சமயங்களாக மாறுவதற்குக் கொங்குச் சோழர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். கொங்குச்சோழர்க்கு முற்பட்ட காலங்களில் பெருவழி நகரங்கள் மட்டும் சிறப்புற்ற பெருந்தேவ சமயங்கள் நாட்டுப்புறங்களிலும், காட்டுப்புறங்களிலும் பரவியது. சைவம் மிகுதியாகப் பரவியது. பழங்குடிகள் அனைவர்க்கும் ஒரே தெய்வம் என்று கருதும் வகையில் சிவ வழிபாடு பெருமை பெற்றது. கொங்குப் பழங்குடிகளையும், பிற குடிகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர இந்த வழி பின்பற்றப்பெற்றது. கொங்குப் பழங்குடிகளில் அரசியல் காரணங்களால் உயர்ச்சி பெற்றவர்கள் (Elite) சைவக்

கோயில்களுக்குக் கொடை அளித்துள்ளனர். சமயங்கள் பிரிந்து கிடந்த பழங்குடிகள் ஒரே சமூகமாக இணைய உதவிற்று எனலாம். திருவிழாக்கள், கோயில் கொடைகள் போன்றவை இந்த முடிவினை வலியுறுத்துகின்றன.

தீவிரவாத சமயங்கள் (காளாமுகம், காபாலிகம்) கொங்கில் சில ஊர்களில் மட்டும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

வைணவத்தில் பாஞ்சராத்திரம் பெருமை பெற்றிருந்த போதிலும் விஜயமங்கலத்தில் வைகாநச மரபு செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன.

சமணசமயம், பௌத்தம் போன்றவை கொங்குச் சோழர்களுக்கு முன்பு நிலை பெற்றிருந்த ஊர்களில் மட்டும் செல்வாக்குப் பெற்றிருந்தன; பரவவில்லை.

சமய வாழ்க்கையில் சாக்தம் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தது. சிவன் கோயில்களில் அம்மன் கோயில்கள் (காமக் கோட்டம்) கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டில் மிகுதியாயிற்று. இது பழங்குடி இணைப்பினால் உருவான போக்கு.

கொங்குச்சோழர் ஆட்சியில் பழங்குடிகள் பெருந்தெய்வ சமயங்களை ஏற்றுக் கொண்ட போதிலும் பண்டு தொட்டு வணங்கி வந்த சிறு தெய்வ வழிபாடும் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றிருந்தது. கொங்குச்சோழர்களின் சமயப் பொறைக்கு இதுவும் ஒரு சான்று. பெருந்தெய்வ சமயங்களைப் பழங்குடிகளிடையில் கொங்குச்சோழர் பரப்பிய போதிலும் பழங்குடி வழிபாட்டினையும் அனுமதித்தார்கள். அதன் காரணமாக சிவன் கோயில் முன்பு நரபலி கொடுத்தனர். கொங்குச்சோழர் காலத்து நரபலி சிற்பங்கள் கொங்குநாட்டுக் கோயில்களில் நிறுத்தப் பெற்றிருப்பதை இன்றும் காணலாம். இது பெருந்தெய்வ, சிறுதெய்வ இணைப்பு நிலையை வலியுறுத்துகின்றன.

கொங்குச்சோழர் காலத்தில் நாட்டுப் பிரிவுகள் என்ற பொருளில் தனி ஆய்வு செய்யுமளவிற்குக் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. வாணிக வளர்ச்சியினால் கொங்கில் மாநகரங்கள், வளர்புரங்கள், எறிவீரப்பட்டணங்கள், கடிகைத் தாவளங்கள், அடிக்கீழ்

தளங்கள் போன்றவை மிகுதியாயின; வளர்ச்சி பெற்றன. இந்த வளர்ச்சி பற்றித் தனி ஆய்வு செய்யுமளவிற்குக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றைப் பயன்படுத்தி வணிக வளர்ச்சியைப் பற்றியும், நகர வளர்ச்சியைப் பற்றியும் தனிஆய்வு செய்யும்போது கொங்குச்சோழர்களின் சமூக பொருளாதாரம் பற்றிய பல கோட்பாடுகள் தெளிவுபடும் என்பதில் ஐயமில்லை.

துணைநூல் பட்டியல்

1. இலக்கியம்

I சங்க இலக்கியங்கள்

அகநானூறு , என்.சி.பி.எச், சென்னை 2, 1981

கலித்தொகை, என்.சி.பி.எச், சென்னை 2, 1981

பதிற்றுப் பத்து, என்.சி.பி.எச், சென்னை 2, 1981

புறநானூறு, என்.சி.பி.எச், சென்னை 2, 1981

பத்துப்பாட்டு, என்.சி.பி.எச், சென்னை 2, 1981

II. காவியங்கள்

சிலப்பதிகாரம், உ.வே.சா.பதிப்பு, சென்னை – 20, 1978.

மணிமேகலை, உ.வே.சா.பதிப்பு, சென்னை – 2, 1931

பெருங்கதை, உ.வே.சா.பதிப்பு, சென்னை – 2, 1968, 4ம் பதிப்பு.

III. நீதி நூல்கள்

திருக்குறள், என்.சி.பி.எச், சென்னை – 2, 1981,

IV. பக்தி இலக்கியங்கள்

முதல் இரு திருமுறைகள், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1954

ஏழாம் திருமுறை, தருமபுர ஆதீனம், தருமபுரம், 1964

திருவாசகம், (கழகப்பதிப்பு) சென்னை – 1, 1968.

ஒன்பதாம் திருமுறை, தருமபுர ஆதீனம், தருமபுரம், 1969.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.

திருத்தொண்டர் புராணம்,சேக்கிழார் நிலையம், கோவை.

கம்பராமாயணம், உ.வே.சா. பதிப்பு.

மோரூர்க் கண்ணன் பாம்பண காங்கேயன் குறவஞ்சி, மக்கள் வெளியீடு, சென்னை–2,1978.

பேரூர் புராணம், திருவாடுதுறை ஆதீனம், திருவாடுதுறை, 1972

திருச்செங்கோட்டுப் பள்ளு, உமயம்பட்டி கவிஞர் கந்தசாமி, இராசிபுரம்.

சர்க்கரை மன்றாடியார் காதல், அருணாசலக்கவுண்டர் (ப.ஆ)

அண்ணன்மார்சுவாமி கதை, வெற்றிவேல்பதிப்பகம், கோவை 1977.

கொங்குமண்டல சதகம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை – 10, 1988

பேரூர்ப் புராணம் (வசனச் சுருக்கம்), பேரூர் பட்டீஸ்வரர் கோயில், பேரூர், கோவை, 1930.

ஒதாளர்குறவஞ்சி என்னும் அலகுமலைக்குறவஞ்சி, கோயம்புத்தூர், காந்திதாசன் அச்சகம், கோவை 9, 1969.

V. செப்பேடு – கல்வெட்டு தொகுதிகள்

கல்வெட்டு ஓர் அறிமுகம், தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1973.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் (முதற்பகுதி) , தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1969.

நன்னிலம் கல்வெட்டுகள், தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை – 28, 1979.

பல்லவர் செப்பேடுகள் முப்பது, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை 14,1966.

பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை 14, 1967

South Indian Inscriptions, Vol. I, II, III, IV, V, VIII, & XVII,XXII,XXVI.

South Indian Temple Inscriptions Vol. I, II, III.

Inscriptions of Pudukottai State.

Epigraphia Carnatica, Vol. I, IV & X

Epigraphia Indica Vol. XXX

Annual Report on South Indian Epigraphy

Years : 1905, 1909, 1910, 1915, 1920, 1927-28
1936-37, 1940-41, 1958-59, 1960-61.

Indian Archaeology, 1967-68, A Review.

VI. பட்டயங்கள்

சோழன் பூர்வ பட்டயம், கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை –5, 1950.

கொங்கு தேச ராஜாக்கள், கீழ்த்திசை சுவடி நூலகம், சென்னை –5,

மதுக்கரைப் பட்டயம், கொங்குப் பதிப்பகம், இந்திரா நகர், சென்னை 20, 1979.

VII. கொங்குக் கல்வெட்டு தொகுப்பு (அச்சாகாதவை)

கோவை மாவட்டக் கல்வெட்டுகள் தொகுப்பு, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை 9.

பெரியார் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுப்பு, தமிழக அரசு தொல்பொருள், ஆய்வுத்துறை,கோவை–9.

பழநி வட்ட கல்வெட்டுகள் தொகுப்பு, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, கோவை 9.

VIII. ஆய்வுநூல்கள்:

அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, பத்தாம் நூற்றாண்டு, திருச்சிற்றம்பலம், 1972.

இராசு. செ., கலைமகள் கலைக்கூடம், அசோகன் பதிப்பகம் 121, திருமலை நகர், சென்னை 96, 1981.

இராமச்சந்திரன், ச., திருமழபாடி, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை 29, 1979,

இராசமாணிக்கம், மா., பல்லவர் வரலாறு, கழகப்பதிப்பு, சென்னை. 1977

இராசகோபால், சு., வரலாற்றில் புதுவெள்ளம், தொல்லியல் பண்பாட்டுக் கழகம், மதுரை, 1991.

இராசேந்திரன், அ. (ப.அ), தொல்லியல் கருத்தரங்கு, தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 29, 1984.

இராமச்சந்திரன் செட்டியார், கோ.மா., கொங்கு நாட்டு வரலாறு, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை 10, மூன்றாம் பதிப்பு, 1987.

இராமச்சந்திரன் செட்டியார், கோ.மா., அன்னூர் ஸ்ரீ மன்னீஸ்வரர் ஸ்ரீ கரிவரதராஜ ஆலயம் கும்பாபிஷேக மலர், அன்னூர். 1967.

இராமச்சந்திரன் செட்டியார், கோ.மா., எங்கள் நாட்டுப்புறம், கோவை நிலையம், கோவை 1951.

இராமச்சந்திரன் செட்டியார், கோ.மா., கொங்கு நாடும் சமணமும், கோவை நிலையம், கோவை, 1953.

கிருட்டிணசாமி, க., கூட்டமும், திருமணமும், மக்கள் வெளியீடு, சென்னை 2, 1984.

கிருஷ்ணசாமி, க., கொங்குநாட்டு நாடோடிப்பாடல்கள் (முதல் தொகுதி), மக்கள் வெளியீடு, சென்னை 2, 1977.

கிருஷ்ணசாமி, க., கொங்கு நாட்டு நாடோடிப்பாடல்கள் (இரண்டாம் தொகுதி), மக்கள் வெளியீடு, சென்னை 1980.

குழந்தை புலவர்., கொங்கு நாடு, வேலா பதிப்பகம், ஈரோடு 1968

கைலாசபதி. க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, 24,உனிசு அலிசாகிப் தெரு, எல்லீசு சாலை, சென்னை 2, 1978.

சண்முகப் பிரகதம், ச.கொடுமுடி., ஆய்வுத் தேன்,கொங்குப் பதிப்பகம், இந்திரா நகர், 20. 1973.

சண்முகப் பிரகதம்,ச.கொடுமுடி.,மதுக்கரை பட்டயம், கொங்குப் பதிப்பகம், இந்திரா நகர், சென்னை 20 1974.

சண்முகப் பிரகதம், திருப்பூண்டிக் கொடுமுடி, கொங்குப் பதிப்பகம், இந்திரா நகர், சென்னை–20.

சதாசிவ பண்டாரத்தார், தி.வை., பிற்கால சோழர்வரலாறு, அண்ணாமலை பல்கலைக் கழகம், 1974.

சாமி.பி.எல்., தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, என்.சி.பி.எச், சென்னை 2. 1975

சுப்ரமணியம், கா., சங்ககாலச் சமுதாயம், என்.சி.பி. எச், சென்னை 2.

செயராமன், நா. (ப.அ), கொங்கு நாட்டியல் , பாரதியார் பல்கலைக் கழகம், கோவை–46, 1988.

தங்கவேலு, கோ. தியாகராசன், ல., சம்புவராயர் வரலாறு, கோபால் நாராயணன் நினைவு கல்வி அறக்கட்டளை, 1175.58வது தெரு, பெரியார் நகர், சென்னை 90, 1990

நாகசாமி, இரா., கருவூர் வஞ்சி, தமிழகஅரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 28, 1979.

நாகசாமி, இரா., தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு,மக்கள் வெளியீடு, சென்னை 2, 1980.

நாகசாமி, இரா., இராஜராஜன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 28, 1980.

நாகசாமி.இரா., மாமல்லை, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 28, 1980.

நாகசாமி முதலியோர், கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை 28, 1980.

நாச்சிமுத்து. கி., தமிழ் இடப்பெயர் ஆய்வு, சோபிதம் பதிப்பகம், நாகர்கோயில், 1983.

நாச்சிமுத்து.கி.–சோழன் பூர்வபட்டயம் கூறும் கொங்கு நாட்டுஊர்கள், ஜெயக்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோயில் 1970.

பழனிச்சாமி புலவர்., கொங்குச் செல்வி, இடம் இல்லை, ஆண்டு இல்லை.

புவனேசுவரி, க.அ., அன்னூர் வரலாறு, புவியரசிப் பதிப்பகம், சூலூர், கோவை மாவட்டம், 1987.

பூங்குன்றன், ஆர்., சேலம், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு, 1979.

பூங்குன்றன், ஆர்., தொன்மைமிகுநன்னனூர்.47, இ.ராமசாமிக்கவுண்டர் வீதி, கே.கே.புதூர். கோவை.1984.

பூங்குன்றன், ஆர்., பேரூர், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு 1978.

முத்துசாமி கோனார்., கொங்குநாடு

வீயாரெம், கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், லோட்டஸ் பதிப்பகம், திருச்சி. 1977.

வேங்கடசாமி, சீனி. மயிலை., கொங்குநாட்டு வரலாறு, என்.சி.பி.எச். சென்னை 2, 1972.

வேங்கடசாமி, சீனி. மயிலை., சமணமும், தமிழும், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1. 1970.

வேதாசலம், வெ., இயக்கி வழிபாடு, அன்னம் பதிப்பகம், சிவகங்கை, 1990.

வேலுப்பிள்ளை, ஆ., சாசனமும், தமிழும், பேராதனைப் பல்கலைக் கழகம், ஸ்ரீலங்கை. 1971

வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கிய சிந்தனைகள், வையாபுரிப் பிள்ளை நூற்றாண்டு விழா குழு, சென்னை 28, 1991.

ஆ. ஆங்கிலம்

Appadurai, A., Economic conditions in Southern India Vol.I, University of Madras Madras 5

Arokiaswami, M., The Kongu Country, University of Madras, Madras1956.

Balasubrahmaniyam, S.R., Early Cola art. Asia Publishing House. Bombay 1966.

Beck, E.F., Branda, Peasant Society in Kongu, University of British Colambia, Vancouver, 1966.

Beck, E.F., Branda (Editor)., Perspectives on a Regional culture,Vikas publishing House, New Delhi, 1979.

Chatterge, Sunil Kumar., Dravidian:: A course of Three Lectures on Dravidian origins and on Modern Dravidian Literature, AnnamalaiNagar; Annamalai University, 1963.

Chattopadhyaya, Debiprasad., Lokyata: A study in Ancient Indianmaterialism, Peoples publishing house(P) New Delhi, 1981.

Durai Rangasamy, M.A., Religion and Philosophy of Tevaram, Vol. I, University of Madras, Madras.1958.

Feno. Lee., Salem District Manual, Vol II, Govt. Publication.

Gopal, B.R., Minor dynasties of South India, Karnataka, New Era Publication, Madras 25, 1977.

Govindasamy, M.S., Fuedatories under the Colas, Annamalai University, Annamalai Nagar.

Hall, Kenneth, R., Trade and State Craft in the Age of Colas, Abinav Publication, E.37, Howz Klas, New Delhi, 16, 1980.

Jaya Meenakshi Sundaram, Kongu Proverb, Gnanamani Pannai,Coimbatore 40, 1984

Karashima, Noboru, Studies in South Indian History and Society, Oxford University Press,New Delhi, 1984.

Kosambi, D.D., Myth and reality, Popular Prakasam,Bombay -2, 1962.
Krishnan, K.G.,Chitrameliperiyanadu, University of of Madras, Madras-5, 1982.

Kuppusamy, G.R., Economic conditions in Karnataka AD 973 - AD 1336 - Dharwar, 1975.

Morgan .H Lewis, Ancient Society, Culcutta., 1987.

Meenakashi, C., Administration and Social life under the Pallavas. (Revised) Universtiy of Madras, Madras 1974.

Munshi, K.M., The History and culture of the Indian People: The Age of Imperial Unity, Bharathiya Vidya Bhavan, Bombay. 1967.

Nagaraja Rao, M.S., Madhu: Recent Researches in Archaeology and Art History, Agam Prakasam, New Delhi, 1981.

Nagaswamy, R., Tamil Coin -A Study, Dept of Archacology, Govt. of Tamil nadu, Madras-28, 1978.

Nagaswamy, R.,Art of Tamil nadu, Madras-28, 1973.

Nagaswamy, R., Tantric Cult of Tamilnadu, Agam Prakasam, New Delhi, 1981.

Nagaswamy, R., (Editor), South Indian Studies, Vol. 1, Society for Archaeological and Epigraphical Research, 25 Unisali Sabih Street, Madras -21, 1978.

Nilakanta Sastri, K. A., Pandiyan Kingdom. Swathi publications, Madras 1972.

Praboo, Lalitha. R., Perspectives in place name studies . Place name society of India, Trivandurm, 1988.

Ramamoorthy, V., The History of Kongu, International Society for the investigations of ancient civilization, Madras- 86, 1986.

Schwartzburg, Joseph.E., A Historical Atalas of South Asia Chicago University Press, Chicago, 1978.

Sethu Raman, N., The Imperial Pandiyas, published by the author, Kumbakonam.

Shrama, R.S.,, and Vivekanand Jha, Indian Society Historical probings, Peoples publishing House, New Delhi. 1974.

Sircar, D.C., Indian Epigraphical Glossary, Motilal Banarsi Doss, New Delhi, 1973.

Sircar, D.C., Landlodism and tenancy in Ancient and Medieval India as by Epigraphical Records, Motilal Banarsi Doss, New Delhi.

Sivaramamoorthy, C., Panorama of Jain Art., New Delhi 1974

Stein, Burton., Peasant State and Society in Medieval South India, Oxford University Press, New Delhi, 1980.

Subba Rao, B., Personality of India, New Delhi.

Subrahmaniya Aiyer, K.V., Largest Provincial organization in Ancient India, 612, Trichy Road, Coimbatore - 45, 1984.

Subramaniya Aiyer, K.V., Historical sketches of Ancient Dekhan Vol. II, 612, Trichy Road, Coimbatore - 45, 1967.

Thapar, Romila., From Lineage to State, Oxford University press, New Delhi, 1984.

Thapar, Romila and Battachrya Sabyasachi, (Editors)., Situating Indian History, Oxford University Press, New Delhi, 1987.

Vijayalakshmi, R.,Perunkatai - A Study, Institute of International Tamil Studies, Madras-113, 1980.

Vaidyanathan, K.S, The Ancient Geography of the Kongu Country, Kalaimagal Kalvi Nilayam, Erode - 1983.

IX. ஆய்வேடுகள்

அ. முனைவர், எம். ஃபில்., பட்ட ஆய்வேடுகள்

கணேசன், மா., கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற சிவாலயக் கல்வெட்டுகள், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை- 1985.

Kandasamy, S.P., The History of the Konguvellalas, (Ph.D. Thesis) University of Madras. Madras-5, 1985.

Manickam. V.,Economic conditions in Kongu AD 1000 - 1500, (Ph.D. Thesis) University of Madras, Madras,1982.

Rajasekarathankamani, M., Vettuva Gounders in Kongu Country, (M.Phil. B.I.S.S. Bharathidasan University, Trichirappalli, 1990).

ஆ. எம்.ஏ. ஆய்வேடுகள்

Mani., Army in Medieval Kongu 6th Century, A.D. to 14th century A.D. Bharathiyar University, 1989.

X. ஆய்வுரைகள்

கணேசன், மா., கொங்கு வேந்தர் தந்த வரிசை,கொங்கு நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, வாசவி கல்லூரி, ஈரோடு, 1980.

காசிநாதன், நடன., யார் இந்தக் கலிமூர்க்கன்?, கோவை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, 1976.

பூங்குன்றன், ஆர்., கொங்கு நாட்டு அகழ்வாய்வு, கோவைகிழார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர், 1987.

பூங்குன்றன், ஆர்., கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள், வானொலி உரை, 1977.

Kandasamy, S.P., Kongu and the Imperial Cholas, Paper Presented in the seminar on Cholas held at Tamil University in connection with 1000th year of Rajaraja I. Aug.1984.

Poongundran., The term Mantattu, Paper presented in the XVII Annual Congress, Epigraphical Society of India, held at Tamil University,Tanjore, Feb, 1991.

XI. அகராதிகள், களஞ்சியங்கள்:

சங்க இலக்கிய சொற்களஞ்சியம்., திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

அபிதான சிந்தாமணி,ஏசியன் எடகேஷனல் சர்வீஸ், புதுடில்லி, 1983.

Tamil Lexicon, 6 Vols.

Dravidian Etymological Dictionary, (Revised) Oxford University Press, 1984.

World University Encyclopeadia, Vol. II

Cassall's Encyclopedia of world literature, Vol. I.

XII. மலர்

திருமுருகன்பூண்டி அருள்மிகு மங்களாம்பிகை உடனமர் மாதவனேசுரர் கோயில் திருக்குட முழுக்காட்டு விழாமலர், திருமுருகன்பூண்டி, 1979.

கொங்கு வேளாளக் கவுண்டர் மாநாட்டு மலர், 1984.

Silver Jubles Souvenir, N.G.M. College, Pollachi, 1984.

XIII. இதழ்கள், தாள்கள்

கல்வெட்டு, காலாண்டிதழ் (1– 20),தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை 25.

தேனோலை, இதழ் 2, 10., கொங்குப் பதிப்பகம், சென்னை 20.

கொங்கு, திங்களிதழ் ., 1971 முதல் 1975 வரை கொங்குப் பதிப்பகம், சென்னை – 20.

செய்தி மடல் (மாதஇதழ்)., இதழ் சக்திசுகர்ஸ், கோவை., 1978.

நூலாசிரியர்



முனைவர்
க. அ. புவனேசுவரி
(புவனா ஜீவானந்தம்)

தாய்	:	திருமதி. அ. அய்யம்மாள்
தந்தை	:	திரு. எஸ். கே. அங்கப்பத்தேவர்
தலம்	:	தீனம்பாளையம், கோவை மாவட்டம்.
கலை பயின்ற கழகங்கள்	:	சென்னை - மதுரை காமராசர் - அண்ணாமலை - பாரதியார் பல்கலைக் கழகங்கள்

கல்வி

அ.	இளங்கலைப் பட்டங்கள் (DEGREES)	:	புலவர்., பி.லிட்., பி.எட்.
ஆ.	முதுகலைப் பட்டங்கள் (MASTER DEGREES)	:	எம்.ஏ., எம். எட்.
இ.	ஆய்வுப் பட்டங்கள் (RESEARCH DEGREES)	:	எம்.பில்., பிஎச்.டி.
ஈ.	பட்டயங்கள்	:	தமிழாசிரியர் பயிற்சி., காந்திய சிந்தனை.
உ.	சிறப்புப் பட்டங்கள்	:	செந்தமிழ்ச்செல்வி., செஞ்சொற்செல்வி.
ஊ.	படைப்பு	:	அன்னூர் வரலாறு.